பொருளியல் நோக்கு

ஐப்பசி/கார்த்திகை,2009




# இலங்கையின் வடக்குக் கிழக்கில் சமாதானம்

இது ஒரு மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வடக்குக் கிழக்கில் சமாதானம்: சில நிகழ்வுகள்

## சமாதான முயற்சிகள்

1985 ஜூலையில் திம்புப் பேச்சுவார்த்தை

சுய நிர்ணய உரிமை மற்றும் வட-கிழக்கை தமிழர் தாயகமாக அங்கீகரித்தல் என்பன உட்படட நான்கு கோட்பாடுகளை ஏற்குமாறு தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் அரசாங்கத்தை வற்புறுத்தின.

ஜூலை 1987

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் இந்திய- இலங்கை சமாதான உடன்படிக்கையில் கொழும்பில் கைச்சாத்திட்டனர். தமது ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு தமிழ்த் தீவிரவாதக் குழுக்கள் சம்மதித்தன. மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய அமைதி காக்கும் படை வடக்கிலும் கிழக்கிலும் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இந்திய அமைதி காக்கும் படையால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக்களைவு முயற்சிகளை விடுதலைப் புலிகள் எதிர்த்ததன் விளைவாக 1500 இந்திய இராணுவச் சிப்பாய்கள் மரமடைந்தனர்.

ஏப்பிரல் 1989 - ஜூன் 1990

இம் முரண்பாட்டிற்கு சமாதான முறையிலான ஓர் தீவை நாடியதில் ஜனாதிபதி ஆர். பிரேமதாச அவர்கள் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்துடன் நேரடித் தகவல் பரிமாற்றத்தில் ஈடுப்டார்.

பெப்ரவரி 1990

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஒழுங்கு முறையிலான பேச்சுவார்த்தை கொழும்பில் ஆரம்பித்தது. இந்தியா தனது படைகளில் எஞ்சியிருந்தவற்றை இலங்கையிலிருந்து 1990 இன் ஆரம்பத்தில் விலக்கிக் கொண்டது.

ஒக்ரோபர் 1994

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சை ஆரம்பித்து வைத்தார்.

ஜனவரி 1995

சமாதானப் பேச்சுவார்த்தைக்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட திட்டத்திற்கான ஓர் ஆரம்ப நடவடிக்கையாக யுத்த நிறுத்தம் ஒன்றிற்கு இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சம்மதித்தனர். எனினும், ஏப்பிரல் 1995 இல் திருகோணமலை கடற்படைத் தளம் மீது மேற்கொள்ளப்பட்ட ஓர் தாக்குதலுடன் விடுதலைப் புலிகள் யுத்தத்தை மீள ஆரம்பித்னர்.

டிசம்பர் 2001

புதிய அரசாங்கத்திற்கான தேர்தலைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தினர்.

பெப்பிரவரி 2002

நோர்வேயின் ஆதரவுடன் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுடன், டிசம்பர் 2002 இல் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தது. மூன்று சுற்றுக்களின் பின்னர், 22 ஏப்பிரல் 2003 இல் சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்தது.

31 ஒக்ரோபர் 2003 இல் விடுதலைப் புலிகள் இடைக்கால சுயாட்சி அதிகாரசபையைக் கோரி, சமாதானத்திற்கான தமது சொந்த யோசனையை வெளியிட்டனர். கூட்டணி அரசாங்கத்தின் பங்காளிகள் இவ் யோசனையை நிராகரித்தனர்.

அதற்கிடையில், கிழக்கைச் சேர்ந்த 5,000 புலி உறுப்பினர்களுடன் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதியான விநாயகமூர்த்தி முரளிதரன் (கேணல் கருணா) புலிகளிலிருந்து பிரிந்து சென்றதுடன், அதைத் தொடர்ந்து தமிழ மக்கள் விடுதலைப் புலிகள் எனும் அரசியல் கட்சியை உருவாக்கினார்.

நவம்பர் 2005

ஜனாதிபதித் தேர்தலின் போது, தமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்கள் வாக்களிப்பதற்கான தடை ஒன்றை விடுதலைப் புலிகள் அமுல்படுத்தினர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரான திரு. மகிந்த ராஜபக்ச அவர்கள் இத் தேர்தலில் வெற்றிபெற்றதுடன், விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு முன்வந்தார்

பெப்பிரவரி 2006

இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புமாறு டோக்கியோ கொடையாளிகள் மகாநாட்டுக்கான இணைத் தலைமை நாடுகள் அழைப்பு விடுத்தன. இதை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டதுடன், 22- 23 பெப்பிரவரியில் புதிய பேச்சுவார்த்தைகள் சுவிஸ்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெற்றன.

8-9 ஜூன் 2006

மேலதிக பேச்சுவார்த்தைகள் நோர்வேயின் ஒஸ்லோவில் நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தன. ஆனால் அரசாங்கப் பேராளர் குழுவை சந்திப்பதற்கு விடுதலைப் புலிகள் மறுத்தபோது, அது இரத்துச்செய்யப்பட்டது. 21 ஜூலை 2006 இல் விடுதலைப் புலிகள் மாவில ஆற்று மதகை மூடினர். 2 ஓகஸ்ட் 2006 இல் மோதல்கள் ஆரம்பித்தன.

28 -29 ஒக்ரோபர் 2006

இச் சம்பவங்கள் மத்தியிலும், 28- 29 ஒக்ரோபரில் ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகளின்றிப் பிரசன்னமாவதற்கு இரு தரப்பினரும் சம்மதித்தனர். எனினும், ஏ9 நெடுஞ் சாலையை மீளத் திறப்பது தொடர்பான இசைவின்மை காரணமாக அப் பேச்சுவார்த்தை முறிவடைந்தது.

11 ஜூலை 2007

கிழக்கில் விடுதலைப் புலிகளின் இறுதிக் கோட்டையாக திகழ்ந்த குடும்பிமலை (தொப்பிக்கல) எனும் இடத்தை இராணுவம் கைப்பற்றியது.

3 ஜனவரி 2008

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அதன் தீமானத்தை இலங்கை அரசாங்கமானது முறைசார்ந்த வகையில் அறிவித்தது.

15 நவம்பர் 2008 இல் பூநகரி விடுவிக்கப்பட்டது. 2 ஜனவரி 2009 இல் இலங்கை இராணுவத்தால் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமை பற்றி 18 மே 2009 இல் இலங்கை ஜனாதிபதியால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## 05.11.2009ம் திகதியில் உள்ளவாறு உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் (IDPs)

- IDP மொத்த எண்ணிக்கை 250,000 (மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் இறுதியில் சுமாராக).
- 130,000 IDPs யினர் விடுவிக்கப்பட்டனர்.
- 11,000 மேற்பட்ட முன்னாள் புலிப் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்படுகின்றது.
- வவுனியா மாவட்டத்திலுள்ள ஏழு சேமநலக் கிராமங்களிலும் 18 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- தினமும் 3,000 இற்கு மேற்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப்படுகின்றது.
- IDP நிலையங்களில் உள்ள பொதுமக்களின் நடமாட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் 1 டிசம்பர் 2009 இல் நீக்கப்படும்.
- மீள்குடியேற்றம் 31.01.2010 இல் பூர்த்திசெய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம்: www.defence.lk மற்றும் அரசாங்க தகவல் திணைக்களம்

# பொருளியல் நோக்கு

மலர். 35 | இதழ்கள் 7 & 8 | ஐப்பசி/ கார்த்திகை 2009



**வெளியீடு:**
ஆராய்ச்சித் திணைக்களம்,
மக்கள் வங்கி,
தலைமை அலுவலகம்,
சேர் சித்தம்பலம் ஏ.
கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02,
இலங்கை.



**ஆலோசனைச் சபை**

டபிள்யு. கருணாஜீவ
*தலைவர், மக்கள் வங்கி*

பி. வீ. பத்திரண
*பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர்*

கே. யு. புஸ்பகுமார
*ஆராய்ச்சிப் பணிப்பாளர்*
*மக்கள் வங்கி*

**ஆலோசக ஆசிரியர்**

கலாநிதி. ஏ. பி. கீர்த்திபால

**ஒருங்கிணைப்பாளர்**

எச். எல். ஹேமச்சந்திர
*ஆராய்ச்சி உத்தியோகத்தர்*


பல்வேறு கோணங்களிலான அறிக்கைகள், கருத்துகள், விடயங்கள் மற்றும் விவாதங்கள் என்பவற்றை முன்வைப்பதன் மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் அறிவையும், ஆர்வத்தையும் தூண்டுவதே *பொருளியல் நோக்கு* சஞ்சிகையின் குறிக்கோளாகும். மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித் திட்டமாக இவ் வெளியீடு மேற்கொள்ளப்படுகிறது. எனினும், இச்சஞ்சிகையில் வெளியிடப்படும் கட்டுரைகள் மற்றும் அறிக்கைகள் என்பன மக்கள் வங்கியின் கருத்துக்களையோ அல்லது உத்தியோகபூர்வ கண்ணோட்டத்தையோ பிரதிபலிப்பவையல்ல. ஆசிரியர்களின் பெயர்களுடன் வெளியிடப்படும் கட்டுரைகள் அவர்களின் தனிப்பட்ட கருத்துக்களாகவே உள்ளன. அவை எவ்விதத்திலும் அவர்கள் சார்ந்திருக்கும் நிறுவனங்களின் கருத்துக்களை பிரதிநிதித்துவம் செய்பவை எனக் கருதப்படக் கூடாது. அத்தகைய கட்டுரைகள், கருத்துகள் மற்றும் கண்ணோட்டங்கள் என்பன வரவேற்கப்படுகின்றன. ***பொருளியல் நோக்கு*** இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றது. அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ அல்லது நேரடிக் கொள்வனவின் மூலமோ பெற்றுக்கொள்ள முடியும்.


*E-mail:*ecorev@peoplesbank.lk


## பொருளடக்கம்

### சிறப்புக் கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| பேராசியர் சிறிமல் அபேரத்ன | 37 | மாற்றம் நோக்கிய இலங்கைப் பொருளாதாரம்: முன்னேற்றம், பிரச்சனை, எதிர்கால வாய்ப்பு |
| பிரியன்வத ஹேரத் | 40 | சொத்து உரிமைகளும் மூலதன ஆக்கமும்: இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான ஓர் தேவைப்பாடு |
| பேராசிரியர் சுமனபால கல்மங்கொட | 42 | உண்மையான அபிவிருத்தியின் பொருட்டு எண்ணக்கருக்களை மாற்றுவதன் அவசியம் |
| அஸ்ரா அப்துல் காதர் | 44 | இலங்கையில் சிறுவர் வறுமை: சில பார்வைகள் |


### விசேட அறிக்கை

## இலங்கையின் வடக்குக் கிழக்கில் சமாதானம்


| | | |
|---|---|---|
| பேராசியர் காமினி சமரநாயக்க | 02 | பயங்கரவாதமும் அதன் பண்புக் கூறுகளும் பற்றிய ஓர் அறிமுகம் |
| பேராசிரியர் லக்சிறி பெர்னாண்டோ | 08 | இலங்கையில் பயங்கரவாதமும் மனித உரிமைகளும் |
| பேராசிரியர் பியதாச அத்துகோரல | 14 | பயங்கரவாதத்தை தோற்கடித்ததில் இலங்கையின் சாதனைகள்: உலகிற்கான முன்மாதிரி எடுத்துக்காட்டு |
| பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க | 21 | இலங்கையில் சமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் விடுக்கப்படும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் |
| கலாநிதி எஸ்.ஐ. கீதபொன்கலன் | 26 | இலங்கையில் நீடித்திருக்கத்தக்க சமாதானத்திற்காக முன்னாள் கிளர்ச்சியாளர்களுக்கான புனர்வாழ்வும் மீள்ஒன்றிணைவும்: யுத்தத்திற்குப் பின்னரான சவால் |
| கலாநிதி பாலித ரி. பி. கொஹொன | 33 | இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களது மீள்குடியேற்றமும் சமாதானத்தை வெற்றிகொள்ளலும் |


## *அடுத்த இதழ்கள்:*

- *சர்வதேச நாணய நிதியமும் இலங்கைக்கான அதன் உதவியும்*
- *இலங்கையின் வடக்குக் கிழக்கில் அபிவிருத்தி*


அட்டைப் படம் : வட இலங்கையின் வெள்ளமுள்ளிவாய்க்கால் எனும் இடத்தில் நடைபெற்ற இறுதி மனிதாபிமான இராணுவ நடவடிக்கையின் போது, காயமடைந்த ஓர் வயோதிபத் தமிழ்ப் பெண்ணை அவசர மருத்துவ சிகிச்சைக்காக இலங்கை இராணுவச் சிப்பாய் ஒருவர் சுமந்துசெல்கின்றார்.

நிழற்படம் : றுக்மல் கமகே அவர்களின் அனுமதியுடன்,

அட்டை வடிவமைப்பு : டபிள்யு. லக்மாலி நிமங்கா குருகே

*அச்சுப் பதிவு - மக்கள் வங்கி அச்சிடல் சேவைகள் திணைக்களம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதமும் அதன் பண்புக் கூறுகளும் பற்றிய ஓர் அறிமுகம்

**பேராசியர் காமினி சமரநாயக்க**

*அரச அறிவியல் துறை,*
*பேராதனைப் பல்கலைக்கழகம்,*
*பேராதனை*

## அறிமுகம்

உலகளாவிய அல்லது சர்வதேச பயங்கரவாதம் பற்றிய விடயமானது அரசியல் வன்முறையின் ஓர் விசேட வடிவமாகும். பயங்கரவாதம், மேலும் துல்லியமாகக் கூறின், சர்வதேசம் மற்றும் நாட்டுக்கு அப்பால் உள்ள பயங்கரவாதமானது மிகத் தீவிரமான சிக்கல் நிறைந்த ஓர் மெய்ந் நிகழ்வு என்பதுடன் உலக அரசியலைப் போன்று தேசிய அரசியலை இறுக்கமாகப் பற்றிக் கொண்டுள்ள பயங்கரவாதத்தின் மிகத் தீவிரமடையும் தன்மையை தற்போதைய உலகளாவிய போக்குகள் எடுத்துக்காட்டுகின்றன. உலகிலுள்ள ஏதாவது நாடு ஒன்றில் வாராந்தம் அநேகமாக ஒரு பயங்கரவாதச் சம்பவமாவது நிகழ்கின்றது. 'பலவீனமான மற்றும் தோல்வியடைந்த அரசுகள்" என வரையறுக் கப்பட்டுள்ள அரசுகள் மாத்திரமன்றி பலமான அரசுகளில், கூட வேறு வகையில் கூறின், வல்லரசுகளாக வரையறுக் கப்பட்டுள்ளவற்றின் அரசுகளில் கூட 1945 தொடக்கம் 1992 வரை சுமார் 30,000ம் பயங்கரவாதச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. எனினும் பயங்கரவாதத்தைப் பற்றியும் பயங்கரவாத அமைப்புகளைப் பற்றியும் மிகக்குறைந்த அளவிலேயே அறியப் பட்டுள்ளன. நவீன தேசிய மற்றும் சர்வதேச பிரச்சினைகளில் தீர்க்கப்படாத ஒரு விடயமாக இது அமைந்துள்ளது.

பொதுவாக அரசியல் பயங்கரவாதத்தினதும், குறிப்பாக சர்வதேச மற்றும் நாட்டுக்கு அப்பா லுள்ள பயங்கரவாதத்தின் தோற்றம், விருத்தி, தன்மை மற்றும் பாங்கு என்பவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் பிரதான குறிக் கோளாகும். ஆகவே இக்கட்டுரையின் முன் வைப்பானது ஆறு பிரதான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரசியல் பயங்கரவாதத் தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் தற்போதைய போக்குகள் பற்றி முதலாவது பகுதி ஆராய் கின்றது. பயங்கரவாதம் பற்றிய வரை விலக்கணம், சிறப்பியல்புகள் மற்றும் குறிக் கோள்கள் என்பவற்றை இரண்டாவது பகுதி ஆராய்கின்றது. மூன்றாவது பகுதியானது அரசியல் பயங்கரவாதத்திற்கான அடிப்படைகள் மற்றும் அதன் காரணிகளையும் பற்றி பொதுவாக ஆராய்கின்றது. சந்தர்ப்பங்களும், அமைப்புகளும் பற்றி நான்காவது பகுதியில் ஆரயப்படுகிறது. சர்வதேசப் பயங்கரவாதத்தின் இயல்பையும் பாங்கையும் ஐந்தாவது பகுதி ஆராய்கிறது. இறுதிப் பகுதியானது முடிவு ரையை உள்ளடக்கியுள்ளது.

## தோற்றம், வளர்ச்சி மற்றும் தற்போதைய போக்குகள்

நவீன உலகில் பயங்கரவாதமும் சர்வதேச பயங்கரவாதமும் ஏறத்தாழ பரிமாற்றம் செய்யக் கூடிய சொற்களாகவே உருவாகியுள்ளன. ஆக வே சர்வதேச பயங்கரவாதத்தைப் பற்றி ஆராய்வதற்கு முன்னர், பயங்கரவாதத்தின் தோற்றம், வளர்ச்சி மற்றும் தற்போதைய போக்கு கள் என்பவற்றை ஆராய்வது உகந்ததாக அமைகிறது. அதிகாரத்தைப் பெறுவதற்கான ஓர் ஆயுதமாக அல்லது ஓர் உபாயமாக பயங்கர வாதம் அமைந்துள்ளமையானது அண்மைக் காலத்தில் தோற்றம் பெற்ற ஒன்றல்ல என்பதுடன் மானிட வரலாறு முழுவதும் அது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்திய அரசியல் சிந்தனையாளரான கௌடில்யன் கூட அர்த்தசாஸ்திரம் எனும் தனது நூலில் பயங்கரவாதத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். புராதன கிரேக்க வரலாற்று ஆசிரியரான செனோபோன் (Xenophon கி.மு 430 – 349) விரோதி நாட்டு குடிமக்களுக்கு எதிரான உளவியல் ரீதியான போர் முறையின் செயல்திறனைப் பற்றி எழுதியுள்ளார். ரைபேரியஸ் (Tiberius கி.பி 14-37) மற்றும் கலிக்குலா (Caligula, கி.பி 37-41) போன்ற உரோம பேரரசர்கள் தமது ஆட்சிக்கு எதிரான எதிர்ப்புகளை அதைரியப்படுத்துவதற்காக பேரச்சம் ('பயங்கரவாதம்' என்பதற்கு ஒப்பான சொற்பதம்)* நிறைந்த போர்த்திற ஆட்சியைப் பயன்படுத்தினர். முதலாம் நூற்றாண்டில் யூதசிகாரி (Sicarii) மற்றும் செலட்ஸ் (Zealots) இயக்கம் ஆகியன உரோமர்களுக்கு எதிரான போர்த்திற ஆட்சி யாகப் பயங்கரவாதத்தைப் பிரயோகித்தன. 11ம் மற்றும் 12ம் நூற்றாண்டு களில் அரசியல் கொலைக் குழுவானது (Assassins sect) முஸ்லிம்களுக்கு எதிராகப் பயங்கரவாதத்தைப் பிரயோகித்தது.

'பயங்கரவாதம்" எனும் சொல்லானது நவீன ஜனநாயகத்தின் தோற்றத்துடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. பயங்கரவாதம் என்பது பிரெஞ்சு மொழியில் இருந்து தோற்றம் பெற்றது. 'படுகள் ஆட்சி" (Reign of terror) காலகட்டத்தின் போது ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் இச்சொல்லானது ஆங்கில அரசியல் மொழியின் ஓர் பகுதியாக உருவாகி யுள்ளது. அதன் பின்னர் பய்ஙகரவாதமானது பேரச்சத்தின் ஓர் முறையாகக் கருதப்பட்டதுடன் அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் குறிப்பதா கவும் அமைந்திருந்தது. இவ்வாறாக அரசாங் கத்தால் மேற்கொள்ளப்படும் மிரட்டலை இது குறிக்கிறது. அமெரிக்கப் புரட்சிக் கால கட்டத்தில் பயங்கரவாதமானது பொதுவான அம் சமாக அமைந்திருந்ததுடன் 1880 களின் உள் நாட்டு யுத்தத்தின் பின்னர் கு கிளக்ஸ் கிளன் (Ku Klux Klan) பேரச்சம் நிறைந்த போர்த்திற ஆட்சியைப் பயன்படுத்தினர்.

19ம் நூற்றாண்டில் பிற்பகுதியில் பயங்கர வாதத்தின் வளர்ச்சியை 4 பிரதான கட்டங்களாக வகுக்க முடியும் பயங்கரவாதத்தின் 1வது கட்டம் 1980களில் ஆரம்பித்ததுடன் அது 1915 ல் ஏற் பட்ட 1வது உலக மகா யுத்த காலம் வரை நகர்ந்தது. இரண்டாவது கட்டமானது முதலாவது உலகமகா யுத்ததிற்குப் பின்னர் ஆரம்பித்து இரண் டாவது உலகமகா யுத்தத்துடன் முடிவடைந்தது. பயங்கரவாதத்தின் மூன்றாவது காலகட்டமானது 1960களின் பிற்பகுதியில் ஆரம்பித்து 1970 களின் முற்பகுதி வரை நீடித்தது. அதன் நான்காவது கட்டம் 1970களில் ஆரம்பித்து இன்று வரை தொடர்கின்றது.

ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களைக் கொலை செய்வதன் மூலம் அவ்வாட்சி முறையை இல்லாது ஒழிப்பதற்கு முயற்சித்த கிளர்ச்சி யாளர்களாகவே 1880ல் பயங்கர வாதிகள் இருந்தனர். இக்கால கட்டத்தில் மேற்கு ஐரோப்பா, ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா என்பவற்றில் காணப்பட்ட அராஜகத்தைப் பின் பற்றுவோரே பயங்கரவாதத்தை மேற்கொண் டனர். அத்துடன் இக்கால கட்டத்தில் மன்னர்கள், ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் மற்றும் ஏனைய அரசாங்க அதிகாரிகள் முதலானோரை அவர்கள் கொலை செய்தனர். 1930களில் இருந்து சர்வாதிகார அரசுகளின் எழுச்சியுடன் பயங்கரவாதமானது அரசுகளின் செயற்பாடுக ளின் ஓர் பகுதியாக அமைந்தது. இரண்டாம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து ஐரோப்பிய குடியேற்றவாத ஆட்சியை எதிர்த்த பல்வேறு தேசியவாத மற்றும் குடியேற்றவாத ஆட்சிக்கு எதிரான குழுக்களால் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு ஆகிய இடங்களில் பயங்கரவாதமானது பரவலாகப் பயன்படுத்தப் பட்டது. குடியேற்றவாத ஆட்சியை அகற்று வதற்கான ஓர் வழிவகையாக பயங்கரவா தத்தில் மிக அதிகளவு தங்கியிருந்தமை காரணமாக இஸ்ரேல் கென்யா, சைப்ரஸ், அல்ஜீரியா போன்ற நாடுகள் தமது தேசிய போராட்டங்களுடாக சுதந்திரத்தை பெற்றன. அதன் பின்னர் சுதந்திரப் போராளிகள் எனும் சொற்பதம் பாவனைக்கு வந்தது. 1950ல் பயங்கரவாதமானது கிளர்ச்சியுடன் சேர்த்து இனங்காணப்பட்டது. அதேவேளை அரச பயங்கரவாதம் கூட அங்கீகரிக்கப்பட்டது.

பயங்கரவாதமானது 1960களிலும் பிற்பகுதி யிலும் மற்றும் 70களிலும் தொடர்ந்து புரட்சிகரச் சூழமைவினுள் வைத்து நோக்கப்பட்டது. இனத்துவ பிரிவினைவாத குழுக்களை உள்ளடக்குவதற்காக இப்பயன்பாடானது தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சர்வதேச அனுதாபத்தையும் ஆதரவையும் பெறுவதற்கா கப் பலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO) பர்ஸ்க் தாய் நாட்டிற்கான சுதந்திரம் (ETA) ஆகியன பயங்கரவாதத்தை மேற்கொண்டன.

1980 மற்றும் 90களில் இனத்துவ மற்றும் மத முரண்பாடுகள் பலவற்றில் போர்த் திடீர் பெருக்கம் காணப்பட்ட பிரதான போக்கொன்று இருந்து வந்துள்ளது. இம் முரண்பாடுகளில் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்ட எதிரி, குடிமக் களுக்கு எதிராக பயங்கரவாதத்தைப் பயன்படுத் துவதில் ஓர் அதிகரிப்பு காணப்பட்டது. இம்முரண்பாட்டு வடிவமானது வரலாற்று ரீதியான இனத்துவ போட்டி மனப்பான்மை மற்றும் பகைமை என்பவற்றிற்கு பரவியுள்ளது. மாத்திரமின்றி பனிப் போருக்குப் (Cold War) பின்னரான சர்வதேச ஒழுங்கு முறையின் கட்டமைப்பிற்கும் பரவியுள்ளது. இந்த நடத்தைப்பாங்கை பால்கன் நாடுகளிலிருந்து தென்னாசியா மற்றும் மத்திய ஆபிரிக்கா வரை கூர்ந்து நோக்கத்தக்கதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு மற்றும் சர்வதேச பயங்கரவாதம் ஆகிய இரண்டிற்கும் பொதுவான இரண்டாவது முக்கியமான ஓர் போக்கு எதுவெனில் மத அடிப்படைவாதத்தால் தூண்டப்படும் பயங்கரவாத குழுக்களின் திடீர் தோற்றமும் கலகப்படுத்தலும் ஆகும். 1970களில் காணப்பட்ட செயலாற்றல் மிக்க சர்வதேச பயங்கரவாதக் குழுக்கள் அனைத்தும் மதச்சார்பற்ற சித்தாந்தங்களை கொண்டிருந்தன. ஆனால் 1990 களின் இறுதியில் அநேகமான செயலாற்றல் மிக்க சர்வதேச குழுக்கள் மத ரீதியாக தூண்டப்பட்டனவாக இருந்தன. இது அதிகளவில் தற்கொலைப் பயங்கரவாதத் தாக்குதலீகளை பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளன, எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்ற சில மதச்சார்பற்ற தேசியவாத பயங்கரவாதக் குழுக்கள் கூட தற்கொலை குண்டுதாக்குதலை மேற்கொள்வதற்கு பொறுப்பானவர்களாக உள்ளன.

அனைத்து இஸ்லாமிய குழுக்களையும் மத அடிப்படைவாதிகளென வகைப்படுத்துவது தவறானதாகும். ஒசாமா பின்லேடனின் அவப்பேருக்குரிய தீர்ப்புக்கு (Fatwa) மத்தியிலும், அவர்களுடைய செயற்திட்டங்களுக்கு மறைப் பொருளாக மிகப் பலமானதோர் இரகசிய திட்டம் காணப்படுகின்றது. ஆயுதம் தரித்த இஸ்லாமியக் குழுவான GIA அல்ஜீரியாவில் ஓர் இஸ்லாமியக் குடியரசு நிறுவப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றது. லெபனானில் ஓர் இஸ்லாமிய குடியரசை உருவாக்க ஹிஸ்புல்லா விரும்புகிறது. பாலஸ்தீனத்தில் ஓர் இஸ்லாமிய குடியரசை உருவாக்க ஹமாஸ் விரும்புகிறது. பயங்கரவாதத்தின் பரிணாம வளர்ச்சியில் காணப்படும் இப் போக்கின் முனைப்பாகத் தோன்றுகின்ற அம்சமானது 19ம் நூற்றாண்டில் காணப்பட்ட அராஜகமான இயக்கங்களைப் போன்றதல்ல. தமது அமைப்புகளை இனங்காண்பதற்காக பயங்கரவாதம் எனும் சொற்பதத்தை பயன்படுத்துவதற்கு நவீன பயங்கரவாதக் குழுக்கள் தயங்குகின்றன. அவர்கள் தம்மை ஒன்றில் சுதந்திரப் போராளிகள் என்றோ அல்லது நகர்ப்புற கெரில்லாக்கள் என்றோ கூறி வருகின்றனர். வேறுவழியின்றி பயங்கரவாதத்தைப் பயன்படுத்தும் ஆனால் தம்மைச் சுதந்திர போராளிகளாக இனங்காட்டிக் கொள்ளும் குழுக்களுக்கான உதாரணங்களாக தேசிய விடுதலை முன்னணி, பாலஸ்தீனர்களின் விடுதலைக்கான பிரபலமான முன்னணி, பஸ்க் தாய் நாட்டுக்கான சுதந்திரம் போன்ற அமைப்புக்களைக் கூறலாம்.

போல் வில்கின்சனின் கூற்றுப்படி, பல நாடுகளில் காணப்படும் உள்நாட்டுப் பயங்கரவாதக் குழுக்கள் மத்தியில் அண்மைக் காலத்திற்குரிய பொதுவான வேறுபட்ட ஐந்து பிரதான போக்குகள் நடைமுறையில் உள்ளன. அவை பின்வருமாறு: முதலாவதாக, நகர நிலையங்கள் மீதான பாரிய குண்டுத் தாக்குதல்களை நோக்கிய ஓர் போக்கு. இரண்டாவதாக, பெரும் அழிவார்ந்த தாக்குதல்களை நோக்கிய ஓர் போக்கு. மூன்றாவதாக, தேசிய பொருளாதாரங்கள் மீது பாரிய சேதத்தை ஏற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட தாக்குதல்களை நோக்கிய ஓர் போக்கு. நான்காவதாக, குடும்பங்கள், கம்பனிகள் மற்றும் அரசாங்கங்கள் என்பவற்றிலிருந்து அச்சுறுத்திப் பணம் பறிக்கும் நோக்கில் பணயக் கைதிகளாக நபர்களைப் பிடிப்பதில் காணப்படும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு. ஐந்தாவதாக, அரசியல் பயங்கரவாதக் குழுக்களுக்கும் சர்வதேச ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் இடையில் காணப்படும் அதிகளவில் பரந்து அகன்றதும் மிகவும் உடந்தையாக உள்ளதுமான நிலைமை.

சுமார் 100 வருடங்களுக்கு மேலாக பரிணாம வளர்ச்சி அடைந்துள்ள பயங்கரவாதமானது உலக அரசியல் மற்றும் அதிகார அணிகளின் ஒருமுகப்படல் என்பவற்றில் காணப்படும் மாற்றங்களுக்கு ஏற்ப அதன் இயல்பிலும் பரப்பெல்லையிலும் மாற்றமடைந்துள்ளது என்பது இச் சூழமைவில் தெளிவாகத் தெரிகின்றது.

## வரைவிலக்கணம், சிறப்பியல்புகள் மற்றும் இலக்குகள்

பயங்கரவாதத்தைப் பற்றிச் சரியான, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் வரைவிலக்கணம் இதுவரை எதுவுமில்லை. பயங்கரவாதம் என்றால் என்ன என்பதைப் பற்றி அநேகமானோர் தெளிவற்ற கருத்தை கொண்டுள்ளனர். இச் சொற்பதம் பற்றிய தெளிவானதும் துல்லியமானதுமான வரைவிலக்கணத்தை அவர்கள் கொண்டிருப்பதில் குறைபாடு காணப்படுகின்றது. அலெக்ஸ் சிமிற் அவர்களின் கூற்றுப்படி, அரசியல் பயங்கரவாதத்தைப் பற்றி 100க்கு மேற்பட்ட வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றன. அதன் விளைவாக பயங்கரவாதமானது பல்வேறுபட்ட நபர்களைப் பொறுத்தவரை வேறுபட்ட விடயங்களை குறிக்கின்றது. உதாரணமாக, "ஒருவரின் பயங்கரவாதி மற்றொருவரின் சுதந்திரப் போராளியாவார்". நவீன சூழமைவில் பயங்கரவாதம் என்பது எதைக் கருதுகின்றது என்பதையிட்டு ஓர் உடன்பாடு காணப்படாவிடினும், பயங்கரவாதமானது ஓர் பிரச்சினைக்குரிய விடயமாகும் என்பதில் ஓர் பொதுவான உடன்பாடு காணப்படுகின்றது. அப்பாவி மக்கள் மீது இலக்கு வைப்பதன் மூலம் அரசியல் குறிக்கோள் ஒன்றை அடைவதற்காக சட்டத்திற்கு முரணான வகையில் பலத்தை பிரயோகிப்பதைப் பயங்கரவாதம் உள்ளடக்கியுள்ளதென வோல்டர் லக்குவர் குறிப்பிடுகின்றார். ஓர் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட வகையில் அச்சுறுத்தலை அல்லது பலத்தைப் பிரயோகிப்பதாக பயங்கரவாதம் அமைந்துள்ளதென பிறையன் யென்கின்ஸ் வரையறுக்கின்றார். நெதன்யாகுவின் ஜொனதன் நிறுவனத்தின் கூற்றுப்படி, பயங்கரவாதம் என்பது அரசியல் நோக்கங்களுக்காக அப்பாவிகளிடம் பய உணர்ச்சியை தூண்டுவதற்காக வேண்டுமென்றே திட்டமிடப்பட்ட வகையில் அவர்களை ஊனமடையச் செய்தல், மற்றும் அச்சுறுத்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதைக் குறிக்கின்றது.

பிரதான போர் முறைகளாகப் பயங்கரவாதத்தைப் பயன்படுத்தும் அமைப்புக்கள், தமது போர்த்திற ஆட்சியாக வெடிகுண்டுகள், கொலைகள், ஒளிந்திருந்து நடாத்தப்படும் தாக்குதல்கள் என்பவற்றைப் பயன்படுத்தும் அமைப்புகள் மற்றும் பலியாளாக குடிமக்களை இலக்குவைப்போர் ஆகியோருக்கு பயங்கரவாதி எனும் சொற்பதம் மிகவும் நடைமுறைப் பயன்பாட்டுக்கு உரிய வகையில் வரையறுக்கப்பட்டதாக உள்ளது. இவ் வரைவிலக்கணமானது மிகவும் பரந்ததாக அமைந்துள்ளதுடன், ஐரிஸ் குடியரசு இராணுவம் (IRA), ஆர்மேனிய பயங்கரவாதிகள், மேற்கு ஜேர்மனியின் செஞ்சேனைப் பிரிவு (RAF), இத்தாலியிலுள்ள செம்படை, பிரான்ஸில் உள்ள அக்சன் டிரெக் (Action Directe), ஜப்பானிய செஞ்சேனை போன்ற குழுக்களை உள்ளடக்கியுள்ளது. பயங்கரவாத செயற்பாடுகளுக்காக அரசாங்க நிறுவனங்களால் சட்டத்திற்கு முரணான வகையில் வெளிநாடுகளுக்கு கொலையாளிகள் அனுப்பி வைக்கப்படுவது உட்பட அரசாங்கங்களால் நிதியளிப்பு, ஆயுதம் அல்லது ஊக்குவிப்பு என்பனவும் அவற்றிற்கு வழங்கப்படுகின்றபோதும், இச் சொற்பதமானது அரசாங்கங்களிலிருந்து விலகி சுயேச்சையாகச் செயற்படும் குழுக்களுக்கு வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது.

இவ்விடயம் பற்றிய அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் வரைவிலக்கணம் ஒன்று இல்லாத நிலையில், பயங்கரவாதத்தின் பிரதான மூலக்கூறுகளை ஆராய்வது அவசியமானதாக உள்ளது. பயங்கரவாதத்தின் முதலாவது பொதுவான உட்கூறாக வன்முறையைப் பயன்படுத்துதல் அல்லது வன்முறைபற்றிய அச்சுறுத்தல் அமைந்துள்ளது. பயங்கரவாதத்தின் இரண்டாவது உட்கூறாக, பயத்தைத் தோற்றுவிக்கும் நோக்கம் அமைந்துள்ளது. ஒரு தந்திரோபாயமாக பயத்தைத் தூண்டுவதற்கான வன்முறையின் அரசியல்ரீதியான பயன்பாடானது பல அமைப்புகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மூன்றாவது அம்சமாக, பயங்கரவாதிகளின் வியப்பளிக்கும் செயற்பாடுகளின் முக்கியத்துவமானது பயங்கரவாதத்தைப் பயன்படுத்துவது பற்றிப் புரிந்துகொள்வதில் உள்ளது. இவ்வாறாக பயமுறுத்தல், அச்சமூட்டுதல், வியப்பளித்தல் என்பன பயங்கரவாதிகளால் பயன்படுத்தப்படும் பிரதான உட்கூறுகளாக உள்ளன. ஆகவே "வன்முறை பற்றிய அச்சுறுத்தல் மற்றும் கட்டாயப்படுத்துவதற்கு அல்லது இணங்க வைப்பதற்காக பயமுறுத்தல் என்பவற்றுடன் பொதுமக்களது கவனத்தை ஈர்ப்பதாக" இதைப் பரந்த அடிப்படையில் வரையறுக்க முடியும். அத்தகைய ஒரு வரைவிலக்கணத்தின் பரப்பெல்லையினுள் பயங்கரவாதம் ஆயுதம் தாங்கிய பிரச்சார வடிவமாக அல்லது செயல்வினைகளின் பிரசாரமாக அமைகின்றது.

பயங்கரவாதத்தின் சிறப்பியல்புகளை வரையறுப்பதில், போல் வில்கின்சன் பின்வரும் ஐந்து பிரதான சிறப்பியல்புகளை வரையறுத்துள்ளார்: மிதமிஞ்சிய அச்சமூட்டும் அல்லது பயங்கரமான ஒரு சூழலை உருவாக்குவதற்காகத் திட்டமிட்டுச் செய்யப்படுவதுடன் அதனையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதுமே முதலாவது சிறப்பியல்பாக அமைகின்றது. இரண்டாவதாக, வன்முறையால் உடனடியாகப் பாதிக்கப்படுபவர்களைவிடப் பரந்த ஒரு கூட்டத்தை அல்லது இலக்கை நோக்கி அது இயக்கப்படுகின்றது. மூன்றாவதாக, குடிமக்கள் உட்பட எழுமாற்றான மற்றும் அடையாள இலக்குகள் மீதான தாக்குதல்களுடன் அது இயற்கையாகவே சம்பந்தப்பட்டுள்ளது. நான்காவதாக, மேற்கொள்ளப்படும் வன்முறைச் செயற்பாடானது சமூகத்தில் சமூக நியதிகளை அவர்கள் மீறும் அடிப்படையான உணர்வுபூர்வமான விடயங்களில் அவை வழமைக்கு மாறானதாக நிகழ்வதாகச் சமூகத்தால் உணரப்படுகின்றது. இவ்வாறாக இது சீற்ற உணர்வை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது. ஐந்தாவதாக, பயங்கரவாதமானது ஏதோ ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அரசியல் நடத்தைகளில் செல்வாக்குச் செலுத்துவதற்கு முயற்சித்துப் பார்ப்பதற்காகப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதுதவிர, ஸ்டீபன் ஈ. எட்கின்ஸ் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு அச்சமூட்டுதலை அரசியல்ரீதியாகப் பயன்படுத்துவதன் சிறப்பியல்புகளைப் பட்டியல்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:

1. புரட்சி அல்லது அடக்குமுறை போன்ற அரசியல் குறிக்கோளை அடைவதற்காக கொலை செய்தல், காயம் ஏற்படுத்துதல், அச்சுறுத்தல் என்பவற்றின் திட்டமிடப்பட்ட முறையிலான பயன்படுத்தல்.

2. அச்சம், கட்டாயப்படுத்தல், மிரட்டல் என்பவற்றுக்கான ஒரு சூழல்.

3. இயற்கூறான வகைதொகையற்ற தன்மை: போராட்டத்தில் பங்குபற்றாதோர்மீதும் வகைதொகையற்ற தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன – குறிப்பாக எவரும் இலக்குவைக்கப்படுவதில்லை;ஆனால் யாருமே பாதுகாப்பாக இல்லை.

4. அதன் எதிர்வுகூறமுடியாத தன்மை: தனிநபர் ஒருவர் காயம் அல்லது மரணம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாத நிலையில் இருத்தல்.

5. யுத்தம் பற்றிய விதிகள் அல்லது சமவாயங்கள் அனைத்தையும் மறுத்துரைக்கும் தன்மை.

6. கார் வெடிகுண்டு, தபால் குண்டு, இரட்டை வெடிகுண்டுகள், பாரிய அளவிலான கொலை போன்ற அழிவை ஏற்படுத்தும் காட்டு மிராண்டித்தனமான முறைகளைப் பயன் படுத்தப்படுதல்.

7. பயங்கரவாதக் குழுவின் அரசியற் கோட்பாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கான அறநெறி சார்ந்த நியாயப்படுத்தல் காணப்படுகின்றது.

பயங்கரவாத அமைப்புக்களின் சிறப்பியல்புகள் ஒரேவிதமானவையாக உள்ளபோதும் அவ்வமைப்புக்களின் இலக்குகள் குறிப்பானவையாக, விசேடமாக இடதுசாரிப் பயங்கரவாத அமைப்புக்களின் விடயத்தில் கணிசமான அளவு மாறுபட்டவையாக உள்ளன. பெரும்பாலான இடதுசாரிப் பயங்கரவாத அமைப்புக்கள் பின்வரும் குறிக்கோள்களுடன் ஒத்துப்போகின்றன:

1. அரசாங்கத்தின் மிதமிஞ்சிய செயற்பாட்டை, குறிப்பாக பாரபட்சமான எதிர்வினையைத் தூண்டுவதற்கு.

2. அச்ச உணர்வு மற்றும் பாதுகாப்பற்ற சூழல் ஒன்றை உருவாக்கி தனிநபர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் அவர்களுடைய மன உறுதியைக் குலைப்பதற்கும் காரணமாக அமையும்.

3. கைதிகளை விடுதலை செய்வதற்கும் கொள்கை விளக்க அறிக்கை களை வெளியிடுவதற்கும்.

4. பாதுகாப்புப் படைகளை நகர்த்துவதற்கு.

5. ஆயுதங்களையும் வெடிமருந்து களையும் கொள்வனவு செய்வதன் பொருட்டு நிதி வளங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

ஆகவே, அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த முயல்வதில் வன்முறை அல்லது வன்முறை பற்றிய அச்சுறுத்தல் ஊடாக வேண்டுமென்றே அச்சத்தை உருவாக்கி அதிலிருந்து பயனடைவதாகவும் பயங்கரவாதத்தை வரையறுக்க முடியும்.

இப்போர்த்திற ஆட்சியைப் பிரயோகிக்கும் வகை அமைப்புகளுக்கான மிகவும் பிரபல்யம் வாய்ந்த உதாரணமாக இத்தாலியிலுள்ள செம்படை (Red Brigade), ஜேர்மனியில் உள்ள செஞ்சேனைப் பிரிவு (Red Army Faction), பிரான்சிலுள்ள எக்சன் டிரேக்ட் (Action Directe) என்பன அமைந்துள்ளன.

வலதுசாரிப் பயங்கரவாதக் குழுக்களானது இடதுசாரிக் குழுக்களிலிருந்து ஒரு வேறுபட்ட இயல்பைக் கொண்டுள்ளன. சிலவேளைகளில் இராணுவம் மற்றும் பொலிஸ் என்பவற்றிலுள்ள உறுப்பினர்கள் இடதுசாரிக் குழுக்களுக்கெதிராக வலதுசாரிப் பயங்கரவாத அமைப்புக்களை உருவாக்குகின்றனர் அல்லது அவற்றில் இணைகின்றனர்.

பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெய்ன் ஆகிய நாடுகளில் உள்ள பல பயங்கரவாதக் குழுக்களில் இந்நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. பயங்கரவாதத்தின் வெற்றிக்குப் பின்வரும் நான்கு நிலைமைகள் அவசியமானவையாக உள்ளன:

1. சமுதாய பொருளாதார நெருக்கடியால் அல்லது யுத்தத்தால் ஏற்கனவே முடக்கப் பட்டிருத்தல்.

2. சில இனத்துவ, மத அல்லது தேசியக் குழுக்களின் இணை நிலையான உறுப்பினர்கள் இச்செயல் வீரர்களுக்கு ஆதரவளிக்கின்றனமை.

3.செயல் வீரர்களின் இலக்குகள் அதிகாரத்திலுள்ள ஆட்சிமுறையை அல்லது எதிரான அமைப்புக்களை நிலைகுலையச் செய்வதுடன் மட்டுப் படுத்தப்பட்டதாக உள்ள நிலைமை.

4. பயங்கரவாதச் செயல்களுக்கு எதிரான விரிவுபடுத்தப்பட்ட நடவடிக் கையை நடாத்துவதற்கான நிதி, மனத்திடம் அல்லது அரசியல் பலம் என்பவற்றில் அவர்களுடைய எதிரிகள் குறைபாடு உடையவர் களாகக் காணப்படும் நிலை.

போல் வில்கின்சனின் கூற்றுப்படி, பயங்கரவாதம் கெரில்லா போர் முறைகளுக்கான ஓர் ஒத்த பொருள் தரும் சொல் என்பதைவிட குறிப்பிட்ட ஒரு போராட்ட முறைமை எனப் பொதுவானதோர் அங்கீகாரம் உண்டு. கெரில்லா போர் முறைகளில் பயங்கரவாதம் பயன்படுத்தப் படுகின்றபோது அவற்றுக்கிடையே அடிப்படையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. கெரில்லா என்பது ஆயுதந்தரித்த தனிநபர்களின் ஒரு பெரிய குழுவாகும். அது ஓர் இராணுவ அலகாகச் செயற்படுவதுடன் குறிப்பிட்ட அளவு இறைமை யுடன் ஒரு பகுதி ஆட்சி எல்லை கட்டுப்படுத்து கின்றது. பயங்கரவாதிகள் ஆயுதந்தரித்த அலகுகளாகச் செயற்படுவதில்லை என்பதுடன் ஆட்சி எல்லையை ஒன்றைப் பிடியில் வைத்திருப்பதில்லை. பயங்கரவாதமானது சாதாரண குற்றவாளிகளில் இருந்து குறிப்பிடத்தக்க அளவு வேறுபடுகின்றது. பயங்கர வாதிகள் பின்வரும் சிறப்பியல்புகளை உள்ளீர்த்துக் கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர்:

1. விலக்கிவிட முடியாத அரசியற் குறிக்கோளும் உள்நோக்கமும்

2. வன்முறை அல்லது வன்முறை பற்றிய அச்சுறுத்தலைப் பயன்படுத்துதல்

3. உடனடியாகப் பாதிக்கப்படுவோர் அல்லது இலக்குகளுக்கு அப்பால் மிகையான விளைவை உண்டாக்கக் கூடிய உளவியல் பின்விளைவுகளைக் கொண்டிருக்கக் கூடியதாகத் திட்டமிடப்படுதல்

4. இனங்காணத்தக்க கட்டளை அல்லது சதித்திட்ட குழுவின் கட்டுப்பாட்டுச் சங்கிலித் தொடர் ஒன்றுடன்கூடிய ஓர் அமைப்பினால் வழிநடத்தப்படுகின்றது

5. ஓர் உப தேசியக் குழு அல்லது அரசு அற்ற அமைப்பால் மேற்கொள்ளப்படும் சட்டத்துக்கு முரணான செயல்

பயங்கரவாதமானது அடிப்படையில் ஓர் அரசியல் மெய்ந்நிழக்வாக இருப்பதுடன் அது அரசியல் அதிகாரத்தைப் பற்றியதாகும். இவ்வாறாக அரசியல் குறிக்கோளொன்றை அடையப்பெறும் முயற்சியாக வன்முறையை அல்லது வன்முறை பற்றிய அச்சுறுத்தலைப் பயன்படுத்துவதாகவே அது அமைகின்றது. பயங்கரவாதத்தை வரையறுப்பதில் கடினமாக உள்ள ஓர் காரணி எதுவெனில் இச்சொற்பதத்தின் அர்த்தமானது கடந்த இரு நூற்றாண்டுகளில் அடிக்கடி மாற்றத்திற்குள்ளாகி வந்துள்ளது என்பதாகும்.

அரசாங்கம், அரசியல் குழுக்கள், தனிச்சமய குழு மரபினர் மற்றும் குற்றச்செயலில் ஈடுபடும் குழுக்கள் போன்ற பல செயற்பாட்டாளர்களால் அரசியல் பயங்கரவாதம் பயன்படுத்தப்பட முடியும் என்பதுடன், அவ்வாறு பயன்படுத்தப்பட்டும் வருகின்றது. அது ஏதாவது குறிப்பிட்ட சித்தாந்தம், அரசியற் கோட்பாடு, சமயம் என்பவற்றிற்கு மாத்திரம் தனியுரிமையானதல்ல. பயங்கரவாதச் செயன்முறையில் ஐந்து பிரதானமான பங்குபற்றுவோர் ஐவர் உள்ளனர்: வன்முறையில் ஈடுபடுவோர், உடனடியாகப் பாதிக்கப்படுவோர், பயங்கரவாதிகள் மிரட்டுவதற்கு நாடும் பரந்த இலக்காக உள்ள குழுக்கள் அல்லது சமுதாயம், பயங்கரவாதத்தை அனுபவிக்கும் சமுதாயத்திலுள்ள நடுநிலையான பார்வையாளர்கள் மற்றும் சர்வதேச அபிப்பிராயங்கள்.

## மூல காரணிகள்

அரசியற் பயங்கரவாதத்தை ஆராய்வதற்குப் பயங்கரவாத்தின் மூலக்காரணிகளை விளங்கிக் கொள்ளவேண்டியுள்ளது. பயங்கரவாதமானது அதை வரையறுப்பதிலிருந்து எந்தளவுக்கு நழுவிச் செல்கின்றதோ அவ்வாறே பயங்கரவாதத்திற்குக் காரணமாக அமையும் சமூக-பொருளாதார மற்றும் அரசியற் காரணிகள் என்பனவும் சிக்கல் நிறைந்தவையாகவே உள்ளன. உலகளாவிய பயங்கரவாதத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பின்வரும் காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன எனக் கூறமுடியும். முதலாவதாக, வரலாற்று ரீதியான அநீதி அல்லது மனக்குறைகள் நவீன அரசியல் பயங்கரவாத்திற்கான ஒரு காரணியாக அமைந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. இம் மனக்குறைகளைத் தீர்ப்பதற்கும் சம உரிமைகளை அல்லது ஒரு தனி அரசு பெற்றுக்கொள்வதற்குமாகவே சமூக இயக்கமொன்று விருத்தி அடைகின்றது. ஜேர்மனியில் ஹிட்லரின் ஆட்சி, சோவியத் ஒன்றியத்தில் ஸ்டாலினின் ஆட்சி மற்றும் மத்தியகால அராபிய முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி என்பவற்றிற்கு உட்பட்ட யூதர்களின் வரலாற்று ரீதியான அடக்குமுறையானது இஸ்ரேல் அரசு எனும் வடிவத்தில் யூத அச்சுறுத்தலைக் கட்டவிழ்த்து விட்டது. இவ்வாறாக மாபெரும் மனிதப் படுகொலையின் கசப்பான நினைவுகள் இஸ்ரேலிய யூதர்கள் செயல்முனைப்பற்ற தன்மையின் தோற்றத்தை நிராகரிப்பதற்கு அவர்களை இட்டுச்சென்றுள்ளதுடன், ஆதரவற்ற பாதிக்கப்பட்டோரின் சுய எண்ணத்தை வெற்றிகொள்வதற்காகப் போராடுவதற்கும் வழிவகுத்தது. அகதிமுகாம்களில் அல்லது சிறைச்சாலைகளில் அல்லது தடுப்பு நிலையங்களில் பெறப்படும் தனிப்பட்ட அல்லது நினைவில் இருக்கும் அனுபவங்கள்கூட இதற்கான தூண்டுதலின் காரணிகளாக அமைந்துள்ளன. தடுப்பு முகாம் மற்றும் சிறை முகாம்களில் சித்திரவதை மற்றும் எதிர்மறையான அனுபவங்கள் மூலம் பயங்கரவாதம் தூண்டப்பட்டமைக்கான உதாரணங்களாக பாலஸ்தீனர்களும் ஐரிஸ் குடியரசு இராணுவத்தை சேர்ந்தவர்களும் காணனப்படுகின்றனர்.

இரண்டாவதாக, சர்வதேசப் பயங்கரவாதத்தைப் போன்று நவீன கால தேசிய பயங்கரவாதத்தை அதிகரிக்கச் செய்துள்ள காரணிகளாகக் குடியேற்றவாதமும் நவ குடியேற்றவாதமும் அமைந்துள்ளன. பயங்கரவாதச் செயற்பாட்டை அதிகரிக்கக் காரணமாக அமையும் இஸ்ரேலின் பிடிக்குட்பட்ட வகையில் நவ காலனித்துவத்துடன் சம்மந்தப்பட்ட விடயத்திற்கு உதாரணமாக பாலஸ்தீனத்திலுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கம் திகழும் அதேவேளை, காலனித்துவம் பயங்கரவாதத்தை தூண்டியதற்கான ஓர் உதாரணமாகத் தென்னாபிரிக்காவிலுள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரசுக்கு உட்பட்ட பயங்கரவாதச் செயற்பாடுகள் அமைகின்றன. இஸ்ரேலுக்கு எதிராகவும் ஐக்கிய அமெரிக்க மாநிலங்கள் பலவற்றிலும் பல்வேறு பயங்கரவாதச் செயற்பாடுகளை மேற்கொண்டமைக்குப் பாலஸ்தீன விடுதலை இயக்கம் பொறுப்பாக இருந்துள்ளது. அது மத்திய கிழக்கின் அரசியல் உறுதிப்பாட்டைச் சீர்குலைத்துள்ளதுடன் ஏனைய அராபிய நாடுகளில் வேறு வழியின்றி பயங்கரவாதத்தில் ஈடுபடும் புதிய பிரிவுகள் மற்றும் குழுக்களின் வளர்ச்சிக்கும் துணைபுரிந்துள்ளது.

பயங்கரவாதத்தின் தோற்றத்திற்குப் பங்களிப்புச செய்துள்ள மற்றைய பொதுவான காரணி எதுவெனில் வன்முறையை நியாயப்படுத்தும் சித்தாந்தங்களின் வெளிப்பாடாகும். இவற்றுள் அராஜகவாதம், எதிர்மறுப்புவாதம் (மறுப்பியல் கட்சி வாதம்), மூன்றாம் உலக புரட்சியாளர்கள் மற்றும் புதிய இடதுசாரிச் சித்தாந்தங்கள் என்பவை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவையாகும். உலக மகா யுத்தத்திற்குப் பின்னரான காலகட்டத்தில் காணப்பட்ட தேசிய விடுதலை இயக்கங்களின் அனுபவம் மற்றும் பயங்கரவாத்திற்குச் சாதகமான ஒரு காரணியாக அமைந்துள்ள கிராமிய கெரில்லா நிலையிலிருந்து நகர்ப்புற கெரில்லா யுத்தத்திற்கு மாற்றம் அடைந்துள்ள புரட்சிகரக் கோட்பாடு என்பவற்றின் விளைபயனாகப் பெறப்பட்டதே இச்சித்தாந்தங்கள் ஆகும்.

போல் வில்கின்சனின் கூற்றுப்படி, உலகிலுள்ள பல நாடுகளில் காணப்படும் அரசியல் பயங்கரவாத்திற்கான காரணியாக, அதிகளவில் காணப்படும் முழுமையான வறுமை அல்லது வளம் குன்றிய நிலை அமைந்துள்ளது. எனினும் மேற்கு ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளிலுள்ள பயங்கரவாதமானது மத்திய தர வர்க்கத்தின் தேர்ந்தெடுக்கப்பட்டதோர் முறைமையாகக் காணப்படுகின்றது. இன்றுள்ள பல பயங்கரவாதிகள் நன்கு கல்வி கற்றவர்களாகவும் நடைமுறையிலுள்ள அரசியல் முறையில் நம்பிக்கையிழந்த இளம் மாணவர்களாகவும் உள்ளனர். இத்தாலி, ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், உருகுவே போன்ற நாடுகளில் இவை சான்றாக அமைந்துள்ளதைப்போல் அனேகமான பயங்கரவாதிகள் மாணவப் பருவத்தின் அமைதியின்மையிலிருந்து தோற்றம் பெற்றுள்ளனர்.

அரசியல் பயங்கரவாத்தின் வளர்ச்சிக்கான முக்கியமானதோர் காரணியாக சமூக ஆதரவு அமைந்துள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக வன்முறையை பயன்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கும் சமூகப் பழக்கவழக்கங்கள் மற்றும் வரலாற்றுரீதியான மரபுகள் என்பவற்றை இவ்வெண்ணக்கரு குறிக்கின்றது. விருத்தி அடைந்த அரசியல் வழக்காறுகளாக பயங்கரவாத்தின் வளர்ச்சியை சமூக புராணக் கதைகள், மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் என்பன அனுமதிக்கின்றன. அத்தகைய மரபிற்கான உதாரணமாக வட அயர்லாந்து அமைந்துள்ளது.

அரசியலில் பங்குபற்றலுக்கான சந்தர்ப்பங்களின் பற்றாக்குறை அரசியல் பயங்கரவாதத்திற்கான ஒரு பிரதான காரணியாக அமைந்துள்ளது. அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதலை மறுப்பதுடன் கருத்து மாறுபாடு உடையோரைக் கொடுமைப்படுத்தி அரசாங்கத்தை பயங்கரவாதத்திற்கு சாதகமான சூழ்நிலைகளை உருவாக்குகின்றனர். பாலஸ்தீன விடுதலை இயக்கம், பஸ்க் தாய் நாட்டிற்கான சுதந்திரம் போன்ற, சிறுபான்மை இனங்களை மையமாகக் கொண்டுள்ள வாக்குரிமை பறிக்கப்பட்ட அல்லது நாடு கடத்தப்பட்ட தேசியக் குழுக்கள் அரசியல் குறிக்கோள்களை அடைவதற்காகப் பயங்கரவாதத்தை மேற்கொள்கின்றன. ஸ்பெயினில் உள்ள பஸ்க் மாகாணத்தைமையமாகக்கொண்டு சுதந்திர அரசை உருவாக்குவதில் பஸ்க் தாய் நாட்டிற்கான சுதந்திரம் என்னும் அமைப்பு நம்பிக்கை கொண்டுள்ள அதேவேளை, பாலஸ்தீன விடுதலை இயக்கமானது பாலஸ்தீன அரசை நிறுவுவதை இலக்காகக் கொண்டுள்ளது.

## பயங்கரவாதத்தின் ஒழுங்குமுறை

பயங்கரவாதத்தில் பல்வகைப்பட்ட வடிவங்கள் அல்லது ஒழுங்குமுறைகள் இருந்துவந்துள்ளன. அரசுக்கும் தனிக்குழுவுக்கும் இடையிலான ஓர் அடிப்படையிலான வேறுபாடாக அச்ச உணர்வு அமைந்துள்ளது. ஏனைய முக்கிய பிரிவாக உள்நாட்டு மற்றும் சர்வதேச பயங்கரவாதம் காணப்படுகின்றது. உள்நாட்டுப் பயங்கரவாதமானது ஓர் அரசினுள் காணப்படும் தேசிய அரசு ஒன்றினுள் அல்லது குறிப்பிட்ட ஓர் பிரதேசத்தினுள் நிகழும் வரையறுக்கப்பட்ட ஒரு திட்டத்தின் அடிப்படையிலான வன்முறை ஆகும். சர்வதேச எல்லைகளுக்கு அப்பால் அல்லது பயங்கரவாதத்தின் தோற்றுவாயாக வுள்ள அரசினுள் அமைந்துள்ள ஓர் அந்நியதேச இலக்குமீது மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத் தாக்குதல்கள் சர்வதேச அல்லது உலகளாவிய பயங்கரவாதமாக அமைந்துள்ளன. முற்றிலுமான உள்நாட்டு பயங்கரவாதத்திற்கான எடுத்துக்காட்டைத் தேடிக்கண்டுபிடிப்பது சிரமமானதாகும். வட அயர்லாந்திலுள்ள தற்காலிக ஏற்பாடான ஐரிஸ் குடியரசு இராணுவத்தை ஓர் உதாரணமாகக் கொள்ள முடியும். சர்வதேச பயங்கரவாதத்தைப் பின்வருமாறு மேலும் மாதிரிப்படிவ மரபாய்வுத்துறைகளாகப் பிரிக்க முடியும். அவை

1. தேசிய ரீதியான பயங்கரவாதம்
2. சித்தாந்த ரீதியான பயங்கரவாதம்
3. மதவெறியார்வம் கொண்டோர்
4. ஒரு பிரச்சினையில் மாத்திரம் வெறியார்வம் கொண்டோர்
5. அரச ஆதரவுடனான சர்வதேசப் பயங்கரவாதம்

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு முன்னரான பயங்கரவாதம் மற்றும் நவீன காலப் பயங்கரவாதம் என்பவற்றிற்கிடையில் காணப்படும் வேறுபடும் முறையைத் தெளிவாக்குதலானது நுண்ணோக்குடையதாக அமைந்துள்ளது. அவை பழைய பயங்கரவாதம் எனவும் புதிய பயங்கரவாதம் எனவும் அழைக்கப்படுகின்றன. தாக்கத்தை ஏற்படுத்தும் அதன் தன்மையுள் புதிய பயங்கரவாதமானது மிகவும் வேறுபட்டதாகக் காணப்படும் அதேவேளை, பழைய பயங்கரவாதமானது அராஜக சித்தாந்தத்துடன் பிணைக்கப்பட்டு இருந்தது. பழைய பயங்கரவாதத்திலிருந்து புதிய பயங்கரவாதத்தை வேறுபடுத்தும் பல காரணிகள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுள் முதலாவது, செய்தி ஊடகங்களாகும். கடந்த காலத்தில் காணப்பட்டதைவிடப் புதிய பயங்கரவாதமானது அதிகமான மக்களைச் சென்றடைகின்றது. இரண்டாவதாக, தொடர்பாடல் அமைகின்றது. நொடிப்பொழுதில் நிகழும் உலகளாவிய தொடர்பாடல் இணைப்புக்கள் இல்லாவிடில் பயங்கரவாதிகளின் செய்திகள் விரைவாகப் பரவமாட்டாது. மூன்றாவதாக, நவீன பயங்கரவாதப் போர்க் கருவிகள் நுட்பத்திறன் உடையதாகவும் அழிவார்ந்ததாகவும் அமைந்துள்ளன. இறுதியாக, நகரக்கூடிய கட்டளையிடல், ஆதரவு மற்றும் தொடர்பாடல் வலையமைப்புக்கள் என்பவற்றின் ஊடாக நவீன பயங்கரவாதிகள் தமது தாக்குதல் சக்தியை அதிகரித்துள்ளனர். வோல்ட்டர் லெக்குவரின் கூற்றுப்படி, முன்னைய பயங்கரவாதிகளைவிட நவீன பயங்கரவாதிகள் அதிகளவு ஈவிரக்கம் அற்றவர்களாகவும் அப்பாவிகளைப் பரபரப்பூட்டும் வகையில் கொலைசெய்வதிலும் ஈடுபடுகின்றனர்.

## சித்தாந்தங்களும் அமைப்புக்களும்

அரசியல் பயங்கரவாதத்தை விளங்கிக்கொள்வதற்குப் பயங்கரவாத நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் சித்தாந்தங்களையும், அமைப்புக்களையும் ஆராய வேண்டியுள்ளது. பயங்கரவாத சித்தாந்தத்தில் மூன்று பிரதான சமகாலக் கூறுகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:

1. சீரிய அராஜகவாதமும் எதிர் மறுப்பு வாதமும் (மறுப்பியல் கட்சி வாதம்)
2. மூன்றாம் உலகப் புரட்சி
3. புதிய இடதுசாரி சித்தாந்தங்கள்

கார்ல் மார்க்ஸ் (கி.பி 1818-1883) பயங்கரவாதத்தை ஏற்புடையதாகக் கொள்ளவில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான், பயங்கரவாதத்தை மாக்சிஸம் ஊக்குவித்து அதன் வளர்ச்சிக்கு உதவுவதில்லை. கார்ல்மார்க்ஸ் புரட்சிகர மாற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அரசியல் நோக்கத்துடன் கூடிய வெடிகுண்டுகளையும், கொலைகளையும் அவர் ஆதரித்துப் பேசவில்லை. பயங்கரவாதத்தை மார்க்ஸ் வெளிப்படையாகவே வன்மையாகக் கண்டித்தார்.அதை போல் லெனினிஸமோ அல்லது மாவோயிஸமோ பயங்கரவாத போர்த்திறன் ஆட்சியை ஊக்குவிக்கவில்லை அகவயமான முரண்பாட்டினைப் பெரிதும் சார்ந்திருக்கும் செயலாக அல்லது அரசியல் புரட்சியாளர்களின் மனத்திடத்தால் புரட்சியை மேற்கொள்ள முடியாது எனவும் அப்புரட்சிக்குப் பொருத்தமான புறவயத்தன்மை வாய்ந்த சமூக – பொருளாதார சூழ்நிலைகள் தோன்றும்வரை காத்திருக்க வேண்டும் எனவும் அக்கோட்பாடுகள் நம்புகின்றன. மேலும், தனிநபர் புரட்சிகர பயங்கரவாதத்தை எதிர்விளைவாக அவை கருதுகின்றன.

பயங்கரவாத சித்தாந்தத்தில் காணப்படும் அராஜக மற்றும் எதிர் மறுப்புவாதக் கூறுகள் பிரான்சிலுள்ள எக்சன் டிரேக்ட் *(Action Directe)* அமைப்பு மூலம் ஜேர்மன் சமஸ்டிக் குடியரசிலுள்ள புரட்சிகரக் குழுக்கள் என்பவற்றின் பிரசாரங்களில் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகின்றன. நவீன பயங்கரவாதக் குழுக்களின் கருத்துக்களை வடிவமைப்பதில் மூன்றாம் உலக புரட்சிகர சித்தாந்தம் மிகவும் செல்வாக்கு மிக்கதாக இருந்துவந்துள்ளது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சிந்தனையாளர்களாக சேகுவரா, டெப்ரே, மரிகெல்லா ஆகியோர் காணப்படுகின்றனர்.

பயங்கரவாத அமைப்புக்களின் மாதிரிப் படிவ மரபாய்வுத் துறையை ஆராயும்போது நான்கு வகையான பயங்கரவாத அமைப்புக்கள் உள்ளன என்பது தெளிவாகின்றது. அவை பின்வருமாறு: பிரிவினைவாத அமைப்புக்கள், தேசிய அரசியற் புரட்சியாளர்கள், சர்வதேச அரசியற் புரட்சியாளர்கள் மற்றும் வலதுசாரி பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் என்பவையாகும். இவ்வொவ்வொரு வகை அமைப்பும் வித்தியாசமான வகையில் பயங்கரவாதிகளைக் கவர்கின்றது.

நடைமுறையில் உள்ள ஓர் அரசிலிருந்து பிரிந்து சுதந்திரமாதோர் அரசை உருவாக்குவதை பிரிவினைவாத வகைப் பயங்கரவாத அமைப்புக்கள் நாடுகின்றன. அவை பொதுவாக குறிப்பிட்ட ஓர் புவியியல் எல்லையுடன் வரலாற்று ரீதியாக உரிமைகோரும் ஓர் இனத்துவக் குழுவாக அமைந்துள்ளன. ஐரிஸ் குடியரசு இராணுவம் *(IRA)*, பஸ்க் தாய்நாட்டிற்கான சுதந்திரம் *(ETA)*, பாலஸ்தீன விடுதலைக்கான பிரபல்யமான முன்னணி (PELP), பாலஸ்தீன விடுதலை இயக்கம் *(PLO)* என்பவை இதற்கான உதாரணங்களாகும். தமது பிரிவினைவாதக் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காகக் கிடைக்கத்தக்க எவ்வழிவகையையேனும் பயன்படுத்தும் மிகவும் வன்முறைவாய்ந்த பயங்கரவாதக் குழுக்களில் சிலவே இவையாகும்.

குறித்த ஒரு நாட்டில் ஒரு சமூக புரட்சியை ஏற்படுத்தும் ஆவலால் தூண்டப்படுவோரே தேசிய அரசியல் புரட்சியாளர்கள் ஆவர். பொலிஸ் மற்றும் நீதித்துறை நிறுவனங்களுக்கு அவப்பெயரை உண்டாக்கும் ஓர் முயற்சியாகவும் பகைமைப் போக்குடைய எதிர்வினையைத் தூண்டுவதற்காகவும் இவ்வமைப்புக்கள் அரச நிறுவனங்களைத் தாக்குகின்றன. உருகுவேயின் டுபாமாறோஸ் மற்றும் ஆர்ஜன்டீனாவின் மக்கள் புரட்சிகர இராணுவம் *(ERP)* என்பன இது சம்பந்தப்பட்ட விடயத்துக்கான உதாரணங்கள் ஆகும்

சர்வதேச அரசியல் புரட்சியாளர்கள் உலகப் புரட்சியில் நம்பிக்கை வைத்து அதற்கு ஆதரவு வழங்கும் கருத்தை மேம்படுத்துவதற்காகப் பயங்கரவாதத்தைப் பயன்படுத்துகின்றானர். தமது வன்முறைக்குப் பின்வருமாறு அவர்கள் அறிவார்ந்த விளக்கம் கூறுகின்றனர்:

1. சமுதாயம் நோயுற்ற நிலையில் உள்ளது. அரைகுறை நடவடிக்கை களைக் கொண்ட சீர்திருத்தத்தின் மூலம் அதற்குச் சிகிச்சையளிக்க முடியாது.

2. அரசு சுயமாகவே வன்முறைத் தன்மை வாய்ந்தது, என்பதுடன் அதை வன்முறையால் மாத்திரமே எதிர்த்து வெற்றி கொள்ள முடியும்.

3. பயங்கரவாதக் கருத்தின் உண்மை நிலையானது அதற்கு ஆதரவளிக்கும் எச்செயற்பாட்டையும் நியாயப் படுத்துகின்றது. சில பயங்கரவாத அமைப்புக்கள் அறநெறி சார்ந்த சட்டத்தை அங்கீகரிக்காமல் உள்ள அதேவேளை, ஏனைய சில அமைப் புக்கள் தமது சொந்த உயர் நீதி நெறியைக் கொண்டுள்ளன.

ஐரோப்பிய செம்படை, செஞ்சேணைப் பிரிவு, எக்சன் டிறேக்ட் ஆகியன புரட்சிகர பயங்கரவாத அமைப்புகளுக்கான உதாரணங்களாகும். உள்ளூர் பாதுகாப்பு முறைக்கு அச்சுறுத்தலாக அமைவதை அழித்தொழிப்பதற்காக பயங்கரவாதத்தைப் பயன்படுத்தும் பகைமைவாத மற்றும் வலதுசாரிக் குழுக்களைக் கவர்கின்றது. பிரேசிலின் மரணப்படை, ஆர்ஜென்ரீனாவின் *3A* ஆகியன உள்ளூர் பாதுகாப்புக் குழுப் பயங்கரவாதத்திற்கான உதாரணங்களாகும்.

## சர்வதேச பயங்கரவாதம்

இலக்குவைக்கப்பட்ட குழுவினரான உடனடியாகப் பாதிப்புக்கு உள்ளாவோரின் உளப்பாங்கு நடத்தை என்பவற்றில் செல்வாக்குச்செலுத்தும் நோக்கத்தில் வன்முறைச் செயற்பாடுகள் அமைவதைவிட அதன் விளைவுகள் தேசிய எல்லைகளைக் கடந்து பல திசைகளுக்கும் பரவுகின்றபோது, அரசியல் நோக்கங்களுக்கான அச்சுறுத்தல் அல்லது அத்தகைய வன்முறையைப் பயன் படுத்தலானது சர்வதேச பயங்கரவாதமாக அமைகின்றது. எனினும் அரசியல் பயங்கரவாதத்திற்கும் சர்வதேச பயங்கரவாதத்திற்கும் இடையில் பாரிய வேற்றுமை காணப்படவில்லை.

போல் வின்கின்சனின் கூற்றுப்படி, அரசியல் பயங்கரவாதமானது வெளிநாட்டவர்களை அல்லது அந்நிய நாட்டு இலக்குகளை நோக்கி நெறிப்படுத்தப்படும்போது அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அரசின் அரசாங்கங்களால் அல்லது தனிக் குழுக்களால் ஒன்றிணைந்து செயற்படுத்தப்படும்போது அல்லது ஒரு வெளிநாட்டு அரசாங்கத்தின் கொள்கைகளில் செல்வாக்குச் செலுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளபோது அது சர்வதேச பயங்கரவாதமாகின்றது. சர்வதேச பயங்கரவாதத்தின் குறிக்கோள் தேசிய விடுதலையாகும், அல்லது பிரிவினையாகும் அல்லது ஒரு குறிப்பிட்ட அரசியல் ஆட்சிமுறையும் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதாக இருக்கின்றது. பலஸ்தீன விடுதலைக்கான பிரபல்யமான முன்னணியானது சர்வதேச பயங்கரவாதத்துக்கான ஓர் உதாரணமாக அமைந்துள்ளது.

இது தவிர சர்வதேச பயங்கரவாதத்தை நாட்டுக்குள் மற்றும் நாட்டுக்கு அப்பால் உள்ள பயங்கரவாதமாக மேலும் வகைப்படுத்த முடியும் எனினும் நாடு கடந்த பயங்கரவாதத்திற்கான வரைவிலக்கணங்களில் பொதுவான ஓர் ஒற்றுமை காணப்படவில்லை. போல் வில்கின்சனின் கூற்றுப்படி, சர்வதேச பயங்கரவாதமானது வேறுபட்ட நாடுகளைச் சேர்ந்த தனிநபர்களுடன் சம்பந்தப்படும்போது அது நாடு கடந்த பயங்கரவாதமாகின்றது. மேலும், உலகளாவிய புரட்சிக்கான திட்டவட்டமான நீண்டநாள் குறிக்கோளுடன் சர்வதேசரீதியாகச் செயற்படும் அப்பயங்கரவாதிகள் நாடு கடந்த பயங்கரவாதத்தைக் கடைப்பிடிக்கின்றனர். இவ்வரைவிலக்கணத்தின் கூற்றுப்படி, நாடு கடந்த பயங்கரவாதக் குழுக்கள் சர்வதேச பயங்கரவாதிகளின் ஓர் மிகச் சிறிய சிறுபான்மையின் கூறுகளாக உள்ளடங்கியுள்ளன. இவ்வகையான பயங்கரவாதத்திற்கான ஓர் உதாரணமாக ஜப்பானிய செஞ்சேணை அமைந்துள்ளது.

## பயங்கரவாதத்தின் வடிவம்

மரபுரீதியான கொலைகள், குண்டுத் தாக்குதல்கள், தீ வைப்பு, பணயக் கைதிகளைப் பிடித்தல், கடத்தல், கட்டிடங்களைக் கைப்பற்றல் பொருளாதார நிலையங்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளுதல் மற்றும் நாசவேலை என்பவற்றைச் சமகால பயங்கரவாத நடவடிக்கை உள்ளடக்கியுள்ளது. தேசிய அல்லது சர்வதேச கவனத்தை ஈர்த்தல், வளங்களைச் சேகரித்தல், அச்சுறுத்தல்களை இல்லாதொழித்தல் அல்லது ஆற்றல்களை வெளிப்படுத்தல் என்பனவே இதன் பிரதான குறிக்கோள்களாகும். சர்வதேச பயங்கரவாதத்தின் வடிவங்களைப் புரிந்து கொள்வதற்கு பயங்கரவாதத்தை எதிர்நோக்கும் நாடுகள்மீதும் பயங்கரவாத அமைப்புக்களுடன் நெருக்கமான உறவுகளைப் பேணும் அரசுகள் மீதும் கவனம் செலுத்தவேண்டி உள்ளது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் முடிவின் பின்னர் மத்திய கிழக்கு, தென் ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா என்பவற்றுடன் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகியவற்றிலும் பயங்கரவாதம் நிகழ்ந்துள்ளது.

முதலாவது தேசியப் பிரிவினைவாதப் பயங்கரவாதமானது பிரித்தானியாவுக்கு எதிராக மத்திய கிழக்கில் இஸ்ரேலிய தனி அரசு ஒன்றை உருவாக்கும் குறிக்கோளுடன் இடம் பெற்றது. அத்தகைய இரண்டாவது பிரிவினைவாதப் பயங்கரவாதமானது கி.பி 1954-1962 வரையான காலப் பகுதியில் பிரான்சிய அரசாங்கத்திற்கு எதிராக அல்ஜீரியாவின் தேசிய விடுதலை முன்னணியால் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் தீவிரமான முஸ்லீம் அமைப்புக்களின் தோற்றத்தின் மூலம், குறிப்பாக பலஸ்தீனப் பிரச்சினையுடன் பயங்கரவாதமானது எல்லா இடங்களிலும் பரவிக் காணப்பட்டது. இஸ்ரேலுக்கு எதிரான 1967ஆம் ஆண்டு யுத்தத் தின் விளைவாக பாலஸ்தீனத்தில் பயங்கரவாதம் வளர்ச்சியடைந்தது. கறுப்புச் செம்டம்பர் மற்றும் குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தோன்றும் ஏனைய குழுக்கள் ஆகியவற்றுக்குப் பின்னர் பாலஸ்தீன விடுதலை இயக்கமானது பயங்கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதத்திற்கான முடிவை சிந்தித்து மேற்கொண்டது. 1972இல் மூனிச் ஒலிம்பிக் விளையாட்டின்போது இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களைக் கொலை செய்தமை, 1970 செப்டம்பரில் ஜோர்தானின் டோசன் களத்தில் பல விமானங்களை வெடித்துச் சிதறவைத்தமை மற்றும் விமானங்களைக் கடத்தியமை என்பவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக இருந்தனர்.

தற்போது சர்வதேசப் பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலுக்கான மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள பிராந்தியமாக தென் ஆசியா அமைந்துள்ளது. தென் ஆசியாவில் காணப்படும் பயங்கரவாதமானது முளைநிலையிலுள்ள அரசியல் கருத்து மாறுபாட்டிலிருந்து விருத்தியடைந்துள்ளதுடன், பிரிவினைவாத மற்றும் நாடு கடந்த தொடர்புகளுடன்கூடிய கிளர்ச்சிப் பயங்கரவாதமாக மாற்றமடைந்துள்ளது. தென்னாசியாவிலுள்ள நாடுகளில் இந்தியா, பாகிஸ்தான் இலங்கை ஆகியன பயங்கரவாதத்தின் பிரச்சினையால் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளன. இப்பிராந்தியத்திலுள்ள பல நாடுகளில் காணப்படும் பயங்கரவாதமானது; மதம் மற்றும் இனத்துவ காரணிகளால் உந்தப்பட்டு வருகின்றது. முதலாவதாக இந்தியாவின் வட-கிழக்கு மாநிலங்களில் காணப்படும் கிளர்ச்சியை, கிளர்ச்சிப் பயங்கரவாதத்திற்கான ஓர் உதாரணமாகக் கொள்ள முடியும். இரண்டாவதாக உள்ளூர் மனக்குறைகளைத் தூண்டுவதற்கான புகலிடங்கள், பயிற்சி, பணம், ஆயுதங்கள் எனும் வடிவங்களில் கிடைக்கும் வெளி உதவிகள் என்பன அமைகின்றன. உள்ளூர் பயங்கரவாதி கஞக்கான இவ்வெளி உதவிகளின் நோக்கம் எதுவெனில் போட்டி நாடுகளை நிரந்தரமாகத் தொல்லைக்குட்படுத்தி வைத்திருப்பதேயாகும். மேலும் பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகியவற்றில் காணப்படும் பயங்கர வாதத்திற்குப் பின்னணியில் இருக்கும் பிரதானமான ஓர் மூலமாக மதமும் இனத்துவமும் காணப்படுகின்றன. பாகிஸ்தானுடன் ஜம்முவையும், காஷ்மீரையும் இணைக்கும் நிலைப்பாட்டிலுள்ள ஹிஸ்புல்லா - நிஜாமுதீன் மற்றும் இலங்கையிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் என்பன இது சம்பந்தப்பட்ட விடயத்துக்குரிய சில உதாரணமாகும். ஹிஸ்புல்லா – நிஜாமுதீன் எனும் அமைப்பின் பின்னணியில் பாகிஸ்தானின் உத்தியோகபூர்வ உளவு ஸ்தாபனமான *ISI* இருப்பதாகக் கூறப்படுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பெரிய பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா, நெதர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ். இத்தாலி, சுவிற்சர்லாந்து, நோர்வே, டென்மார்க், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளில் வசிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆதரவளித்து வருகின்றனர். இலங்கையானது *LTTE* பயங்கரவாதத்தினை இராணுவ ரீதியாக தோல்வியுறச் செய்துள்ளபோதும் சர்வதேச நிறுவனங்கள், ஊடகங்கள், ஆதரவு தேடற் செயற்பாடுகள் மற்றும் நிதியுதவியைக் கட்டுப்படுத்தல் ஊடாக இலங்கையினுள் பிரிவினைவாதப் பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்தல் மற்றும் அதற்கான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்றவற்றில் சர்வதேச அரங்கு தொடர்ந்தும் சூழ்நிலைகளைச் தமக்கு சாதகமான முறையில் பேணிவருகின்றது. இலங்கையின் தற்போதய சவால் எதுவெனில் புலம்பெயர் தமிழர் என அழைக்கப்படுவோரால் விடுக்கப்படும் சவால்களைக் கையாள்வதற்கான ஓர் அரசியல் தீர்வைக் காண்பதேயாகும்.

1960இன் பிற்பகுதியில் லத்தீன் அமெரிக்காவில் இடதுசாரிப் பயங்கரவாதத்தின் மீள்நிகழ்வொன்று காணப்பட்டது. உருகுவேயின் ருபாமாரோஸ் *(Tupamaros)* ஆனது இடதுசாரிப் பயங்கரவாதத்திற்கு உதாரணமாக அமைந்திருந்தது. ருபாமாரோஸின் திட்டமிடப்பட்ட போர்க்களச் செயற்பாட்டு ஒழுங்கு முறையானது அந்நாட்டின் ஜனநாயகத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதற்குக் காலாக அமைந்ததுடன் இராணுவச் சர்வாதிகாரத்திற்கும் வழிவகுத்தது. ஆர்ஜென்ரீனாவில் உள்ள பயங்கரவாதமானது இரு குழுக்களை உள்ளடக்கியிருந்தது: மொன்ரெனெகுரோ *(Monrenegro)* மற்றும் மக்கள் புரட்சிகர இராணுவம் *(ERP)*. ஆனால் அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள் இவற்றினை அழித்தொழித்துவிட்டன.

ஜேர்மனியின் செஞ்சேனை *(Red Army)* மற்றும் இத்தாலியின் செம்படை *(Red Brigade)* என்பவற்றால் 1960களின் பிற்பகுதியில் ஐரோப்பா, ஜேர்மனி, மற்றும் இத்தாலி ஆகிய இடங்களில் இடதுசாரிப் பயங்கரவாதத்தின் புதிய அலையொன்று உருவாக்கப்பட்டது. அல்டோமோறாவின் கொலை உட்பட 14,000க்கும் மேற்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு இச்செம்படையானது பொறுப்பாக விருந்தது. 1980 அளவில் இது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இத்தாலியில் காணப்பட்ட பயங்கரவாதம் சுக்குநூறாகச் சிதறியதுடன் மேலும் பயங்கரவாதமானது வட அயர்லாந்தில் திடீரெனத் தோற்றம்பெற்று உலகின் கவனத்தினைத் தன்பால் ஈர்த்தது. 1993இல் இருந்து பிரித்தானிய அரசாங்கத்துடனான அரசியல் பேச்சுவார்த்தை காரணமாக இது ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. எனினும் பஸ்கன் *(ETA)* பயங்கரவாதத்திற்கு முடிவு காணப்படவில்லை.

வெதர் மென் *(The Weather Men)* எனும் இடதுசாரிக் குழுவானது ஐக்கிய அமெரிக்காவில் அரசியல் பயங்கரவாதத்தினை ஆரம்பித்துள்ளது. வெள்ளை அமெரிக்கர்களின் வேலையின்மை வீதத்துடன் ஒப்பிடுமிடத்து கறுப்பர்கள் மத்தியில் காணப்படும் உயரளவான வேலையின்மை காரணமாக கறுப்பின இளைஞர்களை இக்குழுவானது அதிகளவு கவர்ந்தது. ஜப்பானியப் பயங்கரவாதத்தின் போக்கானது ஜப்பானிய செஞ்சேனை *(Japanese Red Army)*யின் வரையறைக்குள் அடங்கியிருககின்றது. இது 1990களில் காணப்பட்ட சமயக்குழுப்பற்றுடைய ஜப்பானியப் பயங்கரவாதிகளைவிடக் குறைந்தளவே ஊறு விளைவித்ததாகவும் பலவீனமானதாகவும் காணப்பட்டது.

இன்று சர்வதேசப் பயங்கரவாதமானது முதிர்ச்சியடைந்துவிட்டது. உலகம் பூராகவுமுள்ள பயங்கரவாதக் குழுக்கள் கடும்முனைப்புடன் செயலாற்றி ஒன்றுடன் மற்றொன்று தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறே தமது குறிக்கோள்களுக்கு ஆதரவு வழங்கும் அரசாங்கங்களுடனும் இப்பயங்கரவாதக் குழுக்கள் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளன. பலஸ்தீன விடுதலை இயக்கமானது *(PLO)* ஐரோப்பாவிலுள்ள இஸ்ரேலிய இலக்குகள்மீது தாக்குதல்களை முன்னெடுத்தபோது ஜப்பானியச் செஞ்சேனை மற்றும் ஜேர்மனியிலுள்ள செம்படை போன்ற குழுக்களுடன் தொடர்புகளை விருத்தி செய்திருந்தன. பெரும்பாலான பயங்கரவாதக் குழுக்களுக்கு உலகின் பல்வேறு நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. நிக்கரக்குவாவின் சான்டினிஸ்டா அரசாங்கத்துடன் போராடுவதற்காக கொண்ராஸ் *(Contras)*களுக்கு ஐக்கிய அமெரிக்கா நிதியுதவி வழங்கியது. இதேபோல் முன்னாள் சோவியத் ஒன்றியம், ஈரான், சிரியா, லிபியா, சூடான், லெபனான், ஈராக் ஆகிய நாடுகள் பயங்கரவாதக் குழுக்களுக்கு ஆதரவளிக்கின்றன.

## முடிவுரை

தேசிய அல்லது சர்வதேச வடிவத்தில் காணப்படும் அரசியல் பயங்கரவாதமானது கல்வித்துறை சார்ந்த ஏடுகளில் முக்கிய கவனத்தினை ஈர்த்துள்ளது. இவ்விடயம் பற்றிய முழுமையான ஆய்வானது அண்மைக் காலத்திற் குரியனவாகக் காணப்படுகின்றபோதும் இந்த மெய்ந்நிகழ்வின் தோற்றுவாய் ஆனது கிறிஸதுவுக்கு முன் 4ஆம் நூற்றாண்டளவில் நிலவிய கிரேக்க நாகரிகத்திற்கு உரியதாகும். எனினும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் பயங்கரவாதத்திற்கான பொதுவான வரை விலக்கணம் எதுவுமில்லை. எனவே கல்விமான்கள் பயங்கரவாதத்தின் அடிப்படைக் காரணிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் என்பவற்றில் அதிகளவு கவனம் செலுத்துகின்றனர். இவற்றுள் வரலாற்று ரீதியான அநீதி, குடியேற்றவாதமும் நவ குடியேற்றவாதமும், அரசியல் சித்தாந்தங் கள், வறுமை, அரசியலில் பங்கேற்பதற்கான குறைந்தளவான வாய்ப்புக்கள் என்பன முக்கியமான காரணிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தற்போது இனரீதியான மனக்குறைகள் பயங்கரவாதத்தின் உண்மையான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளன. ஆகவே புதிய இடதுசாரித்துவத்தினை அல்லது அராஜகத்தினைவிட இனத்துவத் தேசியவாதமானது பயங்கரவாதத்தின் சித்தாந்தமாகியுள்ளது. தற்போது உலகின் ஏனைய பிராந்தியங்களைவிட மத்திய கிழக்கு அல்லது தென்னாசியாவில் பயங்கரவாதம் அதிகளவில் இடம்பெறுகின்றது.

* மொழிபெயர்பாளரின் கூற்று

***உசாத்துணை:***

*Paul Wilkinson, The Strategic Implications of Terrorism, in Terrorism and Political Violence, (ed) M L Sondhi, Har-Anand Publications, 2000*

*Walter Laqueur, 1987*

*Brian Jenkins, 1984*

*Stephen E Atkins, Terrorism, Santa Barbara, California, 1992*

*Paul Wilkinson and A M Stewart, Contemporary Research on Terrorism, Aberdeen University Press UK 1987*

*David J Whittaker, op-cit[11] Bhashyam Kasturi, Especial Section: Terrorism in South Asia in Historical Dictionary of Terrorism (eds) Seank Anderson and Stephen Sloan Vision Book, USA 2002*

*David J Whittaker, The Terrorism Reader, Rutledge, London 2002,*

*Sean K Anderson and Stephen Sloan, Historical Dictionary of Terrorism Vision Books, USA, 2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பயங்கரவாதமும் மனித உரிமைகளும்

**பேராசிரியர் லக்சிறி பெர்னாண்டோ**

*கொழும்புப் பல்கலைக்கழக*

*அரச அறிவியல் மற்றும் பொதுக் கொள்கைப் பேராசிரியரும்,*

*மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையத்தின் பணிப்பாளரும் (NCAS).*

## அறிமுகம்

அண்மித்த கடந்த காலத்தில் இலங்கையானது பல்வேறு பரிசோதனைகளுக்கான வளம்மிக்க ஆய்வுகூடமாகவே இருந்து வந்துள்ளமை நிரூபிக்கபட்டுள்ளது. இப் பரிசோதனைகளின் மையமாக நியாயமான வழிமுறைகளுடாக பயங்கரவாதத்தை முடிவாகத் தோற்கடித்தமையானது அமைந்துள்ளது. 3 வருட கால இடை வெளியினுள் "பயங்கரவாதத்தைத் தோற்கடித்தமையானது பயங்காரவாத அமைப்புக்களை (இச் சூழ்நிலையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளையே இது குறிக்கின்றது.) அழிக்க முடியாது எனும் கோட்பாடு" தவறானது என்பதனை நிரூபித்துள்ளது. இளத்துவ ரீதியான மனக்குறைகளை மையமாகக் கொண்டுள்ள பயங்கரவாத அமைப்புக்களை இராணுவ ரீதியாக தோற்கடிக்கக் கூடாது என்பது நேரடியாகவோ அன்றி மறைமுகவாகவோ பயங்கரவாதிகளுககுச் சார்பாக இயங்குவோரின் கூற்றாகவே அமைந்திருந்தது. பயங்கரவாதிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஊடாக மாத்திரமே சமாதானத்தினை அடையமுடியும், என்பதுடன் அடையவேண்டுமெனவும் அவர்கள் கூறிவந்தனர். 2005ம் ஆண்டிற்கு முன்னரான சமாதானச் செயல்முறையானது அக்கோட்பாட்டினையே அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. இக் கோட்பாடானது, பிரதானமாக மேற்கு நாடுகளிலிருந்தே கொண்டுவரப்பட்டதுடன் நாட்டில் உள்ள அரச சார்பற்ற நிறுவன வட்டங்களில் இருந்தே இது பெருமளவில் பரப்பப்பட்டது.

பார்த்தவுடன் இக் கோட்பாட்டில் வெளிப்படையான குறைபாடு காணப்படவில்லை. சமாதானத்தை பெரிதும் மதித்துவப் போற்றுபவர்கள் அல்லது சிறுபான்மையினரின் மனக் குறைகளில் அனுதாபங் கொள்வோர் எவரும் இதனைப் பற்றி ஆராய்வது அல்லது. கபடமற்ற நோக்கங்களுடன் இக் கோட்பாட்டினை ஆதரிப்பதில் மன விருப்புக் கொண்டிருந்தனர். இருப்பினும் கூட பேச்சுவார்ததைகள் ஊடாக அல்லது பலாத்காரத்தினைப் பயன்படுத்தாமல் சமாதானத்தைக் அடையமுடியுமாயின் இன்று கூட அதுவே மிகச் சிறந்ததாக இருக்க முடியும். கொலைகார அங்குலிமாலாவை புத்தர் சாந்தமான மனிதனாக மாற்றிய உதாரணம் போன்று இலங்கையிலும் உண்டு. இக் கோட்பாட்டினை ஆதரித்துப் பேசுவோரில் சிலர் அதனைக் கபட நோக்கங்களுக்காக பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறும் உண்டு. எனினும் இவ்விடயத்தில் எடுத்துக்காட்டாக விடுதலைப் புலிகளின் கபட நோக்கங்கள் தீங்கு பயன்பன என ஏற்றுக் கொள்ளத் தக்க விதத்தில் அது நிரூபிக்கப்படும் வரை இது தவிர்க்க முடியாத நிலையிலேயே இருக்கும். பொறுமை சகிப்புத்தன்மை பேச்சுவார்த்தைகள் என்பவற்றின் ஊடாக அனைத்தையும் தீர்க்க முடியுமெனும் நம்பிக்கையில் 1990க்கும் 2004க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சமாதானச் செயல் முறைக்கான ஓர் அதிகரித்த ஆதரவு காணப்பட்டது (உயன் கொடவும் பெரேராவும்- 2003) 1993ல் ஓர் ஜனாதிபதியைக் கொலை செய்தமை மற்றும் 1998ல் மற்றைய ஜனாதிபயைக் கொலை செய்ய முயற்சித்தமை போன்றவற்றை கவனத்தில் எடுக்காததாகவே மேற்கூறப்பட்ட சமாதானத்துக்கான ஆதரவு அமைந்துள்ளது. இக் கொலையானது. ஏனைய பல கொலைகளுக்கும் அப்பாற்பட்டதாகும். இதன் விளைவாக மேலும் மேலும் கொலைகளும் ஊனமாக்குதலும் மற்றும் உயிர் சொத்து அழிவு என்பனவும் அமைந்திருந்தன. நாட்டின் அபிவிருத்தியானது மிகவும் மோசமாகப் பாதிப்படைந்ததுடன் எந்த நாட்டினதும் நீண்ட கால சமாதானத்திற்கான அடிப்படையாக அது இருக்க வேண்டியுள்ளது. சமாதானச் செயல் முறையின் இப் பரிசோதனையானது. தோல்வி அடைந்தது. எதிர்மறையாக உள்ள ஓர் ஆய்வு கூடப் பரிசோதனை யைப் போல அது அமைந்திருந்தது. மேலே கூறப்பட்டாற்கும் மாறாக பயங்கரவாதத் தினை தோற்கடித்தல் சம்பந்தமான பரிசோதனையானது வெற்றி அளிக்கத்தக்கதாக இருந்ததுடன் மிகவும் குறுகிய காலம் ஒன்றினுள் அது சாத்தியப்படத்தக்கதாகவும் இருந்தது. பயங்காரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் இது வரையில் தோல்வி கண்ட பல நாடுகள் உள்ளன. அவர்களது தோல்விக்கான ஒரு காரணமாக வெளிப்படையான அரைகுறை மனதுடன் தீர்மானங்களை எடுத்தல் இருந்து வருகின்றது. இப் பலவீனம் இலங்கையில் இருக்க வில்லை 2005 ம் ஆண்டடின் ஜனதிபதித் தேர்தலின் பின்னர் பிரதான கொள்கை மாற்றம் ஒன்று இடம் பெற்றது. பேச்சு வார்த்தைகளுக்காக ஆரம்பத்தில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை கோட்பாட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டன. இக் கோட்பாடுகளின் முக்கிய விபரங்கள் "மஹிந்த சிந்தனை" எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. 2006 யூனில் கிழக்கிலுள்ள 30000 விவசாயிகளுக்கான மாவிலாறு ஊடாக விநியோகிக்கப் படும் நீரை விடுதலைப் புலிகள் கொடூர மனத்துடன் மூடிய போது, விட்டுக் கொடுக்காத ஓர்பாணியில் பயங்கரவாதத்திற்கு எதிரான முழுமையான ஓர் யுத்தத்தினை மேற்கொள்வதற்கான வெளிப்படையான நியாயப்படுத்தல்களை அச் சூழல் வழங்கியது கடந்த காலங்களில் அவர்கள் முறை கேடாகச் செய்துகொண்டிருந்த அனைத்துப் பயங்காரவாத செயற்பாடுகளும் மாவிலாறு சம்பவமானதே உச்சமானதாக அமைந்து இருந்தது. அது ஓர் "நியாயமான யுத்தமாக" இருந்தமையால்தான் "மனிதாபிமான இராணுவ நடவடிக்கை" என இது அழைக்கப்பட்டது. 2009 ஏப்பிரல்-மேயில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து இறுதியாக 285, 000 பொதுமக்கள மீட்கப்பட்ட போது அதன் மனிதாபிமானக் குணாம்சம் நன்கு தெளிவாகத்தெனபட்டது பயங்காரவாதம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் 2009 மே 19ம் திகதியன்று பாராளு மன்றக் கூட்டத் தொடர் ஒன்றில் ஜனதிபதி ராஜபக்ஷ விளக்கிக் கூறியது. போன்று:

"ஓர் கையில் துப்பாக்கியும் மறு கையில் மனத உரிமைகள் சட்டத்தையும் ஏந்திக் கொண்டு சிப்பாய்கள் சண்டையிட வேண்டி இருந்தது.

## கட்டுரையின் சிறப்புக் கவனம்

பயங்காரவாதமானது எளிதாகப் புரிந்து கொள்ளத்தக்க வகையில் மனித உரிமைகளுக்கு மிகவும் எதிரானதாகவே அமைந்துள்ளது. எனிதும் கூட இந்த நேர் எதிரான தன்மையின் படிப்பினையானது சர்வதேச சமூகத்தால் எப்பொழுதும் செயலில் காட்டப் படவில்லை. இவை இரண்டிற்கும் இடையிலான தொடர்பினை மூடி மறைக்கும் புனைகதைகள், மாயத்தோற்றங்கள் தவறான கருத்துக்கள், பொய்யான கோட்பாடுகள் என்பன காணப்படுகின்றன. நோக்கத்தின் அடிப்படையில் இத் தொடர்பானது குழப்பமானதாகவே அமைந்துள்ளது. இம் முறை கேடுகளை பற்றிக் கலந்துரையாடுவதும் உண்மையை அறிய விரும்புவர்களது. நன்மைக்காக அவற்றை வெளிப்படுத்துவதுமே இக் கட்டுரையின் குறிக்கோளாகும்.

பயங்காரவதத்திற்கு எதிரான" நியாயத்துவமான யுத்தம்" இலங்கையில் வெற்றி பெற்றுள்ளது ஏனெனில் அவர்களது அனைத்தையும் உள்ளடக்கிய, முடிவான அர்த்தத்தில் அனைவரது மனித உரிமைகளையும் பாதுகாக்கும். குறிக்கோளை அது மையமாகக் கொண்டிருந்தமையாலே யாகும். மனித உரிமைகளை ஆதரித்துப் பேசும் மேற்குத் தேசத்தவர் சிலரும் இலங்கையில் உள்ளவர்களது சீடர்களும் மனித உரிமைகளைப் பற்றி துரதிஷ்டவசமாக இவ் வழிமுறையில் விளங்கிக் கொள்ளவில்லை. மனித உரிமைகளைப் பற்றிய அவர்களது புரிதலானது மேலெழுந்த வாரியானதாகவும் ஆதாரமின்றி அனுமானத்தின் அடிப்படையில் அமைந்ததாகவும் உள்ளது. அவர்களது அணுகுமுறைகள் மிகவும் சந்தேகத்துக்கு உரியன. ஒருவரதோ அல்லது சிலரதோ தெரிவு செய்யப்பட மனித உரிமைகள் சிலவற்றைப் பாதுகாப்பதற்காக அவர்கள் உண்மையில் மக்களது பெரும் பிரிவின் மனித உரிமைகளைத் தியாகம் செய்கின்றனர். மனித உரிமைகள் மீதான மேற்குலகின் நோக்கிற்கு வெறுமனே எதிரான சர்ச்சைக்குரியதாக இக் கட்டுரையை முன்வைக்கும் நோக்கம் இல்லாத போதும் பயங்காரவாதம் மற்றும் மனித உரிமைகள் என்புனவற்றின் மீதான இக் கலந்துரையாடலானது இத்துறைகள் ஆய்வுப் பொருட்கள் என்பவற்றின் சிலவற்றில் இயல்பாகத் துணிந்து இறங்கக் கூடும் கடந்த தசாப்தத்தில் இலங்கையானது இச் சமூக சக்திகள் அனைத்தினதும் நடை முறையிலுள்ள ஓர் அடிப்படையில் இந்தக் கோட்பாட்டு ரீதியானதும், நடைமுறை ரீதியானதுமான விடயங்களில் பலவற்றைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படையாக கலந்துறையாடுவதற்கான ஓர் அடிப்படையாக இந்த வளம் மிக்க அனுபவம் அமைய வேண்டும்.

## பயங்கரவாதத்தினை வரையறுத்தல்

பயங்காரவாதத்தின் மீது கண்டிப்பு இல்லாமல் இருப்பதன் ஆபத்தினை புரியவைப்பதை இலங்கையால் வெளியுலக்குக்கு வழுங்கக்கூடிய ஓர் படிப்பினையாகும். உலகில் வழக்கத்திற்குமாறானது அல்லாத என கருதக்கூடிய உள்ள இக் கண்டிப்பின்மை ஆனது ஆரம்பத்தில் இலங்கையில் வெளிப்படையாகத் தெரிந்து சில வேளைகளில் இக் கண்டிப்பின்மையை இலங்கை வெளி உலகிலிருந்து கற்று இருக்கக கூடும். இக் கண்டிப்பின்மைக்கு வேறுபட்ட பல காரணங்கள் காணப்படுகின்றன:- சரியாக புரிந்து கொள்ளப்படாமை அல்லது விளக்குதல் பற்றிய சிறப்புக் கவனம் முக்கியத்துவமானதாக அமைந்துள்ளது.

பயங்காரவாதம் பற்றிய நோக்கானது முழுமையாக அகவயமானதாகவும் புறவயமற்றதாகவும் கருதப்படுகின்றது இந் நோக்கே பிரதான தவறான புரிதலாகும் ஒருவரது பயங்கரவாதி இன்னொருவரது மீட்பராவார் என்பது பொருட்செறிவு குன்றிவிட்ட பொதுவாக ஓர் சொற்றொடராக இருந்து வருகின்றது. இனவெறிபிடித்த தென்ஆபிரிக்க அல்லது இஸ்ரேலில் நடந்ததைப் போல ஆட்சி செய்யும் அரசாங்கங்களால் விடுதலைப் போராளி கள் நியாயப்படுத்த முடியாத வகையில் "பயங்காரவாதிகள்" என அழைக்கப்படும் போது இது சரியானதாக இருத்தல் கூடும். ஆனால் பயங்கரவாதத்தினை மதிப்பீடு செய்வதற்கு புறவயமான நியமங்கள் உண்டு விடுதலைப் புலிப் பயங்கரவாதிகள் தமது சொந்த மக்களுக்கு எதிராக முறைகேடான பேரச்சம் தரும் செயற்பாடுகளை மேற்கொண்டமையால் பொருட் செறிவு குன்றிவிட்ட இச் சொற்றொடரானது தவறானது என இலங்கையில் நீரூபிக்கப்பட்டுள்ளது. புறவயமான காரணங்களுக் காவன்றி அகவயமான காரணங்களுக்காக தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை "மீட்பர்களாக" சிலர் கருதுவதற்கான வாய்ப்பும் இன்னமும் உள்ளது.

பயங்கரவாதமானது கருத்து மாறுபாட்டிற்கு உரியவிடயமல்ல அது நியாயபூர்வமான எதிர் நிலையுமல்ல அது ஆக்கபூர்வமானதுமல்ல ஆனால் அழிவார்ந்தது. பயங்கரவாதத்தை ஐக்கிய அமெரிக்க சட்டத் தொகுப்பானது பின்வருமாறு வரையறுக்கின்றது. " உப தேசியக் குழுக்கள் அல்லது இரகசிய முகவர்களால் யுத்தத்தில் சம்பந்தப்படாத இலக்குகளுக்கு எதிராக முறைகேடான வகையில் மேற்கொள்ளப்படும். திட்டமிட்டுச் செய்யப்படும் அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்ட வன்முறையாகும்." அதேவேளை "அப்பாவி மக்கள் இலக்கு வைக்கப்படும் போது ஓர் அரசியல் குறிக்கோளை அடைவதற்காக நியாயமற்ற வகையில் பலத்தைப் பிரயோகிப்பதனை உண்டு பண்ணுகின்ற ஓர் வரை விலக்கணத்தினை வோல்ரர் லக்குவர் (2009) வழங்கியுள்ளார். பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னர் ஜப்போபின்ஸ் என அழைக்கப்படும். ஓர் பயங்கரவாதக் குழு மக்களுக்கு எதிராக பேரச்சத்தினை கட்டவிழ்த்து விட்டபோது பயங்கரவாதம் எனும் சொற் பாதம் தீடிரெனத் தோற்றம் பெற்றதாகக் கருதப்படுகின்றது (வெல்கின்சன் - 1976). பலாத்காரம், கட்டாயப்படுத்தல் வன்முறை என்பவற்றின் உபயோகமே அவர்களால் பயன்படுத்தப்பட்ட வழிமுறைகளாக இருந்தது. ஜனநாயகம் சரியான முறையில் நிலவாத ஓர் காலமாக அது இருந்தது. அது கூட பயங்கரவாதத்தினை நியாயப்படுத்தவில்லை பயங்கரவாதமானது அப் பெயரில் அழைக்கப்படாத போதும் அக் காலத்திற்கு முன்யிருந்தே இருந்து வருகின்றது. பயங்கரவாதத்தின் ஆரம்ப மூலத்தின் தடயங்களை உரோமப் பேரரசின் காலத்தில் காணமுடியும். ஷிலொட்ஸ் (zealots) எனும் அமைப்பானது குறிப்பிடதக்க ஒன்றாக இருந்துள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய போராட்டம் நிறைந்த போர்த்திற உத்திகளில் சில தற்கால பயங்கரவாதிகளின் குறிப்பாக விடுதலைப் புலிப் பயங்கரவாதத்தின், செயற்பாடுகளுடன் மிக நெருங்கிய ஒற்றுமை கொண்டதாக அமைந்திருந்தது (பெர்னா ன்டோ-2008), ஷிலொட்ஸ் எனும் அமைப்பால் உரோமப் பேரரசு காலத்தில் நடாத்தப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகள் பற்றிய சுர்வத்தினைத் துாண்டும் விவரணம் பிளேவியஸ் ஜொசெப்பஸ் என்பவரால் எழுதப்பட்ட நூலில் காணப்படுகின்றது. (1981 மொழி பெயர்க்கப்பட்டுள்ளது).

மிக அண்மைக்காலம் வரையில் கீழைத் தேய சமுதாயங்களில் பயங்கரவாதமானது ஓர் பொதுவான மெய்ஞ் நிகழ்வாக வடிவமைந்திருக்கவில்லை. வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள், ஆனால் குற்றவாளிகள், திசைமாறியவர்கள் என்போர் இருந்து வந்துள்ளனர். எனினும்ஆனால் பயங்கரவாதிகள் இருக்கவில்லை. கீழேத்தேயச் சமுதாயங் கள் பரிபூரணமானவையாக இருக்கின்றன எனக் கூறுவதற்காக அது சொல்லப்படவில்லை. ஆனால் பொதுவாகக் கூறுமிடத்து அறநெறிக் கோட்பாடுகள், சட்டத்தின் ஆட்சி என்பவற்றிற்கு உட்பட்ட வகையில் சில வகையான ஒழுங்கமைவும் மன ஒருமைப்பாடும் காணப்பட்டது. ஆட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைக்கான எடுத்துக் காட்டுக்கள் பல இருந்து வந்திருக் கின்றன என்பதுடன் அவற்றுள் சில மிருகத் தனமானவையாக இருந்தன. எனினும் கூட அரச பயங்கரவாதம் என அழைக்கப்படும் ஒன்று இருந்திருக்கவில்லை. பாசிசத்தின் கீழ் மற்றும் வேறு வகையில் கூட மேற்கில் அரச பயங்கரவாதமானது குறிப்பிடத்தக்க தோர் மெய்ந்நிகழ்வாக அமைந்திருந்தது. ஆனால் சட்டத்தினையும் ஒழுங்கமைவையும் பேணுவதற்கு அவசியமாய் உள்ளபோது கட்டாயப்படுத்தலைப் பயன்படுத்துவதற்கான உரிமையை அரசானது அதற்கே உரிய வரைவிலக்கணத்தின் அல்லது அடிப்படையில் அதன் அவசியத் தன்மையின் அடிப்படையில் கொண்டிருக்கின்றது. அராஜகவாதிகள் அல்லது கற்பனை உலக (Utopian) தாராண்மை வாதிகள் மாத்திரமே இவ்வதிகாரத்தினை மறுப்பதுடன் சில வேளைகளில் இடம் கொடுக்கின்றனர். வன்முறையையும் சில வேளைகளில் ஓர் உத்தியாக பயங்கரவாதத்தினையும் அங்கீகரிப்பதன் மூலம் மாக்சிகவாதிகள் கூட தவறிழைத்துள்தளனைக் காணமுயும் விடுதலைப் புலிகள் மாவோவாதக் கோட்பாட்டிலிருந்து சில உத்திகளை கற்றறிந்துள்ளதாகவும் அறியக் கூடியதாக விருக்கின்றது.

பயங்கரவாதம் என்பது வெறுமனே வன்முறையானது அல்ல, எதிரிகள் மற்றும் சாதாரண பொதுமக்களுக்கு எதிராகக்கூட வகைதொகையற்ற வகையில் வன்முறையை தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதாகவே அது அமைந்துள்ளது. இது விடுதலை அமைப்புக்களின் ஓர் குணம்சமாக அமைந்திருக்கவில்லை. இருந்தும் எந்தவோர் அமைப்பாலும் பிரயோகிக்கப்படும் வன்முறையின் உபயோகத்தினை ஓர் அமைப்பு தனக்கு ஏற்புடைத்ததாகக் கொள்ள முடியாது. வியாபித்துள்ள வன்முறையானது கண்டுபிடிக்கப் படும்போது பயங்கரவாதமும் கண்டு பிடிக்கப்படுகின ்றது. ஓர் பயங்கரவாத அமைப்பும் அல்லது வலையமைப்பும் இன்றி பயங்கரவாதம் நிலைதிருக்க முடியாது. இன்றைய உலகில் பல்வேறுபட்ட வகையான பயங்கரவாத அமைப்புக்கள் காணப்படும் அதே வேளை பொதுவான அம்சங்கள் அல்லது கூறுகள் என்பன கூடக் காணப் படுகின்றன. இவற்றுள் மதவெறி ஆர்வமும் ஒன்றாகும். மற்றையது ஓர் இலட்சியத் துக்காக அல்லது தலைவருக்காக கண் மூடித்தனமான நம்பிக்கை வைத்திருத்தல். பயங்கரவாதமானது ஜனநாயகத்தினையும் மனித உரிமைகளையும் பின்தள்ளுகின்றது. இன்றைய பயங்கரவாதத்தின் பொதுவான அடையாளக் குறிகளாக தற்கொலைக் குண்டுத் தாக்குதல், கொலை பெருந் தொகையான பொதுமக்களைக் கொலை செய்தல், இனச் சுத்திகரிப்பு, சிறுவர்களைப் படையிற் சேர்த்தல், மற்றும் பிரதான உத்தியாக போர்ச்சடத்தினைப் பயன்படுத்துதல் என்பன அமைந்துள்ளன. வேறுபட்ட கூறுகளின் தொகுதியாக அமைந்துள்ள ஓர் செயற்பாங்கில் இவ் அடையாக் குறிகள் யாவும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் காணப்பட்டன.

## பயங்கரவாதத்தின் அபாயமும் இன்னலும்

பயங்கரவாதத்தின் அபாயம் சரியான முறையில் புரிந்து கொள்ளப்படவில்லை. பல வழிவகைகளில் பயங்கரவாதத்தை வேறு படுத்துவதற்கான முயற்சிகள் இருந்து வந்துள்ளன. கல்வி மற்றும், அறிவியல் நோக்கங்களுக்காக பயங்கரவாதத்தை வதைப்படுத்தல் அவசியமானதாக உள்ளது. ஆனால் அது தீய பயங்கரவாதிகளில் இருந்து நல்ல பயங்கரவாதிகளைக் கண்டு பிடிப்பதற்காக அல்ல. இலங்கை ஜனாதிபதி அறிவித்துள்ளபடி, அனைத்துப் பயங்கரவாதிகளும் ஒரே விதமானவர்களே நல்லபயங்கரவாதிகள் என்றோ தீய பயங்கரவாதிகள் என்றோ எவருமில்லை" ஆபத்து ஒரேவிதமானதாகும் மனித தரத்தின் அடிப்படையில் வேறுபடுத்துவது மிகுந்த ஆபத்து நிறைந்ததாகும். இனத்துவ வேறுபாட்டின் அனைத்து தரப்பினையும் மையமாகக் கொண்டு திட்டமிடப்பட்டுள்ள ஏனைய பயங்கரவாதிகளுக்குக் கூட இவ் அறிவித்தலானது ஓர் எச்சரிக்கையாக அமைந்துள்ளது. பயங்கரவாதிற்கு இனத்துவ அடிப்படையிலான வேறுபாடு கிடையாது இனத்துவ அல்லது மதவேறுபாட்டைப் பொருட்படுத்தாமல் அனைத்துச் சமூகங்களுக்கும் தீங்கு விளைவிப்பதாக பயங்கரவாதம் அமைந்துள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் இடம் பெற்ற 9/4 சம்பவத்திற்கு பின்னர் ஓர் ஆபத்தாக பயங்கரவாதத்தைப் பற்றிப் நன்கு புரிந்து கொள்ளும் ஓர் நிலை காணப்பட்டது பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கையின் யுத்தத்திற்கு இது ஓரளவிற்கு சாதகமாய் அமைந்தது. ஓர் பிரமாணமாக அவர்களது தெளிவாகத் தெரிகின்ற குறிக்கோள்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையமாகக் கொண்டு நல்ல பயங்கரவாதிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக சிலர் இன்னும் முயற்சிக்கும் அதேவேளை ஏனையோர் அக் கருத்துடன் உடன்பட வில்லை பயங்கரவாத அமைப்பாக விடுதலைப் புலிகள் பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளனர். இருந்தபோதும் அங்கு செயற்படுவதற்காக அவ் அமைப்பும் அவற்றின் இணை அமைப்புக்கள் பலவும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இது ஏனெனில் இவ் விடயம் சம்பந்தமான மேற்கின் அரைகுறை மனதுடனான கொள்கை நிலைப் பாட்டினாலாகும், இதனைப் பற்றிய புரிந்துணர்வானது எற்றத்தாழ்வுடையதாக அமைந்துள்ளது மேற்குலகிற்கான அல்லது அதன் கலாசாரத்திற்கான பிரதான அபாயமாக இஸ்லாத்தின் அச்சுறுத்தால் இருந்து வருகின்றது. விடுதலைப் புலிகள் மேலைத் தேச நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள அதேவேளை விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டுமென அவை விரும்பியிருந்தன. இது முரண்பாடனதாகவும் போலித் தனமானதாகவும் அமைந்திருந்தது.

பயங்கரவாதத்தின் அபாயம் மனித குலம் அனைத்துக்கும் உரியதாகும் அது தேசிய மற்றும் சர்வதேச ஆட்சியமைப்பில் காணப்படும் ஓர் புற்றுநோய் போன்றதாகும். இப் புற்று நோய்க்கு சரியான முறையில் சிகிச்சையளிக்காது விட்டால் அல்லது சத்திரசிகிச்சை செய்யப்படாது விட்டால் நாகரீகத்தின் முக்கிய பகுதியை இது முழுமையாக அழிப்பதுடன் அதன் அழிவையும், மறைவையும் சுட்டிக்கூட்டுவதாக அமையும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட பயங்கரவாதத்திற்கும் இன்றுள்ள பயங்கரவாதத்திற்கும் இடையில் பிரதானமான வேறுபாடு ஒன்று காணப்படுகின்றது இவ் வேறுபாடானது காலமாற்றத்துடன் தொர்புடையதல்ல மாறாக அது அதன் அளவிலும் தீவிரத்தன்மையிலும் தொடர்புபட்டதாகும். அப்போது பயங்கரவாதமானது தனிமைப்படுத்தப்பட்ட ஓர் மெய்ந்நிகழ்வாகவே இருந்தது இன்று அது எங்கும் வியாபித்துள்ள ஓர் பொதுவான மெய்ந்நிகழ்வாகவே அமைந்துள்ளது. அப்போது அது சற்றே புனைவியலானதாக இருந்தது. தற்போது ஆபத்துவாய்ந்த புதுமை உணர்ச்சி இல்லாததாகக் காணப்படுகின்றது. இன்று பயங்கரவாத அச்சுறுத்தல்' இல்லாத எந்த நாடுமே இல்லை எனலாம் இக்கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருந்த போதும் கூட அவுஸ்திரேலிலிருந்து வந்த பிந்திய செய்தியாக இருந்தது எதுவனில் விக்ரோரியாவில் உள்ள இராணுவ நிலையை குண்டு வைத்து தாக்கமுயற்சி செய்த சோமாலியத் தொடர்புடைய ஓர் பயங்கரவாதியை அதிகாரிகள் உரிய நேரத்தில் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் என்பாதாகும். இது இலங்கையின் எடுத்துக் காட்டானது அங்கு நடைமுறைப்படுத்துவதனைப் போல காணப்படுகின்றது இவ்விடயம் பாகிஸ்தான் எடுத்துககாட்டிலும் கூட உண்மையாதாக அமைந்துள்ளது. இலங்கையின் பின்னர் பயங்கரவாதத்தினைக் கட்டுபாட்டினுள் கொண்டு வருவதற்கு இந்த நாடு நெஞ்சுரத்துடன் முடிவெடுத்துள்ளது. இதற்கு கால அவகாசம் தேவைப்படக் கூடம் ஆனால் அது வெற்றியளிக்கும்.

இலங்கையின் அனுபவத்திலிருந்து பயங்கரவாதத்தின் அபாயத்தையும் இன்னலையும் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள திருநெல்வேலியில் 13 சிப்பாய்கள் மீது மறைந்திருந்து தாக்கப்பட்டு அவர்கள கொலைசெய்யப்பட்டமையுடன் 1983 ஜுலையில் இப்பயங்கரவாதமானது சிறிய அளவில் ஆரம்பித்தது (சுவாமி,2003), உடனடியாக ஏற்பட்ட கறுப்பு ஜுலை எனும் வடிவத்திலான ஓர் இனவாத எதிரலையை திடீரென தூண்டச் செய்ததன் மூலம் பயங்கரவாதமானது அதன் குறிக்கோளை அடைந்தது. மற்றைய குறிக்கோளாக நாட்டில் காணப்பட்ட நீண்ட கால இனத்துவ ரீதியான மன ஒருமைப் பாட்டின்மை அமைந்திருந்தது அந்த நேரத்தில் சிங்கள தீவிரவாதிகள் அதன் திட்டமிடப்படாத நேச அணியாக இருந்த அப்பாவித்தமிழ் மக்களுக்கெதிரான இனவாத வன்முறையூடாக பயங்கரவாதத்தை குறைக்க முடியாது அது இறுதியாக ஒருங்கிணைந்து செயற்படும் சட்டரீதியான அரச சக்தியால் தோற்கடிக்கப்பட்டதுடன் இனரீதியாக அனைத்து இனத்துவ சமூகங்களுக் கிடையிலான நீண்ட கால மீள் சமசரத்தைக் கூட இது அவசியமாக்கியுள்ளது பயங்கரவாதம் அரசியல் ரீதியானதாகும். இது அதன் அரசியல் ரீதியான புலம்பெயர்ந்தோரை இந்தியாவிலும் அதன் பின்னர் மேற்கிலும், அகதிகளை உருவாக்கியுள்ளதுடன் அதன் பின்னர் இவ்விரு குழுக்களதும் பயங்கரவாத நோக்கங்களுக்காக வன்முறைகள் பயன்படுத்தப்பட்டதுடன். அது ஏனை பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளையும் ஏற்படுத்தி உள்ளது. உதாரணமாக இவ்வருடம் (2009) மார்ச் மாதத்தில் லாகூரில் வைத்து இலங்கைக் கிரிக்கெட் அணி மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட தாக்குதலுக்கு பாகிஸ்தானிலுள்ள அவர்களது நேச அணிகள் பொறுப்பாக இருந்தன. பயங்காரவாதமானது மிகவும் அபாயம் நிறைந்ததாகும். இது ஏனெனில் அவற்றின் வலையமைப்புக்கள் மற்றும் அதேவகையான பயங்கரவாத அமைப்புக்களுடனான தொடர்புகள் என்பவற்றினாலாகும் இலங்கையில் பயங்கரவாதத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி தரும் இன்னலை அடிப்படையான சில தகவல்களும் புள்ளிவிபரங்களும் முன்னிலைப் படுத்திக் காட்டுகின்றன. இங்கு (பெட்டி 01) மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அது எப்படி நாட்டை திரும்பத் திரும்ப பீதி அடையச் செய்தது என்பதனை சுருக்கமாகத்தருகிறது முதாலாவது பயங்கரவாதக் கொலை 1975ல் நிகழ்ந்தது பாதிக்கப்பட்ட இப் பிரதேசங்களில் வளர்ந்த சிறுவர்களுக்கு, அவர்களது இனத்துவத்தைப் பொருட்படுத்தாது, ஏற்பட்ட உளவியல் ரீதியான இன்னல் அளவிட முடியாததாகும். பயங்காரவாதத்துடன் நேரடியாக தொடர்புடைய வகையில் கொல்லப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கையானத சந்தேகத்திற்கிடமின்றி 80,000ஐத் தாண்டியுள்ளது. அவர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம்களாக உள்ளனர். 1987 ல் இந்த நாட்டில் இடம்பெற்ற இந்தியத் தலையீட்டுக் பின்னரான சூழ்நிலையில் தென் பகுதியில் உள்ள ஓர் அரைகுறை பயங்கரவாத அமைப்பு அரசுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்ட போது அண்ணளவாக இது 30,000 பேர் இறந்தனர். இந் நிகழ்வுகள் பயங்கரவாதத்துடன். தொடர்புடையதாக இருந்தன. தற்போது ஆயுதப் படைகள் மற்றும் பொதுமக்கள் ஆகிய இரண்டிலிருந்தும் சுமார் 25,000 பேர் ஊன முற்றவர்களாக உள்ளனர் என்ப துடன் இது நாட்டின் தொழிற்படைக்கு ஓர் இழப்பாக அமைந்துள்ளது. முன்னாள் பயங்கரவாதிகளின் மத்தியில் உள்ளவர்கள் பெரும்பாலானவர்கள் ஊனமுற்றவர்களாக கருதப்படுகின்றனர்.

முழுமையான இந்த யுத்த காலத்தில் உள்நாட்டில் நிகழ்ந்த இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையானது 50,000 உம் 200,000 ற்குமிடையில் ஏறி இறங்குகின்றது. 2009ல் ஆரம்பத்தில் வன்னியில் மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவதற்கு பொது மக்களை பயங்கரவாதிகள் பணயக் கைதிகளாக பிடித்த சென்றபோது அவ் வெண்ணிக்கையானது. 300000 ஐ எட்டியது. அவர்கள் தற்போது அரசாங்க சேமநல முகாம்களில் இருப்பதுடன் அவர்களது சொந்தக் கிராமங்களில் மிகவிரைவாக மீளச் குடியமர்த்தப்பட உள்ளனர். இவர்களது மூன்று வேளை உணவுக்கு மாத்திரம் ஏற்படும் நாளாந்த செலவு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இது கல்வி, சுகாதாரம், பொழுது போக்கு போன்றவற்றிற்கான ஏனைய செலவுகளுக்கு அப்பாற்பட்டதாகும் 1990 ல் வடக்கிலிருந்து வெளியேறுமாறு சுமார் 100,000 முஸ்லீம்கள் பயங்காரவாதிகளால் கட்டாயப்படுத்தப்பட்டு அப்பிரதேசங்களில் இருந்து வெளியேற்றப்பட்டதுடன் அவர்கள் இன்னமும் அரசாங்காத்தால் வழங்கப்படும் சேமநல வசதிகளுடன் புத்தளத்தில் சோர்வுற்ற சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குறைந்தபட்சம் யுத்தமானது தற்போது முடிவுக்கு வந்துள்ளதுடன் பயங்கரவாதமும் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இன்று இலங்கை ஆவலுடன் எதிர்பார்க்க வேண்டியது, எதுவெனில் அது அபிவிருத்தியே ஆகும்.

கடந்த மூன்று தசாப்த காலத்தில் பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லாதிருந் திருப்பின் பொருளாதாரத்தில் ஓர் சிறந்த வளர்ச்சியை இலங்கையால் அடைய முடிந் திருக்கும் அந்த இக்கட்டான நிலையை பொருட்படுத்தாத வகையில் வளர்ச்சியானது சற்றே ஊக்கமூட்டுவதாக இருந்து வந்துள்ளது. இருப்பினும் மாகாணங்களுக்கு இடைப்பட்ட அபிவிருத்தியானது சரிசம நிலை அற்றதாக இருந்து வருவதுடன் பயங்காரவாதமானது நாட்டை மாத்திரமல்ல பொருளாதாரத்தைக் கூட பிரிப்பதற்கு முயற்சித்தது இது குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் வாழும்

பெட்டி 1

பயங்கரவாத அட்டூழியங்கள் பற்றிய தரவுகள்

| |
|---|
| முதலாவது அரசியற் கொலை 1975 |
| 13 சிப்பாய்கள் கொலைசெய்யப்பட்டமை 1983 |
| பதிலடியாகக் கொலைசெய்யப்பட்ட தமிழ்ப் பொதுமக்களின் எண்ணிக்கை 2,000 |
| புலிப் பயங்கரவாத காலத்தில் கொல்லப்பட்டவர்களது எண்ணிக்கை 80,000 - 90,000 |
| ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் கொல்லப்பட்டவர்களது எண்ணிக்கை 30,000- 40,000 |
| வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் எண்ணிக்கை (1990) 100,000 |
| இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை ஏற்றஇறக்கம் 50,000 ற்கும் 200,000 ற்கும் இடையில் |
| 2009 மே மாத இடப்பெயர்வு 300,000 |
| ஊனமுற்றோரின் எண்ணிக்கை 25,000 - 30,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு பெரும் பின்னடைவாக இருந்தது. அவர்களது ஜீவனோபாயமும் சிறுவர்களது கல்வியும் மனம் நெகிழ்ச்சி செய்கின்ற வகையில் சிதைவடைந்துள்ளது. சிங்கள அல்லது முஸ்லிம் ஆகிய ஏனைய சமூகங்களை விட அதனால் மீட்கப்படும் எனக்கருதப்பட்ட அதன் சொந்த தமிழ் சமூகத்திற்கு பயங்காரவாதமானது அதிகளவு ஊறு விளைவித்துள்ளது.

## மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகள்

மேலே குறிப்பிடப்பட்டவாறு இலங்கையில் பயங்காரவாதத்தால் ஏற்பட்ட அபாயமும் இன்னலும் பற்றிய தகவலும் புள்ளிவிபரங்களும் மிகத் தெளிவாக தெரியும் அதே வேளை சர்வதேச சமூகம் என அழைக்கப்படும் இச்சமூகத்திற்கு பயங்கரவாதத்தை தோற்கடித்தல் பற்றி நம்பிக்கை ஊட்டப்படவில்லை என்பதுபோல காணப்படுகின்றது. பெரும்பாலான ஆட்சேபனைகள் மேலெழுந்தவாரியான மனித உரிமைப் பிரச்சினைகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. சர்வதேச சமூகத்தை "என அழைக்கப்படும்" எனும் சொற்பதத்தை பாவித்து அதை விழிக்கமுடியும் ஏனெனில் அச் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்து வதாக உரிமை கோருவோர். மேலைத்தேச நாடுகள் சிலவற்றை உள்ளடக்கி உள்ள சிறுபான்மையினராக உள்ளனர் என்பதனா லாகும். அவர்களது அபிப்பிராயங்களை முழுமையாக அலட்சியப்படுத்த வேண்டும் அல்லது அசட்டை செய்ய வேண்டுமென்பது இதன் அர்த்தமல்ல இலங்கையானது பண்பு நயம் அற்றதாகவோ அல்லது நன்றி கெட்டதாகவோ இருக்கக்கூடாது. ஏனெனில் அவர்கள் இன்னும் நாட்டிற்கு சில நிதி உதவிகளையும் ஏனைய உதவிகளையும் குறைந்த பட்சம் அரச சார்பற்ற நிறுவன வழிகளினூடாக விநியோகிக்கின்றனர். அதேவேளை மனித உரிமைகள் மற்றும் பயங்காரவாத விடயங்களில் புத்திசாதுரிய மான சில கருத்துக்களை அவர்கள் கொண்டிருக்கக்கூடும். ஆனால் முழு உலகிற்கும் விளக்கவுரை வழங்குவதற்கு முன்னர் அவர்களது வரையறைகளையும் சாத்தியப்படத்தக்க தப்பெண்ணங்களையும் பற்றித் தாங்களாகவே சிறந்த முறையில் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

மனித உரிமை மீறல்கள் அரச அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களால் புரியப்படுகின்றனவோ இல்லையோ அதனை கருத்தில் கொள்ளாது அரசாங்க மற்றும் அரசசார் பற்ற அமைப்புக்களில் இருந்து வரும் மேற்கத்தைய நாடுகளைச் சேர்ந்த மனித உரிமைகளை ஆதரித்துப் பேசுவோர் அத்தகைய மனித உரிமை மீறல்களுக்காக மூன்றாம் உலக அரசாங்கங்ளை மாத்திரம் குற்றஞ்சாட்டிய ஓர் காலகட்டம் இருந்தது.

இருப்பினும் ஓர் அரசின் ஆட்சி எல்லையினுள் நடைபெறும் அனைத்திற்கும் இறுதியாக பொறுப்பேற்க வேண்டியது. அரசுகளேயாகும். என்பது அவர்களது நேரான தர்க்கமாக அமைந்திருந்தது. மற்றையவாதம் எதுவெனில் ஐ. நா. மனித உரிமைகள் கருவிகள் அனைத்தும் ஏனையோரை அன்றி அரசுகளையே கட்டுப்படுத்துகின்றன. அரசுகள் அல்லது அரசாங்கங்கள் மாத்திரமே ஐ-நாவின் உறுப்பினர்களாக இருப்பதுடன் பல்வேறு உடன்படிக்கைகளுக்கான தரப்பினராகவும் இருப்பதனால் சட்ட நுணுக்க வகையில் இரண்டாவது வாதம் உண்மையானதாகும். ஆனால் மீறல்கள் மேற்கொள்ளப்படும் போது மனித உரிமைகளை ஆதரித்துப் பேசுவோர் உண்மையான குற்றவாளிகளின் "பெயர்களைக் குறிப்பிடுவதுடன் அவர்களை வெட்கப்படச் செய்வதை" இது தடுத்து நிறுத்தக் கூடாது மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்துவதற்காக மேற்குலகால் கண்டுபிடிக்கப்பட்ட உத்தியாக இப் "பெயர் குறிப்பிடலும், வெட்கப்படச் செய்தலும்" அமைந்துள்ளது. வேறுபட்ட கலாசார மேடைகளிலிருந்து இந்த "வெட்கப்படச் செய்தல் "மேற்கொள்ளப்படும் போது அது மிகக் கடுமையான கலாசார விளைவுகளை கொண்டுள்ளன அவர்கள் இக்கலாசார பிரச்சினைகளுக்கு உணர்வுத்திறனுடையவர்களாக இருக்கவில்லை மேலைத்தேச நாடுகளைச் சேர்ந்த மனித உரிமைகளை ஆதரித்துப் பேசுவோர் நியாயமானவர்களாக இருக்கவேண்டுமாயின் 1980 களின் பிற்பகுதியில் அவர்கள் தமது கொள்கைகளை மாற்றியுள்ளனர். எனினும் குறைந்த பட்சம் வெளிப்படையான மீறல்கள் புரியப்படும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புகளை கண்டனம் செய்ய அல்லது வெட்கப்படச் செய்ய அவை ஆரம்பத்துள்ளன. என கூடறப்படத்தக்க தாக இருந் திருக்கவேண்டும். அன்றிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆக்கிரமங்களை ஆவணப்படுத்தி, சர்வதேச மன்னிப்புச் சபையால் அல்லது மனித உரிமைகள் கண்காணிப்பகத்தால் பல்வேறு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஆயினும் சில காரணங்களுக்காக அரசுக்களின் ஆட்சி எல்லையிலுள் எது நிகழ்ந்தாலும் அதற்காக மூன்றாம் உலக அரசாங்கங்களை கடிந்து கொள்ளும் முன்னைய கொள்கையில் கைவிடப்பட்டவற்றை அவர்களால் வெற்றிகாரமாகக்கையாள முடியாது இருந்தது உதாரணமாக 2006 ஆகஸ்டில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த காலகட்டத்தில் மூதூரில் 17 நிவாரணப் பணியாளர்கள் கொலை செய்யப்பட்டுக் கிடந்தபோது , இது அரசாங்கப் படைகளால் மேற்கொள்ளப்பட்டது எனும் தீடிர் முடிவுக்கு அவர்கள் வந்தனர் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த இராணுவ நடவடிக்கைகளை கைவிடுமாறு அவர்கள் முதலில் அரசாங்கத்தினை வற்புறுத்தினர். சுதந்திரமான ஓர் விசாரணையை அவர்களால் இறுதியில் மேற்கொள்ளச் செய்ய முடிந்தது. இந்நிவாரணப் பணியாளர்களுக்குப் பொறுப்பான Action Against Hunger எனும் பிரஞ்ச் அரச சார்பற்ற நிறுவனமானது இவ் விசாரணைக்கு சமூகம் அளித்து

சான்றுகளை வழங்கவில்லை அக் குற்றச் செயலை யார் புரிந்திரந்தாலும் அவ் 17 நிவாரணப் பணியாளர்களின் கொலையும் சந்தேகத்துக்கிடமின்றி மிக முக்கியத்துவமான மனித உரிமைகள் மீறலாகும். ஆனால் மேலும் அதனை ஒத்த சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறலாம் எனும் எடுகோளின் விளைவாக பயங்காரவாதத்திற்கு எதிரான யுத்தத்தினை கைவிடுமாறு அரசாங்கத்தினை வற்புறுத்துவது ஏற்றுக் கொள்ளப்பட்ட முடியாத ஒன்றாக இருந்தது. குற்றம்புரிதலுக்கு யார் பொறுப்பாக இருந்தனர் என்பதைனைக் கூட உறுதிப்படுத்தாமல் குறிப்பிட்ட சம்பவங்கள் அல்லது மீறல்கள் மீது விசேட கவனஞ் செலுத்தும் அதே வேளை மனித உரிமைகளுக்கான மட்டுமீறிய ஓரச்சுறுத்தலாக பயங்காரவாதம் உள்ளது என்பதனைப் பற்றிய நிறைவான கருத்தத்தைத் தோற்றுவிக்கும் விளக்கத்தை அவர்கள் புரிந்து கொள்ளத் தவரிவிட்டனர்.

பயங்கரவாதத்துக்கு எதிரான இலங்கையின் யுத்த காலப்பகுதியில் பெரும்பாலும் செவிவழித்த தகவல்களின் புறச் சான்றாக அமைகின்ற கதைகள் அல்லது எடுகோளாக கொள்ளப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் மீறல்களைப் பற்றி அரசாங்கத்திற்கெதிராக முன் வைக்கப்பட்ட பல குற்றச் சாட்டுக்கள் இருந்தன. துப்பாக்கி சூடு ஏதுமின்றி விடுதலைப் புலிகள் போன்ற ஈவிரக்கமற்ற ஒரு அமைப்புக்கு எதிரான யுத்தத்தினை நடாத்தபட வேண்டுமென எவ்வழியிலேனும் எவருமே எதிர்பார்த்திருந்திருக்க முடியாது. நிலம், கடல், ஆகாயம் எனும் வழிகளில் பயங்காரவாதத்தினை தோற்கடிப்பதற்காக ஆயுதப்படையினர் நுட்பத்திறன் வாய்ந்த ஆயுதங்களை உண்மையில் பயன்படுத்தினர் என்பதனையிட்டு அவர்களது தரப்பிலிருந்து மறுப்பு எதுவும் தெரிவிக்கடவில்லை. ஆனால் ராணுவ நடவடிக்கை காலத்தில் பொதுமக்களை இலக்கு வைப்பதற்கு அல்லது அவர்களது குடியிருப்புக்களை அழித்தொழிப்பதற்கான தெளிவான காரணம் எதுவும் இல்லை. ஏனெனில் மிக்க கடுமையான பின்விளைவுகள் இருக்கக் கூடும் என்பது பற்றி ஆயுதப்படையினர் தெரிந்து வைத்திருந்தனர். பொதுவாகக் கூறுமிடத்து மனித உரிமை பிரச்சினைகளில் அவர்கள் உணவுத்திறம் உடையவர்களாகவே இருந்தனர். சிப்பாய்களின் மனஉறுதியானது உயர்வாக இருந்ததுடன் குறிப்பிட்ட இலக்கினுள் பயங்கரவாதத்தினை தோற்கடிக்க முடியுமென்பதனை நம்பியிருந்ததுடன் அவர்கள் அனைவரும் தன்நம்பிக்கை மிகுந்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள் சீற்றம் கொள்வதற்கு எந்தவொரு யுத்தத்திலும் தோல்வி அடையவில்லை இங்கு ஒட்டு மொத்தமான யுத்தத்தினைப் பற்றி குறிப்பிடப்படவில்லை. சிப்பாய்களுக்கு மனித உரிமைகள் சட்டம் மற்றும் குறிப்பாக மனிதாபிமானச் சட்டம் என்பவற்றில் விரிவான போதனைகள் வழங்கப்பட்டதுடன் கட்டளை அமைப்புக்கள் மிக இறுக்கமானவையாக இருந்தன தளபதிகளால் சகிக்க முடியாதவையாக ஒழுக்க மீறல்கள் இருந்தன.இலகுவாகக் கூறின் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்த காலப்பகுதியில் மனித உரிமைகளை மீறும் நோக்கம் எதுவும் இருக்கவில்லை.

மறுபுறத்தில் சாத்தியப்படத்தக்க மீறல்களுக்காக எமது அரசாங்கத்தினை மேலைத்தேச அரசாங்கள், ஐக்கியநாடு நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன எச்சரித்திருந்தால் அல்லது அவர்களிடம் உறுதியானதும் நம்பகமானதுமான சான்றுகள் இருந்திருத்தால் அவற்றினை வெளிப்படுத்தி இருந்தால் அவர்கள் சார்பாக எத்தவறும் இல்லை. CNN,BBC அல்லது ஜசிரா ஆகிய சர்வதேச இலத்திரனில் ஊடங்கள் மூலம் ஒலிபரப் பப்படும் குற்றச் சாட்டுக்கள் ஆதார மற்றவையாரும் உதாரணமாக மருத்துவமனைகள் மீது எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டமை மற்றும் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டமை என்பவற்றை பற்றிய தகவல்களை வழங்கிய மருத்துவர்கள் தாம் அல்லது சொல்லும்படி வலுக்கட்டாயப்படுத்தப்பட்ட இருந்நதாக பின்னர் வெளிப்படுத்தினர். வன்முறை எதுவும் நிகழவில்லை என உறுதிச்சான்று கூறுவது இதன் நோக்கமல்ல ஆனால் பயங்கரவாத்தின் சூழ் நிலையையும் நாட்டில் மனித உரிமைகளுக்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியான அச் சுறுத்தலையும் கருத்திற் கொள்கையில் அணுகு முறையானது பூரணமாக வேறுபட்டதாக இருந்திருக்க வேண்டும்மென்பதை விவாதிப்பதே இதன் நோக்கமாகும்.

## மேலைத்தேச அணுகுமுறையின் தவறான வாதம்

பயங்காரவாதத்திற்கு எதிரான இலங்கை யின் யுத்தகாலத்தில் மனித உரிமைப் பிரச் சனைகள் அல்லது யுத்தம் போன்ற விடயங் களை இட்டு மேலைத் தேசம் நடந்து கொண்ட வழிமுறையானது மிகவும் சந்தே கத்துக்கிடமகவே அமைந்துள்ளது. அண் மைக்காலங்களில் இலங்கையானது மனித உரிமைகள் பற்றிய மேலைத்தேச அணுகு முறைகளுக்கான ஓர் அமிலப் பரிசோதனை யாாகவே இருந்துள்ளமை நிரூபிக்கப்பட் டுள்ளது. அவர்களின் ஆச்சரியமான நடத்தை பற்றிய புதிருக்கானகாரண விளக் கமாக மேம்படுத்தக் கூடிய இரு முன் மொழிவுரைகள் காணப்பட்டன. முதாலாவது சாதாரண முன்மொழிவு எதுவெனில் மேற்குலகம் அப்படிபட்டதுதான் என்பதாகும் அதாவது முற்றிலுமாக அது 3ம் உலகுக்கு எதிரான தப்பபிராயத்தைக் கொண்டிருப் துடன் எமது நாடுகள் மீது எப்போதும் குறைகாண்பதற்கு முயற்சிக் கின்றது இது சரியானதாகவோ. தவறான தாகவோ இருக்கலாம். குறித்த ஓர் செயலின் நோக் கம் பற்றிய காரண விளக்கம் ஒன்றாக அதன் உள்நோக்கினை வெறுமனே விளக்க அது ஓர் சிறந்த முறைமை அல்ல அது விஞ்ஞானபூர்வமான தும் அல்ல. சில வேளைகளில் இரண்டாவது முன்மொழி வுரையானது அதிகளவு பொருத்தமான தாகும். 2002-2005 ஆகிய கால கட்டத்தில் அல்லது அதன் முன்னர் கூட இலங்கை யில் நடைபெற்ற சமாதானப் பரிசோதனை யை பிரதானமாக ஆதரித்துப் பேசுவோராக மேற்குத் தேச நாடுகள் இருந்தன என்பது டன் தவறுகளை ஏற்றுக்கொள்வதற்கு அவை தயாராக இருக்கவில்லை. இதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இந்தியா அமை தியான முறையில் தவறினை ஏற்றுக் கொண்டதுடன் அதற்கேற்ப செயற்பட்டது. சிலரைப் பொறுத்த வரையில் ஆதரவு வழங்கப்பட வேண்டிய நலிவுற்றவர்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தனர். அதன் பயங்காரவாதத்தினை பொருட்படுத் தாது சில நாடுகள் விடுதலைப் புலிகளுக்கு பொருள் உதவிகளைக் கூட வழங்கி ஆதரித் தமைக்கான சாத்தியக் கூறுகள் உண்டு. இலங்கைக்கு எவ்வகையான அரசியல் தீர்வு பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்ப தனைப் பற்றிய முந்தைய முடிவுகளுக்கு சில நாடுகளும் அவர்களது பிரதி நிதிகளும் வந்தமைக்கான சாத்தியக் கூறுகள் கூட உண்டு. நாட்டிலுள்ள மக்களின் அரசியல் விருப்பங்களை ஒட்டுமொத்தமாக அலட்சி யம் செய்வதாக அது அமைந்திருந் தது யுத்த நிறுத்த உடன்படிக்கை, இடைக்கால சுய ஆட்சி அதிகாரம், ஆகிய இரு ஆவணங்களும் இலங்கையின் பிரிவினைக் கான செயற்திட்ட வரைவாக அமைந்திருந் தன. சில வேளைகளில் விடுதலைப் புலிக ளுக்கு அளவுக்கு மீறிய நம்பிக்கை வழங்கப்பட்டிருக்கலாம் இல்லா விடின். இறுதிக்கணம் வரை வேலுப் பிள்ளை பிரபாகரன்.போர் முனையில் ஏன் தொடர்ந் திருந்தர் என்பதனைப் புரிந்து கொள்வது சற்றுக்கடினமாகவே இருக்கின்றது. இச் சூழ் நிலையில் இருந்து காப்பாற்றுவதற்கான உத்திகளை சில சர்வதேசத் தலையீடுகள் கண்டுபிடித்திருக்க முடியும் எனும் நம்பிக் கை காணப்பட்டதுடன் அது பயங்காரவாதத் தை இறுதியாக மீட்பதாகவும் கருதப்பட்டது.

பயங்காரவாதத்தின் உண்மையான இயல் பினை புரிந்து கொள்வதற்கு தவறியமை கூட ஓர் புதிராகவே உள்ளது. வெளியிலுள்ள வர்களை விட நாட்டிலுள்ள சில கல்விமான் கள் மத்தியில் இத் தோல்வியானது தெளிவாகவே தெரிகின்றது. இதற்கான ஓர் காரண விளக்கமாக "அளவுகடந்த சமூகவி யலும் மிகக்குறைந்தளவான அறிவியலும்" அமைந்துள்ளது. பயங்கரவாதம் பாசாங்குத் தன்மை கொண்டதாகவே அமைந்துள்ளது. ஆனால் அது அதிகளவான சமூக ரீதியான அடிப்படைகளைக் கொண்டிருக்கவில்லை .பயங்கரவாதத்தின் அடிப்படைக் கூறுகள் அதிகளவு அக வயமானவையளவும், கருத்தியல் ரீதியானதாகவும் அமைந்துள் ளன என்பதுடன் அதற்கான ஆதரவுத் தளங்கள் பிரச்சாரம், கட்டாயப்படுத்தல் என் பவற்றுக் கூடாகத்ததன் தோற்றுவிக்கப்படு கின்றன. இதனுடன் தொடர்புடைய மற்றைய காரணியாக முரண்பாட்டுத் தீர்வு பற்றிய பொருத்தமற்ற கோட்பாடுகள் அமைந்துள் ளன. இலங்கைக்காக உள்ளூரிலும் வெளி நாடுகளிலும் அளவுகடந்த முரண்பாட்டுத் தீர்வுக் கோட்பாட்டியலாளர்கள் இருந்தனர். இறுதியாக அவர்கள் தவறான ஒன்றைப் பற்றிப்பிடித்ததுடன் தவறானது தெளிவாகத் தெரிந்தபின்னர் கூட அதனை ஏற்றுக் கொள் வதற்குத் தயங்குகின்றனர். மனித உரிமை களுக்கான மேலைத்தேசத்தின் ஆதரவு தேடுவோரும் முரண்பாட்டுத் தீர்வுக் கோட் பாட்டியலாளர்களும் சர்வதேச மட்டத்தில் நெருங்கிய தொடர்புடையவர் களவர். இவ்விரு பிரிவினரும் இரட்டைச் சகோதரர் போலாவர் என்பதுடன் இவ் இருசாராருமே மிகக் கடுமையான பிறப்புக் கூறான நோய் களால் துன்பப்படுவதாகக் காணப்படுகின் றனர். மனித உரிமைகளும் முரண்பாட்டுத் தீர்வும் பல்கலைக்கழக மட்டங்களில் கற்கைத் துறைகளாக உள்ளன. கற்கைத் துறைகளாக இவ் இரண்டும் சட்டப்படி வெல்லுபடியாகக்கூடிய தன்மையைக் கொண்டுள்ளபோதும் மனித உரிமைகள் மற்றும் முரண்பாட்டுத் தீர்வு பற்றிய மேலைத்தேசத்தின் பக்கச் சார்பான ஆதரித்துப் பேசும் செயற்பாடானது அவற்றின் இம்மியளவும் பிசகாத அறிவு பூர்வமான குணாம்சத்தின் பெறுமதியினை மிகப் பெருமளவில் குறைத்துள்ளதுடன் அதனைத் திரிவுபடுத்தியும் உள்ளது. முரண்பாட்டுத் தீர்வுக் கோட்பாட்டியலாளர் களாலும் இது வரையில் சிக்கலின் தன்மை யை சரிவரப் புரிந்துகொண்டு அதனைக கையாளத் தெரியாத ஒன்றாகவே பயங்கர வாதம் அமைந்துள்ளது. ஐ.நா. செயலகத்தி லுள்ள சில நிபுணர்களும் ஆளணியினரும் ஆகிய பணித்துறை அதிகாரிகள் விடயத் தில் ஐ.நா மட்டத்தில் கூட இப்பலவீனம் காணப்படுகின்றது. அவர்கள் பெரும்பாலும் அரச சார்பற்ற நிறுவனத்தினைச் சார்ந்தோர் போன்றே நடந்து கொள்கின்றனர். பிரதான மாக மேலைத்தேச செயற்பாட்டாளர் களால் ஆதரித்துப் பேசப்படும் தற்போதைய மனித உரிமைகள் பற்றிய கருத்தார்ந்த விவாதத தைப் பற்றி மிகத் தீவிரமாக நாம் மீள் சிந்தனை செய்வதற்கு இலங்கையின் அனுபவம் வழிவகுக்கின்றது.

## இறுதி விவாதம்

தற்போதைய மேலைத்தேச சில எண்ணக் கருக்களும் அணுகுமுறைகளும் மனித உரிமைப் பிரச்சினைகளைத் (அல்லது மீறல் களைக் கூட) தீர்ப்பதனை விடவும் அவற் றை மேலும் மோசமாக்குகின்றன என்பது தெளிவாகத் தெரிகின்றது. மனித உரிமை கள் பற்றிய ஏனையோரின் கருத்துக்களை செவிமடுப்பதற்கு அல்லது கலந்துரை யாடுவதற்குக் கூட மேற்கு விரும்பவில்லை எனும் விடயமானது இங்கு முக்கியமான ஓர் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. சில தென்கிழாக்காசிய நாடுகள் சிலவற்றில் ஆசிய விழுமியங்கள் முன்வைக்கப் பட்டபோது அவை மனித உரிமைகளுக்கு முரணானவையாகக் கருதப்பட்டு முழு முயற்சியும் தவறானது என வெளிப்படை யாகவே கூறப்பட்டது. ஆசிய விழுமியங்கள் முன் வைக்கப்பட்ட வழி முறையானது முற்றுமுழுதாக சரியானதாகவே இருந்தது என்பது இதன் அர்த்தமல்ல. ஆனால் கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பம் கூட அங்கு இருக்கவில்லை.

மனித உரிமைகள் விடயத்தில் மேற்குக்கும், கிழக்கிற்க்கும் இடையேயான வாதப்பிரதி வாதங்களின் மையமாக உரிமைகளுக்கும் கடமைகளுக்குமிடையேயான தொடர்பு அமைந்துள்ளது. மேற்கூறிய கடமைகளை யோ, பொறுப்புக்களையோ பற்றிக் குறிப் பிடாமல் மனித உரிமைகளை மாத்திரமே அது ஆதரித்துப் பேசுகின்றது. அனைவ ருக்குமான மனித உரிமைப் பிரகடனத்தின் வரைவின்போது ஐ.நா வின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார நிறுவனத்தின் (UNESCO) பணிப்பாளர் நாயகமான யூலியன் ஹக்ஸ்லி அவர்கள் இவ்விடயம் சம்பந்தமான உலகத் தலைவர்கள் சிலரின் கருத்துக்களைக் கோருவதற்கு முயற்சித் தார் அவற்றுள் மகாத்மாகாந்தியின் கருத் துக்களும் ஒன்றாகும். உரிமைகளுக்கும், கடமைகளுக்கும் இடையேயான தொடர்பின் முக்கியத்துவத்தை முதன்மைப்படுத்திக் காட்டி பின்வருவனவற்றை காந்தி கூறினார்.

"சிறந்த முறையில் ஆற்றப்படும் கடமையில் இருந்தே அனைத்து உரிமைகளும் ஈட்டப் பட்டு பாதுகாக்கப்பட வேண்டி உள்ளன என்பதனை இலக்கியப் படைப்புக்களில் இருந்தன்றி உலகியலறிவுள்ள எனது அன்னையிடம் இருந்தே நான் கற்றறிந்து கொண்டேன். இதனால், இவ்வுலகில் குடிமகனாக இருப்பதற்கான கடமையை நாம் ஆற்றும்போது மாத்திரமே, நம் வாழ் விற்கான அனைத்து உரிமைகளும் படிப் படியாக. விருத்தியடைகின்றன. அடிப்படை யான இவ்வறிக்கையில் இருந்து ஆண் களதும், பெண்களதும் கடமைகளை வரை யறுப்பதுடன், முதலில் செய்யப்பட வேண் டிய சில ஒத்த கடமைகளுக்கு அனைத்து உரிமைகளுடனும் உள்ள தொடர்புடைமை யை தெளிவுபடுத்துவதும் சில வேளை களில் இலகுவானதாக இருக்கும். போராடு வதில் எந்த முக்கியத் துவமும் இல்லாத முறையிலான உரிமைப் பறிப்பாக ஏனைய உரிமைகள் அனைத்தையும் காட்டமுடியும்."

எனினும் காந்தியின் இக் கருத்துகள் அனை வருக்குமான மனித உரிமைகள் பிரகடனத் தில் எவ்விதத்திலும் சேர்த்துக் கொள்ளப் படவில்லை. அவ்வாறில்லாவிடில் அனை வருக்குமான இப் பிரகடனமானது, அனை வருக்குமான ஓர் மனித உரிமைகள் மற்றும் மனிதன் கடமைகள் பிரகடனமாக இருந் திருக்கக்கூடும். அன்றிலிருந்து மனித உரிமை களுக்கான மேலைத் தேசத்தின் ஆதரித்துப் பேசும் செயற்பாடானது கடமைகள் மீது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிக்கவனம் எதனையும் செலுத் தாது, என்பதுடன் பாரியாளவிலான முரண் பாடுகளுக்கு வழிவகுத்த பல கிளர்ச்சி களையும் எதிரெழிச்சிகளையும் தூண்டி யுள்ளதுடன், மனித உரிமைகளை மேம்படுத் தாது அவற்றின் மீறல்களுக்கும் அம்மனித உரிமை சூழல்களின் சீர்கேட்டிற்கும் வழி வகுத்தது என்பதனையும் காணமுடியும்.

மேலைத்தேசத்தின் மனித உரிமைகள் பற்றிய கருத்தார்ந்த விவாதத்தில் பலதரப் எண்ணங்கள் காணப்படுகின்றன (கிரான்ஸ் ரன் -1973, டொனலீ-1989) என்பதுடன் அவை அனைத்தினையும் இக் கட்டுரையில் கலந்து ரையாட முடியாதுள்ளது. அவற்றுள் சில பின்வருமாறு சுருக்கமான முறையில் முன் வைக்கப்படுகின்றன. இந்த மேலைத் தேச கருத்தார்ந்த விவாதமானது ஓரளவிற்கு தனிநபர்கள் மீது அளவுக்கதிகமான விசேட கவனஞ் செலுத்துகின்றது. மேலும் இது தனிநபர்களுக்கும், சமுதாயத்துக்கும் இடை யிலான ஒத்திசைவின்மையைத் தோற்றுவிக் கின்றது. இவ்வாறாக சமூக ஒத்திசைவுத் திறனானது வலுவிழக்கச் செய்யப்படு கின்றது. அனைத்தையும் உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட நோக்கொன்றில் ஆராய்வதற்கான ஓர் போக்கு ஊக்குவிக் கப்படுகின்றது. அதன் விளைவாக ஏனைய நோக்கங்களும் விழுமியங்களும் அலட்சியப் படுத்தப்படுகின்றன. சமநிலை எண்ணங் கொண்ட மேம்பட்ட பண்பு நலன்களைத் தோற்றுவிக்காது. ஏனைய விழுமியங்களி லிருந்து தொடர்பறுந்த உரிமைகளில் வெறிபார்வம் கொண்டவர் களை தோற்று விக்கும் ஆபத்தினை இக்கருத் தார்ந்த விவாதம் கொண்டுள்ளது. பெரும் எண்ணி கையிலான பொதுமக்களின் பொரு ளாதார, சமூக, கலாசார உரிமைகளின் இழப்பில் சிலரது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான மேற்குலகின் தனிக்கவனஞ் செலுத் தலானது சாதாரணமானதாக அமைந்துள் ளது. செயலில் அது இன்னமும் அவ்வாறே உள்ளபோதும் மாற்றப்பட உள்ளதாகக் கூறப்படுகின்றது. விருத்தி அடைந்து வரும் நாடுகள் பலவற் றின் அபிவிருத்திக்கான உரிமைகள் ஐ.நாவினாலேயே அலட்சியப் படுத்தப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள், அவற்றின் வழமையான நடை முறைகள், அரசுகள் அவற்றின் தலைவர்கள், கலாசாரம், பாரம்பரியங்கள் மற்றும் இந்த நாடுகளின் வரலாறுகள், இவையாவற்றின் மீதும் பொதுவான வெறுப்புணர்ச்சி காணப்படுகின்றது. பொது மக்கள் சிந்திப்பதற்கும் அவர்கள் எதனைச் சிந்திக்க வேண்டுமென மேலத் தேசத் தினைச் சேர்ந்த மனித உரிமைகளை ஆதரித்துப் பேசுவோர் விரும்புவதற்கும் இடையில் தெளிவான வேறுபாடு காணப் படுகின்றது.

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்குப் பின்னர் மனித உரிமைகள் பற்றி ஆதரித் துப் பேசும் அவர்களது செயற்பாட்டின் ஆரம்பக் கட்டங்களில் குழுக்களிற்கான உரிமைகளை மறுத்து தனி நபர்களுக்கான உரிமைகளில் தனிக் கவனம் செலுத்துவதன் மூலம் சடுதியான ஓர் மாற்றம் காணப் பட்டது. பெரும்பான்மைச் சமூகங் களின் உரிமைகளை அலட்சியப்படுத்தி சிறுபான் மையினரின் உரிமைகள் மீது முழுமையான தனிக்கவனம் செலுத்தப்பட்டது. குடியேற்ற வாத காலத்தில் சாதாரண மானதாகக் காணப்பட்ட பிரித்தாளும் தந்திரோபாயத் திற்கான ஓர் முயற்சியாக, ஒருவருக் கெதிராக மற்றவரை ஊக்குவிப்பதற்கான ஓர் சதித்திட்டத்தினைப் போன்று இம்முயற்சி அமைந்திருந்தது. சட்டத்தினையும் ஒழுங்மைவையும் அல்லது சட்டத்தின் ஆட்சியைப் பேணுவதில் அரசுகளுக்குக் கடினமாக இருந்த சமுதாயங்களில் இதன் விளைவாக முழுமையான ஒத்திசை வின மை காணப்பட்டது. அதன் பின்னர் தோல்வி யடைந்த அரசுகளாக அரசுகள் குறை காணப்பட்டதுடன், இச்சமூகங்களில் தலையி டுவதற்கா ஏனைய கோட்பாடுகள் ஊக்கு விக்கப்பட்டன. (இவான்ஸ் -2008). முழு நாட்டிற்கும் போரிட்ட பின்னரான பின் விளை வுகளைத் தோற்றுவித்த தமிழ் இளைஞர் கள் மத்தியில் காணப்பட்ட முதலில் கிளர்ச்சி யாகவும் பின்னர் பயங்கர வாதமாகவும். "அமைந்த இந்நிகழ்வினை தூண்டுவதில் மேலே குறிப்பிட்ட வகை ஏற்றத் தாழ்வான மனித உரிமைக் கோட்பாடுகள் எந்தள விற்கு பொறுப்புடையதாக இருந்துள்ளது என்பதனைக் கண்டறிவதற்கு மேற் கொள் ளப்படும் ஆய்வானது, ஆர்வத்தினைத் தூண்டும் ஒன்றாக அமையும். துரதிஷ்டமாக இவ்வகையான ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சி களுக்கும் எதிரெழுச்சிகளுக்கும் சில நியாயப்படுத்தல்களை அனைவருக்குமான இப்பிரகடனம் கூட வழங்கியுள்ளதாகக் காணப்படுகின்றது. அதன் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஓர் இறுதியான புகலிடமாகத் துணையா தாரத்தைக் கொண்டிருப்பதற்கு மனிதன் நிர்ப்பந்திக்கப்படுபவனாக இல்லாதிருந் தால், கொடுங்கோண்மைக்கும் அடக்கு முறைக்கும் எதிரான கிளர்ச்சிக்காக அம் மனித உரிமைகள் சட்டத்தின் ஆட்சியால் பாதுகாக்கப்படுவது இன்றியமையாத தாகும்."

மேலே கூறப்பட்டதன் பின்விளைவு எது வெனில் மனித உரிமைகளின் மீறல்களே கிளர்ச்சிக்கான ஏக காரணியாக அமைந் துள்ளது என்பதாகும். அதிகாரம், சதித்திட்டம் மதவெறி ஆர்வம் அல்லது மனித உரிமை களைப் பற்றி தவறாகப் புரிந்து கொள்ளல் போன்ற கிளர்ச்சி அல்லது பயங்கரவாதத் திற்கான ஏனைய பல காரணிகளை இம் முன் மொழிவுரைகள் பொருட்படுத்தவில்லை.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படாத விடத்து, கிளர்ச்சி செய்வதற்கு மக்கள் கட்டாயப்படுத்தப்படுவர் என இது கூறுகின் றது. கிளர்ச்சி ஒன்று காணப்படுமாயின் அதற்கான காரணம் மனித உரிமைகள் மீறலாகும் என மறுதலையாக விவாதிக்கப் படுகின்றது. அல்லது நம்பப்படுகின்றது. இது ஓர் பொதுவான மேலைத்தேச மரபாகும். இலங்கையில் 1971 ல் நிகழ்ந்த மக்கள்விடுதலை முன்னணியின் கிளர்ச்சிக்கு ஆதரவானவர்கள் கிளர்சிக்கு ஆதரவாக வைக்கப்பட்டு, சட்டரீதியான ஓர்வாதமாக மேலே குறிப்பிடப்பட்ட முன் மொழிவுரை யை உதவிக்கு அழைக்கும் செயலானது தற்செயலாக நிகழ்வதொன்றல்ல. தனது நடவடிக்கைகளை அரசியல் ரீதியாக பாதுகாப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் அதே முயற்சி மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டது. மனித உரிமைகள் செல்லுபடியானதாக இருக்கும் அதேவேளை, பல்வேறு சூழ்நிலைகளுக்குப் அரசியல் கோட்பாடுகளைப் பயன்படுத்து தல், அவற்றினை துஷ்பிரயோகம் செய்தல் அவற்றினை கடமைகளுக்காக மேலும் அவற்றினை தனிமைப்பட்ட வகையில் பயன் படுத்துதல் என்பன பயங்கரவாதத்தினை மேலும் வலுவூட்டப்படும். ஓர் சூழலுக்குக் கூட வழிவகுக்கும் என்பது தெரியவரு கின்றது. இலங்கையில் பயங்கரவாத எதிரெழிச்சிக் காலத்தில் மனித உரிமை களை ஆதரித்து மேற்கொள்ளப் படும் மேலைத்தேசச் செயற்பாடுகள் இவ்விடயத் திற்குப் பொருத்தமான மிகத் தெளிவான உதாரணமாக அமைந்துள்ளது.

***உசாத்துணை:***


*Alles, A. C. (1979). Insurgency 1971. Colombo: Apothecaries Co.*

*An-Naim, Abdullahi Ahmed and Francis Deng. ed. Human Rights in Africa: Cross-Cultural Perspectives. Washington: Brookings Institution.*

*Cranston, Maurice. (1973). What Are Human Rights? London: The Bodley Head.*

*Dennelly, Jack (1989). Universal Human Rights in Theory and Practice. Ithaca: Cornell University Press.*

*Evans, Gareth (2008). The Responsibility to Protect: Ending Mass Atrocity Crimes Once and For All. Washington: The Brookings Institution.*

*Fernando, Laksiri (2002). Human Rights, Politics and States: Burma, Cambodia and Sri Lanka. Colombo: SSA.*

*Fernando, Laksiri (2002). A Political Science Approach to Human Rights. Colombo: CSHR.*

*Fernando, Laksiri (2008). The menace of Terrorism and its Early Origins. Midweek Review,. The Island, 20 August 2008.*

*Glossop, Ronald (1983). Confronting War: An Exmaination of Humanity's Most Pressing Problem. New York: McFarland.*

*Jesephus, Flavious (1981). The Jewish War. New York: Penguin.*

*Swamy, Narayan (2003). Inside an Elusive Mind: Prabhakaran. Colombo: Vihitha Yapa.*

*Uyangoda, Jayadeva and Morina Perera (2003). Sri Lanka's Peace Process 2002. Colombo: SSA.*

*Wilkinson, Paul (1976). Political Terrorism. London: Macmillan.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை தோற்கடித்ததில் இலங்கையின் சாதனைகள்: உலகிற்கான முன்மாதிரி எடுத்துக்காட்டு

**பேராசிரியர் பியதாச அத்துகோரல**

*அரச அறிவியல் துறை,*
*ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்*

**சாராம்சம்**

சுதந்திரம் அடைந்ததன் பின்னரான காலப் பகுதியில் காணப்பட்ட மிக முக்கியமான ஒரு பிரச்சினையாக கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நிலை கொண்டிருந்த இன முரண்பாடானது அமைந்திருந்தது. இம் முரண்பாடானது அனேகமாக முழு இலங்கையரதும் வாழ்க்கையின் சமூக–பொருளாதார மற்றும் அரசியல் அம்சங்களை மோசமாகப் பாதித்திருந்தது. பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் இலங்கையின் சாதனைகள் மற்றும் அதன் வரலாற்றில், பொருளாதார மற்றும் அரசியல் சூழமைவினுள் இன முரண்பாட்டைத் தீர்த்தல் என்பவற்றை ஆராய்வதற்கு இக்கட்டுரை முன்வைப் பானது முயற்சிக்கின்றது. இம்முரண்பாட்டின் திடீர் தோற்றம் மற்றும் அதன் சிக்கலான தன்மை என்பவற்றிற்குப் பின்னாலுள்ள பல்வேறு காரணிகள் குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றுள் இன அடிப்படையிலான பிரதிநிதித்துவம், மொழி மற்றும் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை என்பவை முக்கியத்துவமானவையாக இருந்துள்ளன. இரண்டாவது குடியரசு அரசியல்யாப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர், தனி அரசு ஒன்றிற்கான கோரிக்கை 1972இல் திடீரெனத் தோற்றம் பெற்றது. மேலே குறிப்பிடப்பட்ட கோரிக்கைக்குப் பின்னால் இருந்த பிரதான காரணியாக அரசியல் நிர்ணயசபைக்குத் தமிழரசுக் கட்சியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் நிராகரிப்பானது அமைந்திருந்தது.

இப்பிரச்சினைக்குச் சமாதானமான தீர்வொன்றை எட்டுவதற்காக இலங்கை அரசாங்கமானது 1985இல் இருந்து 2006ம் ஆண்டு வரை பல முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் இம்முயற்சிகள் எதுவுமே வெற்றியளிக்கவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த பின்னர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு (LTTE) எதிராக இராணுவத் தாக்குதலை மேற்கொண்டது. எல்.ரீ.ரீ.ஈ. போன்ற மிகவும் சக்திவாய்ந்த கெரில்லா இயக்கத்தை இலங்கை தோற்கடித்தமையைச் சாத்தியப்படத்தக்கதோர் உலக மாதிரியாகக் கருதமுடியும்.

## 1. அறிமுகம்

அண்ணளவாக மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நிலைகொண்டிருந்த இன முரண்பாடானது, சுதந்திரத்துக்குப் பின்னரான காலகட்டத்தில் காணப்பட்ட மிக முக்கியமான பிரச்சினையாக அமைந்திருந்தது. இம் முரண்பாடானது அனேகமாக அனைத்து இலங்கையரினதும் சமூக-பொருளாதார, அரசியல் அம்சங்களை மிகவும் மோசமாகப் பாதித்திருந்தது. அண்ணளவாக மூன்று தசாப்தங்களாக இலங்கையின் அரசாங்கங்களுடன் இரத்தக்களரியான சிவில் யுத்தமொன்றில் ஈடுபட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை வைகாசி 2009இல் இலங்கை தோற்கடித்தமையானது இலங்கையில் அடையப்பெற்ற முடிவானதோர் சாதனையாக அமைந்திருந்தது.

பயங்கரவாதத்தைத் தோற்கடித்தமை மற்றும் இலங்கையின் வரலாற்று, பொருளாதார, அரசியல் சூழமைவினுள் இன முரண்பாட்டைத் தீர்த்தல் என்பவற்றில் இலங்கையின் சாதனைகளை ஆராய்வதற்கு இக்கட்டுரை முன்வைப்பானது முயற்சிக்கின்றது. சாத்தியப்படத்தக்க ஓர் உலக மாதிரியாக இச்சாதனைகளின் முக்கியத்துவத்தை அது முன்னிலைப்படுத்துகின்றது.

நான்கு ஒத்திசைவுத் தன்மையுள்ள பிரிவுகளைக் கையாள்வதன் மூலம் இக்கட்டுரை ஆய்வானது முன்வைக்கப்படுகின்றது. முதலாவதாக, இலங்கையில் இம்முரண்பாட்டுக்கு ஆதாரமாக அமையும் பிரச்சினைகள், பின்னர் ஜனநாயகக் கட்டமைப்புக்குள் இம்முரண்பாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், வளர்ச்சிப்படிகள் இவை ஏன் பயங்கரவாதத்தை அதிகரிக்கச்செய்தன என்பதற்கான காரணங்கள் மற்றும் இறுதியாகச் சட்டரீதியான ஒரு முறையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட வழிமுறை ஆகியவற்றை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## 2. இலங்கையில் இனப்பிரச்சினையின் தோற்றம்

### 2.1 இன அடிப்படையிலான பிரதிநிதித்துவமும் குடியேற்றத் திட்டங்களும்

இலங்கை இன முரண்பாட்டின் தோற்றுவாய் பிரித்தானிய ஆட்சிக் காலத்திலிருந்து ஆரம்பித்தது. கோல்புறூக் கமரன் சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு எதிர் வினையாக 1833ஆம் ஆண்டின் சட்ட சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதில் இன அடிப்படையிலான பிரதிநிதித்துவத்தை அறிமுகப் படுத்தியமையானது, இலங்கையில் சிங்கள மற்றும் தமிழ் இனத்துவ சமத்துவங்களுக்கு இடையில் ஏற்பட்ட போட்டித் தன்மையின் ஆரம்பமாக அமைந்தது. 15 உறுப்பினர்களை உள்ளடக்கிய சட்டசபை ஒன்று நிறுவப்படுவதை இவ்வாணைக்குழு பரிந்துரை செய்திருந்தது. இவர்களுள் 9 பேர் உத்தியோகபூர்வ உறுப்பினர்களாகவும், 6 பேர் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களாகவும் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். இவ்வுத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்கள் இனத்துவ அடிப்படையில் மாத்திரமே நியமிக்கப்பட்டனர்.3 ஐரோப்பியர்களும், நாட்டிலுள்ள சிங்களவர், தமிழர் மற்றும் பறங்கியர் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக 3 இலங்கையர்களும் நியமிக்கப்பட்டனர். இந்த இன அடிப்படையிலான பிரதிநிதித்துவமுறைக்கு மேலதிகமாக 1912இல் மட்டுப்படுத்தப்பட்ட ஓர் தேர்தல் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் 1931ஆம் ஆண்டுவரை நடைமுறையிலிருந்த இன அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறையானது அரசியல் முறைமை மற்றும் தேசியவாத இயக்கம் என்பவற்றில் இருந்த சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கு இடையிலான உறவுகளை மோசமாகப் பாதித்தது. இன அடிப்படையிலான பிரதிநிதித்துவமானது இலங்கையின் முதன்மையான ஆட்சி அமைப்பு முறையில் காணப்பட்ட ஓர் அழிகேடாக டொனமூர் அவர்களால் 1931 இல் கருதப்பட்டதுடன். அது இல்லாது ஒழிக்கப்படவேண்டுமெனப் பரிந்துரையும் செய்யப்பட்டது (இலங்கை, 1928).

இந்த இன அடிப்படையிலான பிரதிநிதித்துவ முறையானது 1931இல் இல்லாதொழிக்கப்பட்டு, அதற்குப் பதிலாக அதே வருடத்தில் வயது வந்தோர் அனைவருக்குமான வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்ட போதும், சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கிடையில் வளர்ந்திருந்த சந்தேகங்கள் இலங்கையின் அரசியலிலிருந்து மறையவில்லை. டொனமூர் அரசியல் யாப்புக்கு உட்பட்ட வகையில் "முழுமையான சிங்கள மந்திரிகள் சபை" ஒன்றைத் தோற்றுவித்தமையானது இவ்விடர்ப்பாடான சூழலுக்கான ஒரு தெளிவான சான்றாக அமைந்தது. 1946இல் சோல்பரி ஆணைக்குழுவுக்குத் தமிழர் தரப்பில் இருந்து தமிழ்க் காங்கிரசின் தலைவரான ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களால் முன்வைக்கப்பட்ட "சமநிலைப் பிரதிநிதித்துவம்" அல்லது "50 : 50 முன் மொழிவுக்கான கோரிக்கையானது, சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் தொடர்ந்திருந்து வந்த இவ்வினரீதியான சந்தேகத்துக்கான ஓர் உதாரணமாக அமைந்திருந்தது (இலங்கை, 1945).

மேலும் 1930களில் அதாவது டொனமூர் காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் நாட்டில் காணப்பட்ட இனத்துவப் போட்டித்தன்மையுடன் மிக நெருக்கமாகத் தொடர்புபட்டிருந்தன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அவ்வாறு உணரப்பட்டது. சிங்களத் தலைவர்களால் குடியேற்றத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத் திட்டங்களை நிறுவக்கூடா தெனத் தமிழ் அரசியல் கட்சிகள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டன. அவர்களது வாதத்தின்படி, இத்திட்டங்களை நிறைவேற்றுவதால் இம்மாகாணங்களின் இனத்துவ ஒழுங்கமைவுமுறை பாதிக்கப்படும் என்பதுடன், இப்பிராந்தியங்களில் தமிழர்கள் சிறுபான்மையினராக மாறுவ தற்கு இத்திட்டங்கள் வழிவகுக்கும். எனவும் ஆயினும், நம்பிக்கை எச்சமூகத்தினதும் பிரத்தியேகமான பாதுகாப்பை எம்மாகாண மும் கொண்டிருக்கவில்லை எனவும், இனத்துவத் தன்மையைப் பொருட்படுத்தாது வறுமை, அபிவிருத்தி மற்றும் விவசாய அபிவிருத்திக்கான காணிக் குடியேற்றம் ஆகிய பிரச்சினைகளைக் கையாள்வதே இத்திட்டங்களின் நோக்கம் எனவும் சிங்களத் தலைவர்கள் வாதிட்டனர்.

## 2.2 மொழிப் பிரச்சினை

சுதந்திரத்துக்குப் பின்னர் மட்டுமன்றி, அதற்கு முன்பிருந்தே இலங்கையின் அரசியலில் மொழியானது ஒரு முக்கிய பிரச்சினையாக அமைந்திருந்தது. கோல்புறூக் கமரன் சீர்திருத்தங்களுக்குட்பட்ட வகையில் 1833 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பிரித்தானிய மொழிக் கொள்கையின் ஒரு விளைவாக ஆரம்பத்தில் மொழி முரண்பாடாது தோற்றம் பெற்றது. இச்சீர்திருத்தத்தின் மூலம் இலங்கையில் ஆங்கிலம் முறைப்படி உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட்டது. இந்த மொழிக் கொள்கையால் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களின் பெரும்பான்மையினர் பாரபட்சமாக நடத்தப்பட்டனர். மொழிப் பிரச்சினையில் பொதுவான ஒரு புரிந்துணர்வுக்கு வழிவகுத்த இரு சமூகங்களுக்குமிடையிலான நலன்களின் முற்றிலும் இசைவான தன்மையொன்று ஆரம்பத்தில் காணப்பட்டது. இது சரிசமநிலை அந்தஸ்துடன் கூடிய சுயமொழிக் கொள்கையாக அமைந்திருந்தது. கல்வி மற்றும் பொதுச் சேவை ஆகிய செயற்களங்களில் பொது மக்களுக்கு வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டையும் உத்தியோகபூர்வ மொழிகளாக்கு வதைக் குறிக்கோளாகக் கொண்டு இந்தச் சரிசமநிலை அந்தஸ்தானது தோற்றம் பெற்றது (ஹேனி, 1967).

எனினும், சுதந்திரத்துக்குப் பின்னர், குறிப்பாக 1950களில், இந்த சுயமொழி இயக்கத்தின் குறிக்கோள்கள் மாற்றத்திற்குள்ளாயின.நடைமுறையில் இருந்த "சரிசமநிலை அந்தஸ்து" இயக்கமானது, "சிங்களம் மாத்திரம்" இயக்கமாகமாற்றமடைந்தது. இந்த நாட்டில் சிங்களமே ஏக உத்தியோக பூர்வ மொழியாக இருக்க வேண்டுமெனக் கோரும் ஒரு தீர்மானத்தை இலங்கை சுதந்திரக் கட்சி 1955இல் மேற் கொண்டது. 1956இல் ஐக்கிய தேசியக் கட்சி அதையே பின்பற்றியதுடன், 'சிங்களம் மாத்திரம்' கொள்கையை ஏற்றுக் கொண்டது. 1956இல் 'மஹஜன எக்சத் பெரமுன' அரசாங்கம் இலங்கையில் சிங்களத்தை மாத்திரம் உத்தியோகபூர்வ மொழியாக்கியமையானது அண்ணளவாக இரு தசாப்தங்களாக சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கிடையில் நிலைத்திருந்த உறவுகளை மோசமாகப்பாதித்தது.

## 2.3 பல்கலைக்கழக அனுமதிக் கொள்கை

1970களில் ஐக்கிய முன்னணியானது நடைமுறையில் இருந்த பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையில் மாற்றங்களை அறிமுகப்படுத்தியமையானது, இலங்கையில் ஏற்கனவே நட்பிணக்கமற்றதாக அமைந்திருந்த பெரும்பான்மை–சிறுபான்மை உறவுகளில் பாதகமான ஓர் தாக்கத்தை ஏற்படுத்திய மற்றுமொரு மிக முக்கிய நிகழ்வாக காணப்பட்டது. 1973இல் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் மொழி அடிப்படையிலான தரப்படுத்தல் கொள்கையை அரசாங்கம் தேர்ந்தெடுத்தது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை ஒரு பொதுவான தரத்துக்குக் கொண்டுவருவது இக் கொள்கையின் உபாயமாக இருந்தது. எனினும், இக்கொள்கையின் அறிமுகத்தின் பின்னர் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானத்தை அடிப்படையாகக்கொண்ட பாடநெறிகளுக்குத் தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதன் சதவீதம் திடீரென வீழ்ச்சி அடைந்தது (சில்வா, 1978). அதன் பின்பு 1974இல் மற்றுமொரு மாற்றம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய திட்டத்தின்படி, மொழிவாரி அடிப்படையிலான தரப்படுத்த லுக்கு மேலதிகமாக, மாவட்ட அடிப் படையிலான அனுமதிக் கொள்கை செயல் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. உரிய மாவட்டங்களின் சனத் தொகைக்கு ஏற்ற அளவில் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப் பதே இக் கொள்கையின் பின்னணியிலுள்ள தர்க்கமாக அமைந்திருந்தது. கல்வியில் நியாயத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. ஏனெனில் வேறுபட்ட மாவட்டங்களில் காணப்படும் பாடசாலை களில் கிடைக்கத்தக்க கல்விக்கான வசதி வாய்ப்புகளில் ஒரு பிராந்திய ரீதியான ஏற்றத் தாழ்வு காணப்பட்டது. பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் செயல் முறையில், கல்வியில் உயர்வான வசதி வாய்ப்புகளுடன் கூடிய மாவட்டங்களில் கல்வி கற்ற மாணவர்களுக்கு நடைமுறையில் இருந்த பல்கலைக்கழக அனு மதிக் கொள்கையானது ஓர் அனுகூலத்தை வழங்கியிருந்தது. ஆதலால், மாவட்ட அடிப்படையிலான அனுமதிக் கொள்கையை அறி முகப்படுத்துவதன் மூலம் இவ்வநீதியைச் சீர்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சித்தது. ஆயினும் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற கல்விக்கான உயர் வசதி வாய்ப்புக்களுடன் கூடிய மாவட்டங்களை இக் கொள்கையின் அறிமுகமானது மோசமாகப்பாதித்தது.

மொழி அடிப்படையிலான தரப்படுத்தல் மற்றும் மாவட்ட அடிப்படை ஆகிய இரு செயற்திட்டங்களும் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டமையானது 1973 உடன் ஒப்பிடுமிடத்து 1974இல் பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானத்தை அடிப்படையாகக்கொண்ட பாட நெறிகளுக்கு அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையானது மேலும் குறைவடைந்தது (சில்வா,1978) இக்கொள்கைகளைத் தமிழ் மாணவர்களுக்கு எதிரான பாரபட்சமாகக கருதிக் கூர்ந்து ஆராய்வதற்குத் தமிழ் அரசியல் கட்சிகள் முயற்சித்தன. ஆனால், அனைத்து மாவட்டங்களுக்கும் சரிசமமான கல்வி வசதி வாய்ப்புக்களை வழங்குதல் சாத்தியப்இ படாத ஒன்றாக இருந்தமையால், நாட்டின் தனிச் சலுகை பெற்றுள்ள மற்றும் தனிச்சலுகைகளைப் பெறாத பிரதேசங்களில் வசிக்கும் அனைத்துச் சமூகங்களுக்கும் நீதியை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இக்கொள்கைகளின் நோக்கமாக இருந்தது என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டிய தாகும்.

## 2.4 தனி அரசுக்கான கோரிக்கை

ஏற்கனவே கலந்துரையாடப்பட்டவாறு, 1956இன் சிங்களம் மாத்திரம் சட்டம் மற்றும் 1973இல் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகள் என்பன காரணமாக, சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களுக்கிடையில் முன்னர் நிலவிவந்த உறவுகள் மேலும் படுமோசமடையத் தொடங்கின. இப்பின் புலத்திற்குட்பட்டவகையில் 1970ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தது. புதிய அரசியல் யாப்பொன்றை உருவாக்குதல் என்பது ஐக்கிய முன்னணி கூட்டமைப்பினரால் வழங்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில ஒன்றாகும். அவ்வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக 1970இல் அரசாங்கம் ஓர் அரசியல் நிர்ணய சபையை நிறுவியது. பாராளுமன்றத்தின் அனைத்துப் பிரதிநிதிகளும் இவ்வமைப்பின் உறுப்பினர்களாயினர். தமிழரசுக் கட்சி இச்சபையின் ஓர் அங்கமாக இருந்ததுடன் அதன் விரிவான விவாதங்களில் பங்குபற்றியது. இக்கட்சி ஆறு அம்சத் திட்டமொன்றை அரசியல் நிர்ணய சபையில் முன்வைத்தது. ஆனால், நாட்டின் தற்போதைய நலன்களுக்குக் கேடு உண்டாக்குமென்பதால் அரசாங்கம் முடிவாக இம்முன்மொழிவை நிராகரித்தது (திருச்செல்வம்,1977).தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளாலும் உருவாக்கி ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்பது அம்ச முன்மொழிவு ஒன்று அரசியல் யாப்புக்கான திருத்தமாக 1971 பெப்ரவரியில அரசாங்கத்திடம் மீண்டும் முன்வைக்கப்பட்டது. ஆனால், இதுகூட ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டது. இச்சூழ்நிலை நாட்டிலுள்ள பெரும் பான்மை சிறுபான்மை உறவுகளை மோசமாகப் பாதித்தது.

1972இல் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் ஒரு பரந்த கருத்தொற்றுமை தோற்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதுடன் இக்கருத்தொற்றுமையானது தமிழர் ஐக்கிய முன்னணி என அழைக்கப்படும் பரந்த ஒரு தமிழ் கூட்டணியின் உருவாக்கத்துக்கு வழிவகுத்தது. பின்னர் இக்கட்சியானது 1976இல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி எனப் பெயர் மாற்றப் பட்டது. அதன் பின்னர், அவர்களால் உணரப்பட்டவாறு, தமிழர்களின் நியாயமான உரிமைகள் என அவர்கள் எதை அழைத்தனரோ அதை அடையும்பொருட்டு, இலங்கையில் ஒரு தனி அரசை அல்லது ஈழத்தை அமைப்பதற்காக இது கடும் முயற்சி செய்யுமென தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உத்தியோகபூர்வமாகப் பிரகடனம் செய்தது (பாலசூரிய, 1983). அஹிம்சை வழியில் அல்லது பலாத்காரத்தின் ஊடாக ஈழத்தை அல்லது தனி அரசை உருவாக்குவதற்கான வாக்குறுதியொன்றை வழங்குவதன்மூலம் 1977ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலுக்கான தனது வேட்பாளர்களைத் தமிழர் ஐக்கிய முன்னணி களம் இறக்கியது. மிகப்பெரிய எதிர்க்கட்சியாகப் பாராளுமன்றத்தில் 22 ஆசனங்களை இக்கட்சியால் பெறக்கூடியதாக இருந்ததுடன், அதன் தலைவரான அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவிப் பிரமாணம் செய்தார். 1977க்குப் பின்னரான காலப் பகுதி நாட்டில் தீவிரமற்ற ஒரு சிவில் யுத்தத்துக்கு முதலில் வழிவகுத்தது. மேலும் சர்வதேச அரங்கில் தமது பிரச்சினையைப் பரப்புவதற்கான ஒரு சிறந்த சந்தர்ப்பத்தை இந்த 1983 கறுப்பு ஜுலையானது தமிழ்த் தலைவர்களுக்கு வழங்கியது.

## 3. அரசியல் தீர்வை நோக்கிய முயற்சிகள்

### 3.1 திம்பு பேச்சுவார்த்தை

1983 ஜுலை சம்பவங்களின் பின்னர் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல தமிழ் இளைஞர் குழுக்கள் கெரில்லா அமைப்புகளாகத் தோற்றம் பெற்றன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புகூட இச்சம்பவங்களிலிருந்தே தோற்றம் பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOTE), ஈழ மாணவர் புரட்சிகர அமைப்பு (EROS), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) மற்றும் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) ஆகியன இவ்வாறு தோற்றம்பெற்ற ஐந்து பிரதான கெரில்லா குழுக்களாகும்.

1983 கறுப்பு ஜுலையின் பின்னர் பெருந்தொகையான தமிழர்கள் இந்தியாவுக்குத் தப்பி ஓடினர். இவர்கள் தமிழ் நாட்டில் அகதிகளாக வாழ்ந்தனர். ஏனைய காரணிகள் மத்தியில், அகதிகள் பற்றிய சூழ்நிலையானது இலங்கையிலுள்ள தமிழர் பிரச்சினையில் தலையீடு செய்யுமாறு தமிழ் நாட்டு அரசாங்கம் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கு வழிவகுத்தது. பூட்டானின் தலைநகரான திம்புவில் 1985 ஜுலையில் இந்தியாவின் முன்னெடுப்பால் இடம்பெற்ற திம்புப் பேச்சுவார்த்தையானது இந்தியத் தலையீட்டின் ஓர் விளைவாக அமைந்திருந்தது. ஈழ தேசிய விடுதலை முன்னணியின் (ENLF) ஓர் அங்கமாக LTTEயும் இப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டது. ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் உள்ளடக்கப்பட்டிருந்த அமைப்புக்களாக EPRLF, TELO, EROS ஆகியன அங்கம் வகித்தன. ENLF வெளியிலிருந்த PLOTE மற்றும் TULF ஆகியனகூட இப்பேச்சுவார்த்தையில் பங்கேற்றதுடன், ENLF ஆல் முன்வைக்கப் பட்ட அரசியல் உபாயத்துடன் இவை பெருமளவு ஒத்திசைவுடன் இருந்தன. பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ஆயுதக் குழுக்கள் மத்தியில் கருத்தொருமைப்பாடு காணப்பட்டது. இலங்கை அரசின் கட்டமைப்பினுள் தமிழ் தேசியவாதிகளால் ஏற்றுக்கொள்ளத்தக்க, சாத்தியப்படத்தக்க ஏதாவதோர் அரசியல் தீர்வுக்குத் தேவைப் படும் ஓர் அடிப்படையான நான்கு கோட்பாடுகளை விடுதலைப் புலிகள் முன்வைத்தனர். அந்த நான்கு கோட்பாடுகளாவன:

1. தமிழர்களை இலங்கையின் தெளிவான வேறுபாடுடைய தேசிய இனமாக அங்கீகரித்தல்.
2. தமிழர் தாயகத்தையும் அதன் ஆட்சியுரிமை இறைமையையும் அங்கீகரித்தல்.
3. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை
4. தமிழ் மக்களின் குடியுரிமை மற்றும் ஏனைய உரிமைகளை அரசு அங்கீகரித்தல் (மொசிஜும் ஏனையோரும், 2003)

அரசைப் பிளவுபடுத்துவதுடன் இறைமையை மீறுவதற்கு இது வழிவகுக்கும் எனக்கூறி, இக்கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வதனை இலங்கைத் தூதுக்குழு நிராகரித்தது. திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழ் மக்களின் முனைப்பான விருப்பார்வங்களை நிறைவு செய்வதற்கான அர்த்தமுள்ள அல்லது நடை முறைச் சாத்தியமான முன்மொழிவுகளை முன்வைப்பதை ஆயுதக் குழுக்கள் வேண்டுமென்றே தவிர்த்தன. அவர்களது நிலைப்பாடுகள் மிகக் கடினமான சித்தாந்த ரீதியானவையாகவே அமைந்திருந்தன.

### 3.1 இந்திய - இலங்கை உடன்படிக்கை

திம்புப் பேச்சுவார்த்தையில் ஓர் உடன்பாட்டுக்கு வருவதில் ஏற்பட்ட தோல்வியானது நாட்டில் மிக அதிகமான வன்முறைச் செயற்பாடுகளுக்கான சூழ் நிலையைத் தோற்றுவிப்பதற்குப் பங்களிப்பினை வழங்கியது. 1987இல் நிகழ்ந்த வட மராட்சி நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்வதற்கு இலங்கை அரசாங்கப் படைகள் முயற்சித்தன. இந்த இராணுவ நடவடிக்கையானது பெருமளவுக்கு வெற்றியளிக்கத் தக்கதாக அமைந்திருந்தது. இச்சந்தர்ப்பத்தில் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு இலங்கை அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்துவதன் மூலமாக இந்திய அரசாங்கமானது இலங்கையில் ஓர் அரசியல் தீர்வைத் திணித்தது. இலங்கை நிலைமையில் இந்தியாவின் தொடர்ச்சியான ஈடுபாட்டின் இறுதி விளைவாக இலங்கை மற்றும் இந்தியத் தலைவர்களால் கைச்சாத்திடப்பட்ட 1987ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை உடன்படிக்கை அமைந்திருந்தது. எனினும் இரு நாடுகளும் கைச்சாத்திட்ட 1987 ஜுலை இந்திய - இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொள்வதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தயக்கம் காட்டினார். சில பத்திரிகையாளர்களின் கூற்றுப்படி, இவ்வுடன்படிக்கையை ஏற்றுக் கொள்வதற்காக பிரபாகரன் இந்தியாவிடமிருந்து நிதியுதவியையும் இடைக்கால நிர்வாகத்தில் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்துக்கான ஓர் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொண்டதாக அறிய முடிகின்றது (ராமனும் ஏனையோரும், 2006). இவ் உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளத் தவறியமையின் பின்னர் இந்திய அமைதி காக்கும் படை (IPKF) இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தமது கடினமான போராட்டத்தின் பலாபலன்களைப் பறித்தெடுப்பதற்கான ஓர் கருவியாக இந்திய-இலங்கை உடன்படிக்கையை LTTE கருதியது. தமிழீழத்தை இலக்காகக்கொண்ட தமது குறிக்கோளை அடைவதற்கான பிரபாகரனின் தீவிர உணர்ச்சிவசப்பட்ட அர்ப்பணிப்பைக் குறைத்து மதிப்பிட்டமையானது இந்தியாவின் ஒரு தப்புக்கணக்காக அமைந்திருந்தது என இந்திய முன்னாள் உயர் ஸ்தானிகரான ஜே.என். டிக்சிற் குறிப்பிட்டிருந்தார். இந்திய -இலங்கை உடன்படிக்கையின் ஒரு விளைபயனாக 1978இன் அரசியல் யாப்பின் 13வது திருத்தச் சட்டமாக உருவாக்கப் பட்டுள்ள மாகாண சபை முறையை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. 1988 டிசம்பரில் இலங்கை யில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியிடம் கூட இவ்வுடன்படிக்கை யைப் பற்றிய ஐயப்பாடு காணப்பட்டது.

### 3.3 பிரேமதாச – விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை

விடுதலைப் புலிகளுடனான ஜனாதிபதி திரு. ரணசிங்க பிரேமதாசவின் பேச்சுவார்த்தைகள் 1989 மே தொடக்கம் 1990 ஜுன் வரை தொடர்ந்து நடைபெற்றன. இதுவரை காலமும் கடுமையான நேரெதிர் சக்திகளாக இருந்த இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்தனர். இலங்கையிலிருந்து இந்திய அமைதி காக்கும் படையை வெளியேற்றுதல் எனும் அவர்களது பொது நலன்கள் ஓரிடத்தில் சங்கமிக்கும் நிலையொன்றை அவர்கள் உணர்ந்துகொண்டமையே அதற்கான காரணமாகும். பிரேமதாச அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் காணப்பட்ட நட்பார்ந்த உறவுகள் 1990 மார்ச் 30இல் இந்திய அமைதிகாக்கும் படை (IPKF) நாட்டைவிட்டு வெளியேறும் வரை நிலைத்திருந்தது. இந்திய அமைதிகாக்கும் படையின் வெளியேற்றத்தால் ஏற்பட்ட வெற்றிடம் விடுதலைப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளால் நிரப்பப்பட்டதுடன், அவ்வாறே இலங்கையின் வடக்கு-கிழக்கை அவர்கள் தமது பூரண கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தனர். இந்திய அமைதிகாக்கும் படை வெளியேறிய பின்னர் பிரபாகரன் இரு கோரிக்கைகளை முன்வைத்தார். வடக்கு–கிழக்கு மாகாண சபையைக் கலைத்தல், மற்றும் இலங்கை அரசியல் யாப்பின் 6வது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்தல் என்பனவே LTTEயின் அவ்விரு கோரிக்கைகளுமாகும். அரசாங் கம் இக்கோரிக்கைகள் இரண்டையுமே நிராகரித்ததுடன், அதன் பின்விளைவாக "2ஆம் கட்ட ஈழப் போர்" ஆரம்பித்தது.

### 3.4 குமாரதுங்க – விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை

இலங்கையில் இன முரண்பாட்டுக்கு அமைதியான முறையில் தீர்வொன்றினைக் காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் அடுத்தகட்டமாக 1994க்குப் பின்னரான காலப்பகுதி அமைந்திருந்தது. விடுதலைப் புலிகளுக்கும், ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் 1994 நவம்பரில் இருந்து 1995 ஆகஸ்ட் வரை தொடர்ந்தன. 1994இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜனாதிபதி திருமதி குமாரதுங்க சார்பினர் பெற்ற தேர்தல் வெற்றியின் பின்னர்,இந்தத் தீவில் இனத்துவ நல்லிணக்கத்தினை மீளக் கட்டியெழுப்புவேன் என அவர் வாக்குறுதி அளித்திருந்தார். மேலும் "முன்நிபந்தனை எதுவுமின்றி" விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை ஆரமபிப்பதற்கான அவரது தயார் நிலையைக் கூட வெளிப்படுத்தியிருந்தார். இத்திசை நோக்கிய முதலாவது காலடி யெடுப்பாக, சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நல்லெண்ணத்தினை வெளிப்படுத்தும் வகையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான குறிப்பிட்ட பொருட்களுக்கான வர்த்தகத் தடையையும் அரசாங்கம் நீக்கியது. இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்ப தில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிலவிய அடிப்படை வேறுபாடானது, இக்காலகட்டத்தில் அவ்விருதரப்புக்குமிடையே பரிமாறப்பட்ட கடிதங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

இயல்பு நிலையை மீண்டும் வழமைக்குக் கொண்டுவருவதுடன், அமைதியான சூழலொன்றை உருவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முதலில் மேற்கொள்ள வேண்டுமென் பதனைத் தாங்கள் விரும்புவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். மேலும், இயல்புநிலை வழமைக்குத் திரும் பிய பின்னரே ஒரு சமாதானத் தீர்வினைக் காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியுமென்பதில் அவர்கள் தீவிரமாக இருந்தனர். மறுபுறத்தில், மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு ஏதுவாக சமகாலப் பேச்சுவார்த்தைகள் இருக்க வேண்டும் என்பதுடன், நீண்டகாலத்தில் ஓர் அரசியல் தீர்வினைக் காண்பதாகவும் அது இருக்க வேண்டுமென அரசாங்கம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தது. ஆனாலும் பேச்சுவார்த்தைகள் முட்டுக்கட்டை நிலையை அடைந்தன. இறுதியாக, அரசாங்கம் நம்பிக்கையற்ற விதத்தில் செயற்படுவதாக விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியதுடன், 1995 ஏப்பிரலில் "3ஆம் கட்ட ஈழப்போரை" ஆரம்பித்தனர். புரொன்ட்லைன் (Frontline) சஞ்சிகையின் ஆசிரியரான என். ராமுக்கு சந்திரிகா குமாரதுங்க அவர்கள் விடுதலைப் புலிகளின் நடத்தைகளைப் பற்றிப் பின்வருமாறு விளக்கினார்:

> *"புலிகள் எப்பொழுதும் எதனைச் செய்தனரோ அதையே அவர்கள் செய்வர்... அவர்கள் தங்களை இராணுவரீதியாகப் பலப்படுத்தும்வரை சலிப்பூட்டும் வகையில் காலம் கடத்துவதுடன், பின்னர் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பிக்கின்றனர்."* (ராமன் மற்றும் ஏனையோரிடமிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது, 2006).

அரசாங்கத்துக்கும், புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை முறிவடைந்த பின்னர் "3ஆம் கட்ட ஈழப்போர்" ஆரம்பமானதுடன், இரு தரப்பினரும் மனோ திடத்துடன் சண்டையிட்டனர். விடுதலைப் புலிகளைத் திரும்பவும் பேச்சு வார்த்தை மேசைக்குக் கொண்டுவருவதற்கான ஒரேவழி அவர்களைப் பலவீனப்படுத்துவதாகும் என ஜனாதிபதி விவாதித்தார். இவ்வுபாயமானது "சமாதானத்துக்கான யுத்தம்" என விபரிக்கப்பட்டது. யாழ். குடாநாட்டின் முக்கிய பகுதிகளைப் பாதுகாப்புப் படைகள் கைப்பற்றுவதற்கு இவ்வுபாயம் வழிவகுத்தது. ஆயினும் யுத்தத்தில் அரசாங்கம்கூட சில பின்னடைவுகளைக் கண்டது. இத்தருணத்தில் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதன் பொருட்டு ஒரு மூன்றாந்தரப்பின் ஆதரவினைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தினை ஜனாதிபதி உணர்ந்தார். இப்புரிதலானது இலங்கை யின் சமாதானச் செயன் முறைக்கான ஏற்பாட்டாளர்களாக நோர்வேயை வரவழைப்பதற்கும் வழி சமைத்தது. புலிகள் கூட நல்லெண்ணங்களையும் விட்டுக் கொடுப்புகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. 2001 டிசம்பரில் பிரகடனப்படுத்தப்பட்ட புலிகளின் ஒருதலைப்பட் சமான யுத்த நிறுத்தத்தினை இதன் முக்கியமான வளர்ச்சிகளின் பின்னணியில் நோக்கவேண்டியுள்ளது. மிக முக்கியமான காரணியாக, சர்வதேசரீதியாக வளர்ந்து வரும், 'புலிகளைத் தனிமைப் படுத்தும் செயற்பாடு' அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா ஆகியன புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டுத் தடைசெய்தன. அவுஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள், மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் கூட புலிகளை தமது மிகக் கடுமையான கண்காணிப்பின் கீழ் வைத்திருந்தன. அப்பாவிக் குடிமக்களைக் கொலை செய்தல், தலதாமாளிகை மீதான தாக்குதல், நீலன் திருச்செல்வம் போன்ற முக்கியமான தமிழ் புத்திஜீவிகளைக் கொலை செய்தமை, கட்டுநாயக்க சர்வதேச விமானத் தளம் மீதான காட்டுமிராண்டித் தனமான தாக்குதல், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல் ஆகியன உலகின் பல பாகங்களிலுமுள்ள கற்றறிந்தோர் வகுப்பினரில் பெரும்பாலானோர் மத்தியில் வெறுப் புணர்ச்சியை உருவாக்கியது (ராமனும் ஏனையோரும், 2006).

மேலே குறிப்பிடப்பட்ட இப்பின்னணியில் பிரபாகரன் தனது இயக்கத்தை ஒரு தேசிய விடுதலை அமைப்பாக வெளிக்காட்ட முயற்சித்தார். நெருக்கடியைத் தணிப்பதற்கும் சமாதானச் செயல்முறையை ஆரம்பிப்பதற்குமான நோர்வேயின் முன்னெடுப் புக்கு புலிகளால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பினை அவர் முன்நிலைப்படுத்தினார். புலிகள் பயங்கரவாதிகள் அல்லர் எனச் சர்வதேச சமூகத்தை நம்பச் செய்வதற்கு பிரபாகரன் விரும்பினார்.

"இனவாத மற்றும் மதவெறியார்வத்தால் உந்தப்பட்ட வன்முறைச் செயற்பாடுகளைக் கண்மூடித்தனமாகப் புரியும்பொருட்டு நாம் உளரீதியாக மிகக் கடுமையான மனநலக் கேட்டிற்கு உள்ளானவர்கள் அல்லர். உன்னத இலட்சியத்துக்கான காதல், அதாவது மானிட சுதந்திரத்துக்காக நாங்கள் யுத்தம் புரிந்து எமது உயிர்களைத் தியாகம் செய்து கொண்டிருக்கிறோம். நாங்கள் சுதந்திரப் போராளிகள்" என அவர் கூறினார் (ராமனும் ஏனையோரும், 2006).

### 3.5. 2002ஆம் ஆண்டின் யுத்தநிறுத்த உடன்படிக்கை

மேலே குறிப்பிடப்பட்ட இச்சூழ்நிலைகளில் தான் சமாதான நிகழ்ச்சி நிரலுக்கான அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சி 2001ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு முகங்கொடுத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க புலிகளை இணைத்துக் கொண்டு ஓர் இடைக்கால நிர்வாகத்தினைத் தோற்றுவிப்பதாக வாக்குறுதியளித்தார். ஒரு குறுகிய காலத்துக்கு அதிகாரத்தில் நிலைத்திருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமானது, 2002 பெப்ரவரியில் புலிகளுடனான ஒரு யுத்த நிறுத்த உடன்படிக்கையை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டது. இவ் உடன்படிக்கைக்கான உதவியை நோர்வே வழங்கியது. ஓர் இடைக்கால நிர்வாகம் அமைக்கப் பட்டதும் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்வுக்கான சூழ்நிலைகள் உருவாக்கப்படும் என ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நம்பியது. புலிகள்மீதான தடை நீக்கப் பட்டது. இலங்கைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதியாக விடுதலைப் புலிகள் அங்கீகரிக்கப்பட்டனர். 2002இல் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையில் ஐந்து சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நிகழ்ந்தன. இருந்தபோதிலும், 2003 ஏப்பிரலில் ஐக்கிய அமெரிக்காவில் ஒழுங்கு செய்யப்பட்டு வாஷிங்டனில நடைபெற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடையாளிகள் மகாநாட்டுக்குத் தாம் அழைக்கப்படவில்லை என்ற சாக்குப் போக்கில் விடுதலைப் புலிகள் முதலில் பேச்சுவார்த்தையை நிறுத்தியதுடன், பின்னர் பூரணமாகக் கைவிட்டனர். இருந்த போதும், யுத்தநிறுத்த உடன் படிக்கை நடைமுறையில் இருந்தது. அதன் நிபந் தனைகளைப் பொருட்படுத்தாமல் கொலை களும் ஆட்கடத்தல்களும் தொடர்ந்தன. ஸ்கன்டிநேவிய சமாதான கண்காணிப் பாளர்களின் ஓர் அமைப்பான இலங்கை கண்காணிப்புக்குழு மற்றும் நோர்வே ஏற்பாட்டாளர்கள் ஆகிய இரு சாராரும் அதிகரித்துச்செல்லும் கொலைகளின் எண்ணிக்கையயிட்டு விடுதலைப் புலி களுடன் விவாதித்தனர். அது பயனற்ற தாகவே இருந்தது.

இலங்கையின் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் கடமைப் பொறுப்பானது இக்காலகட்டத்தில் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக அமைந்திருந் தது. இவ்விடயத்தில் இலங்கைக் கடற்படைக்கு ஒரு விசேட கடமை இருந் தது. எனினும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல் நோக்கம் கொண்ட இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதி லிருந்து யுத்த நிறுத்த உடன்படிக்கையால் இக்கடற்படை தடுக்கப்பட்டிருந்தது. மேலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒரு தனியரசை உருவாக்குவதற் காக சமாதானச் செயல்முறையின் குறிக் கோள்கள் அமைந்துள்ளதைப் போல "கடற்புலிகளுக்காகத் தனிப் பகுதிகளை அமைத்துக்கொள்ள இலங்கை கண்காணிப் புக்குழு முயற்சி செய்தது. அதேநேரத்தில் விடுதலைப் புலிகளின் நிரந்தரச் சேனையின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதாக அறிக்கைகள் தெரிவித்தன. யுத்த நிறுத்தத்துக்கு முன்னர் 9,390 ஆக இருந்த புலிகளின் ஆயுதந்தரித்த நிரந்தரச் சேனை யின் மொத்த எண்ணிக்கையானது 19,750 ஆக அதிகரித்திருந்தது. (ராமனும் ஏனை யோரும், 2006).

## 4. சமாதானச் செயன்முறையின் தோல்வி

### 4.1 அரசாங்க மாற்றம்

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட விக்கிரமசிங்க அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதி குமார துங்க திருப்தியடையவில்லை. இனப் பிரச்சினைக்கு ஓர் அமைதியான தீர்வைக் காண்பதில் விடுதலைப் புலிகளுக்குக் கரிசனை இருக்கவில்லை எனக் குற்றஞ் சாட்டப்பட்டது. நோர்வே தரகராகச் செயற் பட்ட சமாதான உடன்படிக்கையின்கீழ் தமது இராணுவ ஆற்றலை அதிகரிப்பதற்கு விடுதலைப் புலிகள் முயற்சித்தனர். இச்சூழ் நிலையில், மக்கள் விடுதலை முன்னணி யுடனான (JVP) தேர்தல் உடன்படிக்கை யொன்றை மேற்கொண்டதன் பின், 2004 பெப்ரவரி 2ஆம் திகதியில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டி ஏற்பட்டது.

2004ஆம் ஆண்டுத் தேர்தலில் பாராளு மன்றத்தின் 225 ஆசனங்களின் 82ஐ மாத்திரம் ஐ.தே.கட்சி பெறக்கூடியதாக இருந்தபோது, விக்கிரமசிங்க அவர்களால் தலைமைதாங்கப்பட்ட ஐ.தே.முன்னணி அரசாங்கமானது ஆட்சி அதிகாரத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழுள்ள ஒரு கூட்டாளியான குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் இத்தேர்தலில் 105 ஆசனங்களை வென்றிருந்தன. இது ஆட்சி அமைப்பதற்குத் தேவையான சாதாரண பெரும்பான்மையைவிட 8 ஆசனங்கள் குறைவானதாகும். விடுதலைப் புலிகளின் ஆதரவுடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப் பானது 22 ஆசனங்களை வென்றது. இவ் வாறாக இது மூன்றாவது பெரிய கட்சியாக இருந்தது. முதன் முதலாகத் தேர்தலில் போட்டியிட்ட 'ஜாதிக ஹெல உறுமய' வானது, 9 ஆசனங்களை வென்றது. 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுற்ற பின்னர், நோர்வேயின் ஆதரவுடன் விடுதலைப் புலிகளுடனான யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்வதற்கு ஜனாதிபதி குமாரதுங்க முயற்சித்தார். ஆயினும் இம்முயற்சிகள் தோல்வியடைந் தன. உண்மையில் ஜனாதிபதி குமாரதுங்க அவர்களால் தலைமை தாங்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங் கமானது விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தீவிரம்குறைந்த இராணுவ நடவடிக்கை களைத் தொடர்வதற்கு நிர்ப்பந்திக்கப் பட்டது. விடுதலைப் புலிகள் பிடிவாத முடையவர்களாகவும் மிக உறுதியான நிலைப்பாடுடையவர்களாகவும் இருந்தமை யால் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக் கான ஒரு சூழலை உருவாக்குவதற்கு இந்த இராணுவ நடவடிக்கைகள் அவசிய மானவையென அரசாங்கம் வாதிட்டது.

### 4.2 புதிய தோரணையின் கீழ் பேச்சுவார்த்தை

2005 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் வேட்பாளரும், குமாரதுங்கவுக்குப் பின்னர் அக்கட்சியின் புதிய தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், ஐக்கிய இலங்கைக்குள் உட்பட்டவகையில் ஓர் அரசியல் தீர்வுத்திட்டத்தின் ஊடாக இன முரண்பாட்டுக்கான ஒரு நிரந்தரத் தீர்வை அடைவதற்கு முயல்வதாக வாக்குறுதி அளித்தார். கணிசமான வாக்குகள் வித்தியாசத்தில் அவர் இத்தேர்தலில் வெற்றி பெற்றார். சிலரின் கூற்றுப்படி, இத்தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு விடு தலைப் புலிகளால் விதிக்கப்பட்ட பகிஷ் கரிப்புக்கிணங்க வட பகுதித் தமிழர்கள் இதைப் பகிஷ்கரித்தமை நன்றி கூறப்பட வேண்டிய ஒன்றாகும் (http://www.flonnet. com.) நவம்பர் 19ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்தவுடன், முரண் பாடு நிறைந்துள்ள இத்தீவான தேசத்தைப் பிரிக்காது கௌரவமான ஒரு சமாதானத் துக்காகப் பெரும் முயற்சி செய்வதோடு, ஒரு புதிய இலங்கையை வெற்றிகரமாக உருவாக்குவதற்காகக் கடும் முனைப்புடன் செயலாற்றுவதற்கும் வாக்குறுதி அளித்தி ருந்தார். தனது உரையில் ஜனாதிபதி பின்வருமாறு கூறியிருந்தார்:

"யுத்தம் எனது முறைமையல்ல. இத்தேசியப் பிரச்சினைக்கான தீர்வுக்காக, பங்கீடுபாடு கொண்டுள்ள அனைவருடனும் பேச்சுவார்த்தைகளின் ஒரு புதிய சுற்றை நான் முன்னெடுப்பேன்". விடுதலைப் புலிகளின் தலைவரான பிரபாகரனுடனான நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற் கான தனது விருப்பத்தை அவர் மேலும் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறினார். அதே நேரத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகள் மீது விடுதலைப் புலிகள் வன்முறைத் தாக்குதல்களை ஆரம்பித்தனர். இந்த யுத்தமானது "மக்கள் யுத்தம்" எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டு வந்ததுடன், சரிநுட்பமாக அன்றி ஒரு மக்கள் படையாகப் பெயரிட்டு அழைக்கப்பட்ட இதற்கு விடுதலைப் புலிகளின் இராணுவ அமைப்பான குழுவொன்று பொறுப்பாக இருந்தது (Frontline, 2006).

சர்வதேச வற்புறுத்தலின் பின்னர், இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலி களும் 2005 ஜனவரி 25இல் ஜெனீவாவில் நேரடிப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு ஒத்துக் கொண்டனர். அதற்கிடையில், நாட்டில் காணப்படும் இன முரண்பாட்டுக்கு ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்காக உண்மையானதோர் உள்ளார்ந்த ஈடுபாட் டை விடுதலைப் புலிகள் வெளிப்படுத்த வில்லை. தனியரசு அல்லது ஈழம் எனும் குறிக்கோளைத் தொடர்ந்து கொண்டிருப் பதில் ஒருமுக சிந்தனையுடையவர்களாக இருப்பவர்களாக அவர்கள் காணப்பட்ட னர். 2002ஆம் ஆண்டின் யுத்த நிறுத்த உடன்படிக்கையின்கீழ் தமது இராணுவ ஆற்றல்களை அதிகரிப்பதற்கு அவர்கள் மிக வெளிப்படையாக முயற்சித்து வந்தனர். மஹிந்த ராஜபக்ஷ அரசாங்க மானது விடுதலைப் புலிகளுடன் சமாதானம் பற்றிய பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு முயற் சித்தபோதும், அது இராணுவத்தை அலட்சி யப்படுத்தவோ அல்லது அரசாங்கத்தின் ஆற்றல்களைப் பலவீனப்படுத்தவோ இல்லை. இராணுவத் திலுள்ள உயர் பதவி களில் நன்கு அனுபவமும் அர்ப்பணிப்பு உணர்வும் கொண்ட இராணுவ அதிகாரி களை நியமித்தமை யானது இவ்வர்ப் பணிப்பின் ஒரு பிரதி பலிப்பாக அமைந் திருந்தது. விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பல இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்ற இராணுவத்தின் ஓர் முன்னாள் கேர்ணலான கோதாபய ராஜபக்ஷ அவர் கள் பாதுகாப்புச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். அதேவேளை அர்ப் பணிப்பு மிக்க மற்றுமோர் இராணுவ அதிகாரியான லெப். ஜெனரல் சரத் பொன் சேகா அவர்கள் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறாக, விடுதலைப் புலிகளின் உள் நோக்கத்தை அரசாங் கத்தினால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்ததுடன், விடுதலைப் புலிகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக இராணுவ ஆற்றல்களை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

2006 ஏப்பிரலில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஒரு சிறந்த சந்தர்ப்பமும் நம்பிக்கையூட்டக் கூடிய நியாயப் படுத்தலும் அரசாங்கத்திற்குக் கிடைத்தது. கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவில் ஆற்றின் மதகை மூடுவதற்கான நியாயமான காரண அடிப்படையற்ற தீர்மானமொன்றை விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருந்தனர். கிழக்கு மாகாணத்தில் நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த அண்ணளவாக 3,000 குடும்பங்களை இச்செயற் பாடானது மோசமாகப் பாதித்தது. ஆரம்பத்தில் இச்சிக்கலுக்கு அமைதி முறையிலான தீர்வைக் காண்பதற்கு அரசாங்கம் முயற்சித்தது. ஆனால் விடுதலைப் புலிகள் பிடிவாதமாக இருந்தனர். இச்சூழ்நிலை யானது இராணுவம் விடுதலைப் புலி களுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய காரணமாக அமைந்திருந்தது. விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து அப்பாவிக குடிமக்களை விடுதலை செய்வதற்கான இந்நடவடிக்கையானது "ஒரு மனிதாபிமான இராணுவ நடவடிக்கை" எனப் பெயரிடப் பட்டிருந்தது. எனினும் அரசாங்கமானது தாக்குதல் நடவடிக்கைகளை மாவில் ஆற்றுப் பிரதேசத்தின் வரையறைக்குள் மாத்திரம் உட்பட்டதாக வைத்திருக்க வில்லை. இராணுவ நடவடிக்கைகள் மிக விரைவாக விரிவுபடுத்தப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளும் விரைவாகவே விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டன. கிழக்கு மாகாணம் விடுவிக்கப் பட்டதும் இந்த "மனிதாபிமான இராணுவ நடவடிக்கை" நாட்டின் வட மாகாணத்துக்கும் திசைதிருப் பப்பட்டது. 2009 மேயில் விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் முடிவுக்கு வந்தன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றியானது இலங்கைக்குக் கிடைத்த இராணுவரீதியான பெரும் சாதனையாக அமைந்துள்ளது. உலகின் மிகவும் ஈவிரக்கமற்ற பயங்கரவாத இயக்கத்தினைத் தோற்கடிப்பதில் படைகள் தமது சொந்த சுதேச உபாயங்களைப் பின் பற்றியிருந்தன. இந்த இராணுவ வெற்றியின் முக்கியத்துவத்தை ஒரு சர்வதேச கண்ணோட்டத்திலிருந்து ஆராய முடியும். அது தோற்கடிக்கப்பட்டபோது இவ் விடுதலைப் புலிகள்அமைப்பானது உலகில் உள்ள மிகவும் பலம்வாய்ந்த கெரில்லா இயக்கங்களில் ஒன்றாகக் காணப்பட்டது.

## 5. பயங்கரவாதத்தைத் தோற்கடித்-ததில் உலகிற்கான ஒரு முன்மாதிரி எடுத்துக்காட்டாக இலங்கை

### 5.1 பயங்கரவாத இயக்கமொன்றைத் தோற்கடித்தல்

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட நேரத்தில், நாட்டுக்கு ஓர் உச்ச அளவான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அழிவார்ந்த பயங்கரவாதக் குழுவாக அது உருவாகியிருந்தது. 2009 மே 19இல் பாராளு மன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரினை ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்தபோது இச்சூழ்நிலை யானது பின்வருமாறு அவரால் ஆராயப் பட்டது. ஜனாதிபதியின் கூற்றுப்படி,

"அவர்கள் கப்பல்கள், விமானங்கள், நீர்மூழ்கிகள், மற்றும் உலகில் உள்ள மிகவும் மேம்பட்ட போர்க் கருவிகள் என்பவற்றைப் பெற்றிருந்தனர். சிவில் நிர்வாகம், சர்வதேச மோசடிகளும் மோசடித் திட்டங்களும், வங்கிகள், இணையத்தளங்கள், வானொலி நிலையங் கள் என்பவற்றை அவர்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுடன், நாணயத்தைக்கூட வெளியிட்டிருந்தனர்" (Ceylon Daily News, 2009 மே 20).

விடுதலைப் புலிகளின் நிலைமையை "வாஷிங்டன் ரைம்ஸ்" செய்திப் பத்திரிகை யானது சரியான விதத்தில் ஆராய்ந்திருந்தது. இச்செய்தித்தாளின் ஆசிரியத் தலையங்கத்தின் கூற்றுப்படி, "மிகவும் அழிவார்ந்த பயங்கரவாதக் குழுக்களில் ஒன்றாக விடுதலைப் புலிகள் அமைப்பு கருதப்படுகின்றது. இது நவீனகால தற்கொலைக் குண்டுதாரிகள் பற்றிய எண்ணக் கருவைக் கண்டுபிடித்துள்ளதுடன், பதவியிலிருந்த இரு அரசுத் தலைவர் களின் கொலைகளை மேற்கொண்டும் இருந்தது. மேலும் பெண் தற்கொலைக் குண்டுதாரிகளைப் பயன்படுத்துவதில் தமிழிழ விடுதலைப் புலிகள் முன்னோடி களாக இருந்துள்ளனர். அத்துடன் சொந்தத் தயாரிப்பான சிறிய நீர்மூழ்கிகள், மிகவும் பாரம்குறைந்த விமானங்கள் என்பவற்றை உருவாக்குவதிலும் முன்னோடிகளாக இருந்துள்ளனர். தவிர, தரையில் நடை பெறும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மீள் விநியோகம் செய்வதற்கான ஆழ் கடலில் முன்கூட்டியே 'பெரும் களஞ்சி யப்படுத்தக் கூடிய கப்பல்களையும்' கொண்டிருந்தனர்" (வாஷிங்டன் ரைம்ஸ், 2009 ஜுன் 29).

இலங்கையின் இந்த அனுபவத்திற்கு முன்னர் உலகில் பரவலாகக் காணப்பட்ட கருத்து எதுவெனில், இராணுவ நடவடிக்கைமூலம் பயங்கரவாத இயக்கமொன்றைத் தோற்கடிக்க முடியாது என்பதாகும். பயங்கரவாத இயக்கங்களின் 'அடிப்படைக் காரணிகள்' கையாளப்படவேண்டுமென்பதுடன், அவற்றுக்கான தீர்வும் காணப்படல் வேண்டுமென்பதே இக்கருத்தை ஆதரித்துப் பேசுவோரின் கருத்தாக இருந்தது. 2ஆம் உலக யுத்தத்தின் பின் உலகில் திடீரெனத் தோற்றம்பெற்ற இனத்துவ–அரசியல் முரண்பாடுகளை மேலோட்டமாக ஆராய்வதன் மூலம், முரண்பாட்டுத் தீர்வுக் கோட்பாடுகள் இக்கருத்துக்கு ஆதரவு அளித்து வந்துள்ளன.

ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களில் உள்ள இனத்துவ- அரசியல் முரண்பாடுகளில் பெரும்பாலானவை நீண்ட காலமாக நிலைத்திருக்கின்றன என்பது சரியானதே. இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்தில் இனத்துவ- மத முரண்பாடுகள் காரணமாக (இந்தியா, பாகிஸ்தான் என) இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. மாறி வரும் இந்திய அரசாங்கங்கள் காஷ்மீர் மற்றும் நாகலாந்து பிரச்சினைகளுக்கு அமைதியான முறையில் தீர்வுகளைக் காண் பதற்கு முயற்சித்து வந்துள்ளன. ஆனால், இதுவரையில் அவை தோல்வி கண்டுள்ளன. இக்கெரில்லா இயக்கங்களுடன் சுதந்திரத்துக்குப் பின்னரான இந்திய அரசாங்கங்கள் யுத்தம் புரிந்து வந்துள்ளன. ஆனால் இவ்வமைப்புக்களை அவற்றால் தோற்கடிக்க முடியவில்லை. பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியில் தோற்றம் பெற்ற வங்காளி இயக்கமானது பாகிஸ்தானின் பிரிவினைக்கு வழிவகுத்தது. இப்போராட்டத்தின் இறுதி விளைவாக 1971 இல் இறைமை மிக்க ஒரு நாடான வங்காளதேசம் தோற்றம் பெற்றமையைக் குறிப்பிடலாம். தென்னாசியா தவிர, இனத்துவ-அரசியல் முரண்பாடுகளின் விளைவாகத் தோற்றம் பெற்ற பெரும் எண்ணிக்கையிலான பயங்கரவாதக் குழுக்கள் ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இடங்களில் காணப் படுகின்றன. இந்நாடுகளில் உள்ள அரசாங் கங்களில் பெரும்பாலானவற்றால் இப்பிரச் சினைகளுக்குத் தீர்வுகாண முடியாமல் உள்ளது, அல்லது அவை அவற்றை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாமல் உள்ளன.

மேலே குறிப்பிடப்பட்ட அனுபவங்களுக்கு இலங்கைகூட விதிவிலக்கானதாக அமைந் திருக்கவில்லை. 1985இலிருந்து இப் பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற் காக இலங்கையில் இருந்த சுதந்திரத் துக்குப் பின்னரான அரசாங்கங்கள் பல முயற்சித்து வந்துள்ளன. மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்கீழ் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனமானது இந்த இன முரண்பாட்டை முன்னிலைப்படுத்தியதுடன் ஐக்கிய இலங்கைக் கட்டமைப்பினுள் தீர்வொன்றைக் காண்பதற்கு வாக்குறுதி அளித்திருந்தது. தேர்தல் வெற்றியின் பின்னர், 2002ஆம் ஆண்டின் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு உட்பட்டு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்ப தற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ முயற்சித்தார். இக்கலந்துரையாடல்கள் சிறந்த பலாபலன்களைக் கொண்டிருக்கவில்லை. 2002ஆம் ஆண்டு நோர்வேயால் மத்தியஸ்தம் வகிக்கப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் கீழ் விடுதலைப் புலிகள் தமது இராணுவ பலத்தை அதிகரிக்க முயற்சித்தனர். புதிய ஜனாதிபதி ஆட்சி அதிகாரத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டவேளை விடுதலைப் புலிகளின் இராணுவ பலமானது அரசுக்கு மிகக் கடுமையான அச்சுறுத்தலாக உருவாகியிருந்தது. 2009இல் அரசாங்கத் தால் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமையானது ஒரு முக்கியமான மெய்ந் நிகழ்வாக அமைந்துள்ளது.

## 5.2 ஏனைய நாடுகளுக்கான படிப்பினைகள்

இலங்கை போன்ற ஓர் சிறிய ஒரு நாட்டால் விடுதலைப் புலிகள் அமைப்பு போன்ற மிகவும் சக்திவாய்ந்த அமைப்புப் தோற்கடிக்கப்பட்டமையை உலகிற்கான ஒரு சாத்தியப்படத்தக்க முன்மாதிரியான எடுத்துக்காட்டாக ஒருவர் வாதிட முடியும். சர்வதேச பயங்கரவாத விடயத்தில் நிபுணர்களாக உள்ள சிலரின் கூற்றுப்படி, தமிழீழ விடுதலைப் புலிகள் போதைப் பொருள் கடத்தல் செயல்முறை ஊடாகத் தமது இராணுவ ஆற்றல்களைப் பெற்றிருந்தனர். "மியன்மார் மற்றும் இந்தியா ஆகியவற்றிலுள்ள சட்டத்துக்கு மாறான மரபுரீதியான வியாபார முயற்சி களிலிருந்து அனுப்புச் சரக்கு வழியில் தமிழீழ விடுதலைப் புலிகள் போதைப் பொருட்களையும் ஆயுதங்களையும் பெற்றுள்ளனர். அனுப்பப்பட்ட போதைப் பொருட்களை தமிழீழ விடுதலைப் புலிகள் விற்பனை செய்வதுடன் ஆயுதங்களுக்கான பணக் கொடுப்பனவுகளை இதன்மூலம் மேற்கொள்ளுகின்றனர். மேலும் தமது படைக்கலத் தொகுதிகளை விருத்தி செய்வதற்கான ஒரு முறையாக இந்நிகழ்வுச் சுழற்சியை அவர்கள் திரும்பத் திரும்பச் செய்கின்றனர்" (மார்ட்டின்-2003).

முன்னைய மற்றும் புதிய வடிவங்களாக பயங்கரவாதத்தை வகைப்படுத்துவதில் விடுதலைப் புலிகள் "முன்னைய பயங்கரவாத" குழுவினுள் வரையறுக் கப்பட்டுள்ளனர் (ஸ்பென்ஸர்-2006). "முன்னைய பயங்கரவாத" அமைப்புக்களின் சிறப்பியல்புகளில் பெரும்பாலான வற்றை விடுதலைப் புலிகள் மரபுக்கூறு களாகப் பெற்றுள்ளனர். எதிரிக்கெதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தலானது இம் "முன்னைய பயங்கரவாதிகளின்" ஒரு முக்கியமான அம்சமாக அமைந்திருந்தது (ஸ்பென்சர், 2006). 1990இல் தமிழ்ப் புலிகள் குளோரீன் வாயுவைப் பாவித்து இலங்கை இராணுவ முகாமொன்றைத் தாக்கினர். இச்சூழமைவில், விடுதலைப் புலிகளுக் கெதிரான இலங்கை அரசாங்கத்தின் இராணுவ வெற்றியை உலகிற்கான சாத்தியப்படத்தக்க ஒரு முன்மாதிரி எடுத்துக்காட்டாக ஒருவர் வாதிட முடியும். முன்னர் கலந்துரையாடப்பட்டவாறு 1985இல் இருந்து 2006 வரை இப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்காக இலங்கை அரசாங்கங்கள் முயற்சித்தன.ஆனால் இப்பேச்சு வார்த்தைகள் எதுவுமே வெற்றி அளிக்க வில்லை. 2005இல் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தவுடனேயே விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்தது. எனினும் ராஜபக்ஷ அவர்களுக்கு முன்பிருந்தவர் களால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளை மீண்டும் திரும்பச் செய்யாமல் இருப்பதில் ராஜபக்ஷ நிர்வாகம் முன்மதியுள்ளதாக இருந்தது. விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியடைந தவுடனேயே விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்களை அரசாங்கம் மேற்கொண்டது.

கெரில்லா இயக்கமான விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தமையானது ஐக்கிய அமெரிக்காவுக்கும் மேற்கிலுள்ள ஏனைய நாடுகளுக்கும் ஒரு படிப்பினையாக அமைந்துள்ளதென 'வாஷிங்டன் ரைம்ஸ்' ஆசிரியர் தலையங்கத்தில் விபரிக்கப்பட்டுள்ளது (22 ஜுன் 2009).

இவ்வாசிரியர் தலையங்கமானது, 31 வருடங்களாகப் பல்வேறு தேசிய பாதுகாப்புப் பதவிகளில் ஏற்கனவே சேவையாற்றிய வரும் பயங்கரவாதத்துக்கு எதிர் நடவடிக் கைக்கான ஹிக்கின்ஸ் ஆய்வு நிலையத்தின் தலைவருமான பீற்றர் லீக்னர் அவர்களாலும் இலங்கை விவகாரங்களில் ஒரு நிபுணரான ரஜீக ஜயதிலக்க அவர்களாலும் எழுதப்பட்டதாகும். இலங்கையிலிருந்து ஐக்கிய அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினைகள் உள்ளதாக 'வாஷிங்டன் ரைம்ஸ்' அதன் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது. முதலாவதாக, பயங்கரவாதத்தை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க முடியாது எனும் பரவலாக காணப்படும் கருத்தை இல்லாமல் செய்வதுடன் உண்மை நிலையானது வெளிப்படுத்தப்பட வேண்டும். அதில் கூறப்பட்டவாறு, "பயங்கரவாதத்தை இராணுவரீதியாக நசுக்க முடியாது எனும் பரவலாகக் காணப்படும் கருத்தை இல்லாமற் செய்தலானது சில வேளைகளில் மிக முக்கியமான படிப்பினையாக அமைந்துள்ளது. தொழில் தேர்ச்சி, உபாயம், ஒழுக்கம், திசைமாறா அர்ப்பணிப்பு என்ப வற்றால் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியும் என்பதை இலங்கை இராணுவம் செய்து காட்டியுள்ளது." பயங்கரவாதக் குழுவொன்றைத் தோற்கடிப்பது சம்பந்த மாக உலகில் இரு தனிமுறைச் சிந்தனை கள் காணப்பட்டன. இராணுவத் தாக்குதல் செயல்முறை ஒன்றினூடாக ஒரு பயங்கரவாதக் குழுவைத் தோற்கடிக்க முடியாது என்பது ஒரு தனிமுறைச் சிந்தனையின் விவாதமாக அமைந்திருந்தது. ஓர் அரசியல் தீர்வை வழங்கும் செயல்முறை ஊடாக மாத்திரமே பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியுமென அவர்கள் விவாதித்தனர். இராணுவத் தாக்குதல் செயன்முறை ஒன்றின் ஊடாகப் பயங்கரவாதக் குழுவொன்றைத் தோற் கடிக்க முடியுமென மற்றைய தனிமுறைச் சிந்தனை வாதிட்டது. 1985இலிருந்து மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிக்கான தேர்தல் காலம் வரை நாட்டிலுள்ள பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பது சம்பந்தமாக இலங்கை அரசாங்கங்கள் அதிகளவில் அல்லது குறைந்தளவில் முன்னைய தனிமுறைச் சிந்தனையில் மன நாட்டமுடையனவாக இருந்தன. சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தவுடனேயே இராணுவத் தாக்குதல் செயல் முறையூடாக விடுதலைப் புலிகளைத் தோற் கடிப்பதில் மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகம் உறுதியுடன் இருந்தது.

மீண்டும் குழுக்களாகச் சேர்தல், மீள ஆயுதங்களைப் பெறல் மற்றும் வியப்பூட்டும் தாக்குதல்களைத் தொடங்குதல் என்பவற்றின் பொருட்டான செயற்பாடுகளைத் தாமதப்படுத்துவதற்கான வாய்ப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்குடன் போலியான யுத்த நிறுத்த ஏற்பாடுகளில் அப்பயங்கரவாதிகள் ஈடுபடும் செயலானது மற்றைய படிப்பினையாக அமைந்துள்ளதென இப்பத்திரிகை குறிப்பிட்டிருந்தது. 2002இல் இலங்கை அரசாங்கத்தால் விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையானது விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான ஆற்றல்களை அதிகரிப்பதற்கான ஒரு சிறந்த சூழ்நிலையை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தது என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. மேலும் ஏனைய நாடுகளில் இடம்பெறும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காகத் தமது நாடுகளில் நிதி சேகரிக்கப்படுவதற்கு இடம் கொடுக்கும் நாடுகளை இச்செய்தித்தாள் எச்சரித் துள்ளது. இதை அந்நாடுகளின் பாசாங்கு என இச்செய்தித்தாள் விபரித்தது. வெற்றி அளிக்கத்தக்க ஓர் இராணுவத் தீர்வுக்குப் பெரும் தடையாக மூன்றாந்தரப்புத் தலையீடுகள் அமைந்துள்ளதென ஆசிரியத் தலையங்கம் விளக்குகிறது. நாம் முன்னர் கலந்துரையாடியவாறு, இராணுவத் தாக்குதல் செயன்முறையூடாக விடுதலைப் புலிகளை முறியடிப்பதற்கு இலங்கை அரசாங்கங்கள் முயற்சித்தபோது காலத்துக்குக் காலம் இத்தடைகள் தோன்றியமையை அவை அனுபவத்தின் மூலம் உணர்ந்தன. 1987இல் இலங்கைப் படைகளால் மேற் கொள்ளப்பட்ட வடமராட்சி இராணுவ நடவடிக்கையானது பெருமளவுக்கு வெற்றி யளிக்கத்தக்கதாக அமைந்திருந்தது. இச்சந்தர்ப்பத்தில்தான் ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு இலங்கை அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்துவதனூடாக இலங்கையில் ஓர் அரசியல் தீர்வை இந்திய அரசாங்கம் திணித்தது. விடுதலைப் புலிகளுக் கெதிரான இலங்கை இராணுவத் தாக்குதலின் கடைசிக் கட்டத்தில்கூட பிரித்தானியா, பிரான்ஸ், நோர்வே ஆகியவற்றிலிருந்து சர்வதேச அழுத்தத்தை இலங்கை எதிர் நோக்கியது. எனினும் இவ்வழுத்தத்தை இலங்கை அலட்சியப்படுத்தியதுடன், விடுதலைப் புலிகளுக்கெதிரான தனது இராணுவத் தாக்குதல்களைத் தொடர்ந்தது. ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசேட கூட்டத்தொடரைக் கூட்டுவதற்கு இது வழிவகுத்தது (டெய்லி நியூஸ், 29 மே 2009). இக்கூட்டத் தொடரில் பிரித்தானியா, பிரான்ஸ், நோர்வே என்பவற்றுடன் ஏனைய சில நாடுகளும் ஒன்றுசேர்ந்து இலங்கைக் கெதிரான ஒரு தீர்மானத்தை முன்வைத்தன.

அதேவேளை விடுதலைப் புலிகள் எனும் பயங்கரவாத அமைப்பை இலங்கை வெற்றி கொண்டமையை ஒரு பெரும் சாதனையாக சில உலகத் தலைவர்கள் வியந்தனர். மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையின்கீழ் இலங்கையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப் பட்டமையானது, இன்று சுதந்திரத்துக்கான

தொடர்ச்சி 25ம் பக்கம் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் விடுக்கப்படும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள்

**பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க**

*முன்னாள் செயலாளர் நாயகம்,*
*சமாதானச் செயல்முறை*
*ஒருங்கிணைப்புச் செயலகம்*

## பயங்கரவாதம் மீதான வெற்றியைப் பின்தொடர்ந்து வருகின்ற இடையறாத பழிகேடான விமர்சனம்

பேரச்சத்தை ('பயங்கரவாதம்' என்பதற்கு ஒப்பான சொற்பதம்)* வெற்றிகொண்டுள்ளபோதும், எதிர்கொள்ளப்படவேண்டிய பல பிரச்சினைகள் இலங்கைக்கு இன்னும் உள்ளன எனும் புரியாத புதிரை இக் கட்டுரையில் புத்தாய்வு செய்ய எண்ணியுள்ளேன். பேரச்சம் மீதான எமது வெற்றி சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்படும் எனவும், எம்மால் வழங்கப்படும் இந்த முன்மாதிரி எடுத்துக்காட்டானது தம்மால் பின்பற்றப்பட வேண்டியதாக உள்ளதென சர்வதேசப் பேரச்சத்தை வெற்றிகொள்வதற்காகக் கடும் முயற்சிசெய்யும் நாடுகளால் புரிந்துகொள்ளப்பட்டிருக்கும் எனவும் நாம் எதிர்பார்த்திருந்தபோதும், யதார்த்தம் துரதிஷ்ட்டவசமாக வேறுபட்டதாக அமைந்துள்ளது. பாராட்டுக்களுக்குப் பதிலாக, பேரச்சத்திற்கு எதிரான யுத்தத்தில் முன்னிலையில் உள்ளதாக உரிமை கொண்டாடும் நாடுகளிடமிருந்து பழிகேடான விமர்சனத்தையும், அவதூறுகளையும் கூட நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அதற்கான காரணம் என்ன? இங்கு காரண விளக்கம் எதுவெனில்; புலம்பெயர்ந்த தமிழர்களின் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் அமைப்புடன் இணைந்து ஐரோப்பிய நாடுகளால் நெறிப்படுத்தப்படும், இலங்கை பற்றிய தொடர்ச்சியான பழிகேடான விமர்சனத்தைக் கவனத்தில் கொள்ளும் போது, அவர்கள் அரசியல் ரீதியான விடயங்களை ஆராய்வதில் தோல்வியை ஒப்புக்கொள்கின்றனர் என்பதாகும். தமிழர்கள் அவர்களுக்கு எதிராக வாக்களிக்கும் பட்சத்தில் தமது ஆசனங்களை இழக்கக் கூடும் எனக் கருதப்படும் பிரித்தானியாவிலுள்ள பல்வேறு பாராளுமன்ற உறுப்பினர்களால், இலங்கை மீது மேற் கொள்ளப்படும் இத்தாக்குதல்களிலிருந்து இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளதைப் போல, நிச்சயமாக இதில் கொஞ்சம் உண்மையும் உண்டு. உதாரணமாக, தமிழ்ச் சமூகம் தமது ஆதரவை மாற்றிக் கொண்டால் என்ன நிகழக்கூடும், என செல்வாக்கு மிக்க தமிழ் உள்ளூராட்சி மன்ற உறுப்பினரான திரு. இடைக்காடரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலானது பேரச்சத்தின் மீதான எமது வெற்றியை நிறுத்துவதற்கு முயற்சித்த இலண்டன் தேர்தல் தொகுதியிலிருந்து வரும் பல பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்காலம் பற்றிய அச்சவுணர்வை விளக்குவதற்குப் போதுமானதாக அமைந்துள்ளது. அடுத்த தேர்தலில் தொழிற் கட்சி தோல்வியடைவதற்கான சாத்தியக்கூறு உண்டென்பதுடன், பிரித்தானிய தொழிற் கட்சித் தலைவராக வருவதற்கான ஆதரவைப் பெறக்கூடிய வாய்ப்பினைக் கொண்டுள்ளவரான டேவிட் மிலிபான்ட் (David Miliband) அவர்களின் அழுத்தமான விருப்பம் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது, வெற்றி பெறும் பக்கத்தில் நிற்கும் குறிப்பிட்ட இச் செயற்பாட்டுடன் தனது அதிஷ்டத்தை முடிச்சிட்டுப் பிணைப்பதற்கு அவர் தீமானித்துள்ளார் என்பதைக் கூட புரிந்துகொள்ளத் தக்கதாக உள்ளது. அந்த வகையில், நாம் கற்கும் படிப்பினை எது வெனில்; உலகளாவிய நிகழ்வுகள் எப்பொழுதுமே குறுகிய மனப்பான்மை யுடைய நோக்கங்களுக்கு ஆட்படத்தக்க நிலையிலுள்ளன என்பதுடன் பிரித்தானிய மற்றும் ஏனைய தேர்தல் முக்கியத்துவங்களின் அழுத் தமான வேண்டுகோள்கள் பொதுவான எக் கோட்பாடுகளையும் விஞ்சிவிடும் என்பதாகும்.

அதே நிலைமையை ஐக்கிய அமெரிக்காவிலும் காண முடியும். இங்கே, ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது திருமதி. கிளின்ரனை மட்டும் நம்பி அவருக்கு ஆதரவு வழங்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கு விடுதலைப் புலிகளுக்குச் சார்பான புலம்பெயர்ந்தோர் ஆரம்பத்தில் தீர்மானித்தனர் என்பது எமக்குத் தெரியும். இது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கிய போது, பேரச்சத்துடன் இணைந்திருப்பதிலிருந்து தானாக ஒதுங்கிக் கொள்வதற்கு ஹிலாரி கிளின்ரன் முற்சித்தார். ஆனால் பாறையில் ஒட்டி வாழும் ஓர் ஒட்டுச் சிப்பி போல, மிகவும் நுட்பத் திறன் உடைய சில தொடர்புகள் அவருடன் வெளிப்படையாகவே ஒட்டியிருந்தன என்பதுடன், அவர்களது அமைப்பு மற்றும் ஆதரவு என்பவற்றின் முக்கியத்துவத்தில் அவரைத் தொடர்ந்தும் நம்பிக்கைகொள்ளச் செய்வதில் வெற்றிகாண்பதற்கு இவை அனைத்தும் அதிகளவு இலகுவானதாக அமைந்திருந்தன.

அதேவேளை, அவரது சொந்த விவகாரம் தொடர்பான ஒருதலைச் சார்பு எதுவாகவும் இருக்கக் கூடும், சர்வதேச எதிர்ப்பழுத்தத்தால் மீண்டும் திணறடிக்கப்படவில்லை என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டியிருப்பின், எமது வெற்றியையிட்டு மிக அதிகளவான மேலைத்தேச அரசாங்கங்கள் குற்றங்காண்பதற்கு புலம்பெயர்ந்தோரின் எதிர்ப்பழுத்த விவகாரம் மாத்திரமே காரணமாக அமைகின்றது எனும் எடுகோளுடன் நாம் மனநிறைவடைந்து ஓய்வெடுக்கக் கூடாது என்பதில் ஐயமில்லை. முன்னர் கூறப்பட்டதற்கு முற்றிலும் மாறாக, அச்சமடைவதற்கு அதிகளவான விடயங்கள் உள்ளன என்பதை திடீரெனப் புதிதாகத் தோன்றிய புலிகளின் தலைவரான திரு.பத்மநாதன் மீது செலுத்தப்படும் தற்போதைய கவனமானது மறைமுகமாகக் கூறுகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆலோசனைக் குழுவுடன் பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் மதிப்பிற்குரிய ஒருவாராக சில ஐரோப்பியர்களால் முன்மொழியப்படுவதற்கு மேலதிகமாக, திரு. பத்மநாதன் என்பவரையே பிரித்தானியாவிலுள்ள சனல் 4ல் (Channel 4) கடவுளின் மைந்தனாகச் சித்தரித்தது. இலங்கையிலுள்ள தமிழர்கள் மீதான அக்கறையாக இவர்களது சாக்குப் போக்கு அமைந்துள்ள போதும், தமிழர்களை விட அவர்கள் புலிகள் மீது அதிகளவு அக்கறையுடையவர்களாக உள்ளனர் என்பதையே இது மறைமுகமாகக் வெளிப்படுத்துகின்றது

### புலிகளின் தொடர்ச்சியான ஈர்ப்பு

சர்வதேசப் பொலிஸ் அமைப்பால் தேடப்படுபவராக இருந்தும், திரு. பத்மநாதன் சந்தேகத்திற்கு இடமின்றி பிரித்தானியாவிற்குள் இலகுவாக வருவதற்கும், அங்கிருந்து வெளியேறவும் கூடியதாக உள்ள அதேவேளை, புலிகளை அல்லது மேலைத்தேச நாடுகளில் மிகக் குறைந்தளவே காணப்படும் அவர்களது எச்சக் கூறை தற்போது எது வித்தியாசப்படுத்துகிறது? இதற்கான தெளிவானபதில், பயமுறுத்திப் பறித்தல் மற்றும் சட்டத்திற்குமாறான செயல் என்பவற்றின் ஊடாக புலிகள் திரட்டிய நிதியானது மில்லியன் கணக்கான பணமாக இருந்த போதும், வெஸ்பேசியன் (Vespasian) சக்கரவர்த்தியைப் போன்று பிரித்தானிய ஆயுத வியா பாரிகள், சுவிஸ் வங்கியாளர்கள் மற்றும் ஏனைய வர்த்தக ஆர்வலர்களும் தாம் உழைக்கும் பணத்திற்கான மூலங்களைப் பற்றி ஒரு பொழுதும் கவலைப்பட்டதில்லை.

சுருக்கமாக கூறின், வளர்ச்சியடைந்த பொருளாதாரங்கள் தொடர்ந்தும் அதே நிலையில் நீடித்திருப்பதற்கு இன்றியமையாதனவாக அமைந்துள்ள பல செயற்பாட்டுத்துறைகளில் புலிகள் வியத்தகு காசுமரமாக இருந்து வந்துள்ளனர் என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டியுள்ளதுடன், ஆன்மீக நித்தியவாதிகளான மேலைத்தேச தலைவர்களால் விபரிக்கப்படும் ஐரோப்பிய விழுமியங்களுக்கு அவை அச்சுறுத்தலாக அமையாதவிடத்து, அவர்களிடமிருந்து எம்மை விடுவித்துக் கொள்வதற்காக எங்களை அமைப்பதற்கு மேற்குலகிற்கு எக் காரணமும் கிடையாது. அவ் விழுமியங்கள் எவை என்பது கடந்த 500 வருடங்களாக அல்லது அதற்கு மேற்பட்ட காலமாக உல கின் ஏனைய பகுதிகளுக்கு நன்கு தெரியும். ஆனால் பல நூற்றாண்டுகளாக கற்றறிந்த ஓர் புத்திசாதுரியம் மிக்க பிரித்தானிய அருங்கலையாகத் திகழும், கவனமாகக் கருத்துகளை முன்வைப்பதன் மூலம் ஒளிவு மறைவற்ற சுயநலனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்ததாகக் காட்டுகின்ற அறநெறி சார்ந்த ஆற்றல்களே ஏனைய நாடுகளுக்கும் தற்போது விரிவடைந்துள்ளன. ஆனால் ஜோர்ஜ் எலியட் மற்றும் கௌத்தோன் போன்ற மிகவும் அறிவுத் தெளிவுடைய வர்களாக இருந்த வர்களால், அழுத்தமான மற்றும் தெளிவான மனக் காட்சியை உண்டு பண்ணத்தக்க வகையில் வெளிப்படுத்தப் பட்ட கடுந் தூய்மை வாய்ந்த ஒழுக்க உயர்நிலை இயல்புகளுக்குரிய வகை மாதிரியின் முடிவற்ற உதாரணங்களை எம்மால் பார்க்க முடியும்.

### கட்டுப்பாட்டு முறைமைகளாக உறுதிப்பாடின்மையும் பிரிவும்

புலிகளுடனான கொடுக்கல் வாங்கல்கள் மூலம் ஆதாயத்தினைப் பெறக்கூடியதாக இருப்பதுடன், புத்துயிர்ப்புப் பெறும் பயங்கரவாதத்தினைக் கையாள்வதற்காக எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும் செலவிலிருந்து உண்மையில் மேலும் ஆதாயம் பெறக்கூடியதாக இருக்கும் என்பது கூட ஓர் முழுமையான விபரிப்பாக அமையவில்லை. எளிமையான முறையில் அதைக்கூறின், சில மேலைத்தேச துணிச்சல் வீரர்களுக்கு 3ம் உலகில் காணப்படும் உறுதிப்பாட்டு நிலையானது மனதில் வைத்துப் போற்றத்தக்கதோர் இலக்கல்ல. நன்றி கூறத்தக்க வகையில், அபிவிருத்தியைப் போன்று அதிகரித்தளவிலான உலகளாவிய வர்த்தகத்திற்காக உறுதிப்பாட்டின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வோர் தற்போது அதிகளவில் காணப்படுகின்றனர். ஆனால் துர்அதிஷ்டவசமாக குழப்பமான சூழலைப் பயன்படுத்தி தன் நலனைப் பெருக்கிக்கொள்ளும் எண்ணக் கருவானது வெளியுறவுக் கொள்கைக்கு பங்களிப்புச் செய்வோரில் பலருக்கு கவர்ச்சியூட்டுவதாக எப்பொழுதும் இருந்து வந்துள்ளது. இதனால் உதாரணமாக, தமிழ் நாட்டு அரசியல்வாதிகளுக்கு படிப்படியாகப் பெருகிவரும் சேதப்படுத்தத்தக்க ஓர் செயற்பாட்டின் விளைவாக, இந்தியத் தேர்தல்கள் குழப்பத்திற்கு வழிவகுக்கு மென பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட கருத்தியலாளர்களும் களிப்புணர்ச்சியோடு உறுதிபடத் தெரிவித்தனர். அதன் பின்னர் ஈரானில் எதிர்க்கட்சி ஒன்றின் வெற்றிபற்றிய நம்பகமான எதிர்வு கூறல்களைக் கூட காது கொடுத்துக் கேட்டதில், அதிகளவு அரசியல் மயப்படுத்தப்பட்ட ஓர் ஊடகத்தில் நிகழ்த்தப்படும் அரசியல் ஆய்வுரையின் பிரதான நோக்கம் பற்றிய கருத்தூன்றிய ஆய்வானது இனிமேலும் நிகழாத ஒன்றாக உள்ளது என்பதனை ஒருவர் உணர்ந்து கொள்வார். ஜனாதிபதி அஹமடேகிஜாட் அவர்கள் ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதனை மேற்குலகம் விரும்பவில்லை. ஆகவே, அவர் பெரும்வாக்கு வித்தியாசத்தில் தோல்வி அடைவாரென மேற்குலகின் அறிக்கைகள் வலியுறுத்திக் கூறின. இவ் உறுதிப்பாட்டின் நிலையானது முழுமையான ஓர் மேலைத்தேச நல்லொழுக்கமாகத் தொடர்கின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஒருங்கிணைந்த முயற்சியொன்றில், விருப்பமானது நடைமுறையில் அவர்களது தீர்மானங்களின் மூல முதல் கருத்தாக அமைந்திருந்தது. ஆட்சியதிகாரம் அல்லது ஆட்சியதிகாரச் சமநிலையானது மேற்குலகிற்கு ஆதரவளிப்போரை நோக்கி ஈர்க்கப்படுவதனை அடுத்து, மேற்குலகின் கட்டுப்பாட்டுக்கு உட்படாத நாடுகள் நிலை உறுதியற்றதாகவே காணப்படுகின்றன.

இருப்பினும், நாடுகளைப் பிரித்தலானது மேற்கின் பழமை வாய்ந்த ஓர் பழக்கமாக இருந்து வந்துள்ளது. கடந்த நூறு வருடங்களை உள்ளடக்கிய காலத்தில் மாத்திரம், முதலாம் உலக மகா யுத்தத்தின் முதன்மையான விளைவாக ஒஸ்ரிய, ஜேர்மன், துருக்கி பேரரசுகளை சிதறச் செய்தமை அமைந்திருந்தது. முதலில் குறிப்பிடப்பட்ட இவை இரண்டினதும் (ஒஸ்ரிஸ்-ஜேர்மன்) கூறுகள் அதிக எண்ணிக்கையில் தெளிவான வேறுபாடுடைய நாடுகளாக உருவாகிய அதேவேளை, துருக்கிப் பேரரசில் இருந்து சவூதி அரேபியா மாத்திரமே ஓர் சுதந்திர நாடகத் தோற்றம் பெற்றதுடன், பல ஆட்சிக் காலங்களாக கடற்பாதைகளை பிரித்தானியர் கட்டுப்படுத்துவதை சாத்தியமாக்குவதற்கான முற்றிலும் ஒவ்வாத எல்லைகளை இது இயற்கையாகக் கொண்டிருந்தது. லெபனானிலும் பலஸ்தீனத்திலும் மேலும் அதிகளவு முழுமையான கட்டுப்பாடுகள் காணப்பட்டன. புவியியல் சார்ந்த அரசியலை இன்னும் திறமையாகக் கையாள்வதற்கான முன்னோடியாக அது பின்னர் அமைந்தது.

### யூக்கோஸ்லாவியாவிலிருந்து கற்ற முரண்பாடான படிப்பினைகள்

ஐரோப்பாவிற்குள்ளேயே மிக அதிகளவு பல்லினத்தன்மை வாய்ந்த நாடாக யூக்கோஸ்லாவியா காணப்பட்டது. அத்தகைய பாரிய அமைப்பானது எதிர்கால ஜேர்மனிய (ஆங்லோ-சக்ஷன், டச்சு, ஜேர்மன், ஸ்கண்டிநேவியா என்பவற்றை உள்ளடக் கிய) குறிக்கோள்களுக்கு எதிரான ஓர் அணையாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அது (யூக்கோஸ்லாவியா) தென்-ஸ்லாவியரை ஒன்றாக இணைத்து வைத்திருந்தது. குரோஷியாவானது நாசி ஜெர்மனிக்கு வழங்கிய ஆதரவினை கருத்திற் கொள்கையில், 2ம் உலக மகாயுத்த காலத்தில் அது முழு நிறைவாகச் செயற்படவில்லை.

ஆயினும், சாதகமான அம்சமாக, ஜேர்மனியின் எதிரிகள் வெற்றியில் கொண்டிருந்த திட நம்பிக்கை சம்பந்தப்பட்ட வரையில் ரஷ்யா மீதான ஜெர்மனியின் படையெடுப்பானது 1941ல் தாமதப்படுத்தப்பட்டது ஏனெனில் யூக்கோஸ்லாவியாரின் ஓர் கூறான சேர்பியர்களது மூர்க்கத்தனமான கடும் எதிர்ப்பினாலாகும். உண்மையில் திட்டமிடப்பட்டவாறு அப்படையெடுப்பு நிகழ்ந்திருக்குமாயின் சோவியத் ஒன்றியத்தின் எதிர்ப்பானது ஜேர்மன் குறிக்கோள்களை இறுதியாக முடிவுறச் செய்த குளிர்காலம் வரை தொடர்ந்திருக்காமல் போயிருக்கக்கூடும் என விவாதிக் கப்பட்டு வந்துள்ளது.

ஆனால் காலங்கள் மாறின. அவ்வாறே அணிகளும் இடம் மாறின. 1991ல் வெற்றி வாகை சூடப்பட்ட யூக்கோஸ்லாவியாவின் உடைவிற்கு ஜேர்மன் அணுகுமுறையே காரணமாக இருந்தது. ஸ்லாவியாவின் சுதந்திரம் அங்கீகரிக்கப்படல் வேண்டுமென அனைவரும் ஏற்றுக்கொண்ட போது, சுதந்திர குரோஷியாவினை அங்கீகரிப்பதற்கு எதிரான பலமானவாதங்களை பிரித்தானியா மிக விரைவாக முன்வைத்தமை பற்றிய, வோர்சோ அல்லது பெர்லினில் இடம் பெற்ற தாராண்மைவாத, சர்வதேச நிர்வாகக் குழுவின் உள்ளார்வம் மிக்க கலந்துரையாடல் ஒன்றை நான் இன்னமும் நினைவில் வைத்திருக்கின்றேன். 2ம் உலக யுத்த காலத்தில் அடிப்படையில் நாசிகளுக்கு ஆதரவளித்த குரோஷியாவானது, முதலாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஸ்லாவியர்களது நாடாக ஓர் தென் ஸ்லாவிய அலகினை குரோஷியர்கள் ஏற்றுக் கொள்வதற்கு வழிவகுத்த, இன ரீதியான அடையாளங் காணலைவிட ஒரே தன்மையின் முக்கிய கூறொன்றாக மதத்தினையும், கலாசாரத்தினையும் தற்போது கருதுகின்றது என்பதனை ஞாபகத்தில் கொள்ள வேண்டி உள்ளது.

அந்த முன்னைய யுத்தத்தினை விரைவுபடுத்திய சேர்பியர்களுக்கான பிரித்தானியாவின் கருணை மற்றும் அதன் பின்னர் நாசிகளுக்கு எதிராக அவர்களுக்கு உதவியமை என்பன பழைய பாணியிலான பிரித்தானிய தாராண்மை வாத பேராளர் குழுவினர் அணுகுமுறையில் ஓரளவிற்கு முக்கிய பங்கு வகித்திருக்கக் கூடும். ஆனால் குரோஷியாவினை பரபரப்புடன் அங்கீகரித்தமையானது கசப்பான வன்மத்திற்குப் வழிவகுக்கும் என்பது அதன் வாதமாக இருந்தது. இறுதியில் அவ்வாறே அமைந்தது. உண்மையில், சொகோவோவை அங்கீகரிப்பதற்கான பிரித்தானியாவின் பிந்திய பரபரப்பு மிக்க விசித்திரமான சூழமைவில் இந்த நாட்டின் பேராளர் குழுவிடம் இருந்த விடயங்களால் இடர்பாட்டிற்கு உள்ளான நாடாகிய யூக்கோஸ்லாவியாவில் இன்னும் அதிகளவு வெவ்வேறு வகைப்பட்ட கூறாக அமைந்துள்ளதும், அடுத்ததாக சுயாட்சியை வேண்டி நிற்பதுமான பொஸ்னியர்கள், குரோசியச் சூழலை முதிர்ச்சி அற்றதென வர்ணித்தனர்.

இங்கு சிறுபாண்மை உள்ளுணர்வு சிக்கல்கள் என விபரிக்கப்பட்டவையானது அனைத்துத் திசைகளிலும் மனக்கசப்பினை வெளிப்படுத்தியதுடன் அதன் பின்விளைவாக நிகழும் பெருங்குழப்ப நிலையான தலையீட்டு வாதமானது வரவேற்புக் கூடங்களிலும் அதன் பின்னர் மேற்கின் கட்டுப்பாட்டு அறைகளிலும் ஓர் புதுப்பாணியாக அமைந்திருந்து, இது யுத்தத்திற்குப் பின்னரான கால கட்டத்தில் சர்வதேச உறவுகளை நெறிப்படுத்திய அரசின் இறைமைக்கான மதிப்பினைக் கட்டுக்குள் கொண்டு வந்ததுடன், ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அதிகாரத்தின் ஓர் மாற்றுமூலமாக வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பின் (NATO) தோற்றத்திற்கும் வழிவகுத்தது.

இவை அனைத்திற்கு உச்சக் கட்டமாக, கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்திற்கு மேற்கு ஆதவளித்ததுடன் உண்மையில் அதனை விரைவுபடுத்தியது என்பதனை இங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்ட முடியும். மேற்கு தலையிட்ட போது, தமது தலயீட்டுக்கு எதிர்ப்பு காட்டப் படுமாயின், ஓர் திடீர்த்தாக்குதல் அதனைப் பின் தொடரும் என்பதனை சேர்பியாவிற்கு தெளிவு படுத்திக்கொண்டு, அரசியல் ரீதியான பங்கீட்டுக்கட்டத்திற்கான மிகக் கவனமாக ஓர் அடித்தளம் இடப்பட்டது. எனினும், தேசிய எண்ணக்கருவின் பிறப் பிடமாக அவர்கள் கருதிய ஓர் பிரதேசத் தைப் பாதுகாப்பதற்காக அனுபவிக்க வேண்டிய இன்னல் நிறைந்த நேர்வுகளை ஏற்றுக்கொள்வதிலுள்ள பயனைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து, சேர்பியா இன்னும் கூட கடுமையாக எதிர்த் திருக்க முடியும். ஆகவே இச் செயல் முறையானது சுதந்தி ரத்திற்கு வழிவகுக் காது எனும் உறுதி மொழியுடன், மேற்குறிப்பிட்ட அரசியல் முயற்சியானது விருப்பத்திற்குரியதாக மாற்றப்பட்டது. தலையீட்டு வாதத்தின் மறை பொருளாக உள்ள நோக்கங்களைப் பற்றிய அச்சத்தினைத் தெளிவாக்கி நிலைப் படுத்துவதற்கு அவ் உறுதிமொழி யின் பின் தொடர்ந்து வருகின்ற குற்றம் காணத் தக்க மீறல்கள் ஏற்றதாய் அமைந்திருந்தன. இதனால், மேற்குலகம் எதிர்பார்திருந்த வற்றில் ஏற்பட்ட தாமத மானது அவர்கள் உருவாக்கிய இன்னும் ஒரு நாட்டிற்கான உலகளாவிய அங்கீகார மாக அமையும்.

## கட்டுப்பாட்டிற்கான ஏனைய முறைகள்

வெளிநாட்டு இராணுவத் தலையீடு, பிரி வினைக்கான தைரிய மூட்டல் என்பன மாத்திரம் கட்டுப்பாட்டைப் பிரயோகிப் பதற்கான வழிகளாக அமைந்திருக்க வில்லை. நாம் அறிந்து வைத்துள்ளவாறு, ஆளும் குழாம் ஒன்றின் ஒத்துழைப்பு அல்லது நம்பகரமான அணிகளை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துதல் போன்ற பல்வேறு உத்திகளும் முன்னர் உள்ளடங்கியிருந்தன. பனிப்போர் காலத்தில் இப் பாணியிலான ஆட்சி மாற்றங்கள் சில தசாப்தங்களாக நிகழ்ந்து வந்துள்ளன என்பதற்கான குறிப் பிடத்தக்க உதாரணங்களாக ஈரானின் ஷா, இடி அமீன், ஜெனரல் பினோசே மற்றும், சில வேலைகளில் பெரிதும் விசித் திரமான தாகக் காணப்படும் தலிபான் போன்ற வற்றை எடுத்துக்கூற முடியும். மேலும், இப் பனிப்போர் காலத்தில் சில வேளை களில் புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்த விடயம் எதுவெனில், ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லாவிடில் அச் சூழ்நிலையில் அவர்களது செயற்பாடுகள் அதிர்ச்சி ஊட்டு வதாக இருந்தன என்பதா கும். அவ்வாறே சற்று செப்பமற்ற கட்டுப் பாட்டு வழிமுறை கள் திடீரென தோற்றம் பெறவேண்டி ஏற்பட்டது. அவ்வாறேதான் புதிய உலக ஒழுங்கமைவிலும் ׀ சர்வதேச சமூகம் ׀ என பெயரிட்டு அழைக்கப்படும் இது அனைத்து தனிச்சிறப்பு நிலையினதும் பாரத்தினை அல்லது நடுவரை கொண் டுள்ளது என்பதனை நாம் இங்கு அவதா னிக்க முடியும். முன்னைய இருபக்க முறை யிலான நிதி உதவிக்குப் பதிலாக, அந்த நிதி உதவி வழங்கிலானது ஐ.நா ஊடாக நிறைவு செய்யப்படுவதுடன், பின்னர் நிதியளிப்பிற்காக குறிப்பிட்ட அரசாங் கங்களில் தங்கியிருக்கும் நிலையினை அடைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் எனப் பெயரிட்டு அழைக்கப்படுபனவற்றால் நிறை வேற்றப்படுகின்றது. தேசிய அரசாங் கங்களின் கருமங்களாக இருக்க வேண்டிய தீர்மானங்களை எடுக்கும் உரிமை, உயர் விழுமியங்களுக்கு ஆதரவளிப்பதாக உரிமைகோரும் வெளிநாட்டு அதிகாரக் குழுக்களால் படிப்படியாக பறித்து எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

2002 ன் யுத்த நிறுத்த உடன்படிக்கையுடன் இவ்வயையான அணுகுமுறையானது இலங் கையில் சௌகரியமானதாக அமைந்திருந் தது. இது இரு சரிநிகரான தரப்பினர் களுக்கு இடையிலான ஓர் ஒப்பந்தமாக அமைந்திருந்தது எனும் ஓர் எண்ணம் தோற்றம் பெற்றதுடன், அதனால் சமநிலை யை பேணுவதற்கான ஓர் உயர் அதிகாரக் குழு தேவையாக இருந்தது. விடுதலைப் புலிகளின் நம்பிக்கையைப் பெறுவதற்காக அரசாங்கமானது நேர்மையான காரணங் ளுடன் முயற்சித்துக் கொண்டிருந்த ஓர் சூழமைவில், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களில் இதனைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அதனால் நிதி உதவியின் சிறப்புக் கவனம், பயன்பாடு என்பன தொடர்பான தீர்மானங்களுக் குக் கூட அது விரிவடைந்தது.

## இலங்கையில் துணையாதரவின் பிரயோகம்

சுனாமியால் மனப்பாங்கு மேலும் மோச மடைந்தது. மிக அதிகளவு பணம் வழங்கப் படுவதற்காகத் தயார் நிலையில் இருந்த போது, இவை அனைத்தையும் செயற்திறன் மிக்க வகையில் பளன்படுத்துவதில் அரசாங் கத்தின் ஆற்றல் இன்மையை அங்கீகரித்து, பல்வேறு துறைகளில் அதன் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பொறுப்பில் இருந்து அது விலகி இருந்ததனை நாம் காணமுடி கின்றது. ஆகவே இதற்குப் பொறுப்பாக சர்வதேச சமூகம் இருக்கும் என்ற கருத்து தோற்றம் பெற்றதுடன், மனிதாபிமான உதவி ஒருங்கிணைப்புக்கான ஐ. நா. அலுவலகத் தால் (UNOCHA) நிர்வகிக்கப்பட்ட, நிதியத் திற்கான ஓர் வேண்டுகோளான பொது மனிதாபிமான செயற்திட்டம் எனப் பெயர் குறிப்பிட்டு அழைக்கப்பட்ட இதனூ டாக மேற்குறிப்பிட்ட செயற்பாடானது நிறுவன மயப்படுத்தப்பட்டது.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த பல பிரதிநிதிகளை உள்ளடக்கிய நிறுவனங்களுக்கிடையிலான நிலையியற் குழு என அழைக்கப்படும் ஒன்றை UNOCHA அமைத்தது. இது குறிப்பிட்ட ஓர் ஐ.நா. அலுவலகத்தின் ஆதரவின் கீழ் மேற்கொள் ளப்பட்டது. அவரை மிக கொடுமையான வராக கருதிய சந்பந்தப்பட்ட தனி நபர் களுடன் தொடர்பு கொண்டு செயற்பட்ட ஏனையோரும் நானும், அந்தஸ்த்து நிலை யில் குறைவானதா இருந்தாலும், முழு மையான முறைப்படியான திட்டத்தின் மீது சமனற்ற அளவு அதிகாரத்தை அவர் பிர யோகித்ததுடன் சர்வதேச ரீதியாக இலங்கையின் நிலைப்பாட்டை பாழ்படுத்து வதற்கு அதிகளவான செயற்பாடுகளை மேற்கொண்டார் என்பதனை வெகுவிரை விலேயே கண்டறிந்தோம். அரசாங்கத்தின் ஆதரவின் கீழ் இருந் திருக்கவேண்டிய பொதுவான மனிதாபி மான செயற்திட்டமானது (CHAP) சம்பந்தப் பட்ட அமைப்புகளுடன் எவ் ஆலோசனை யையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், இலங்கை மக்கள் சார்பாக திரட்டப்பட்ட நிதியை அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய குறிப்புரை அரி தாகவே காணப்பட்டது. இதனை நாம் கடந்த வருடம் மாற்றக் கூடியதாக இருந்த போதும், முழுமையான செயல்முறையும், நிறுவனங்களுக்கிடையிலான நிலையியற் குழுவால் (IASLS) கண்காணிக்கப்படல் வேண்டும் எனும் கருத்தை அண்மையிலே யே விட்டொழித்தோம். (கடமைப் பொறுப் புக்களற்ற அதிகார கோட்பாட்டுத் தொகுதி யின் ஓர் மாதிரி கூறாக இந்த நிறுவனங் களுக்கிடையிலான நிலையியற் குழு அமைந்திருந்தது. திரட்டப்பட்ட நிதியின் பலாபலனைப்பற்றி அரசாங்கத்திற்கு தெரியப்படுத்த வேண்டிய அவசியம் எதுவு மின்றியதாக காணப்படும் அதேவேளை இக் கடமைப்பொறுப்புக்களின் கூறுகள் நிச்சயமாக நன்மை பயப்பனவாக அமைந் திருந்தன).

அரச இறைமை பற்றிய கருத்துடன் முழு மையாக முரண்படும் ஓர் மனப்பாங்கிற்கு இவை அனைத்தும் பங்களிப்புச் செய்தன. உதாரணமாக, அரசாங்க கொள்கைகளை தாம் பின்பற்றி நடக்கமுடியாமல் உள்ளது, ஏனெனில் கொடையாளிகளால் முன்வைக் கப்பட்ட நிபந்தனைகளுடன் அது முரண்பட் டுள்ளதாக அமைந்துள்ளது என அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எமக்கு கூறினர். வெளிநாட்டு அரசாங்கங்கள் வழங்கும் எவ் உதவிக்கும் நிபந்தனைகளை முன்வைப்பதற்கான அனைத்து உரிமை களும் அவர்களுக்கு உண்டு. ஆனால் இது வெளிப்படையானதாக இருப்பதுடன், எதிர் பாராத மோசமான விதிக் கூறுகள் ஏதாவது காணப்படின், அதனை பின்னர் நிராகரிக் கக்கூடிய, அரசாங்கத்துடனான உடன்பாடு காணப்படல் வேண்டும். அதேவேளை அர சாங்கத்திற்கு மேலே தம்மைப் வைத்து பார்க்க விரும்பிய அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் இரகசியத் தன்மையானது, தமது இருப்பினை தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கத்திற்கு மேலானதாக அவர்கள் நோக்கினர் என்பதைத் ·தெளிவுபடுத்தியது.

## குறிப்பிட்ட நாடுகளின் ஓர் கருவியாக ஐ.நா. முறைமை

துரதிஷ்டவசமாக ஐ.நா முறைமை கூட குறிப்பிட்ட சில நாடுகளின் ஒரு தலைச் சாய்வுக்கு இரையாகிவிட்டது. இலங்கை யில் அன்றி ஏனைய நாடுகளில் இது மிக இலகுவாக நிகழும் என என்னால் நம்பமுடி யாதுள்ளது. யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னரான கால கட்டத்தில் காணப்பட்ட மனப்பாங்கைக் கருத்திற் கொள்கையில் ஐ.நா. முறை மைக்கும் சில கொடையாளிகளுக்கும் இடையிலான இணைவாழ்வுத் திறனுடைய தொடர்பு பற்றி சந்தேகம் கொள்ள முடியா தெனும் எண்ணத்திற்கு இலங்கை பழக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. இவ்வாறாக, இலங்கையை சங்கடத்தில் ஆழ்த்துவதற்காக முன்கூட்டியே கருத்துக்கொள்ளப்பட்ட, எம்மால் கண்டறி யப்படும் தகவல்கள் காணப்படும் ஒரு சூழமை வில், ஐ. நாவிற்காக கடமையாற்றும் இராஜதந் திரிகளின் வாழ்க்கைத் துணைகளுடனான தயார் நிலை பற்றிய இரகசியத் தகவல்கள் வெளிந ாட்டு அரசாங்கங்களுக்கு மாத்திரமன்றி, கூர்மை யாகத் தீட்டுவதற்காக கோடரியுடன் இருக்கும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்குக் கூட வழங்கப் பட்டது.

அவ்வாறே இலங்கை அரசாங்கமானது ஐ. நாவிற்காக பணியாற்றும் அதிகாரிகள் முதலானோரிடம் இருந்து முழுமையான கருத்து விளக்கம் அல்லது முன் அனுமதி யின்றி குறிப்பிட்ட நாடுகள் நிதியளிப்பு செய்கின்றன என்பதைக்கூட நாம் கண்டறிந்துள்ளோம். ஆனால் அவற்றின் முதல் நிலை ஆதரவு சந்தேகத்திற்குரியதாக அமைந்திருக்க வேண்டும். உணர்வுத்திறன் வாய்ந்த ஓர் துறைகளின் உரிய இடத்தில் சிலவகை விசேட ஒருங்கிணைப்பாளர் ஐ. நா. நிறுவனத்திற்கு தேவைப்படுவார் என எமக்குக் கூறப் பட்டது. மேலும் அதனைத் தொடர்ந்து அப் பதவிக் கான குறிப்பிட்ட விண்ணப்பதாரி இனங் காணப் படுகின்றார் என்பதுடன், இலங்கை அரசின் நடவடிக்கை தொடர்பான ஓர் அறநெறி சார்ந்த நடுவராக தன்னை கருதும் நாடொன்றால் நிதியளிப்பு செய்யப் படும் என்பதனையும் நாம் கண்டறிந்தோம். இலங்கை உட்பட அதன் அங்கத்துவ அரசுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டியதாக இருக்கும் ஓர் நிறுவனம் எதிர் பாராத விதமாக தனிப்பட்ட நாடுகள் சிலவற்றின் நலன்களைப் பேணும் நோக்கத்தை நிறை வேற்றும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

முன்கூறப்பட்ட நோக்கங்களுக்கு இரையாக அமைந்துள்ள அந்த நாடுகளில் மிக அதிக மானவற்றை கருத்தில் கொள்கையில், இது சீரழிவானதாக அமைந்திருக்கக் கூடும். இவற்றில் சில உண்மையான கவலைகளில் இருந்து நிச்சயமாக விலகக் கூடும் என்பதுடன், பல இராஜதந்திரிகள் பணிபுரியும் சமூக வட்டங்களில் காணப் படும் எண்ணப் போக்கால் அவை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளப் படுகின்றன. துரதிஷ்டவசமாக வெறுமனே தொடர்பாடல் உபாயம் மாத்திரமன்றி, அவர்களது அரசியல் எதிரிகளைப் போல நவீன உலக ஒழுங்கமைவை கையாள்வதற்கு தற்கால அரசாங்கத்தின் தொடர்பாடல் திறன்கள் கூட இலக்குடையவையாக அமைந்திருக் கவில்லை. இருந்தும் கூட, இலங்கையினுள் காணப்படும் ஜனநாயக ரீதியான தீர்மானங்களை எடுத்தற் செயற் பாட்டு நகர்வானது செயல்முறை சார்ந்த தேர்ச்சிக்கு மேலும் முக்கியமானதாக இருக் கின்றது. இது தொடர்பாக திருமதி பண்டார நாயக்காவின் முதலாவது அரசாங் கத்தினை கவிழ்த்த நிதித் தூண்டல்களில் தொடங்கி, இலங்கையில் நாம் அடிக்கடி பார்த்துள்ளவாறே ஜனநாயகத்தினை சாமர்த்தியமாகக் கையாளமுடியும்.

### தேசிய வலுவூட்டலுக்கான உபாயங்கள்

பொருளாதார நெருக்கடி சூழல் ஒன்றில் சாமர்த்தியமாக கையாளல் செயற்பாடானது மிகவும் இலகுவானதாக இருக்கக்கூடும். தற்போது இலங்கையில் வெற்றி வாகை உணர்வு காணப்படுகின்றபோதும் பொரு ளாதார இழப்புச் சூழல் ஒன்றில் இது விரைவாக சிதறடிக்கப்படக்கூடும் என்பதை வரலாறு எமக்கு கற்பிக்கின்றது. சர்வதேச நாணய நிதிய கடன் பெறலானது நிச்சய மாக உதவியாக அமைந்துள்ளது. ஆனால் மிகை மனநிறைவு பெறத் தகுதியற்றதாகக் காணப்படும் துரிதப்பொருளாதார அபிவிருத்திக்கான அத்திவாரம் இடப்படுவதனை அடுத்த சில மாதங்களுக்குள் நாம் உறுதிபடுத்த வேண்டிய தேவை உண்டு. முதலீட்டை கவர்வதற்கான ஒரு சிறந்த வாய்ப்பு தற்போது காணப்படுகின்றது. ஆனால் பொதுவாக மக்களுக்கும், குறிப் பாக அதிகளவு பாதிக்கப்பட்டோருக்கும், அது பயனுள்ளதாக அமைவதனை நாம் உறுதிப் படுத்த வேண்டியுள்ளது. இதனைத் தவிர, அற நெறி அடிப்படையில் அதிகா ரத்துடன் உத்தர விடப்படும் நிலை யில். நாம் தற்போது அவற் றில் தோல்வியடை வோமாயின், வெளிநாடு களின் மீளத் தொடங்கப்படும் போர்ச் செயல் களை நாம் கையாளவேண்டியிருக்கும் எனும் முழுமையான நடைமுறை சார்ந்த நோக்கம் காணப்படுகின்றது. இது நீண்ட காலத்தில் இன்னும் ஒரு ஆட்சி எதிர்ப்பு பாயங்கரவாத கிளர்ச்சியாக உருமாற்றம் அடையக் கூடும் என்ப துடன், எதிர்பார்க்கைகளின் கூட்டிக்கொடுப் பதானது கடும் முனைப்பன உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய வன்மத்திற்கு வழிவகுக்கக் கூடும் என்பதனை தெற்கில் இடம் பெற்ற தொடர்ச்சியான இரு ஆட்சி எதிர்ப்பு கிளர்ச்சி களிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

பொதுவாக நாட்டிலும் குறிப்பாக முன்னைய முரண்பாட்டால் பாதிப்படைந்த கிழக்கு மாகாணத்திலும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் துரித அகக்கட்டுமான அபிவிருத்தி செயல் முறைத் திட்டமானது பேரளவுத் திட்டமிடல் எனப் பெயர் குறிப் பிட்டு அழைக்கப்படுபவை மற்றும் சூழ் நிலை என்பவை குறித்த வரையில், அவை நியாயமான முறையயில் கட்டுக் கடங்கியதாக உள்ளதென்பதனை சுட்டிக் காட்டுகின்றது. பொறுப்புக்கூறலில் உள்ள குறை பாடு காரணமாக கீழ்மட்டங்களில் காணப்படும் அபிவிருத்தி வாய்ப்புக்களின் சுரண்டல் என அழைக்கப்படும் ஓர் அபாயம் உண்டு. யுத்த நிறுத்த உடன்படிக்கை மற்றும் சுனாமி என்ப வற்றின் பின்னர் கட்டமைப்பு அல்லது பொருத் தமான செயற்பாட்டுக் கண்காணிப்பு மற்றும் திட்டமிடப்பட்ட வெளிப்படையான தன்மை ஆகிய இரண்டையும் உறுதிப்படுத் துவதற்கான ஆற்றல் எம்மிடம் இல்லாத போது, நிதியை செலவு செய்வதில் என்ன நிகழ்ந்தது என்பத னை இது ஓரளவுக்கு பிரதிபலிக்கின்றது.

சுருக்கமாகக் கூறின், சிரேஷ்ட இடைநிலை மட்டம் எனப் பெயரிட்டு அழைக்கப்படுவதற் காக துரித மனித வள அபிவிருத்தியே எமக்கு தேவைப்படுவதாகும். உன்னதமான அடிப்படைக் கல்வி மற்றும் பல் வேறுபட்ட தொழில் திறன்கள் தேவைப்படும் துறைகளில் உயர்தரம் வாய்ந்த மூன்றாம் நிலைக் கல்வி என்பவற்றை வழங்கும் எமது கல்வி முறையில் காணப்படும் ஓர் குறைப் பாட்டை இது பிரதிபலிக்கின்றது. எனினும், பொதுக்கல்வி குறித்த வகையில் நாம் தோல்வி அடைந்திருப்பதாக காணப்படுவ துடன், முற்றிலும் உண்மையாக இம்முறை யானது உலகமயமாக்கலுக்கு உட்பட்ட ஓர் சமுதாயத்தில் திட்டமிடலுக்கும், முகாமைத் துவத்திற்கும் தேவைப்படும் நெகிழ்வான திறன் களை ஊக்குவிக்கவில்லை. இத் தசாப்தத்தின் ஆரம்பப் பகுதியில் மேற் கொள்ளப்பட்ட கல்விச் சீர்திருத்தமானது இப்பிரச்சனையை கையாள்வதனை நோக் கமாக கொண்டிருந்தது. ஆனால் இதுவரை போதுமான முன்னேற்றம் இல்லாதிருக்கின்றது. மிக முக்கியமாக மத்தியிலும் பிராந்திய மட்டங்களிலும் உள்ள அரச ஊழியர்களுக்கான மேம்படுத்தப்பட்ட உயர் மட்ட பயிற்சிகளூடாக கடந்தகால பிரச் சனைகளைக் கையாள்வதற்கு சிறிதளவு முயற்சியே மேற்கொள்ளப்பட்டிருந்தது. மிகப்பாரிய அழுத்தங்கள் இருப்பினும் அடிப்படைச் சேவைகளை தொடர்ச்சியாக வழங்கும் பாங்கில் காணப்படுவதுபோல தெளிவான செயல்திறன் காணப்படுகின்றது. ஆனால் விரைவான, கற்றறிந்த தீர்மானங்களை மேற்கொள்ளல், பிரச்சினைகளை தீர்த்தல், புதிது புனைதல் மற்றும் குறிப்பிட்ட தேவை களுக்கு துலங்குதல் என்பவற்றிற்கான ஆற்றலை பெறுவதற்கு சிறந்த பயிற்சியும் அதிகளவான தன்னம்பிக்கையும் தேவைப் படுகின்றன. இத்துறைகளில் காணப்படும் குறைபாடுகள் சர்வதேச சமூகத்தினர், அதிகளவு ஆற்றல் உள்ள வர்கள் என்று அச் சமூகத்தில் காணப்படும் கண்ணோட்டத்திற்கு பங்களிப்பு செய்கின்றது. ஆகவே அவர்களுக்குச் சம நிலையில் உள்ள இலங்கையர்கள் அன்றி தாமே தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற பொதுநிலைபட்ட எண்ணத்தில் பிரத்தி யேகமான நிகழ்ச்சி நிரலைக் கொண்டிரா தவர்கள் கூட சிக்கியுள்ளனர்.

பொருத்தமான அறிக்கையிடலை உறுதிப் படுத்துவதற்கும் அதனால் உயர் மட்டத் தீர்மானங்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் மேலும் பரந்தளவில் கிடைக்கத்தக்கதாக இருப்பதற்குமான தேவை கூட உண்டு என்பதை மேலதிகமாக இங்கே சேர்க்க வேண்டியுள்ளது. ஒன்றன் மேல் ஒன்று மேல்லடுகாக பல நிர்வாக கட்டமைப்பு படிமுறைகள் அமைந்துள்ளன. மத்திய அரசாங்கம் மாகாணசபை முறைகள் மாவட்டமட்ட நிர்வாகம் ஆகியவற்றுக்கு மத்தியில் எமக்கு தெளிவான ஒருங் கிணைப்பு தேவைப்படுகிறது. இவற்றிற்கு மேலதிகமாக நாட்டின் அனைத்து பாகங்களிலும் குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் பாதுகாப்பு நோக்கங்கள் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக தொடர்ந்து இருப் பதனால், கவனத்திற்கு எடுக்கவேண்டிய பல்வேறு கண்ணோட் டங்கள் பற்றிய சரியான புரிதலுடன் அனைத்து நலன்களையும் பற்றிய திட்டமிடப்பட்ட ஆலோசனையை நாம் ஊக்கு விக்க வேண்டும். பொதுவாக வெகுஜனங் களின் நலன்களை ஏற்றுக் கொள்வதனை போல இதனை இலகுவாக் குவதற்காக முன்னர் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டுக் குரிய நிலையில் இருந்த ஆனால் மிக அண்மித்த வருடங்களிலே யே செயற்படுத்து வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ள பன்மொழிக் கொள்கைகளின் விரைவான வளர்சிக்கு நாம் துணை செய்ய வேண்டியுள்ளது என்பது வெளிப்படையான தாகும்.

நாம் கவனமாக இராது விடின், எம்மீது திணிக்கப்படக் கூடிய மற்றும் அதிகார கட்டமைப்பு நோக்கில், சம்மந்தப்பட்ட, பரந்துபட்ட பிரச்சினைகளைப் பற்றி புரிந்து கொள்வதனைப் போன்ற செயற்திறனை ஊக்குவித்தலானது மிக அவசரத் தேவை யாகவே அமைந்துள்ளது. இருப்பினும் சர்வ தேச சமூகத்திற்கு கிடைக்கதக்க நிதியுத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியின் அர்த்தம் எதுவெனில் எமது செயற்திறன்களில் மிகச் சிறந்தவற்றை ஈர்த்துக் கொள்ள முடியும் என்பதாகும். தீர்மான மெடுத்தற் செயல்முறைகளில் தேசிய உரிமை உறுதிப்படுத்தக் கூடியதாக இருப்பின், இது ஓர் மோசமான விடயமல்ல. ஆனால் அதனைச் செய்வதற்கு எமது சொந்த நிருவாகிகளின் ஆற்றலைப் பலப படுத்த வேண்டும். செயற்பாட்டிற்கான விதி முறைகளை அவர்கள் வழங்கக் கூடியதாக இருப்பதுடன், இணக்கத்தை உறுதிப்படுத்த கூடியதாயும் இருத்தல் வேண்டும்.

அவர்கள் ஆலோசனை வழங்குவதற்காக வரவேற்கப்படக்கூடாது என்பது இதன் அர்த்தமல்ல. நிட்சயமாக எவ் விடத்திலும் உள்ள மிகச் சிறந்த நடைமுறைகளை திறந்த மனநிலையில் கற்றுக்கொள்வதற்கு ஊக்கிவிக்கப்படல் வேண்டும். ஆனால் கடந்த சில வருடங்களில் அடிக்கடி நிகழ்ந் தது எதுவெனில், இரண்டாம் நிலை மதிப்பு கொண்ட கண்மூடித்தனமான அங்கீகாரமாகும். எமது மக்களுக்கு பயனளிக்கும் நோக்கை கொண்டிருந்த நிதிகள் மீதான கட்டுப்பாட்டை, அதாவது திர்மானம் செய்தல் மீதான கட்டுப்பாட்டை, இது கருதுகிறது. ஆனால் பரீஸ் கோட்பாடுகளில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டவாறு, இவ்வுலகு வழங்கியுள்ள நிதியுதவியுடன் தொடர்புடைய அனைத்துக் கோட்பாடுகளினதும் விருப்பத்திற்கு எதிராக இது செயப்படுகின்றது. வழங்குவதற்கு அல்லது வழங்காமல் விடுவதற்கான சுதந்திரம் நிச்சயமாக கொடையாளிகளுக்கு உண்டு. ஆனால் அவ் உதவிகளை பெறும் அரசின் ஆற்றல்களை விருத்திசெய்வதற்கான பிரதான நோக்கிலிருந்தும், மற்றும் இதனால், உதவி பெறும் அரசுக்களை வலுவூட்டுவதில் இருந்தும் முக்கியதுவம் குன்றச்செய்யும் நிபந்தனைகளுக்கு அவர்கள் வழங்கும் உதவிகளை உட்படுத்தக்கூடாது. எமது ஒற்றுமையைப் போல, நம் இறைமைக்கான சாத்தியப் படத்தக்க அச்சுறுத்தல்கள் பற்றி எல்லா நேரத்திலும் நாம் விழிப்புணர்வுடன் வேண்டியுள்ளது என்பதே எனது வாதமாகும். பொருளதார ரீதியாக மாத்திரமன்றி நிர்வாக ரீதியாகவும் எமது மக்களை வலுவூட்டுவதன் மூலம் இவற்றிலிருந்து எம்மை சிறந்த முறையில் பாதுகாத்துக்கொள்ள முடியும். இந்த நோக்கத்திற்கான மதிப்பீட்டைப் போன்று, எமது சொந்தத் தொடர்பாடல் திறன்களை விருத்திசெய்யும் பயிற்சிகள் எமக்குத் தேவைப்படுகின்றன. ஆகவே சாத்தியப் படத்தக்க பரந்த நோக்கில் கல்வியை வலியுறுத்துதல், தனது சமூக நீதி, அதன் அனைத்துப் பிரஜைகள் மத்தியிலுமான பரஸ்பரத் தொடர்பு என்பவற்றை மேம் படுத்தும் அதேவேளை, தனது சுயாதீனத்தை சர்வதேச ரீதியாகப் பேணக்கூடிய அதன் தனிச் சிறப்பியல்புக்கு முக்கியத் துவம் கொடுக்ககூடியதாக இருந்துவரும் சிங்கப்பூர் போன்ற ஓர் நாட்டின் வழியில் நாம் செல்ல வேண்டும்.

* மொழிபெயர்பாளரின் கூற்று

---

.....20ம் பக்கத் தொடர்ச்சி

அச்சுறுத்தலை எதிர்நோக்கும் ஏனைய நாடுகளைப் பொறுத்தவரை போற்றத்தக்க தாகவும் மெச்சத்தக்கதாகவும் அமைந்துள்ளதென பஹ்ரைனின் பிரதம மந்திரியான திரு. ஷேக் கலீபா பின் சல்மான் அல்-கலீபா அவர்கள் பாராட்டியுள்ளார் (http://www.priu.gov.lk/news). "பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதில் ஒரு முன்மாதிரி" எனப் பயங்கரவாதக் குழு வொன்றின் மீதான இலங்கையின் வெற்றியை உகண் டாவின் ஜனாதிபதியான திரு. ஜுவேரி முஷேவேனி அவர்கள் விபரித்துள்ளார் (http://firstlanka.com/english/news). "உலகில் பயங்கரவாதத்தை வெற்றிகரமாக இல்லா தொழித்த ஒரேயொரு நாடு இலங்கையாகும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்கடித்த பின்னர் இலங்கை புலனாய்வுச் சேவையானது பெரும் வெற்றியடைந்துள்ளது. இலங்கை இராணுவத்தின் புலனாய்வுத் துறையால் குமரன் பத்மநாதன் அல்லது கே.பீ. என்பவர் கைது செய்யப்பட்டமையானது ஒரு பெரும் சாதனையாக அமைந்துள்ளது. இலங்கையிலிருந்த இந்திய அமைதிகாக்கும் படையின் புலனாய்வுத்துறைத் தலைவராகவிருந்த திரு. ஹரிஹரனின் கூற்றுப்படி, இச் சம்பவத்துக்கு முன்னர் இவ்வகையான நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்கா, இஸ்ரவேல், ரஷ்யா ஆகிய நாடுகளால் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டன. உலகிலுள்ள இந்த நாடுகளுக்குச் சரிசமமான நிலையில் இலங்கையை அவர் வைக்கின்றார் (ஞாயிறு திவயின, 30 ஓகஸ்ட், 2009).

## முடிவுரை

சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் நாட்டில் காணப்படும் இனத்துவ அடிப்படையிலான பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதில் தோல்வி கண்டமை காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கமாகத் தோற்றம் பெற்றனர். 1983இன் பின்னர் இப்பிரச்சினையானது சர்வதேச அரங்கிற்கும் பரவியது. 1985 இலிருந்து இலங்கை அரசாங்கங்களும், விடுதலைப் புலிகளும் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக முயற்சித்தனர். ஆனால் இது வெற்றியளிக்கவில்லை. அதற்கிடையில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதச் செயற்பாடுகள், 2002ஆம் ஆண்டின் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் கீழ், நாட்டின் இறைமைக்கு மிகத் தீவிரமானதும், கடுமையானதுமான ஆபத்தாக அமைந்தன. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கமானது விடுதலைப் புலிகளின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்டதுடன் அவ்வமைப்பு பூரணமாகத் தோற்கடிக்கப்பட்டது. மேற்கு நாடுகளால் முன்வைக்கப்படும் நடைமுறையில் உள்ள முரண்பாட்டுத் தீர்வுக் கோட்பாடுகளுக்கு இலங்கையின் வெற்றியால் சவால் விடுக்கப்பட்டுள்ளது. இறுதியாக, இலங்கையின் வெற்றி உலகிற்கான சாத்தியப் படத்தக்க ஒரு முன்மாதிரி எடுத்துக்காட்டு என்ற முடிவுக்கு வரமுடியும்.

நன்றி :
இக்கட்டுரையின் ஆக்கத்திற்கான பெறுமதி வாய்ந்த விமர்சனங்களுக்காக பேராசிரியர் லக்சிறி பெர்னான்டோ அவர்களுக்கு இக் கட்டுரை ஆசிரியர் நன்றியுடையவராகவுள்ளார்.

**உசாத்துணை:**

*Balasooriya, T. (1983). Catastrophe July'1983, Colombo, Centre for Society and Religion, Vol.22, No.4.*

*Ceylon (1928). Report of the Special (Donoughmore) Commission on the Constitution, cmd. 3131, London, HMSO.*

*Ceylon (1945). Report of the (Soulbury) Commission on the Constitutional Reform, cmd. 6671, London, HMSO.*

*Daily News, Sri Lanka Sri Lanka Achieves Great Victory, 29 May 2009.*

*Frontline Magazine, India Renewed Hostilities in the North and East of Sri Lanka Put Severe Pressure on the Conflict Resolution Process between the Government and the Liberation Tigers of Tamil Eelam, Vol.23, No.2 January 28-February 10, 2006.*

*http://www.flonnet.com*
*http://www.firstlanka.com/English/news*
*http://www/priu.gov.lk/news*

*Kearney, N. Robert (1967). Communalism and Language in the Politics of Ceylon, Durham, Duke University Press.*

*Martin Gus (2003). Understanding Terrorism, Challenges, Perspectives and Issues, Sage Publication, UK.*

*Moshin, A., Mohaptra, B, N., Lawod, M., Uyangoda, J., Salim, A. (2003). Minority Protection in South Asia, UBS Publishers' Distributors Pvt. Ltd. New Delhi.*

*Spencer, Alexander (2003). Questioning the concept of New Terrorism Peace, Conflict and Development issue 8, January 2006, Available from www.pence studies journal.org.uk.*

*Raman, B., Moorthy, N.S., Chittarayan, K. (2006). Sri Lanka Peace Without Process, Vijitha Yapa Publications, Colombo.*

*Silva, C.R. de (1978). The Politics of University Admission: A Review of Some Aspects of the Admission Policy in Sri Lanka 1971-78, Sri Lanka Journal of Social Sciences, Vol. 1, No.2, December.*

*Sunday Divaina. Our Fighting Strategies to Suppress International Terrorism, 30 August 2009, Vol.28-48.*

*Tiruchelvam, Neelam (1977). The Making and Unmaking of Constitution Some Reflection on the Process, Ceylon Journal of Historical and Social Studies, V11 (2) June-December.*

*Washington Times, Us Could Learn Lessons from Sri Lanka's Victory, June 22 2009-10.30 GMT available from www.piru.gov.lk/news.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நீடித்திருக்கத்தக்க சமாதானத்திற்காக முன்னாள் கிளர்ச்சியாளர்களுக்கான புனர்வாழ்வும் மீள்ஒன்றிணைவும்: யுத்தத்திற்குப் பின்னரான சவால்

கலாநிதி எஸ். ஐ. கீதபொன்கலன்

*தலைவர்,*
*அரச அறிவியல் மற்றும்*
*பொதுக் கொள்கைத் துறை,*
*கொழும்புப் பல்கலைக்கழகம்*

**சாரம்சம்**

யுத்த முடிவும் மற்றும் அண்ணளவாக 10,000 தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் சரணடைவு அல்லது கைது என்பவற்றைத் தொடர்ந்து இலங்கையின் யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி பற்றிய கருத்தார்ந்த விவாதத்தில் காணப்படும் பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக அவர்களது புனர்வாழ்வும், மீள் ஒன்றிணைவும் பற்றிய வினா எழுந்துள்ளது. அரசு மீது என்றும் நிலைத்திருக்கும் ஓர் சுமையாக அவர்கள் அமைவர் என்பதனால் முன்னாள் போராளிகள் அனைவரையும் சிறைக் காவலில் வைத்திருப்பது நடைமுறைச் சாத்தியமற்றது ஆகும். போதுமான ஆதரவின்றி கிளர்ச்சியாளர்களில் பெரும்பான்மையானோரை விடுதலை செய்வது கூட பல சமூகப் பிரச்சினைகளை உருவாக்கும் என்பதுடன் யுத்ததிற்கு பின்னரான நிலையிலிருந்து நீடித்திருக்கத்தக்க சமாதானத்திற்கான நிலைமாற்றத்திற்கு அச்சுறுத்தலாகவும் அமையும். ஆகவே அதிககாலம் தாழ்த்தாது செயற்றிறன் மிக்க புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு முறை ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டியது அவசரமானதாக அமைந்துள்ளது. இக்கட்டுரையானது இலங்கையில் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு முறைகளில் காணப்படும் சவால்களை ஆராயும் அதேவேளை நிலையான சமாதானத்திற்கான மூன்று வழி காட்டுத்தடங்களின் வரிசைகளையும் நான்கு படி நிலைகளையும் முன்மொழிகின்றது.

## அறிமுகம்

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டு யுத்தம் இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான பிரச்சினைகளுக்கு காரணமாக இருந்தது. 2009 மேயில் நிகழ்ந்த விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டமையால் யுத்தத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளில் சிலவற்றை தீர்த்துள்ள அதே வேளை அரசியல் ரீதியாக உணர் திறமுடைய ஏனைய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. இப்பிரச்சினைகளில் ஒன்றாக இறுதித் தாக்குதலின் போது தப்பிப் பிழைத்துச் சரணடைந்த அல்லது அரசாங்கப் பாதுகாப்புப் படைகளால் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வும் மீள்ஒன்றிணைவும் பற்றிய பிரச்சினை அமைந்துள்ளது. இக்கட்டுரையானது முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை ஆராயும் அதே வேளை இதனுடன் சம்பந்தப்பட்ட கொள்கை விருப்புத் தேர்வுகள் பலவற்றையும் ஆராய்கின்றது. முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை அவர்களுடைய சொந்த சமூகத்தில் வைத்து புனர்வாழ்வு அளித்து மீள் ஒன்றிணைப்பை மேற்கொள்ள வேண்டியது ஏன் அவசியமானதாக உள்ளது? இலங்கையின் ஓர் செயற்திறன் மிக்க புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு முறையில் காணப்படும் சவால்கள் எவை? யுத்தத்திற்குப் பின்னரான நிகழ் முறையில் ஒரு செயற்திறன் மிக்க புனர்வாழ்வு மற்றும் ஒண்றிணைவுத் திட்டமானது எவற்றை உட்படுத்த வேண்டும்? என்பனவே இக்கட்டுரைக்கு வழிகோலும் பிரதான வினாக்களாகும். இக்கட்டுரையானது இரண்டாம் நிலைத் தரவுகளிலும் இவ்வாய்வுடன் சம்பந்தப்பட்ட மக்களின் தேவைகள் மற்றும் கலாச்சாரங்கள் என்பவற்றைப் பற்றிய கட்டுரையாசிரியரின் தனிப்பட்ட புரிதலிலும் பெருமளவிற்கு தங்கியுள்ளது. முன்னாள் போராளிகளின் ஆயுதக் களைவு, படைக்கலைப்பு, மீள் ஒன்றிணைவு என்பன பற்றிய விரிவான ஆய்வு குறிப்பாக ஆபிரிக்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆபிரிக்க அனுபவமானது கோட்பாட்டு ரீதியான ஓர் கட்டமைப்பாக பயன்படுத்தப் பட்டுள்ளது.

## பின்புலம்

குடியேற்ற காலத்திற்குப் பின்னரான தேச நிர்மாணம் செயல்முறையிலிருந்து ஒதுக்கப்பட்டதாகவும் மற்றும் ஒன்றன் பின் ஒன்றாக ஆட்சிக்குவந்த அரசாங்கங்களால் பாரபட்சமாக நடாத்தப்பட்டதாகவும் இலங்கையிலுள்ள தமிழ் சமூகத்தின் சில பிரிவுகளால் உணர்ந்தறியப் பட்டவாறு மனதிலுள்ள எண்ணங்களின் அடிப்படையில் வடக்கு மற்றும் கிழக்குமாகணங்களில் அதிகளவான பிராந்திய சுயாட்சியைப் பெற்றுக் கொள்வதற்காக அப்பிரிவுகள் போராடிவந்தன. எதிர்ப்பை வெளிப்படுத்துவோர் மத்தியிலுள்ள பெருமளவு அரசியல் மாற்றத்தை விரும்பவோர்கள் குறிப்பாக இளைஞர்கள் தீவிரப்போக்குடைய இயக்கங்களை அமைத்து அரசியல் குறிக்கோளுக்காக மேலும் மேலும் வன்முறையை நாடியமையால் அகிம்சைப் போராட்டமானது தோல்வியைத் தழுவியது. இவ்வமைப்புக்களில் ஒன்றாக விடுதலைப் புலிகள் இருந்தது. இப் பகுதியில் ஈழம் என அழைக்கப்படும் ஓர் தனியரசை அமைக்கும் பொருட்டு அரசாங்கப் பாதுகாப்பு படையுடன் மூர்க்கத்தனமான முறையில் போரிடும் ஒரே ஒரு தீவிரவாத அமைப்பாக அது தோற்றம் பெற்றது. ஏனைய தமிழத தீவிரவாத அமைப்புக்கள் மூர்க்கத்தனமாக அடக்கப்பட்டதுடன் வேறு ஒரு சில அமைப்புக்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்தமையானது ஆட்பலம் குறித்த வகையில் புலிகளின் பலத்தினை அதிகரித்தது. இவ்வமைப்பில் அங்கத்துவம் பெற்றவர்களின் எண்ணிக்கையானது 2000ஆண்டின் ஆரம்பத்தில் அண்ணளவாக 15,000 என மதிப்பிடப்பட்டிருந்தது.

படைகளுக்கெதிரான போராட்டத்தின் மூலம் குறிப்பாக இந்திய அமைதிகாக்கும் படை என அழைக்கப்படும் இந்திய இராணுவத்திற்கு எதிரான யுத்ததின் மூலம் பெறப்பட்ட யுத்தகள அனுபவத்தின் செயற்கை நிதிக் கொடுக்கல், வாங்கல்கள் ஊடாக திரட்டப்பட்ட பெருந்தொகை நிதிவளங்கள் (இவற்றுள் சில மிகவும் சந்தேகத் துக்குரியவை) புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து சேர்க்கப்பட்ட பெருந்தொகையான நிதி நுட்பத்திறன் வாய்ந்த ஆயுதங்களை நாட்டுக்குள் கடத்தி வருவதற்கான ஆற்றல் என்பன விடுதலைப் புலிகளை இலங்கையின் மிகவும் பலம் வாய்ந்த தமிழ்த் தீவிரவாத குழுவாக உருவாக்கின விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மிகத் தீவிரமான உள்நாட்டு யுத்தத்திற்கு வழி வகுத்ததுடன் அரசுக்கு ஓர் இக்கட்டு நிலையை உண்டாக்கியது. நாட்டில் ஓர் சிவில் சமூகத்தை மீள உருவாக்குவதற்காக 2005 நவம்பரில் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் முழுமையான மனோதிடம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போரிடுவதற்காகப் பெறப்பட்ட போதுமான சர்வதேச ஆதரவு என்பன நாட்டின் ஆட்சி எல்லையின் குறிப்பிட்ட நிலப் பகுதிகளை விடுதலைப் புலிகளிடமிருந்து மீளக் கைப்பற்றுவதை சாத்தியமாக்கின. முதலில் கிழக்கு மாகாணமும் பின்னர் விடுதலை புலிகளின் செயற்பாடுகளுக்கான மத்திய நிலையமாகப் பயன்படுத்தப்பட்ட கிளிநொச்சி உட்பட்ட வட பகுதி நகரங்களில் பெரும்பாலானவையும் விடு விக்கப்பட்டன. 2009ன் முதல் அரையாண்டில் தலைமைத்துவம் உட்பட விடுதலைப் புலிகளும் வன்னிப் பிராந்தியத்தினுள் முடக்கப்பட்டிருந்தனர். நீடித்த போராட்டம் மற்றும் முன்னொருபோதும இல்லாத மனிதப் பேரவலம் என்பவற்றின


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் இல்லாது ஒழிக்கப்பட்டது. 2009 மேயில் விடுதலைப்புலிகள் அமைப்பைத் தோற்றுவித்த அதன் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின் கொலையுடன் உள்நாட்டு யுத்தமானது உத்தியோகப்பூர்வமாகவும் வேறு வகையிலும் முடிவிற்கு வந்தது. தோல்வி நெருங்கி வந்து கொண்டிருந்தமையால் பல விடுதலைப் புலி உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் சரணடைய ஆரம்பித் திருந்தனர். விடுதலைப் புலி உறுப்பினர்களின் ஏனைய மற்றைய உறுப்பினர்கள் சாதாரண பொது மக்கள் மத்தியில் மறைந்திருக்க முயற்சித்த போது அவர்கள் கைது செய்யப்பட்டனர் தற்போது அண்ணளவாக 10,000 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் அரசின் சிறைக்காவலில் உள்ளதாக நம்பப்படுகிறது. இந்த முன்னாள் விடுதலைப்புலி போராளிகள் தொடர்பான புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றி இக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## நீடித்திருக்கத்தக்க சமாதானமும் சமூகத்தில் அவர்களின் மீள் ஒன்றிணைவும்

விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான முடிவும் யுத்தத்தின் முடிவும் சமூகத்தின் வேறுபட்ட எண்ணப்பதிவுகளையும் முரண்பாட்டின் தற்போதைய நிலைமைகளை உருவாக்கியுள்ளது. யுத்தம் இனிமேல் இல்லையென்பதால் இலங்கையில் சமாதனமே உள்ளது என நம்புவதற்கு சிலர் முடிவு செய்துள்ளனர். ஏனையோர் இதனை யுத்தத்திற்கு பின்னரான கால கட்டம் என அழைக்கின்றனர் எனினும் இன்று சமாதானமோ அல்லது முரண்பாட்டுக்குப் பின்னரான சூழ்நிலையோ இல்லையென விவாதிக்க முடியும். யுத்தம் முடிவடைந்துள்ள போதும் முரண்பாட்டை மையமாகக் கொண்ட யுத்தச் செயல்கள் பல்வேறு மட்டங்களில் இன்னும் தொடர்ந்தே வருகின்றன. வன்முறை பற்றிய பரந்த வரைவிலக்கணங்களின் படி, உதாரணமாக கல்றங்கால் ஏன்பவரால் (Gultung, 1996) வழங்கபபட்ட வரைவிலக்கணத்தின் படி முரண்பாட்டுடன் தொடர்புடையதும் அம் முரண்பாட்டால் உருவாக்கப்படுவதுமான கட்டமைப்பு ரீதியான மற்றும் கலாச்சார ரீதியான வன்முறையானது மேலும் ஓர் முக்கிய காரணியாக அமைந்துள்ளது. அத்துடன் இது ஒரு முரண்பாட்டுக்கு பின்னரான சூழ்நிலையும் அல்ல இம்முரண்பாட்டில் சம்பந்தப் பட்டுள்ள சமூகங்களால் உணர்ந்தறியப்பட்டவாறு கவலைகள், பிரச்சினைகள், மனக்குறைகள் என்பன இன்னும் நிலைத் திருக்கின்றன. யுத்தத்தின் முடிவானது மிகத் தீவிரமான வனமுறை பிரச்சினையை மாத்திரமே தீர்த்துள்ளது.

இதனால் நடப்புச் சூழ்நிலையானது யுத்தத் திற்குப் பின்னரான சூழ்நிலையிலிருந்து சமாதானத்திற்கான நிலைமாற்ற காலகட்டங்களில் ஒன்றாகக் கருதப்படல் வேண்டும். நீடித்து நிலைத்திருக்கத் தக்கதாக உள்ள போது சமாதானமானது உன்னதமானதாக அமைகின்றது. நிலைத் திருக்கத்தக்க சமாதானம் என்பது பல தலைமுறைகளுக்கும் நீடித்திருக்க கூடிய அமைதியான சூழ்நிலையேயாகும். ஆகவே இலங்கை எதிர் கொள்ளும் தற்போதுள்ள சவால் எதுவெனில் நடைமுறையிலுள்ள நிலைமாற்ற சமாதான நெகிழ் முறையிலிருந்து நீடித்து நிலைத் திருக்கத்தக்க சமாதானத்திற்கு உபாய ரீதியாக நகர்வதாகும். நீடித்து இருக்கத் தக்க சமாதானத்திற்கு அரசியல் மட்டத்தை போன்று சமூக மட்டத்திலும் நடவடிக்கைகள் தேவையாக உள்ளன. உதாரணமாக ஐக்கிய நாடுகளின் முன்னாள் செயலாளர் நாயகமான பூட்ரஸ் பூட்ரஸ் காலி (1994) அவர்களின் கூற்றுப்படி நீடித்திருக்கத்தக்க சமாதானத்திற்கான செயற்திட்டமானது ஆயுதக்களைவும் ஆயுத ஒப்படைப்பும் சட்ட ஒழுங்கமைவை பழைய நிலைக்கு கொண்டுவருதலும் மனித உரிமைகளை மேம்படுத்துதல், அரசியல் பங்கேற்புக்குத் துணை புரிதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. நீண்ட காலத்திற்கு நீடித்த உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் நீடித்திருக்கத்தக்க சமாதானத்தின் மற்றைய முக்கியமான மூலக்கூறாக முன்னாள் போராளிகளின் மீள் ஒன்றிணைவு அமைந்துள்ளது. (சபர் - Schafer 1998) மேலும் போராளிகளின் மீள் ஒன்றிணைவானது கடினமான தாகும். ஆனால் முரண்பாட்டுக்குப் பின்னரான கால கட்டத்தின் உறுதிப் பாட்டுக்கு அது மிக முக்கியமானதாகும் என பூட்ரஸ் பூட்ரஸ் காலி அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார் சமாதானத்தின் நீடித்திருக்கத்தக்க தன்மைக்குப் போராளிகளின் செயற் திறன் மிக்க மீள் ஒன்றிணைவு கூட அத்தியாவசியமானதாகும் என அவர் தொடர்ந்து வலியுறுத்து கிறார். முன்னாள் சிப்பாய்களின் பொது வாழ்விற்கான நிலை மாற்றத்திற்கு துணை செய்யும் செயல் முறையாக மீள்ஒன்றிணைவானது பொதுவாக புரிந்து கொள்ளப்படுகின்றது. (கிளார்க்-1995)

புனர்வாழ்வு அளிப்பதற்கும் முன்னாள் போராளிகளின் சாதாரண வாழ்க்கைக் கான நிலைமாற்றத்திற்குத் துணைபுரிவதற்குமான ஒரு செயற்திறன் மிக்க திட்டமொன்றை நடை முறைப்படுத்துவது ஏன் அவசரமானதாக உள்ளது? எனும் போது இதற்கு நான்கு விசேட காரணங்கள் காணப்படுகின்றன. சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு அரசிடமிருந்து முறையான உதவியில்லாத நிலையில் முன்னாள் போராளிகள் தமது படையில் மீண்டும் இணையக் கூடும் ஜீவாதாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஓர் வழியாக நாட்டில் அல்லது இப்பிராந்தியத்தில் உள்ள ஏனைய குழுக்களுக்கு ஆயுதங்களையும் துணைக்களப் பொருட்களையும் விற்பனை செய்வதில் அவர்கள் ஈடுபடக்கூடும் பாதாள உலகக் குழுக்களை அமைத்தல் அல்லது அவற்றின் ஓர் பகுதியாக உருவாகுதல மூலம் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட முடியும். உளவியல் ரீதியான பிரச்சினைகள் தோன்றுதல் அல்லது மனநலக் குன்றியவர்களாக கூட மாறுதல் என்பவற்றின் மூலம் அவர்கள் சமூகத்திற்கு சுமையாக அமையக்கூடும்.

விடுதலைப் புலிகளை ஒழித்தற்குப் பின்னர் கூட முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் அனைவரும் எச்சமூகத் திற்கு சொந்தமாக உள்ளனரோ அச் சமூகமாகிய தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. இப் பின்னணயில் சாத்தியப்படத்தக்களவு விரைவாக முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு சாதாரண வாழ்க்கைக்கு திரும்புவதற்காக உதவி வழங்கப் படாவிட்டால் தீர்க்கப்படாத இப்பிரச்சினைகள் காரணமாக அவர்கள் வன்முறைக்கு திரும்புவதற்கான ஓர் சூழலை தோற்று விக்கும். இது இருமட்டங்களில் நிகழக்கூடும்.

i)புதியதோர் தமிழ் தீவிரவாதக் குழு ஒன்று தோன்றுவதுடன் அதன் உறுப்பினர்களாக முன்னாள் புலி உறுப்பினர்களை ஆசை காட்டி இழுக்க முடியும் அல்லது அவர்களுக்கு அனுபவ மும் நிபுணத்துவமும் இருப்பதால் அவர்களின் உதவியையும் நாட முடியும்.

ii)முன்னாள் போராளிகள் தாமாகவே "சுயபடையை உருவாக்க கூடும்'' (ஓசேர்டம்- Ozerdem,- 2002) இந்த சுய படை உருவாக்கமானது இரு காரணங்களுக்காக நிகழக் கூடும். முதலாவதாக ஓர் காரணத்திற்காக ஆயுதங்களை வைத்திருப்பதும், போராடுவதும், தீவிரவாதிகளுக்கு நன்மதிப்பை போற்றும் முறையில் வாழ்க்கையில் ஓர் குறிக்கோளை வழங்குகின்றது. அவர்களுக்கு சாதாரண ஓர் குடிமகனாக குறிக்கோள் ஒன்று இல்லையாயின் இருப்பு நிலையிலிருந்து பின்வாங்குவதுடன் கெரில்லா வகை யுத்தத்தில் ஈடுபடுவதற்காக காட்டிற்கு திரும்பிச் செல்வது அவர்களுககு இலகுவானதாகவுள்ளது. போராட்டத்தை நாம் கைவிட்டுள்ளதாக முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் குறைந்த பட்சம் சிலர் தற்போது உணரக்கூடும் என்பது சாத்தியப்படத்தக்க ஒன்றாகும். மறு புறத்தில் மீண்டும் ஒரு தடவை பொறுப்பை ஏற்றுக் கொள்வது மனோதிடத்துடன் அவர்கள் முன்னெடுத்த போராட்டத்தின் இலக்கை அடைவதற்கும் அது அவர்களை கட்டாயப்படுத்தக் கூடும் செயல் திறன் மிக்க வகையில் சாதாரண குடிமக்களுக்கான செயற்பாடுகளில் அவர்கள் ஈடுப்படுத்தப்படாது விட்டால் மீண்டும் தமது படையில் இணைவது மிக இலகுவாக அமையும். தமது குடும்பங்களிலும் சமுதாயத்திலும் தமக்கு ஓர் இருப்பு நிலை உண்டு எனும் உணர்வை வெற்றியளிக்கதக்க ஓர் மீள் ஒன்றிணைவு செயல்முறைத் திட்டமானது அவர்களுக்கு வழங்குவதுடன் அத்திட்டம் அவர்களைப் பொருளாதார செயற் பாடுகளில் ஈடுபட செய்யும். மறுபுறத்தில் படையில் அவர்கள் மீள் இணைவதற்கான சாத்தியக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

..றை அது குறைவடையச் செய்யும்.

2002-20004 ஆண்டுகளின் சமாதானச் செயல் முறை காலப்பகுதியின் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இராணுவ ரீதியான ஆற்றல் மற்றும் இராணுவ வழிமுறையூடாக தனி அரசியலுக்கான தமது இலட்சியத்தை அடைவதற்கான ஆற்றல் என்பவற்றில் மிகவும் தன்னம்பிக்கையுடையவர்களாக இருந்தனர். சமாதானப் பேச்சுவார்த்தைப்பற்றி அதிகளவு அக்கறையற்றவர்களாக விடுதலைப் புலிகள் இருந்தமைக்கு இது ஓர் காரணமாக அமைந்திருந்தது. ஒரு வகையில் விடுதலைப் புலிகளே இவ் வரசாங்கத்தை யுத்தத்திற்குள் இழுத்தவர்களாக உள்ளனர்(கீதபொன்கலன் - 2008), எனினும் 2006 நடுப்பகுதியிலிருந்து பல இராணுவ ரீதியான பின்டைவுகளை இக்கிளர்ச்சியாளர்கள் எதிர் கொள்ள ஆரம்பித்ததுடன் அவர்கள் கைப்பற்றி வைத்திருந்த பிரதேசங்களிலிருந்தும் பின்வாங்கிக் கொண்டிருந்தனர் தமது பொதுவான உத்திக்கு ஒரு நிலைப்பட்ட வகையில் விடுதலைப் புலிகள் பின் வாங்கத் தொடங்கிய போது தாங்கள் மீண்டும் திரும்பி வரும் வேளை மீள உபயோகிப்பதற்காக இப்பிரதேசங்களில் ஆயுதங்களையும் துணைக்கலப் பொருட் களையும் புதைத்து வைத்திருப்பதற்கும், மறைப்பதற்கும் ஆரம்பித்தனர். ஆனால் இவ் வாயுதங்களையும் துணைகலப் பொருட்களையும் மீள உபயோகிப்பதற் கான ஓர் இயக்கமாகத் தற்போது அவர்களால் திரும்பிவர முடியாமல் உள்ளது. விடுதலைப் புலிகளின் ஆயுதத் தொகுதியைக் கண்டு பிடித்து மீட்டெடுப் பதற்காக விவாதத்திற்குரிய இவ்வாட்சி எல்லையை துப்பரவுசெய்யும் செயல் முறையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அரசாங்க பாதுகாப்பு படைகள் சில ஆயுதங்களை மீட்டெடுத்துக் கொண்டிருக்கின்ற போதும் அனைத்து ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்படும் என்பதற்கான முழுமையான உத்தரவாதம் இல்லை. ஆகவே குறைந்த பட்ச கருத்துப் போல் அடிப் படையில் பெருந்தொகையான ஆயுதங் கள் கிராமங்களிலும், காடுகளிலும் உள்ளன என்பதுடன் அவற்றின் இருப் பிடம் பற்றிய அறிவுடையவர்களாகவே முன்னாள் உறுப்பினர்கள் உள்ளனர் என்ப தற்கான சாத்தியக் கூறுகளும் உண்டு. யுத்தத்திற்குப் பின்னரான கால கட்டத்தில் செயற்திறன் மிக்க புனர்வாழ்வு மற்றும் மீள்ஒன்றிணைவுத் திட்டமொன்று வழங்கும் சட்டபூர்வமான முறையில் ஜீவதாரத்தை உழைப்பதற்கான ஆற்றலை முன்னாள் புலி உறுப்பினர்கள் கொண்டிருக்காவிட்டால் அவர்களில் சிலர் வர்த்தக நோக்கங்களுக்காக இவ்வாயுதங்களைப் பயன் படுத்துவதற்கு கூட பெரும்பாலும் முயற்சிப்பர். 2003ல் பிரதான குழுவிலிருந்து விடுதலைப் புலி உறுப்பினர்களின் குழுவொன்று வெளியேறிய போது அவர்கள் தமது படையிலிருந்து கலைக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. அத்துடன் அவர்களில் பலர் பாதாள உலகக் குழுக்களுக்கும் பிராந்தியத்திலுள்ள, குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அரசியல் ரீதியாக துண்டாடப்பட்ட குழுக்களுக்கும் தமது ஆயுதங்களை விற்பனை செய்தனர். இது மீண்டும் நிகழக்கூடும். தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள வன்முறை இயல்புடைய அரசல்லாத செயற்பாட்டாளர்களுக்கு ஆயுதங்களை அவர்கள் கடத்திச் செல்வதற்கான சாத்தியக் கூறுகள் கூட உண்டு. இப்பிராந்தியத்திலுள்ள அரச சாராத ஆயுதக் குழுக்களுடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு இருப்பதுடன் அக்குழுக்களுக்கு அவர்கள் உதவி செய்து வருவதாகவும் அவதானிகள் நம்பு கின்றனர். ஆயுதங்களைப் பரிமாற்று வதற்கு இத் தொடர்புகள் இலகுவான முறையில் துணைபுரிவதாகவும் அமையக்கூடும். மறுபுறத்தில் நாட்டினதும் பிராந்தியத்தினதும் உறுதிப் பாட்டை சீர்குலைப்பதற்கான ஆற்றலை இச்செயற் பாடு கொண்டுள்ளது.

போதுமான ஆதரவின்றி தடுப்புக் காவலில் இருந்து வரும் பெரும் எண்ணிக்கையிலான முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்படின், வடக்கு மற்றும் தெற்கு ஆகிய இரண்டு இடங்களிலும் அதிகரித்த அளவிலான குற்றச் செயல்கள் இடம் பெறுவதற்கான உண்மையான ஓர் சாத்தியக் கூறும் காணப்படுகின்றது. ஆயுதத்துடன் இரகசிய செயற்பாடுகளுடனும் பரீட்சயமான ஓர் குழுவிற்கு கொள்ளை, களவு ஆட்கடத்தல் மற்றும் இன்னும் பல தரப்பட்ட குற்றச் செயல்கள் கவர்ச்சியான தாகவும் அமையக்கூடும் 1987 ஜூலையில் இந்திய இலங்கை உடன் படிக்கை கைசாத்திடப்பட்டபோது இந்தியா, இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கு மிடையிலான உடன்படிக்கையின் ஓர் பகுதியாக பல தமிழ் ஆயுதக் குழுக்கள் ஆயுதக்களைவிற்கு கட்டாயப்படுத்த பட்டன. இத்தீவிரவாத குழுக்களின் பல உறுப்பினர்கள் தமது படைகளில் இருந்து கலைக்கப்பட்டதுடன் அரசியல் செயற்பாடு களில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் இத்தீர்வுத் திட்டமானது புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு செயல்முறைத் திட்டத்துடன் சம்பந்தபட்ட தாக இருக்கவில்லை. பெருமளவு ஆதரவின்றி சாதாரண குடி மக்களாக செயற பட வேண்டுமென எதிபார்க்கப்பட்ட சூழ் நிலைக்குத் தீவிர வாதத்தைக் கைவிட்ட கிளர்ச்சியாளர்கள் ஈடு கொடுப்பதற்கு சிரமமாக இருந்ததை அவர்கள் கண்டறிந்தனர். இக்கட்டுரை ஆசிரியரால் போராளிகள் பல ஜீவாதாரத்திற்காக சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகளை நாடியமையால் அதாவது குற்றச் செயற்பாடுகளை நாடியமையால் குற்றச் செயல்கள் குறிப் பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில், அதிகளவில் பெருக்க முற்றிருந்தன என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பிரச்சினையின் இவ்வம்சமானது யாழ்ப்பாணத்தில் பிரதான சமூக பிரச்சினையாக உருவாகக் கூடும். அதேவேளை நாட்டில் ஏனைய பகுதிகளில் உள்ள குற்றவியல் மற்றும் பாதாள உலக சக்திகள் கூட முன்னாள் போராளிகளை பயன்படுத்தக்கூடும். தமிழ் சமூகத்தின் திகிலடையச் செய்த பிரச்சினையானது பெரும் எண்ணிக்கையிலான தமிழ்ப் பொது மக்கள் அண்மைக் காலத்தில் குறிப்பாக கொழும்பில் கடத்தப்பட்டதில் முன்னாள் தமிழ் தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டிருந்தமை யாரும் முழுமையாகத் தட்டிக்கழிக்க முடியாது. பெரும் எண்ணிக்கையிலான விடுலைப் புலி உறுப்பினர்களின் திடீர் படைக் கலைப்பினால் மிகவும் எதிர் மறையான தாக்கத்தை முழுமையான அரச ஆதரவுடனான புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு செயல்முறை திட்டத்தில் மாத்திரமே குறைக்க முடியும்.

உலகிலுள்ள ஈவிரக்கமற்ற தீவிரவாத அமைப்புகளில் ஒன்றான இவ்வமைப்பின் ஓர் உறுப்பினராக இருத்தல், மற்றும் கொடுமையான வன்முறை நிறைந்த செயற்பாடுகளில் தொடர்ச்சியாக பங்கேற்றல் என்பவற்றின் காரணமாக அவர்களின் உளவியல் ரீதியான தாக்கத்தை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. வன்முறைத் தன்மை கொண்ட சமூக மயமாக்கத்திற்கும் உளவியல் ரீதியான ஒழுங்கமைவின்மைக்கும் இடையில் காணப்படும் சாதகமான தொடர்புகளை நிருபிப்பதற்கு போதுமான சான்றுகள் உள்ளன. உதாரணமாக ஆண்கள் பெண்கள் சிறுவர்கள் என்போரின் மீதான வன்முறையின் உளவியல் ரீதியான தாக்கத்தைப் பற்றி சிறந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. (புணமாகி, 1990) இது குறிப்பாக சிறுவர்களை நிலை குலையச் செய்து அதிர்ச்சியடைய செய்யக்கூடும். சிறுவர் படை உறுப்பினர்களான சிறுவர்களே இதில் சம்பந்தப் பட்டுள்ளமையால் சிறுவர்களின் உளவியல் தேவைகளில் குறிப்பான கவனம் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடு உண்டு என்பதுடன் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றினைவு செயல்முறைத் திட்டத்தின் போது விடுதலைப் புலிகளின் ஏனைய உறுப்பினர்களது உளவியல் தேவைகளிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகள் தாம் இருந்த கடந்த 25 வருடகாலப்பகுதியில் சிவில் சமூகத்திற்கு மிகக் கடும் எதிரியாகவே இருந்தனர். விடுதலைப் புலிகள் குறித்து இம்மக்கள் மத்தியில் காணப்பட்ட காழ்ப புணர்ச்சியானது மிக உயர்வானதாக இருந்ததுடன், இதனால் முன்னாள் கிளர்ச்சியாளர்கள் நீண்ட காலத்திற்கு தடுத்து வைக்கப்பட வேண்டுமென பலர் விரும்பக் கூடும். தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர உறுப்பினர்கள் பலருக்கும் நீண்டகால சிறைத் தண்டணைக்கான குற்றத்தை தீர்ப்பளிப்பு வழங்கப்படுவதற் கான சாத்தியக் கூறுகள் உண்டு.

செயல்திறன் மிக்க புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவுத் திட்டம் ஒன்றின் குறைபாடானது அரச மீதான சுமையை நீடித்திருக்கச் செய்யும். அதேவேளை அரசால் நடைமுறையில் அனைத்து விடுதலைப் புலி உறுப்பினர்களையும் நிலைத் திருக்கும் தடுப்புக் காவலில் வைத்திருக்க முடியாது என்பதையும் கவனத்தில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வது கூட மிக முக்கியமானதாகும். ஓர் கட்டத்தில் இவ்வுறுப்பினர்களில் பலர் அரச சிறைக் காவலில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டியிருக் கலாம். ஆகவே முன்னாள் போராளி களுக்கும் சமூகத்திற்கும் மொத்தத்தில் நாட்டிற்கும் பயனளிக்கும் ஓர் வளமாகவே இந்த முன்னாள் போராளிகளை நடாத்துவது ஓர் சிறந்த விருப்பத்தேர்வாக அமையும். ஓர் வளமாக நடாத்தப்படு வதற்கு முன்னர் அவர்களுக்கு சிவில் சமுதாயம் ஒன்றில் வாழ்வதற்கு ஏற்ற வகையில் பயிற்சியளிக் கப்பட வேண்டி யுள்ளது. செயல்திறன் மிக்க புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு திட்டமானது அத்தகைய பயிற்சியையும் உதவியையும் உள்ளடக்கி இருக்கும்.

## சவால்கள்

வெற்றியளிக்கத்தக்கதோர் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவுத் திட்டத்தின் அமுல்படுத்தலானது முன்னாள் போராளிகளின் சாதாரண வாழ்க்கைக் கான முழுமையான மாற்றத்திற்கு துணை யாக அமையும் என்பதுடன் அதனூடாக இலங்கையிலும் நீடித்திருக் கத்தக்க சமாதானத்தினை உறுதிப்படுத்துவது இலகுவானதாயும் இருக்கும். மேலும் நிச்சயமாக ஓர் சவால்மிக்க கடமைப் பொறுப்பாகவும் அது அமையும் வெற்றி யளிக்கத்தக்கதோர் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒருங்கிணைவுத் திட்டத்தில் தடங்கல் செய்யக் கூடிய பிரச்சினைகள் சில பின்வருமாறு.

*சிவில் சமூகத்தில் காணப்படும் பகைமை* : பிறிதோர் இடத்தில் குறிப்பிடப்பட்டவாறு 3 தசாப்தங்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களுக்கு ஓர் எதிரியா கவே தொடர்ந்தும் இருந்து வந்துள்ளனர். தற்போது அரசாங்க சிறைக்காவலில் உள்ள விடுதலைப் புலி உறுப்பினர்களில் பலர் அவர்கள் (மக்கள்) மீது வன் முறையைப் புரிந்திருக்க கூடும். ஆகவே யுத்தத்தின் பின்னரான இந்நிகழ்முறையில் அவர்களை குற்றவாளிகளைப் போல் நடத்துவதற்கான தீய உணர்வு உயர்வான தாகவே காணப்படுகின்றது. கணிசமான அளவு காலத்திற்கு அவர்களை சிறையில் அடைத்து வைத்திருக்காமல் மீள் ஒருங் கிணைவுச் செயன் முறையானது; தவறான வழிகாட்டலுக்கு ஆட்பட்டவர் களாயும் துரதிஷ்டமான இளைஞர் களாகவும் அவர்களை நடத்துவத்துடன் சம்பந்தப் பட்டுள்ளதோடு அவர்களுக்கு உதவியையும் வழங்குகின்றது. நாட்டி லுள்ள இவ் ஊழியத் தாபனத்தை யும் உதவியையும் நாட்டிலுள்ள பொதுஜன அபிப்பிராயமானது அவசிய மற்றதாகவும் நியாயப் படுத்த முடியாததாகவும் நோக்க கூடும். முன்னாள் விடுதலை புலி உறுப் பினர்கள் புனர் வாழ்வு அளிக்கப்பட்டு மீள் ஒன்றிணைக்கப்பட வேண்டுமென் றும் மனதிலுள்ள எண்ணம் கூட சந்தேகத் துடன் நோக்கப்படக் கூடும் புனர் வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைப்புத் திட்டம் பற்றிய கருத்துக்கு பொதுஜன அபிப் பிராயம் பகைமைப் போக்குடையதாக வளருமாயின் இப்பிரச்சினையில் விஷேட கவனம் செலுத்துவதும் நம்பகத் தன்மை யான திட்டத்தினை நடை முறைப்படுத்து வதும் அரசாங்கத்திற்கு சிரமமான தாக அமையலாம். இதனால் நீடித்திருக் கத்தக்க சமாதானம் குறித்த வகையில் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு திட்டமொன்றின் முக்கியத்துவம் பற்றி பொது மக்களுக்கும் கூறிய கொள்கை வகுப்பாளர்களுக்கும் அறிவூட்டுவது அவசியமாகும்.

**பயனாளிகளின் மன உறுதி** :முன்னாள் விடு தலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர் வாழ்வளித்து அவர்களை மீள் ஒன்றி ணைப்புக்கான அரசாங்கத்தின் அழுத் தமான விருப்பம் மட்டும் வெற்றியளிக் கத்தக்க ஓர் திட்டத்தின் வலுவாக்கத் திற்கு போதுமானதாக அமையாது. முந்திய பிரிவினைவாத சித்தாந்தங்களையும் வன் முறைகளையும் தொலைதது ஒழிப்பதற்கும் மற்றும் சாதாரண குடிமக்களாக வாழ்க் கையை நடத்துவதற்கான விருப்பம் என்பவற்றிற்கான முன்னாள் போராளி களின் மனவுறுதியானது அத்தியாவசிய மான முன் நிபந்தனையாக அமைகின்றது. இக்குறிப்பிட்ட பயனாளிகள் இன்னமும் தனி அரசு எனும் இலக்கில் நம்பிக்கை கொண்டி ருப்பதுடன் வன்முறை நிறைந்த போராட்டம் மாத்திரமே சமுதாயத்தினை ஓர் திருப்திகரமான நிலைக்கு இட்டுச் செல்லும் என நம்புவார்களாயின் புனர் வாழ்வு மற்றும் சமுதாய மீள் ஒன்றி ணைவுத் திட்டமானது நிச்சயமாக தோல் வியடையும். ஆகவே தனியரசுக்கான இலக்கு நடைமுறைச் சாத்திய மற்றது என்பதனையும் வன்முறைக்கு ஊக்கமளிப் பது சமூகத்தினை மேலும் கூறு போடு வதற்கு மாத்திரம் வழி வகுப்பதோடு பொதுவான உறுதிபாட்டின்மைக்கும் வழிவகுக்கும் என்பதனையும் முன்னாள் போராளிகள் விளங்கிக் கொள்ளுமாறு செய்வது முக்கியமானதாகும். குறிப்பிட்ட இந்த நோக்கத்திற்கான இப்பயனாளிகள் யாதார்த்தத்தினைப் புரிந்துக் கொள்வ தற்கு நம்பகமான செயற்பாட்டாளர்களால் வழங்கப்படும் பொருத்தமான அரசியல் கல்வியறிவும் உதவும். போராளிகள் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு செயல்முறையை ஆர்வத்துடன் ஏற்றுக் கொள்வதற்கும் சாதாரன வாழ்வுக்குத் திரும்புவதற்கும் ஜனநாயக விழுமியங் கள் மற்றும் சட்ட ரீதியான அரசியல் நடைமுறைகள் என்பவற்றில் கொண் டுள்ள அதிகளவான நடவடிக்கை கூட் துணைபுரியும்.

**வளங்கள்** :முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்கள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு துணை புரிதல் என்பன கணிசமான அளவு செலவுடன் சம்பந்தபட்டதாகும். புனர் வாழ் வும் மீள் ஒன்றிணைவும் என்னும் விடயத் தில் சற்றே பாரியளவில் நிதிவளங்கள் தேவைப்படும். கல்வி, திறன்விருத்தி செயற்திட்டங்கள், ஆலோசனை வளங் கள், பணநன்மைகள் என்பவற்றுடன் சம் பந்தப்பட்டதாகும். மறுபுறத்தில் பெரு மளவிற்கு நீண்ட காலம் நீடித்த யுத்தத்தின தாக்கம் காரணமாகவும் மற்றும் பகுதி யளவில் உலக பொருளாதாரத்தின் பின்ன டைவு காரணமாகவும் இலங்கை தற் போது மிகக் கடுமையான நிதி நெருக் கடியை எதிர் நோக்கிக் கொண்டிருக் கிறது. சமகால நிதி நெருக்கடியின் காரணத்தால் நட்புறவு அரசுக்கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களில் தங்கியி ருக்கும் தன்மை அதிகரித்துள்ளது. அண்மையில்தான் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அரசாங்கம் ஓர் கடனைப் பெற்றுள்ளது. இப்பின்னணியில் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு திட்டத்திற்கான நிதிச் சுமையை அரசாங் கம் தனியே நிறைவு செய்வது இலகு வான விடயமல்ல. இங்குதான் சர்வதேச உதவி முக்கிய மானதாக அமைகின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஏதாவது ஒரு சமுதாயத்தில் மீள் ஒன்றிணைவுத் திட்டங்கள் வெற்றியடைய வேண்டுமா யின் இச்சுமையை கொடையாளிகள் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்பதனை சில அவதானிப்பாளர்கள் ஆதரித்துப் பேசுகின்றனர் (கிளார்க்-1995) கொடை யாளிகளின் உதவியானது நிதியுதவி மற்றும் நிபுணத்துவத்தினைப் பங்கிட்டு கொள்ளுதல் என்பவற்றின் வடிவில் வரக்கூடும். புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவு விடயத்தில் இலங்கைக்கு நிபுணத்துவ பற்றாக்குறை காணப் படுவதனால் இவ் மீள் ஒன்றிணைவுத் திட்டத்தின் வெற்றிக்கு சர்வதேச உதவி தேவைப்படும்.

**ஏனைய பிரச்சினைகளுடனான போட்டித் தன்மை**: இலங்கையில் புனர்வாழ்வு மற்றும் மீள் ஒருங்கிணைவுத் திட்டம் பெரும்பாலும் எதிர்கொள்ளும் முக்கிய மான பிரச்சினைகளாக கவனத்தை ஈர்ப் பதில் ஏனைய விடயங்களுடன் போட்டி யிடுவதில் காணப்படும் தவிர்க்க முடியாத தன்மை அமைந்துள்ளது எனலாம். பெரும்பாலும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு இலங்கை யில் பற்றாக்குறை இல்லை எனலாம் யுத்ததால் பாதிக்கப்பட்ட இடங்களை குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங் களிலுள்ள பிரதேசங்களை யுத்தத்தால் பாதிப்படைந்த இடங்களிலுள்ள சுமார் 300,000 உள் நாட்டில் இடம் பெயர்ந்தோரின் சேம நலனும் மீள் குடியேற்றமும் யுத்த காலத்தில் வடக்கிலிருந்து வெளி யேற்றப் பட்ட பெருந்தொகையான மக்களின் மீள்குடியேற்றம், வறுமை மற்றும் வேலை வாய்ப்பின்மை போன்ற அபிவிருத்திப் பிரச்சினைகளை கையாளுதல் என்பன இப்பிரச்சினைகளில் சிலவாகும். அரசாங் கத்தால் முன்னுரிமை அடிப்படையில் தீர்க் கப்பட வேண்டியுள்ள சரிநிகர் முக்கியத் துவம் வாய்ந்த பிரச்சினைகள் இவை யேயாகும். உதாரணமாக தற்போது முகாம்களிலுள்ள உள்ளூரில் இடம் பெயர்ந்த மக்கள் மீது பிரதான சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது. எனவே ஏனைய பிரச்சினைகளை விடுத்து புனர் வாழ்வு மற்றும் ஒருங்கிணைப்புத் திட்டங் களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டு மென்று எதிர்பார்க்கமுடியாது. முன்னாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகளின் உறுப் பினர்களின் மீள் ஒன்றிணைவுத் தேவைகளை நோக்கிய அரசாங்கத்தின் கவனத்தினை ஈர்த்தலானது ஒரு பிரதான கடமைப் பொறுப்பாகவே இருக்கும் இக் கணத்தில் தேவையாயிருப்பது எதுவெனில் இப் பிரச்சினைகளுக்கிடையில் ஓர் சம நிலையைக் காண்பதும் அவையனைத்துக் கும் போதியளவு கவனம் செலுத்து வதுமே ஆகும்.

**சமூகத்திற்கு மீளத்திரும்புவதற்கு சாதகமான ஓர் சூழலின் குறைபாடு:** முன்னாள் விடு தலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர் வாழ்வளித்து மீள ஒன்றிணைப்பதன் பின்னனியிலுள்ள நோக்கம் யாதெனில் அவர்களை தமது சொந்த சமூகங்களிடம் அனுப்பிவைப்பதாகும். எனவே மீள் ஒன்றிணைவானது முழுநிறைவான, மற்றும் சாதாரண சமூகம் ஒன்றில் தங்கியுள்ளது. குறிப்பாக வடக்கில் இன்று பொருத்தமான சமூகச் சூழல் நிலவவில்லை. குடும்பங்கள் பிரிந்த நிலையில் காணப்படுவதுடன் யுத்த காலத்தில் பெருந் தொகையானோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். நிலக் கண்ணிவெடி மற்றும் வெடிக்காத நிலை யில் காணப்படும் இராணுவச் சாதனங்கள் என்பவை காரணமாக பலர் தமது சொந்தக் கிராமங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையிலே காணப்படு கின்றனர். ஆகவே வெற்றியளிக்கத்தக்க மீள் ஒன்றிணைவிற்கு சாதகமான சமூகச் சூழல் ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை உண்டு. மேலும் சாதகமான சமூகச் சூழலை உருவாக்குதல் மற்றும் மீள் ஒன்றிணைவு என்பன ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்வதாக இருக்க வேண்டும்.

## புனர்வாழ்வுக்கும் மீள் ஒன்றிணை வுக்குமான நிகழ்ச்சிநிரல்

அதிகாரக் குழுக்கள், அக்கறையும் கவலையும் கொண்டுள்ள அரசியல் செயற்பாட்டாளரும் மற்றும் முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளின் மீள் ஒன்றினைவுப் பிரச்சனைகளுடன் சம்பந்தப் பட்டுள்ள அரசாங்க நிறுவனங்கள் போன்றவற்றால் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய ஓர் நிகழ்ச்சி நிரலை இப்பகுதி சுருக்கமாக முன்வைக்கிறது. இவ்விடயம் பற்றிய கருத்தாழம்மிக்க விவாதத்தின் ஓர் பகுதியையாவது இக் கட்டமைப்பு உருவாக்கக் கூடும் என நம்புகின்றோம்.

## மூன்று வழிகாட்டுத் தளங்களின் வரிசை அணுகுமுறை

யுத்தச் செயற்பாடுகளில் தமிழீழ விடுத லைப் புலிகள்: ஆண்கள், பெண் கள், சிறுவர்கள் ஆகியோரைப் பயன்ப டுத்தினர். இவர்களில் பெண்கள் அவர்க ளது மகளிர் அணியாகச் செயற்பட்ட துடன் அவர்களது யுத்த ஆற்றலின் ஓர் பகுதியாக சிறுவர் போராளிகளும் அமைந்திருந்தனர். யுத்தம் முடிவடைந்த போது சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பிர் களின் பெருந்தொகையானோர் பெண் களாயும் சிறுவர்களாயும் இருந்தனர்.

இப்பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் விசேட தேவைகள் உண்டு என்பதுடன் கவனிப்பும் தேவைப்படுகின்றது. உதாரண மாக முன்னாள் பெண் உறுப்பினர்கள் சமுதாயத்தில் முற்றிலும் வேறுபட்ட சற்றே மரபு ரீதியான இருப்பு நிலைக்கு தங்களை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது. (நைற் மற்றும் ஓசேடம் - 2004). தமது பேதமையையும், இளம்பிராயத்தினை யும் இழந்துள்ள நிலையில் முன்னால் வயது குறைந்த இப்போராளிகள் மீண்டும் சிறுவர்களாக நடத்தையை கொண்டிருக்க வேண்டுமென எதிர் பார்க்கப்படுகின் றது.கொயின் மற்றும் குட்... ஜில் - 1994). ஆகவே யுத்தத்திற்கு பின்னரான கால கட்டத்தில் பெண்களும் சிறுவர்களும் போன்ற நலிவுள்ள குழுக்களின் விசேட தேவைகளை இட்டு உணர்திறம் உடையதாக இருப்பது முக்கியமானது ஆகும். இதனால் அனைத்து முன்னாள் போராளிகளுக்கும் ஆன பொதுவான ஓர் கட்டமைப்பு பயனுடையதாக இருக்காது. வளர்ந்த ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் ஆகியோர் வேறுபட்ட தேவை கள், மனோ நிலைகள் மற்றும் சாதாரண சமுதாயம் ஒன்றில் பிரச்சனைகளைக் சமாளிப்பதற்கும் செயற்படுவதற்குமான ஆற்றல் என்பவற்றையும் கொண் டுள்ளனர். தேவைகளைக் பொறுத்த வரையில் வளர்ந்த ஆண்களுக்கு அதிக அளவான தொழில் பயிற்சி தேவைப்படும். ஆனால் சிறுவர்களுக்கு கல்வி அறிவே தேவைப்படும்.

சிறையில் அடைத்து வைத்திருக்கும் காலத்தில் சிறுவர்கள் குறிப்பாக நலி வடைந்தவர்களாக இருத்தல் கூடும். பிந்தெனுவெவப் படுகொலைக்கு வழி வகுத்த வயது குறைந்த முன்னாள் உறுப் பினர்களின் விசித்திறமான இயல்புகளில் கொள்கைவகுப்பாளர்கள் கவனம் செலுத்துவதில் காணப்பட்ட செயல்திறன் இன்மையே காரணமாக அமைந்தது எனலாம். ஆகவே வளர்ந்த ஆண்கள், பெண்கள் சிறுவர்களுக்கு என வேறுபட்ட மூன்று வழிகாட்டுத் தடங்களின் வரிசை யிலேதான் இத்திட்டமானது அமுல் செய்யப்பட வேண்டும்.

நான்கு படிநிலைகளைக் கொண்ட புனர் வாழ்வு மீள் ஒன்றினைவுச் செயன்முறை ஒன்றினைக் கூட நாம் முன்வைக்கிறோம்.

1) தடுப்புக் காவலின் கீழ் புனர்வாழ்வு
2) சமூகத்திற்கு மீளவும் திரும்பச் செய்தல்.
3) மீள் ஒன்றினைவு
4 அமுல் செய்யும் நிறுவனத்தினர் வெளியேற்றம்.

## தடுப்புக்காவலின் கீழ் புனர்வாழ்வு

முரண்பாட்டிற்குப் பின்னரான காலகட்டத் தில் முன்னாள் போராளிகளை சிறையில் அடைத்து வைத்தலுக்கு சார்பாகவும் எதிராகவும் கோட்பாட்டு ரீதியான விவாதங்கள் உண்டு. (நைற் மற்றும் ஓஷேடம்-2004) முன்னாள் கிளர்ச்சியாளர் களை கணிசமான காலத்திற்கு அரச சிறைக் காவலில் வைத்திருப்பதனை இலங்கையர்களில் பெரும்பான்மையினர் விரும்பக்கூடும். யுத்தம் முடிவடைந் துள்ளது எனும் உண்மை நிலையிலன் காரணமாக அரச சிறைக் காவலில் இருந்து தமது சிறுவர்களும் உறவினர் களுமாகிய விடுதலைப் புலிகள் அமைப் பில் இருந்தவர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென தமிழர்கள் விரும்பக்கூடும். அதிக தாமதமின்றி தமது சிறுவர்களை வீட்டிற்கு அனுப்பிவைக்க வேண்டுமென அதிகளவிலான தமிழ் மக்கள் கூறியுள்ள தனை இக் கட்டுரை ஆசிரியர் செவிமடுத் துள்ளார். முன்னாள் கிளர்ச்சியாளர்களுக் கான தண்டனை என்பது சிறைப்படுத்தி வைத்தல் ஆக இருக்க வேண்டுமென பெரும்பான்மையான மக்கள் விரும்பக் கூடும். ஏனெனில் முழுமையான பிரச் சினையை அவர்கள் ஓர் குற்றவியல் செயற்பாடாகவே நோக்குகின்றனர். பல தமிழர்களைப் பொறுத்த வரையில் இம் முரண்பாடானது அடிப்படையில் குற்ற வியல் தன்மையுடையதாக அமைந்திருக்க வில்லை என்பதுடன் கிளர்ச்சித் தலை மைத்துவத்தாலேயே அவர்கள் வன்முறைக் குத் தூண்டப்பட்டனர். எனவே பலியாட்கள் தண்டிக்கப்படக் கூடாது என அவர்கள் வாதிடுகின்றனர்.

கோட்பாடு ரீதியான விவாதம், வாதப் பிரதி வாதங்கள் மற்றும் எதிர்வாதங் களைப் பொருட்படுத்தாது ஓர் தண்டனை யாக அன்றி சாதாரண வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் முன்னாள் கிளர்ச்சி யாளைத் தயார்படுத்துவதற்கான ஓர் சந்தர்ப்பமாகவே இதனைச் சில புனர் வாழ்வு என அழைக்கவும் கூடும். அவர் களை குறிப்பிட்ட காலத்திற்கு சிறையி லேயே வைத்திருக்க வேண்டுமென இக் கட்டுறை ஆசிரியர் விரும்புகின்றார். போராளிகள் திரும்பிச் செல்ல உள்ள சமூகங்கள் மீதான அதன் சாத்தியப்படத் தக்கதான எதிர்மறையான தாக்கம் காரணமாகவே முன்னாள் போராளிகளின் உடனடி விடுதலையானது உசிதமான தல்ல. முன்னாள் உறுப்பினர்களில் பலர் விடுதலைப் புலிகள் அமைப்பில் கணிச மான அளவு காலத்தினைச் செலவிட்டு உள்ளனர். இதனால் அவர்கள் வன்முறை இயல்படனே சமூகமயமாக்கப்பட்டுள் ளனர் எனலாம். சிவில் சமூகமொன்றில் வாழ்வதற்கான திறன்கள் அவர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது. சிவில் சமூக மயமாதலிலுள்ள குறைபாடானது அதனைக் கையாள்வதில் சமூகங்களுக்கு சிரமமாகத் தோன்றலாம். இது வன்முறை நடத்தைப் பிரச்சினைகளுடன் ஏனைய பாலியல் மற்றும் குற்றவியல் பிரச்சினை கள் என்பவற்றிற்கும் வழிவகுக்கக் கூடும். ஆகவே அரசியல் காரணங்களுக்காக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையில் வைத்திருக்கும் காலகட்டத்தில் கூட சாதாரண வாழ்க்கைக்கு ஏற்றவகையில் புலி உறுப்பினர்களை சமூகமயமாக்குவதற்கு பயன்படுத்த முடியும். சட்டரீதியான செயல்முறை முன்னெடுக்கப்படுமாயின் விடுதலை புலிகளில் இருந்த அக்கிளர்ச்சியாளர்களின் பதவி நிலை மற்றும் அவர்களது ஈடுபாட்டின் அளவு என்பவற்றைப் பொறுத்து நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்படும் போது அத் தீவிரவாதிகளுக்கு வேறுபட்ட சிறைத் தண்டனைகள் கூட தீர்ப்பளிக்கப் படலாம். அரசியல் காரணங்களுக்காக சிறை வைத்தலானது நபர் ஒருவர் புனர்வாழ்வு பெறுவதற்கான தன்னம்பிக்கையை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கும் வகையில் குறுகிய காலமாகவே இருக்க வேண்டும். அதேவேளை அக்கால கட்டமானது புனர்வாழ்வுச் செயன் முறையை பூர்த்தி செய்வதற்கு ஏற்ற வகையில் நீண்டகாலம் போதுமானதாகவும் அர்த்தம் உடையதாகவும் இருத்தல் வேண்டும். மேலும் தடுத்து வைத்திருக்கும் காலத்தினை முடிவு செய்வதில் விடுதலைப் புலி உறுப்பினர்களின் வன்முறை சார்ந்த போராட்டத்தை நோக்கிய உள்ளார்ந்த ஈடுபாடானது ஓர் காரணியாக இருக்க வேண்டும். அதிகளவு அர்ப்பணிப்புடைய உறுப்பினகளிடையே தமது மரபு ரீதியான நம்பிக்கைகளை தொலைத் தொழிப்பதற்கும், புனர்வாழ்வை ஆர்வத்துடன் ஏற்றுக் கொள்வதற்கும் அவர்களுக்கு அதிகளவு காலம் தேவைப்படக் கூடும்.

புனர்வாழ்வுச் செயன் முறையானது பிரதானமாக அரசியல் காரணங்களுக்காக சிறையில் வைத்திருக்கும் காலகட்டத்தில் இடம்பெறுகிறது. அரச சிறைக்காவலின் கீழ் தற்போது உள்ள உறுப்பினர்களின் கல்வித் தகைமை பற்றிய சரியான விபரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. ஆகவே அரச சிறைக்காவலின் கீழ் உள்ள அனைத்து முன்னாள் கிளர்ச்சியாளர்களுக்கும் அடிப்படைக் கல்வி வழங்கப்படுவது உசிதமானதாக இருக்கும். அது தொற்றுநோய்களைத் தடுத்தல் உட்பட்ட உடல் நலக் கல்வியினைக் கூட உள்ளடக்க வேண்டும். கிளர்ச்சியாளர்களில் கூட குறைந்த பட்சம் சிலர் ஏனையோரை விட அதிகளவு கல்விக் கற்றவர்களாக இருப்பதற்கான சாத்தியப்பாடு உண்டு. இவ்வுறுப்பினர்கள் எவ்விடத்தில் தமது படிப்பை கைவிட்டனரோ அவ்விடத்திலிருந்தே அதைத் தொடர்வதற்கான சந்தரப்பங்கள் அவர்களுக்கு வழங்கப்படக் கூடும். உயர்வான இலக்கினை அவர்கள் கொண்டிருக்க கூடிய தன் நம்பிக்கையை அவர்களுக்கு இது வழங்கும். இவ்வருடம் தடுப்புக் காவலில் உள்ள முன்னாள் விடுதலைபுலி உறுப்பினர்கள் பலர் க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். மனதிலுள்ள இம்மெய்ப் பொருளியளுடன் இது பெரும்பாலும் மேற்கொள்ளப்பட்டது. வயது குறைந்த முன்னாள் போராளிகள் வேறுப்பட்டபடி நிலைகளில் பாடசாலைகளை விட்டு விலகியிருக்கக் கூடும். அனைத்துச் சிறுவர்களுக்கும் ஒரே மட்டத்திலான அடிப்படைக் கல்வியை வழங்குவது அறிவுக்கு ஒவ்வாததாக அமையும். சிறுவர்களுக்கு பொருத்தமான அளவு கல்வியறிவு வழங்கப்படல் வேண்டும். அவசியமான ஆலோசனை வழங்கல் உதவிகள் இம்மூன்று குழுவினருக்கும் பயிற்சி பெற்ற ஆலோசனை வழங்குனர்களால் வழங்கப்படவேண்டும்.

சிவில் சமூகமயமாக்கமானது புனர்வாழ்வுச் செயன் முறையின் ஓர் முக்கியமான கூறாக இருக்க வேண்டும். இதனுடன் சம்பந்தப்பட்டுள்ள மூன்று பிரிவுகளுக்கும் இது தேவைப்படுகின்றது. ஜனநாயக கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் செயற்பட்ட மிகவும் வன்முறை வாய்ந்த அமைப்பொன்றின் அங்கத்தவர்களாக இருப்பதன் மூலம் பெருமளவிற்கு ஜனநாயக கோட்பாடுகளில் நம்பிக்கை வைத்துள்ள ஓர் சாதாரண சமூகத்தின் பிரஜைகளாக இருப்பதற்கான செயலாற்றலை இவ்வுறுப்பினர்கள் இழந்துள்ளனர். ஆகவே சாதாரண சமூகமொன்றின் பிரஜைகளாக இருப்பதற்கு தேவைப்படும் திறன்களை புனர்வாழ்வு செயன்முறைக் காலத்தில் அவர்களுக்கு வழங்கவேண்டியுள்ளது. இச்சிறுவர்களுக்கு மிகவும் பலமான சிவில் சமுதாயமாக்க செயல்முறைகள் தேவைப்படக் கூடும்.

புனர்வாழ்வுச் செயன்முறையின் ஒரு முக்கியமான பகுதியாக தொழிற்பயிற்சி இருக்க வேண்டும். இத்தொழிற்பயிற்சியானது இலக்காக உள்ள குழுவினர் தன்னம்பிக்கையுடன் சமூகத்திற்குத் திரும்பிச் செல்வதற்கும் தொழில் வாய்ப்பைத் தேடிக்கொண்டு ஓரிடத்தில் சிவிலியன்களாக நிலையாக வசிப்பதைச் சாத்தியப் படுத்துமாயினும் ஆண்களுக் கும் பெண்களுக்கும் வேறுபட்ட தொழிற் பயிற்சிகள் தேவைப்படக் கூடும் என்பதை விளங்கிக் கொள்வது அவசியமான தாகும். உதாரணமாக இலங்கையில் தச்சுத் தொழில், மின்னியல் சார்ந்த தொழில், வாகனம் செலுத்துதல், மீன்பிடி, விவசாயம் என்பன ஆண்களுக்கான பிரபல்யமான தொழில்களாக உள்ளன. ஆகவே தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆண்களால் இவை விரும்பப்படக்கூடும். மீன்பிடியும், விவசாயமும் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் பொருளாதார செயற்பாடுகளுக்கான பிரதான வழிமுறையாக அமைந்துள்ளது. உதாரணமாக விவசாயம் மற்றும் மீன்பிடி என்பவற்றிற்கான நவீன தொழில் செயல் முறை ஆற்றல்களை வழங்கும் வழி முறை மூலம் இவ்விருதுறைகளுக்கும் சிறப்பு முக்கியத்துவம் கொடுப்பது நீண்ட காலத்தில் பயனுள்ளதாக அமையக் கூடும். நாட்டின் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகணங்களில் கலாச்சாரம் மற்றும் பொருளாதார பின்னணியை கவனத்தில் கொள்கையில் தையல், கைவினைப் பொருள் தயாரிப்பு சிறு வியாபாரங்கள், ஆரம்ப மட்ட கற்பித்தல் என்பவற்றிலான பயிற்சிகள் பெண்களால் விரும்பப்படக் கூடும். உண்மையில் புனர்வாழ்வுச் செயல்முறைக் காலத்தில் போதுமான பயிற்சியை பெற்றுக் கொள்வதன் மூலம் தாம் நுழைவதற்கு விரும்பும் துறைகளைப் பற்றிய கற்றறிந்த தீர்மானத் தை மேற்கொள்வதற்கான வாய்ப்பு இவ் விலக்குக் குழுவிற்கு வழங்கப்படல் வேண்டும். தமது விருப்பு, உள்ளூர்க் கேள்வி போன்றவற்றைப் பற்றிய விளக்கத்தை பயனாளிகள் தெளிவான வகையில் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் பெரும்பாலும் திரும்பிச் செல்லக்கூடிய துறைகளில் மேற்கொள்ளப்படும் முறையான ஆய்வை அடிப்படையாகக் கொண்ட உள்ளீடானது தேவைப்படும். பயிற்சி பற்றிய கற்றறிந்த தீர்மானத்தை மேற்கொள்வதற்கு பயனாளிகளுக்கு உதவும் முக்கிய விடயம் எதுவெனில் புனர்வாழ்வு செயல்முறைக் காலத்தில் வழங்கப்படவுள்ள தொழிற் பயிற்சியானது கேள்வியால் உந்தப்பட்டதாகவும், பயனாளிகளின் கற்றறிந்த தீர்மானத்தை மையமாக கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்பதாகும் (கிங்மா - 1997). உதாரணமாக சிறுவர்களுக்கான பயிற்சியானது பாட்டுப்பாடுதல், இசை, நாடகம், யோகாசனம் முதலானவற்றை உள்ளடக்க வேண்டும்.

சமயமும் ஆன்மீகமும் இலங்கையர் வாழ்க்கையில் குறிப்பிட்ட அர்த்தத்தை கொண்டுள்ளதுடன் மக்கள் தனிப்பட்ட ரீதியில் பொருளாதர ரீதியாக மற்றும் சமூக ரீதியாக சவால்களுக்கு முகம் கொடுக்கும் போது அடைக்கலம் பெறுவதற்காகவும் மதத்தை நாடுகின்றனர். ஆகவே புனர்வாழ்வுக் காலத்தில் ஆன்மீகம் சார்ந்த செயல்பாடுகளுக்கான போதுமான காலத்தையும் சுதந்திரத்தையும் தோற்றுவிப்பதுடன் முன்னாள் கிளர்ச்சியாளர்கள் சம்மதிப்பார்களாயின் தியானம், யோகாசனம் போன்றவற்றிலும் அவர்களுக்கு பயிற்சியளித்தல் என்பன வெற்றியளிக்கத்தக்க மீள் ஒன்றிணைவின் குறிக்கோளுக்கு துணையாக அமையக் கூடும்.

## சமூகங்களுக்குத் திரும்பிச் செல்லுதல்

புனர்வாழ்வின் பின்னணியில் உள்ள நோக்கம் எதுவெனில் முன்னாள் கிளர்ச்சியாளர்கள் சாதாரண குடிமக்களாக வாழ்க்கையை மீண்டும் தொடங்கக் கூடிய இடமாகிய அவர்களது சொந்தச் சமூகத்துடன் அவர்களை மீள்ஒன்றிணைப்பதாகும். ஆகவே முடிந்தளவு விரைவாக அவர்களை வீடுகளுக்கு அனுப்ப வேண்டும். இருந்த போதிலும் வெற்றி அளிக்கத்தக்க மீள் ஒன்றிணைவுத் திட்டமொன்றிற்கு அறிவும் பயிற்சியும் மாத்திரம் துணை புரியாது. அவர்களது மீளத் திரும்பிச் செல்லும் செயற்பாட்டை நலிவுறாது நீடித்திருக்கச் செய்வதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1: முன்மொழியப்பட்ட புனர்வாழ்வு மற்றும் மீள் ஒன்றிணைவுக் கட்டமைப்பு

| வழிகாட்டுத் தள வரிசை | புனர்வாழ்வு | சமூகத்திற்குத் திரும்பிச் செல்லல் | மீள் ஒன்றிணைவு | நிறுவனத்தின் வெளியேற்றம் |
|---|---|---|---|---|
| வளர்ந்த ஆண்கள் | அடிப்படைக் கல்வி சிவில் சமூகமயமாக்கம் ஆலோசனைவழங்கல் மற்றும் தச்சுவேலை, மின் இணைப்பு, வாகனம் செலுத்துதல், மீன்பிடி, விவசாயம், மத்தியஸ்தம் போன்றவற்றில் பயிற்சிகள் | பணக்கொடுப்பனவு மற்றும் காணி, வீடமைப்புக்கான பொருட்கள், கடன், தேசிய அடையாள அட்டை, வங்கிக் கணக்கு, முதலானவை உட்பட ஏனைய உதவிகள் | கண்காணிப்பு மட்டுப்படுத்தப்பட்ட உதவி | மெதுவாக மற்றும் படிப்படியாக வெளியேறல் |
| பெண்கள் | அடிப்படைக் கல்வி சிவில் சமூகமயமாக்கம் ஆலோசனைவழங்கல் மற்றும் தையல், கைவேலை, சிறு வியாபாரம், ஆரம்பக் கல்விப் போதனை, மத்தியஸ்தம் போன்றவற்றில் பயிற்சிகள் | பணக்கொடுப்பனவு மற்றும் தையல் இயந்திரம், சமையற் பாத்திரங்கள் முதலானவை உட்பட ஏனைய உதவிகள் | கண்காணிப்பு மட்டுப்படுத்தப்பட்ட உதவி | மெதுவாக மற்றும் படிப்படியாக வெளியேறல் |
| சிறுவர்கள் | பொருத்தமான கல்வி சிவில் சமூகமயமாக்கம் ஆலோசனைவழங்கல் மற்றும் பாட்டுப் பாடல், சங்கீதம், நாடகம், யோகாசனம் போன்றவற்றில் பயிற்சிகள் | பாடசாலைக்குச் செல்வதற்கு உதவுதல் மற்றும் புத்தகப் பைகள், புத்தகங்களும் ஏனைய கற்றல் உபகரணங்களும், சேமிப்புக் கணக்கு முதலானவை உட்பட உதவிகள் | கண்காணிப்பு மட்டுப்படுத்தப்பட்ட உதவி | மெதுவாக மற்றும் படிப்படியாக வெளியேறல் |

அவர்களுக்குப் பொருள் உதவிகள் தேவையாக உள்ளன. இல்லையேல் எதிர்காலத்தில் எப்போதாவது சட்ட விரோதமான மற்றும் நெறிகெட்ட வழி முறைகளில் வளங்களைத் திரட்டுவதற்கு அவர்கள் கட்டாயப்படுத்தப்படுவர். ஆகவே சமுதாயத்திற்குத் திரும்பிச் செல்லல் செயற்பாடானது அரசாங்கத் திடமிருந்து அல்லது அமுலாக்கல் நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் பொரு ளுதவியுடன் இணைக்கப்படல் வேண்டும். உதாரணமாக முன்னாள் கிளர்ச்சியாளர் களின் புனர்வாழ்வு, மீள் ஒன்றிணைவு பிரச்சினைகள் பற்றி மேற் கொள்ளப்பட்ட அநேகமான ஆய்வுகள் தமது சமூகங்களுக்கத் திரும்பிச் செல்லும முன்னாள் உறுப்பினர்களுக்கான ஆரம்ப பணக்கொடுப்பனவை பரிந்துரை செய் கின்றன (கிளார்க்-1995,ஓசேர்டம்- 2002). சமூகத்தில் தங்களை நிலை நிறுத்திக் கொள்வதற்காக முன்னாள் கிள்ர்ச்சியாளர் களின் உண்மையான தேவைகளுக்கேற்ப காசு இடைச்செருகல் என பொதுவாக அழைக்கப்படும் ஒன்றுக்கு பொறுப்பேற் கப்பட வேண்டும்.

சிறுவியபாரத்தை ஆரம்பிப்பதற்கான சந்தரப்பம் ஒன்றை வழங்கும் நோக்குடன் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட உறுப்பினர் களுக்கு கூட சாதனை வழங்கமுடியும். ஆயினும் வர்த்தக நிறுவனங்களில் முதலிடுவதில் முன்னாள் கிளர்ச்சி யாளர்கள் வெற்றிப் பெற்றவர்களாக உள்ளனர் என்பதை நிரூபிப்பதற்கான சான்றுகள் சிறிதளவே காணப்படுகின்றன என்பது கல்விமான்களின் அபிப்பிராய மாகும். ஆகவே முதலீட்டுக்கான பண இடைச் செருகல் மேற்கொள்ளப்படு மாயின் அது முதலீடு மற்றும் சிறுவியா பாரம் என்பவற்றினை பொருத்தமான பயிற்சியுடன் இணைந்ததாக இருக்க வேண்டும். மேலும் அவசியமெனில் பெரும் சிரமமின்றி வாழ்க்கையைத் தொடங்குவதற்கு காணி, வீடமைப்பு கடனடிப்படை, வீட்டு உபகரணங்கள் என்பவற்றை கூட புனர்வாழ்வளிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும். தற்கால இலங்கை சமூகத்தில் வாழ் வதற்கு கட்டாயம் தேவையாகவுள்ள தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கிச் சேமிப்புக் கணக்கு போன்ற ஏனைய அவசியமானவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு கூட முன்னாள் கிளர்ச்சி யாளர்களுக்கு உதவவேண்டியுள்ளது.

சமூகத்திற்கு மீளத்திரும்பும் விடயத்திலும் கூட முன்னாள் சிறுவர் போராளிகளின் தேவைகள் வேறுப்பட்டவையாகும். அவர் கள் சமூகத்துடன் மீள் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பது மாத்திரமன்றி பாடசாலைகளிலும் சேர்த்துக் கொள்ளப் பட வேண்டியவர்களாகவும் இருக்கின் றனர். இது எளிதாகக் கையாள முடியாத கடமைப் பொறுப்பாக நிரூபிக்கப்பட கூடும். திரும்பிச் செல்வதற்கான குடும்பங் களையும் உறவினர்களையும் கொண் டுள்ள சிறுவர்களுக்குப் பாடசாலையில் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வெற்றியளிக்கத்தக்கதாக கல்விப் பயிற்சிக்குத் தேவைப்படும் புத்தகங்களும் ஏனைய கருவிகளும் வழக்கப்படுதல் என்பவற்றிற்கு உதவவேண்டிய தேவை யுள்ளது. தமது பெற்றோர்களை இழந் துள்ளதுடன் இவர்கள் மீளவும திரும்பிச் செல்வதற்கு உறவினர்கள் யாரும் இல்லாத நிலையில் இருக்கும் இவர் களுக்கு அதிவிசேட ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். இது வடக்கில் குடியிருப்புக்களை அமைப்பதனையும் உள்ளடக்கியதாகும். சிறுவர்களின் சொந்த இடங்களுக்கு அப்பாலுள்ள புகலிடங்கள் கலாச்சார முரண்பாடுகள் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் போன்றவற்றைக் குறித்த வகையில் பிரச்சினைகளுக்கு உரியனவாக அமைதல்கூடும். அவர்களது வாழ்க்கை யினை அர்த்தம் பொதிந்துள்ளதாக அமைப்பதற்கு இச் சிறுவர்களது பெயரில் வங்கிகளில் பணவைப்புகளை வைப்பீடு செய்ய முடியும்.

**சமூகத்துடனான மீள் ஒன்றிணைவு**

முன்னாள் கிளர்ச்சியாளர்கள் தம் சமூகத்திற்கு மீளவும் திரும்பிச் செல்லும் போது அவர்களைத் தமது சமூகங்களில் மீண்டும் ஏற்றுக் கொள்வதற்கான தயார் நிலையுடன் இணைந்த தொடர்ச்சியான உதவியானது, வெற்றியளிக்கத்தக்க

*தொடர்ச்சி 48ம் பக்கம் ......*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களது மீள்குடியேற்றமும் சமாதானத்தை வெற்றிகொள்ளலும்

கலாநிதி பாலித ரீ. பீ. கொஹொன

*ஐக்கிய நாடுகளுக்கான இலங்கைத் தூதுவரும், நிரந்தரப் பிரதிநிதியும்*

## அறிமுகம்

இலங்கையானது அண்மைய வருடங்களில் இடம்பெயர்ந்த நபர்களுடன் தொடர்புடைய பெரும் அழிசெயல் இயல்பு வாய்ந்த அனுபவங்களின் வரிசைத் தொகுதிக்கு உட்பட்டிருந்தது. 2004ஆம் ஆண்டு டிசம்பரில் நத்தார் பண்டிகைக்கு மறுதினம் எமது கடற்கரைகளை ஊடறுத்து பொங்கியெழுந்த சுனாமியால் சில நிமிடங்களுக்குள் ஒரு மில்லிய னுக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயரச் செய்யப்பட்டனர். சுமார் 34,000 பேர் இறந்து போனமை பற்றிப் புதிதாகக் குறிப்பிட வேண்டியதில்லை. அண்ணளவாக 97,000 வீடுகள் அழிக்கப்பட்டன, அல்லது சேதமடைந்தன. சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான சிறு வியாபாரங்கள் அழிந்து போயின. 2007ஆம் வருடத்தில் பாதுகாப்புப் படைகள் பயங்கரவாத தமிழீழ விடுதலைப் புலிகளைக் கிழக்கு மாகாணத்திலிருந்து வெளியேற்றியபோது, சுமார் 187,000 நபர்கள் இடம்பெயர்ந்தனர். மிக அண்மையில் விடுதலைப் புலிகள் வன்னியில் குடியிருப்பவர்களை மனிதப் பண்புகளே அற்றவகையில் கூட்டமாக முல்லைத்தீவுக்குக் கொண்டுசென்றதுடன், பின்னர் அவர்களை மனிதக் கேடயங்களாகவும், அழிவார்ந்த பணயக்கைதித் தந்திரமொன்றின் பேரம் பேசல் துருப்பாகவும் பயன்படுத்திய போது சுமார் 294,000 நபர்கள் வரை இடம் பெயர்ந்தனர். இதனைத்தொடர்ந்து இம்மக்கள் அனைவரும் பாதுகாப்புப் படையினரால் மீட்டெடுக்கப்பட்டனர். தற்போது அவர்களில் அநேகர் அரசாங்கத்தால் நிருவகிக்கப்படுகின்ற இடைத் தங்கல் முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் சுனாமியால் இடம்பெயர்ந்த அனைவரும் கடந்த மூன்று வருட காலத்தினுள் தமது வீடுகளுக்கு அல்லது சிலவேளைகளில் முன்னரைவிட வசதிமிக்க வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர் என்பது கவனத்தையீர்க்கும் ஒரு விடயமாகும். சில பிரதேசங்களில் புனர்நிர்மாணமானது 110 சதவீதத்தினைக் கூடத் தாண்டியுள்ளது; வியாபாரச் செயற்பாடுகளில் பெரும்பாலானவை மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதிகளவு முன்னேற்பாடுகளுடன் எதிர்பார்க்கப்பட்ட கொள்ளை நோய்த் தாக்கமும் வேறு நோய்களும் ஏற்படவில்லை. மக்கள் தேவைக்கு அதிகமான காலம் முகாம்களில் சோர்வூட்டும் சூழ்நிலைகளுக்குக் கீழ் வாழவில்லை. ஏனெனில் இலங்கையின் நன்கு விருத்தியடைந்த சுகாதார சேவைகள் மற்றும் இந்நாட்டு மக்களின் பரோபகாரச் சிந்தனை என்பனவே இது சாத்தியப்படக் காரணமாயின. இலங்கையின் சேவைகள் உட்கட்டமைப்பானது அழுத்தங்களுக்கு எதிராகத் தனிச் சிறப்புடையவகையில் பாதுகாப்புடையதாகவே காணப்படுகின்றது. சர்வதேசச் சமூகத்திடமிருந்தும், வெளிநாடுகளில் வசிக்கும் நலன்விரும்பிகளிடமிருந்தும் குறிப்பிடத்தக்களவு உதவி கிடைத்தது. அவ்வாறே, கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தமது சொந்த வசிப்பிடங்கட்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். சில வேளைகளில் உள்ளார்ந்த ஐயப்பாடுகள் யாவும் வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் கூட, இவ் அகதிகள் தமது கிராமங்களுக்கும் பட்டினங்களுக்கும் வெற்றிகரமாகத் திரும்பிச் சென்றுள்ளனர். கண்ணிவெடிகள் துப்புரவு செய்யப்படுவதுடன், ஒருங்கிணைந்த சேவைகளுடன் அவர்களது கிராமங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதும் வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் சாத்தியப்படத்தக்க அளவு விரைவாகத் தமது சொந்த வசிப்பிடங்களுக்குத் திரும்புவர் என்பதனை நம்பிக்கையுடன் கூற முடியும்.

27 வருடகால இரத்தக்களரிகள், படுகொலைகள் மற்றும் அடிக்கடி நிகழ்கின்ற ஏமாற்றங்கள் என்பவற்றின் பின்னர் யுத்தத்தினை வெற்றி கொள்வதென்பது ஈடிணையற்ற ஒரு சாதனையாக அமைந்தது. நம்பிக்கையூட்டும் வகையில் நாம் அதனை மேற்கொண்டதுடன், கணிசமான அளவு சுயமாகவே இதனை வெற்றி கொண்டோம். பிரதிகூலங்களை வேண்டுமென்றே மிகக் கவனமாகச் செயற்பட்டு, பொருட்படுத்தாது விட்டிருந்தோம். எழுத்து வடிவிலான மற்றும் கோரப்படாத ஆலோசனைகளையும் நாம் அலட்சியம் செய்திருத்தல்கூடும். ஆனால் இறுதி அங்கமானது அளவுகடந்த நம்பிக்கையூட்டும் திறனுடையதாகவே அமைந்திருந்தது. துப்பாக்கிகள் மௌனமாகியமை, அரசாங்கத்துக்கான ஆதரவின் உணர்ச்சி வெளிப்பாடு, பங்குச் சந்தையில் காணப்பட்ட சாதனை மிகுந்த மேல்நோக்கிய நகர்வு, அதிகரித்த வகையிலான உள்நோக்கிய முதலீட்டுப் பாய்ச்சல்கள் என்பவற்றைத் தொடர்ந்து தேசத்தினை மேவிச் சென்ற மகிழ்ச்சிப் பெருக்கால் சான்றளித்துக் காட்டப்பட்டவாறு எமது வெற்றியானது நாட்டில் அதிக தன்னம்பிக்கையை உரு வாக்கியுள்ளது. மாகாண சபைத் தேர்தல்களை உறுதியான முறையில் ஒரு தொடராக வெற்றி கண்டு அரசாங்கமானது தனது ஆதரவுத் தளத்தினைத் தொடர்ந்தும் விரிவடையச் செய்துள்ளது. உண்மையில் 5 வருடங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்த பின்னர் எந்தவோர் அரசாங்கமும் மிக அதிகளவிலான பிரபல்யமான ஆதரவினை அனுபவித்திருக்கவில்லை. ஆயினும் இந்த நாட்டிலுள்ள மக்களில் மிகப் பெரும்பான்மையானோர் ஜனாதிபதி மேதகு மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு ஆதரவாகவே உள்ளனர் என்பதில் மிகக் குறைந்தளவான சந்தேகமே உண்டு. அரசியல் ரீதியான இந்த நம்பிக்கையானது நீடித்திருக்கத்தக்க சமாதானம் மற்றும் பொருளாதாரச் செயற்பாடாக மாற்றப்பட வேண்டும். எமது பாதுகாப்புப் படைகளதும் மற்றும் இராஜதந்திரம் என்பவற்றினதும் வெற்றியானது உலகம் முழுவதும் குறிப்பிடத்தக்க அளவு பாராட்டுக்குத் தூண்டுதல் அளித்துள்ளதுடன், அது சரியானமுறையில் முகாமை செய்யப்படுமாயின் சில வேளைகளில் மனக்கசப்புக் காணப்பட்டபோதும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய பயன்களைத் தரலாம். ஏனைய நாடுகளில் கூட மிக அதிகளவான நுண்ணறிவு வாய்ந்த படைகள், மேம்பட்ட கருவிகள், கணிசமானளவு அதிகரித்த வளங்கள் என்பன தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தும் பயங்கரவாதக் குழுக்கள் உலகின் எங்கோ ஓரிடத்தில் ஓர் அச்சுறுத்தலாகத் தொடர்ந்தும் இருந்துவருகின்றனர். ஏனைய இடங்களில் உள்ள பொதுமக்களின் இடப்பெயர்வு அதிகளவு விமர்சனத்துக்குத் தூண்டுதலளிக்காது தொடர்ந்தும் இருந்துவருகின்றது. அண்மைய வாரங்களில் பாகிஸ்தானில் அண்ணளவாக 250,000 மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். உலகம் பூராவும் 26 மில்லியனுக்கு மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்கள் காணப்படுகின்றனர்.

## இடம்பெயர்ந்தோரைப் பராமரித்தல்

சமாதானத்தைப் பலப்படுத்திப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதோடு, தெற்கில் தேவேந்திரமுனை தொடக்கம் வடக்கில் காங்கேசன்துறை வரையுமுள்ள இடங்களில் உள்ள எமது மக்கள் அனைவருக்குமான செல்வச்செழிப்பை உறுதிப்படுத்துவதே எமது அடுத்த சவாலாகும். சுனாமியை கையாண்டதையும் யுத்தத்தினை வெற்றி கொண்டதையும் போல, இது ஊக்கம் இழக்கச்செய்வதும் சிக்கல் வாய்ந்ததுமான கடமைப்பொறுப்பாக இருப்பதுடன், வேறுபட்ட அணுகுமுறைகளின் தொகுதியொன்று இதற்குத் தேவைப்படும். சுனாமியில் இருந்து அண்ணளவாக மூன்று வருடத்தினுள் கணிசமான அளவு நாம் மீட்சி அடைந்துள்ளோம். அதை எமக்கு ஞாபகம்செய்யும் ஓர் அடையாளம் கூட நிலைத்திருக்கவில்லை. அவ்வாறே, எமக்குப் பின்னணியிலுள்ள அனுபவத்தைக்கொண்டு, நாட்டிலுள்ள அனைவரதும் நம்பிக்கைளையும் வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கும், எமது மக்கள் அனைவர் மத்தியிலும் உள்ள இலங்கையின் முரண்பாடானது உண்மையில் முடிவுக்கு வந்துவிட்டது என்பதில் ஐயப்பாடுகளைத் தமது மனங்களில் கொண்டிருப்பவர்களை இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியானது அனைத்து மக்களுக்கும் பாகுபாடின்றிப் பயன்தரும் என்பதனை நம்பச்செய்தல், இடம்பெயர்ந்த பல ஆயிரக்கணக்கானோரைப் பராமரிப்பதுடன் சிறந்த ஜீவனோபாய வாய்ப்புக்களுடன் அவர்களைத் தமது சொந்த வசிப்பிடங்களுக்கு அனுப்பிவைப்பதற்கும், முதலீட்டு மூலதனத்தினை உருவாக்குவதற்கும் ஒவ்வொரு தனிநபர்களினதும் கௌரவம் மதிக்கப்படுவதுடன் அவர்களது உண்மையான உள்ளார்ந்த ஆற்றல்கள் முழுமையாக உணரப்படுவதுமாகிய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழலொன்றை உருவாக்குதல் என்பவற்றை எம்மால் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும். சுனாமியில் தப்பிப்பிழைத்தவர்களது வாழ்க்கையை நாம் வழமை நிலைக்குக் கொண்டு வந்துள்ளோம். தற்போது முரண்பாட்டில் தப்பிப் பிழைத்தவர்களது வாழ்க்கையை வழமையான நிலைக்குக் கொண்டுவரவேண்டியுள்ளது. எம்மால் தோற்றுவிக்கப்படாத ஒரு முரண்பாட்டின் காரணமாக கடந்த 27 வருடங்களுக்கு மேலாக எமது வளங்கள் குறைந்தளவிலேயே தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன; மேலும் யுத்தச் செயற்பாடுகளுக்காக இவை திசைதிருப்பப்பட்டன. சிலவேளைகளில் ஒழுங்கற்றவகையில், வர்த்தக நிறுவனங்கள் நிலைத்திருப்பதற்கு மிகக் கடும் முயற்சி செய்தன; சுற்றுலாத் துறையும் உள்நோக்கிய முதலீடும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன; எமது இளைஞர்களில் உயர் தனிச்சிறப்புடையவர்கள் துணிச்சலுடனும் சுய விருப்பார்வத்துடனும் யுத்தமுனைக்குச் சென்றனர்; பலர் தமது பெறுமதிமிக்க உயிர்களைத் தியாகஞ்செய்தனர், ஏனையோர் ஊனமடைந்தனர், அதேவேளை மிகச் சிலர் இலகுவான வழிகளைத் தேர்வுசெய்து நாட்டைவிட்டு வெளியேறினர். இப்பிராந்தியத்துக்கு ஒரு கலங்கரை விளக்கமாக இருப்பதாகக் கருதப்பட்ட இந்நாடானது உலகளாவிய காலவேகத்தின் தொடர்பற்ற ஓர் இடமாகச் செயலூக்கம் தடைப்பட்டு இருந்தது. தற்போது முரண்பாடு முடிவடைந்து துப்பாக்கிகள் மௌனித்துவிட்டமையால் தலைநிமிர்ந்து நிற்பதுடன் வேண்டாதவற்றை உதறித்தள்ளிவிட்டுப் பெருமையும் தன்னம்பிக்கையுமுள்ள மக்களாக உலகத்துடன் நாம் மீளிணைவதற்கான சந்தர்ப்பம் எமக்கு உண்டு. இழந்த காலத்தை ஈடுசெய்வதற்கான ஓர் தனித்தன்மை வாய்ந்த வாய்ப்பு எமக்காக உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக நாம் உடனடியாக முயற்சிகளை ஆரம்பிக்கவேண்டும். சமாதானமானது, எமது மக்கள் அனைவருக்கும் யதார்த்தமானதாக இருக்கவேண்டுமென்பதுடன், சிலருக்கான முனைப்பார்ந்த விருப்பமாக மாத்திரம் அது தொடர்ந்தும் இருக்கக்கூடாது. இடம்பெயர்ந்தோர் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்பவேண்டுமென்பதுடன், அவர்கள் மீண்டும் பொருளாதார ரீதியாகச் செயற்திறன் உடையவர்களாக மாறவேண்டும் என்பதும் எமக்கு முக்கியமானதாகும். முகாம்களிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு வழங்குவதற்கு மாத்திரம் நாளொன்றுக்குச் சுமார் 1 மில்லியன் டொலர் செலவிடப்படுகின்றது. இச் செலவீனத்தில் எம்மால் குறைந்தளவிலேயே செலவு செய்யக்கூடியதாக இருக்கின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்ததனைப் போன்று, முரண்பாட்டால் இயல்பாகப் பாதிப்படைந்தோருக்கான பராமரிப்பினை மேற்கொள்வதே உடனடித் தேவையாகக் காணப்படுகின்றது. பரந்து காணப்பட்ட முகாம்கள் தற்போது பழமையான ஞாபகங்களாகவே உள்ளன. அவற்றுக்குப் பதிலாக அவ்விடங்களில் நேர்த்தியான புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிராமங்கள் உருவாகியுள்ளன. ஒரு பட்டினத்தில் இருந்து மறு பட்டினத்துக்கும், ஒரு கிராமத்திலிருந்து மறு கிராமத்துக்குமாக விடுதலைப் புலிகள் தப்பியோடிய போது, எவ்வேளையும் குறுகிக் கொண்டு செல்லும் ஒரு பிரதேசத்துக்குள் தம்முடன் சாதாரண பொதுமக்களையும் வன்நெஞ்சுடன் சாரை சாரையாக நகர்த்திக் கொண்டு சென்றதுடன், அம்மக்களை மோதலின் அழிபாடுகளுக்கு உட்படுத்திய அதேவேளை, யாருடைய வெற்றி வீரர் எனத் தம்மைக் கூறிக் கொண்டனரோ அம்மக்களையே மனிதக் கேடயங்களாகவும் பேரம்பேசும் துருப்பாகவும் மனிதப் பண்புகளே அற்ற வகையில் பயன்படுத்தினார்கள். அவர்கள் தமது போராளிகளையும் பெரும் துப்பாக்கிகளையும் பொதுமக்கள் மத்தியில் நிறுவியிருந்தனர். இப்பொதுமக்கள் பயங்கரவாதக் குழுவொன்றின் அழிவார்ந்த உபாயத்தின் இயல்பாகப் பாதிப்புக்குஉள்ளானோராக இருந்தனர். இந்த மிகவும் மோசமான தந்திரத்தில் சேர்ந்துகொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்படுவதன் மூலம் இந்த அப்பாவிப் பொதுமக்கள் பெரிதும் துன்பப்படுவர் என்பதை விடுதலைப் புலிகள் தெரிந்து வைத்திருந்தனர். புலிகளின் இத் தந்திரத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கு இம்மக்களில் பெரும்பான்மையானோர் தெளிவானவகையில் அழுத்தமான விருப்பினைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், 2009ஆம் ஆண்டு ஏப்பிரல் மற்றும் மே மாதங்களில் பாதுகாப்புப் படைகள் பயங்கரவாதிகளின் காப்பரண்களைத் தகர்த்தவுடனேயே, அம்மக்களது கையில் எது அகப்பட்டதோ அதை எடுத்துக்கொண்டு அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் தப்பியோடி வந்தனர். சிறிது சிறிதாகத் தெரியவந்த இந்த மெய்ந்நிகழ்வை எமது தொலைக்காட்சித் திரைகளில் நாம் கண்கூடாகக் கண்டுகொண்டோம். இக்காட்சிகள் தயக்கத்துடன் தப்பிச் செல்வோர் போல் அமைந்திருக்கவில்லை. அவர்கள் தமது ஈவிரக்கமற்ற சிறைபிடிப்போரிடமிருந்து கடைசி முயற்சியாக எதனையும் சந்திக்கும் மனநிலையில் தப்பியோடிச் சென்றனர். அவ்வப்போது அவர்களிடம் இருந்து வரும் துப்பாக்கிச் சூட்டுக்கு உட்படத்தக்க நிலையிலும் இவர்கள் இருந்தனர். தமக்குப் பெரும் இழப்புகள் நேர்வதற்குக் காரணியாக அமைந்த நிலையில் பாதுகாப்புப் படையினர் முன்னேறிச் சென்ற போது, தமது பயிற்சி மற்றும் திட்டமிடல் என்பவற்றின் தாக்கத்தினைச் சான்றளித்துத் தெளிவுபடுத்திக் காட்டிக்கொண்டு, பெரும் வியப்புக்குரியதான, சுய கட்டுப்பாடான முறையில் நடந்துகொள்ளும் பண்பை வெளிக்காட்டினர். தரைப்படையின் முன்னேற்றமானது பாதுகாப்புப் படைகளுக்கு மிகக் கடுமையான இழப்புகளை உண்டாக்கியது. நீர் நிறைந்த ஏரிகளுக்கு ஊடாக வந்த பொதுமக்களுக்கு உதவுவதற்காகச் சிப்பாய்கள் தமது துப்பாக்கிகளைக் கீழே போட்டதை எம்மால் காணக்கூடியதாக இருந்தது. பல சிறுவர்கள் தமது சிப்பாய்த் தந்தைமாரையும், இளம் மனைவியர் தமது சிப்பாய்க் கணவர்களையும் இழந்துள்ளனர். இது ஏனெனில், பொதுமக்களின் இழப்புகளைத் தவிர்ப்பதற்கு முயற்சிக்கும் இக் கொள்கையின் விளைவால் ஆகும். இதன் பின்விளைவாக, அதிகளவு எதிர்பார்க்கப்பட்டதும் அடிக்கடி வீறாப்புடன் பறைசாற்றப்பட்டதுமான "இரத்தக்குளியல்" அல்லது "மனிதாபிமானமற்ற பெரும் அழிசெயல்" மெய்யாவது தவிர்க்கப்பட்டது. பின்நோக்கிய நிலையில், "இரத்தக்குளியல்" பற்றிய எதிர்வுகூறல்கள் உண்மையான தர்க்கத்தினை மையமாகக் கொண்டிருந்தனவா? என்பதனையிட்டு ஒருவர் வியப்படைய வேண்டியுள்ளது. இன்று எமது நாட்டைச் சேர்ந்த இவர்களில் சுமார் 206,000 பேர் வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் இருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் வேண்டத்தகாத அரவணைப்பில் இருந்து பெரும் தொகையான நபர்கள் தப்பியோடியபோது, அவர்களுக்கு அரசாங்கத்தின் பெரும் வளங்களைப் பயன்படுத்தியுள்ளதுடன், முகாம்களின் நிலைமையை மேம்படுத்துவதற்குத் தொடர்ந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது எமது முன்னுரிமைகளில் முதலாவதாகும். அரசாங்கம் தற்காலிகப் புகலிடங்களை அவர்களுக்கு வழங்கியுள்ளது. அவை சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 6500 பெரிய கூடாரங்கள் அடங்கலாக, சிறிய கிராமிய வீடுகளையும் போன்றதாகும். சர்வதேச நிறுவனங்களால் வழங்கப்பட்ட புகலிடங்களை நாம் கணிசமான அளவு மேம்படுத்த முடியும். அவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொருட்கள் எமது காலநிலைக்குப் பொருத்தமற்றவையாக இருக்கக்கூடும் என்பதுடன், அவை சமூகப் பிரச்சினைகளையும் உருவாக்குகின்றன. இப்புகலிடங்கள் நிரந்தரமான வீடுகளாக அமையக்கூடாது என்பது ஏற்றுக்கொள்ளப்படும் அதேவேளை, இடம் பெயர்ந்தோரின் தற்காலிகத் தங்கியிருப்பினை சாத்தியப்படத்தக்க அளவு சௌகரியமானதாக வைத்திருப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். உணவை வீசி எறிவதற்காக கடந்து செல்லும் ஒரு நிவாரண வண்டிக்காக ஒட்டிய வயிறும் உலர்ந்த உதடுகளுமாய் எங்கோ ஓர் இடத்திலுள்ள அகதி முகாம்களில் குழிவிழுந்த கண்களுடன் காத்திருக்கும் அநாதரவான சிறுவர்கள் பற்றிய நன்கு பரிச்சயமான எண்ணங்களைத் தவிர்ப்பதில் நாம் வெற்றியடைந்துள்ளோம். சர்வதேச நிறுவனங்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் இந்த உள்மன உணர்வுகள் பற்றிய அறிவுக்கூறினைக் கவனத்தில் எடுப்பதற்கும் இத் தேவைகளுக்குத் துலங்குவதற்கும் நாம் தூண்டுவோம். இந்த நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளில் தனியார்துறை அமைப்புகள் பங்கேற்கின்றன என்பதனை நாம் அறிந்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனர்வாழ்வு

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் சாத்தியப்படத்தக்களவு விரைவாகத் தமது கிராமங்களுக்குத் திரும்பிச் செல்வர். இம் முகாம்களிலுள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் வேறுபடுத்தப்பட்டு (இனங்காணப்பட்டு), புனர்வாழ்வுக்கு அனுப்பி வைக்கப்படுவர். ஏற்கெனவே சுமார் 12,700 வரையிலானோர் இனங் காணப்பட்டிருக்கின்றனர். ஏனையோர் அவர்களது கிராமங்களிலுள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்டு பொதுச் சேவைகள் வழமை நிலைக்குக் கொண்டுவரப்பட்ட உடனேயே தமது வீடுகளுக்குத் திரும்புவர். மன்னார்ப் பிராந்தியம், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள ஆயிரக் கணக்கானோர் வீடுகளுக்குத் திரும்பிச் செல்ல ஆரம்பித்துள்ளனர். தமது குடும்பங்களிலிருந்து பிரிந்திருந்த சுமார் 17,000க்கும் மேற்பட்ட தனிநபர்கள் மீள ஒன்றிணைந்துள்ளனர்.

பிரதான முகாமில் பாடசாலையொன்றும் உள்ளது. அவர்கள் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லும்வரை இம் முகாமில் உள்ள பாடசாலையில் சுமார் 40,000 சிறுவர்கள் வரை கல்வி கற்று வருகின்றனர். பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வசதியும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசின் எதிர்காலத் திட்டங்களுக்கான அடையாளமாக இது அமைந்துள்ளது. பிறிதோரிடத்தில் உள்ள சாதாரண பாடசாலைகளில் காணப்படும் பல்வேறு வசதிகளைவிடவும் இச்சிறுவர்களுக்கு மிகக் குறைந்தளவான வசதிகளே காணப்படும் அதேநேரத்தில், அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லும்வரை இம் முகாமில் உள்ளவர்களுக்கான சாதாரண நிலைமையின் அளவை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உள்ளார்ந்த ஈடுபாட்டுக்கான அத்தாட்சியாகவே இதுவும் அமைந்துள்ளது. சுனாமியின் பின்னர் சேதமடைந்த பாடசாலைகளை வழமை நிலைக்குக் கொண்டுவருவதில் அரசாங்கமானது சரிநிகரான சிறப்பு முக்கியத்துவம் வழங்கியது என்பதனை நீங்கள் நினைவில் கொள்ள முடியும். இச்சுனாமி அனுபவமானது எமக்கு இன்றும் உதவுகின்றது. விடுதலைப் புலிகளின் ஒரு காப்பரண் எல்லையிலிருந்து மற்றைய காப்பரணுக்கு மாதக் கணக்காக கூட்டங் கூட்டமாகக் கொண்டுசெல்லப்பட்ட அல்லது மனநோயாளியின் முட்டாள்தனமான இலக்குகளை அடைவதற்காக காடுகளிலுள்ள பயிற்சி முகாம்களுக்கு இழுத்துச் செல்லப்பட்ட சிறுவர்களுக்கு, ஏனைய சிறுவர்கள் செய்வதைத் (கற்பதை) தாமும் செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இச்சிறுவர்களைப் பார்க்கச் செல்லும் எவருக்கேனும் அவர்களது . ஆர்வக் கிளர்ச்சியை உணரக்கூடியதாகவே இருக்கும். இதிலிருந்து வெளிப்படுத்தப்படும், அதாவது திரும்பத் திரும்பப் பாடப்படுகின்ற பல்லவி எதுவெனில், தமது கல்வியைத் தொடர்வதற்கான அவர்களின் அழுத்தமான விருப்பமாகும். அவர்கள் சாத்தியப்படத் தக்களவு விரைவாகத் தமது சொந்தப் பாடசாலைகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமென்பதே அரசாங்கத்தின் விருப் பமாகும். போரில் ஈடுபட்டுமாள்வதற்குரிய மனிதத் தொகுதியாகத் தள்ளப்பட்ட, மற்றும் கிறுக்குத்தனம் மிகுந்த ஒருவரின் மாயைக் கனவினைத் திருப்திப்படுத்துவதற்காகத் தமது இளம் உயிர்களை வீணாகத் தியாகஞ்செய்த தமது கூட்டாளிகள் பலரைப் போலன்றி, இச் சிறுவர்கள் பயனுள்ள பிரஜைகளாக வளர்வதுடன் தமது சொந்த வழியில் அவர்களின் கனவுகளை அடைவர் என்பது அனைவரதும் நம்பிக்கையாகும். இப்பாடசாலைகளதும், சிறுவர்களதும் தேவைகளுக்கு மற்றும் வடக்கிலுள்ள பாடசாலைகளின் புனர்நிர்மாணம் என்பவற்றுக்கு உதவுவதன் மூலம் இச்செயல் முறைக்கு நாம்கூட பங்களிப்புச் செய்ய முடியும். வடபகுதிச் சிறுவர்கள் மிகக் கொடூரமான யுத்தச் சூழலொன்றில் மிக நீண்ட காலமாக தேவையற்ற ஒரு சொத்தாகக் கருதப்பட்டு வந்தனர். இராணுவப் பயிற்சிக்கு அனுப்பப்படுவதனைத் தவிர்ப்பதற்காக என்றே பெருந் தொகையான முன் கட்டிளமைப் பருவச் சிறுமிகள் கர்ப்பிணிகள் ஆகியமை அப்போது நிலவிய கொடூர ஆட்சி முறைக்குச் சான்று பகர்கின்றது. தற்போதைய சந்ததிக்கு மறுக்கப்பட்ட வாய்ப்புக்களைக் குறைந்தபட்சம் அடுத்த தலைமுறை பெற்றுக்கொள்வதனை எம்மால் உறுதிப் படுத்த முடியும். அவர்களது கல்வியை மேம்படுத்துவதில் இச்சிறுவர்களுக்கு உதவுவதற்கான சாத்தியக்கூறானது எமது கவனத்துக்கு உரியதாக அமைந்துள்ளது. சிலருக்கு நிதி உதவியும் தேவைப்படக்கூடும்.

இம்முகாம்களுக்கு வங்கி, தபால் சேவை வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. வரவேற்கத்தக்க ஒரு வளர்ச்சியாக யூன் மாதத்தில் இவ் வங்கிகளுக்கு சுமார் 400 மில்லியன் ரூபாகளைத் தமது கணக்குகளில் வைப்பிலிட முகாம்களில் தங்கியிருப்போரால் வழங்கப்பட்டிருக்கின்றது. ஒரு புறத்தில், முகாம்களிலுள்ள பலர் குறிப் பிடத்தக்களவு நிதி வளங்களை வைத்திருந்தனர் என்பதனையும் அனைவரும் ஒரே சீரான நாதியற்றவர்களாக இருக்கவில்லை என்பதனை யும் இது தெளிவாகச் சான்றளித்துக் காட்டுகின்றது. சிலர் தம்முடன் பணத்தையும் தங்க நகைகளையும் வெளிப்படையாகச் எடுத்துக்கொண்டு வந்ததுடன், அவற்றை விடுதலைப் புலிகளிடமிருந்து பாதுகாத்துப் பதுக்கி வைத்திருந்தனர். உலகின் பிறிதோர் இடத்திலுள்ள முகாம்களுக்குத் திரளாக வந்து சேர்ந்த உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரிலிருந்து இது தெளிவான முறையில் வேறுபட்டதாக அமைந்துள்ளது. மறுபுறத்தில், கொழும்பில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டுள்ள வங்கி முறையில் இம்மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதைக்கூட இது சுட்டிக் காட்டுகின்றது. மேலும் பேணி வளர்க்கப்படவேண்டிய ஒரு நம்பிக்கையாக இது அமைந்துள்ளது. வெளிநாடு களில் உள்ள குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் என்போரிடமிருந்து ஓரளவு பெருந் தொகையான பண அனுப்பீட்டை முகாம்களிலுள்ள சிலர் பெறுகின்றனர் என்பது இரகசியமான ஒரு விடயமல்ல. இருப்பினும் இம்மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்லவுள்ளதால், வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்களிடமிருந்து கிடைக்கும் நிதி உதவியானது குறைந்த காலத்துக்கே வடக்கிலுள்ள சமூகங்களின் சாதாரண நிலைமைக்கு மீளத் திரும்பும் செயற்பாடுகளுக்குக் குறிப்பிடத்தக்களவுக்கு உதவும். சுய விருப்பின் பேரில் அல்லது கட்டாயப்படுத்தலினூடாக விடுதலைப் புலிகளுக்கு மாதாந்தப் பங்களிப் புக்களை வழங்கியவர்கள் அதையொத்த ஒரு பங்களிப்பினூடாக நெருங்கிய உறவினர் அல்லது குடும்ப நண்பர் ஒருவருக்கு உதவுவதனை தற்போது கவனத்தில் கொள்ள வேண்டும். வியாபாரச் செயற்பாடுகள், விவசாயம், சேவைகள், சிறுவர்களின் தொடர்ச்சியான கல்வி மேம்பாடு என்பவற்றுக்கு நிதியங்களின் பெருந் தொகையான உட்பாய்ச்சல் தேவைப்படும். இச்செயற்பாடுகளில் தனியார்துறை கூட ஈடுபடுவதற்கான ஏராளமான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. வெளிநாடுகளில் நிறுவப்பட்டுள்ள இலங்கைக் கம்பனிகள்கூட கிடைக்கத்தக்க வாய்ப்புக்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு விரும்பக்கூடும். மண் பாதுகாப்பு அரண்களையும், பதுங்கு குழிகளையும் அமைப்பதற்காக விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்ட விவசாய அகக்கட்டுமானங்களைத் தற்போது வழமை நிலைக்குக் கொண்டுவர முடியும்.

## இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துதல்:

அடுத்த சில மாதங்களுக்குள் அரசாங்கத்தின் 180 நாள் செயற்பாட்டுத் திட்டத்துடன் ஒத்துப் போகும் வகையில் சேமநலக் கிராமங்களில் உள்ளவர்களில் பெரும் பான்மையானோர் தமது சொந்த வீடுகள், தமது சொந்தக் கிராமங்கள், தமது பட்டினங்கள் என்பவற்றுக்குத் திரும்பிச் செல்வர். இடமாற்று முகாம்கள், இங்கு தற்காலிக இடமாற்றல் முகாம்களாகவே இருத்தல் வேண்டும். 27 வருடங்களாக விடுதலைப் புலிகளின் கருத்துத் திணிப்பால் அவர்களது இதயங்களில் தூண்டப்பட்ட பகைமை உணர்வுடனன்றி எஞ்சியிருக்கும் சுமார் 206,000 மக்களும் அவர்களுக்கு முன்னால் உள்ள சிறந்த வாழ்க்கை பற்றிய எதிர்பார்ப்பு மற்றும் ஒரே சீரான செல்வச் செழிப்புடைய இயற்கையின் பங்குதாரர்களாக இருப்பதற்கான வாய்ப்புக்கள் என்பவற்றுடன் தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்வரென்பது அரசாங்கத்தின் நம்பிக்கையாகும். விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர்களால் வன்மையாகக் கண்டிக்கப்பட்ட முக்கியத்துவம் குறைந்ததும், அச்சம் நிறைந்ததுமான ஒரு வாழ்வுக்கு அன்றி, மின்சாரமும் நீர் வசதியும் கொண்ட சிறந்த வீடுகளுக்கே அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டும். இரும்பையும் கொங்கிறீற்றையும் கொண்டு விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் நிர்மாணிக்கப் பட்டிருந்த முடிவற்ற அரண் காப்பு மதில்கள், பரந்தகன்ற நிலத்தடி காப்பு மனைகள் என்பவற் றோடு பொது மக்களுக்குப் பயனளிக்கத்தக்க மிகக் குறைந்தளவான நிர்மாணத்தையே கொண்டமைந்த போர் முனையிலிருந்து வரும் காணொலிப் பகுதியை நாம் பார்த்துள்ளோம். காட்டிலுள்ள பயிற்சி முகாம்களுக்கு இழுத்துச் செல்லப்படுதல் பற்றிய அச்சமின்றித் திரும்பிச் செல்லும் இடம் பெயர்ந்தோரின் சிறுவர்கள் இங்கு கற்பதற்காகச் சிறந்த பாடசாலைகளைக் கொண்டிருக்க வேண்டும். தெரிவுசெய்யப்பட்ட சிலருக்காக மாத்திரமன்றி அனைவருக்குமான சிறந்த மருத்துவ மனைகளையும் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்க வேண்டும். ஜனநாயகம் நடப்பிலுள்ளதாவும், அத்துடன் தம்மை ஆள்வதற்கான பிரதிநிதிகளை தாமே தேர்ந்தெடுக்கக் கூடியதாகவும் இருப்பதுடன், மிகவும் பலம்வாய்ந்ததும் ஆதியும் அந்தமும் அற்ற, 'ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு தலைவனின்" விருப்புரிமைக் கொடை எதுவும் நீடித்திராத ஒரு சூழலில் அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டும். இங்கு வாதத்திற்காக ஏற்றுக் கொள்ளப்படுவது எதுவெனில், கோரிக்கை விடுப்பதற்காக இலங்கையின் அனைத்து இடங்களிலும் ஜனநாயக ஆட்சிமுறையே அவர்கட்குச் சொந்தமானதாக இருத்தல் வேண்டும் என்பதாகும். கடந்த இரு வருடங்களில் 8 மாகாணங்களில் அவற்றுக்கான தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. கருத்து மாறுபாடு அடக்கப்பட்டதுடன், அக்கருத்துக்களைக் கொண்டிருப்பவர்கள் அகற்றப்பட்டதுமான விடுதலைப் புலிகளின் வழிக்கு இணங்கிப் போகாதமைக்காகவே திரளாகத் தமிழ் மக்களின் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பல பிரதிநிதிகள் கொலைசெய்யப்பட்ட ஒரு சூழலை நாம் மீண்டும் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. யாழ். நகர பிதாவாக இருந்த அல்பிரட் துரையப்பாவுடன் ஆரம்பித்து கருத்து மாறுபாடு கொண்டிருந்த தமிழர்களின் ஒரு நீண்ட வரிசை விடுதலைப் புலிகளால் இல்லாது ஒழிக்கப்பட்டது. மொத்தத்தில் அவர்கள் ஒரு சிறந்த வாழ்க்கைக்குத் திரும்பவேண்டும் என்பதுடன், அதை உறுதிப்படுத்துவதற்கான கடமைப் பொறுப்பும் எம்முடையதாகும். கிழக்கில் நடந்து கொண்டிருப்பது எமக்கு ஒரு வழிகாட்டியாகக் கொள்ளப்படுமாயின், எதிர்காலத்தில் இவற்றின் மீது நாம் நம்பிக்கை கொள்ள முடியும். வீதிகள் அகலமாக்கப்படுகின்றன, மின்சாரம் மீள இணைக்கப்படுகிறது, கடைகளின் முன் பகுதிகள் துாய்மை செய்யப்பட்டுச் சீராக்கப்படுகின்றன, புதிய உணவு விடுதிகளும், ஹோட்டல்களும் அங்கு திறக்கப்படுகின்றன, பொருளாதாரச் செயற்பாடு மீளத் தொடங்குகின்றது. எனினும் சிறிதாக இருந்தபோதும் தேசிய இலக்கை அடைவதில் ஆற்றவேண்டிய செயற்பாடு எம் அனைவருக்கும் உண்டு. நாட்டின் ஏனைய பகுதிகளுடன் எமது இணை நிலையான பொதுமக்களை மீள ஒன்றிணைப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இடம் பெயர்ந்தோர் தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்லும்போது தென்பகுதியில் வசிக்கும் 54 சதவீதமான தமிழர்களால் அனுபவிக்கப்படும் அதேயளவு சௌகரியம் இந்த இடம் பெயர்ந்த அனைவருக்கும்கூட கிடைக்கத் தக்கதாக இருக்கவேண்டும். கடந்த காலத் தில் மேற்கொள்ளப்பட்ட தவறுகள் காரண மாக இந்த நாடு 27 வருடங்களை இழந்துள்ளது. இழந்த காலத்தைச் சீர்படுத்துவதற்காக நாம் வேகமாகச் செயற்பட வேண்டும். மேலும் நாம் அடுத்த சந்ததிக்கு கைம்மாறு செய்ய வேண்டியுள்ளது.

## புலம்பெயர்ந்தோரைத் தொடர்பு கொள்ளல்

இடம்பெயர்ந்தோரின் தன்னம்பிக்கையை நாம் வழமையான நிலைக்குக் கொண்டு வரும்போது உலகெங்கும் .சிதறிக்கிடக்கும் தமிழ் சமூகத்தை நாம் தொடர்ச்சியாகத் தொடர்புகொள்ள வேண்டும். முகாம்களில் தற்போது உள்ளவர்களில் பலருக்கு உலகின் ஏதோ ஓரிடத்தில் உறவினர்கள் உள்ளனர். அவ் இடம்பெயர்ந்தோரது நலன் பற்றிய கவலை இவ்வுறவினர்களுக்கு இருக்கக்கூடும். விடுதலைப் புலிகளின் சிங்கள எதிர்ப்புப் பிரசாரத்தின் தொடர்ச்சியான ஊட்டமுறையாலும், மலிவான தலைப்புச் செய்திகளுக்காக எப்போதும் தேடிக் கொண்டிருக்கும் தயங்கிநிற்காத ஊடகங்களாலும் தீனியளிக்கப்பட்டு வரும் பலர் இருக்கின்றனர். தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை மேம்படுத்துவதற்காகத் தமது கோட்பாடுகளையும் பக்கச்சார்பின்மையையும் தியாகம் செய்யும் பத்திரிகையாளர்கள் 1983ஆம் ஆண்டின் கொடுமையை அனுபவித்திருக்காத போதும் அத்தகைய பிரச்சாரத்தால் நிறைந்த வாழ்வு வாழ்ந்து வந்துள்ளனர். இன்றைய இலங்கையானது மீண்டுமொரு தடவை 1983ஆம் ஆண்டைப் போன்ற எதையும் சகித்துக் கொள்ளாதென்பதை வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழ்ச் சமூகத்துக்கு நம்பிக்கையூட்டுவது எமது முக்கிய சவால்களில் ஒன்றாக அமைந் திருக்கும். தலதா மாளிகை மற்றும் ஸ்ரீ மகாபோதி முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், அல்லது காத்தான்குடி பள்ளிவாசலில் இடம்பெற்ற படுகொலை போன்ற விடுதலைப் புலிகளின் மீண்டும் மீண்டும் செய்யப்படும் பெருமளவு வன்முறையும் கொலையும் உள்ளடங்கிய ஆத்திரமூட்டல்கள் இருந்தபோதும் நாட்டில் எவ்விடத்திலும் தமிழ் மக்களை இலக்காகக்கொண்ட பழிக்குப் பழிவாங்கல் செயல்கள் காணப் படவில்லை. அதன் மிக மோசமான உபாயத்தின் ஒரு பகுதியாக விடுதலைப் புலிகள் அமைப்பால் நாடப்பட்ட கடைசி முயற்சியாக எதையும் செய்ய ஆயத்தமாக உள்ள நிலையில் பொது மக்கள் மீது மேற்கொள்ளப்படும் பழிக்குப் பழி வாங்கும் செயல்கள் கைகூடவில்லை. அந்த இகழ்ச்சியான நிகழ்வுகள் மீண்டும் ஒரு பொழுதும் இடம்பெறாதென்பதில் எனக்குப் போதுமான அளவில் தன்னம்பிக்கையுண்டு. கொழும்பு உட்பட நாட்டில் சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தும் பிரதேசங்களில் சிறுபான்மையினர் தொடர்ந்தும் வளமுடன் வாழ்கின்றனர். கொழும்பில் அமைந்துள்ள முன்னணி வியாபாரங்களில் சில சிறுபான்மையினருக்குச் சொந்தமானவையாகும். கொழும்பில் உள்ள முன்னணித் தொழில் நிபுணர்களில் பலர் சிறுபான்மைச் சமூகங்களிலிருந்து வந்தவர்களாவர். தமிழர்களில் 54 சதவீதமானோர் தென் பகுதியிலுள்ள சிங்களவர் மத்தியில் வாழ்கின்றனர். அது தவிர சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் நிறைவான அறிவைக் கொண்டிராதவர்களால் தற்போது எதிர்கொள்ளப்படும் அசௌகரியங்கள் அரசகரும மொழிக் கொள்கையின் அமுலாக்கத்துடன் மறைந்துவிடும்.

இவ்விடயத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகளால் தோற்றுவிக்கப்படும் எங்கும் பரவும் அச்சத்தின் முக்கியத்துவம் குன்றுதல் மற்றும் பெருமளவு நம்பிக்கை குறிப்பாக கடுமையாக உழைக்கும் பாதுகாப்புப் படையினரால் மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளமை என்பவற்றுடன் வீதித்தடை தொந்தரவு, திடீர்த் தேடுதல் என்பன கூட கடந்த காலத்துக்குரிய விடயங்களாகிவிடும். கிழக்கில் முன்னாள் சிறுவர் போராளி ஒருவர் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. ஆனால் இவ்விடயங்கள் தானாக நடைபெறுமென நாம் விட்டிருந்தால் இதற்கு நீண்ட காலம் தேவைப்பட்டிருக்கும். அந்த நம்பிக்கையைப் பலப்படுத்துவதற்காகக் காத்திருக்காது அதற்கான சூழ் நிலையை உருவாக்கி அதைக் கட்டுப் படுத்துவதற்கான பங்களிப்பைச் செய்வது எமது கடமைப்பொறுப்பாகும். இத்தனித் தன்மை வாய்ந்த வாய்ப்பை நழுவவிடாது இறுகப் பிடித்துக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டியது எம்மைப் பொறுத்ததேயாகும். தமது தாய்நாட்டுக்குத் திரும்பி வந்து தேச நிர்மாணச் செயற்பாட்டில் பங்காளர்களாகுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் உலகம் பூராவுமுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார். அரசாங்கத்துக்கு மேலதிகமாக எமது செய்திக்கான நம்பிக்கைத் தொனியை உறுதிப்படுத்து வதற்கான தமது கருத்துக்களை முன்வைக்கும் பங்களிப்பினை மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்பது இங்கு மறைமுகமாக, அதாவது நாசூக்காகக் கூறப்படுகின்றது. தென் இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்த அரசியல்வாதிகளின் தூதுக்குழுவொன்று சென்னைக்குத் திரும்பிச் சென்றபோது இலங்கையில் காணப்படும் முன்னேற்றங்கள் பற்றித் திருப்தி தெரிவித்துள்ளது.

தேச நிர்மாணப் பணியை நாம் தொடங்குவதால் எமது அனைத்து நண்பர்கள் மற்றும் விமர்சகர்களைக்கூட தொடர்புகொள்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. நாமாகவே முன்வந்து புலம்பெயர்ந்தோர் குழுக் களைத் தொடர்புகொண்டுள்ளோம். எமது நண்பர்களின் தொடர்ச்சியான ஆதரவு எமக்குத் தேவைப்படும். எமது நட்பு மன வுறுதியற்றதல்ல என எமது விமர்சகர்களை நம்பச்செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம். இந்நட்பானது உறுதிவாய்ந்ததாக இருப்பதுடன் தேசிய நலன் மற்றும் கோட்பாடு என்பவற்றால் எமது உளப்பாங்குகள் வெளிப்படுத் தப்படும் வேகமாக மாற்றமடைந்துவரும் இவ்வுலகில் சந்தர்ப்பவாத நட்பினை நாம் ஏற்படுத்தமாட்டோம். பொருத்தமற்ற ஆலோசனைகளைவிடவும் எதிர்காலத்தில் கிடைக்கத்தக்க மெய்யான உதவிகளுக்கு நன்றி பாராட்டப்படும் என்பதனை எமது நண்பர்கள் அங்கீகரிக்க வேண்டும்.

## முடிவுரை

எமது வரலாற்றில் ஒரு நெருக்கடியான கட்டத்தில் நாம் இருக்கின்றோம். எமது மக்களை ஒன்றிணைப்பதற்கான நல்ல வாய்ப்புக்களைக் கொண்டுள்ள எமது தீவை அனைவருக்குமான ஓர் சிறந்த இடமாக மாற்றுவதற்கான தனித் தன்மை வாய்ந்த வாய்ப்பு எமக்குண்டு. *பாட் (EATT)* கூறியவாறு, "மனிதனுக்காக நேரமும் அலையும் காத்திருப்பதில்லை." இச்சந்தர்ப்பத்தை இறுகப் பிடித்துக் கொள்வதற்காக, அலை உள்ளே பாய்ந்து வரும்போது அவ்வலையுடன் நாமும் கரைசேர்ந்துவிட வேண்டும். தமக்கு ஏற்பட்ட இயற்கை அழிவுகளை ஏனையோர் கையா ண்டதனைவிட மிகச் சிறந்த வகையில் நாம் சுனாமி அவலத்தைக் கையாண்டுள்ளோம். பயங்கரவாதத்தின் மீதான எமது வெற்றிக்குப் பின்னர், அதேயளவு சிறந்த முறையில் இப் பிரச்சினையையும் நாம் கையாள்வோம் என்பதில் எனக்குத் தன்னம்பிக்கை உண்டு. ■


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாற்றம் நோக்கிய இலங்கைப் பொருளாதாரம்: முன்னேற்றம், பிரச்சனை, எதிர்கால வாய்ப்பு

(பேராசியர் ஜயந்த கெலேகம அவர்களுக்கான புகழஞ்சலி)

தொகுப்பு : கலாநிதி அஜித தென்னக்கோன்

வெளியீடு : விஜித யாப்பா பப்ளிகேஷன்

**பேராசியர் சிறிமல் அபேரத்ன**

*பொருளியல் துறை*

*கொழும்புப் பல்கலைகழகம்*

அமரர் கலாநிதி ஜயந்த கெலேகம அவர்கள், வித்தியலங்கார பல்கலைக கழகம் என முன்னர் வழங்கப்பட்ட களனிப் பல்கலைகழகத்தின் முதலாவது பொருளியல் பேராசிரியர் ஆவார். தனிச்சிறப்பு மிக்க பொருளியலாளர் என்ற வகையில் அறிவு சார் விற்பனராகவும், மத்திய வங்கியாளராகவும், கொள்கை ஆலோசகராகவும், எழுத்தாளராகவும் இந்த நாட்டிற்கு நான்கு தசாப்தங்களுக்கு மேலாக சேவையாற்றியுள்ளார். 1977க்கு முற்பட்ட மூடிய பொருளாதாரம் 1977க்கு பிந்திய திறந்த பொருளாதாரம் ஆகிய முரணிலையான இரண்டு பொருளாதார கொள்நெறி முறைமைகளை இவரது சேவைக்காலம் அடக்கியிருந்தது.

மாற்றம் நோக்கிய இலங்கைப் பொருளாதாரம்: முன்னேற்றம், பிரச்சினைகள், எதிர் கால வாய்ப்புகள் என்னும் பெயர் கொண்ட களனிப்பல்கலைகழகத்தைச் சேர்ந்த அஜத் தென்னக்கோன் தொகுத்த நூலின் வெளியீடு உண்மையிலேயே கலாநிதி ஜயந்த கெலேகம அவர்களுக்கு செலுத்தப்பட்ட கௌரவம் ஆகும்.

625 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் இலங்கையின் அபிவிருத்தி பற்றிய வெளியீடுகளில் அரிதாகவே பேசப்பட்ட விடயங்கள் உட்பட பொருளாதார கொள்கைகள், நடப்பு விடயங்கள் என்பவற்றினை நடுநிலை நின்று ஆராய்ந்து நன்கு சமநிலைப்பட்ட விமர்சனமாக முன்வைக்கின்றது.

தொகுப்பாசிரியரால் எழுதப்பட்ட அறிமுக அத்தியாயம், இரண்டு பகுதிகளைக் கொண்டது. இதிலொன்று கலாநிதி கெலேகமவின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது. மற்றையது தனிச்சிறப்பு மிக்க பொருளியலாளர்களால் எழுதப்பட்ட அத்தியாயங்களை அறிமுகம் செய்கிறது. பின்வருமாறு 9 பகுதிகளாக அமைந்த 21 அத்தியாயங்கள் இதில் உள்ளன.

1. பொருளாதார கொள்கைநெறி தொடர்பான பிரச்சினைகள்
2. மூடிய பொருளாதாரத்தில் கொள்நெறி ஆக்கம் பற்றிய ஆழ்ந்த கருத்து
3. திறந்த பொருளாதாரத்திற்கு மாறுதல்: நன்மைகளை உறுதிப்படுத்தலும் கற்றுக் கொண்டவையும்
4. பேரண்ட பொருளாதாரம்: இறைக் கொள்நெறியும், நாணயக் கொள்நெறியும்.
5. பேரண்டப் பொருளாதாரம்: தோற்றம் பெற்றுவரும் பிரச்சினைகள்
6. கைத்தொழில் மயமாதலும், உள்கட்டுமானமும்
7. விவசாயமும் உணவும்.
8. வறுமை: நுண்பாக நிதியினதும் நுண்பாக தொழில் முயற்சிகளினதும் வகிப்பாகும்
9. சமூக மாற்றங்கள்.

மூடிய பொருளாதார முறைமை, திறந்த பொருளாதார முறைமை, இவ் இரண்டு முறைமைகளையும் தொடுக்கும் மாற்றம் என்பவற்றுடன் இறுதியாக சேர்க்கப்பட்ட, தற்போதைய அபிவிருத்திக் கட்டத்தில் இலங்கை முகங்கொடுக்க வேண்டிய புதிய பிரச்சினைகள் சவால்கள் என்பவற்றை இந்த நூலின் வெவ்வேறு அத்தியாயங்களில் பேசப்படும் பிரச்சினைகள் அடக்கியுள்ளன என்ற வகையில் இந்த நூல் தனித்துவமானதாகும். அநேகமாக கொள்நெறி முறைமைகள் அவை ஏன் அமுல்படுத்தப்பட்டன, அவை தம் இலக்குகளை ஏன் அடையத் தவறின என்ற பின்னணியை ஆராயாமல் விமர்சிக் கப்படுகின்றன. 1977இன் கொள்நெறி சீரமைப்புக்குப் பின் நான் உட்பட "பொருளியலாளர்களாகப்" பிறந்த இன்றைய பொருளியலாளர்கள் இத் தவற்றைச் செய்யலாம். கொள்நெறி பற்றிய பிரச்சினைகளை சமகால அரசியல் பொருளாதார பின்னணியில் நோக்க எம்மை வழிப்படுத்தும் என்ற வகையிலும் இவ் வாழ்த்து நூல் சிறப்பு பெறுகின்றது. ஐக்கிய தேசிய கட்சியானது மிதவாத வலதுசாரி, அரசியல் பொருளாதார கொள்கையை அதன் ஆரம்பக்காலத்தி லிருந்தே சார்ந்திருந்த போதிலும், 1965இல் ஆட்சியமைத்த போது ஏன் அது அப்போது பின்பற்றப்பட்ட இறக்குமதி பிரதியீட்டு முறையிலிருந்து விலகவில்லை என்பது ஆராயப்பட வேண்டியது ஆகும். ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி, மத்தி - இடதுசாரி அரசியல் கட்சி என்ற வகையில் இடது சாரி கட்சிகளின் ஆதரவோடு இருபது வருடங்களுக்கு மேல் காணப்பட்ட மூடிய பொருளாதார முறைமை காணப்பட்ட காலத்தில் ஆட்சியிலிருந்தது. ஆயினும் ஏன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 1994இல் அதன் மரபு ரீதியான அரசியல் பொருளாதார சித்தாந்தத்தை கைவிட நிர்ப்பந்திக் கப்பட்டது என்பது முக்கியமான கேள்வியாகும். எனவே உள்நாட்டிலும், உலக ரீதியாகவும் சமகாலத்தில் காணப்பட்ட அரசியல் பொருளாதார சூழலைக் கவனத்தில் எடுக்காது பொருளாதார கொள்நெறிகள், அவற்றின் விளைவுகள் என்பன பற்றி அர்த்த புஷ்டியான பகுப்பாய்வைச் செய்வதும் சாத்தியமானதல்ல.

முதல் இரண்டு அத்தியாயங்களும், நூலின் ஏனைய பகுதிகளில் கருத்தில் எடுக்கப்பட்ட பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கான பின்புல அத்திவாரத்தை வழங்குகின்றன. இவ்வாறே லக்சிறி ஜயசூரிய எழுதியவை, கொள்நெறி ஆலோசகர்களாக சமூக விஞ்ஞானிகளின் வகிபாகத்தை மையப்படுத்துவதனூடாக கொள்நெறி பற்றிய பிரச்சினைகளை ஆராய்வதற்கான பின்புலத்தை ஆக்கித் தந்துள்ளன. சுதந்திரத்திற்குப் பிந்திய ஆரம்ப காலத்தில் கொள்நெறி ஆக்கத் தொடர்ச் செயலில் கலாநிதி ஜயந்த கெலேகம கொள்நெறி ஆலோசனை வழங்குனராக இருந்திருக்கின்றார். இந்த ஆய்வின் கருத்துப்படி, கொள்நெறி ஆலோச்கர்கள், அரசியல், விஞ்ஞானம் எனும் இரு கலாச்சாரங்களுக்கு இடையில் ஒரு சிக்கலான நடுநிலைத் தீர்ப்பாளர் என்ற பாகத்தை வகிக்க வேண்டியிருக்கும். ஆனால் பல ஆய்வா ளர்கள் சரியாகவோ, பிழையாகவோ கருத்து நிலையில் ஒரு பாகத்தை மட்டுமே பார்க்கப் பழகி விட்டனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்த பின்னணி பற்றிக் கவனிக்கும் முறைக்குள் மூன்றாவது நாலாவது அத்தியாயங்கள் மூடிய பொருளாதார முறைமையில் கொள்நெறி வகுத்தல் பற்றிக் கருத்துரைக்கின்றன. இந்த இரண்டு அத்தியாயங்களும் இலங்கை அபிவிருத்திப் பற்றிய எந்த வெளியீட்டிலும் போதியளவு பேசப்படாத இரண்டு முக்கியமான ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட கொள்நெறிப்பிரச்சினைகளை கவனத்தில் எடுக்கின்றன. புத்ததாஸ ஹேவாவிதாரண அவர்கள் 1970 - 1975 காலப்பகுதியில் மூடிய பொருளாதார முறைமைக் காலத்தில் கலாநிதி எம். என் பெரேராவின் பொருளியல் உபாயம் பற்றிய நல்லதொரு விளக்கத்தை வழங்குகிறார். சுருங்கக் கூறின் இவர் சோசலிச முறைமையில் சமத்துவம், வளர்ச்சி என்பவற்றை முன்கொண்டு செல்லும் பொதுநல நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார உபாயங்களின் உள்ளார்ந்த முரண்பாடுகளை விளக்குகின்றார். டாக்டர் என். எம். பெரேரா கைக்கொண்ட நாணயப் பெறுமதி விலக்கல் என்னும் நாணயப் பரிசோதனை பற்றி சரத் ராஜபத்திரண ஓர் அத்தியாயத்தை எழுதியுள்ளார். உலகில் இந்தப் பரிசோதனையைச் செய்த ஒரு சில நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இருப்பினும் இந்தப் பரிசோதனை மீது போதிய கவனம் செலுத்தப்படவில்லை. ஆசிரியர் எதிர் பார்ப்புக்கள், சாதனைகள் என்பன சார்பாக செயலின் முரணை விளக்குகின்றார்.

எதிர்பார்க்கப்பட்ட கொள்நெறி விளைவுகளைத் தராத மூடிய பொருளாதாரப் பரிசோதனைகளிலிருந்து பெற்றுக் கொண்ட பாடங்களையும் எடுத்துக் காட்டி 1977க்கு பின்னரான திறந்த பொருளாதார மாதிரியுரு காலத்தில் பெறப்பட்ட வெற்றிகளையும், புதிய சவால்களையும் வெளிச்சமிட்டுக் காட்டும் அத்தியாயங்களின் தொகுதியும் அதில் உள்ளன. கொள்நெறி சீர்திருத்தத்தின் பின் ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் மயமாதலின விமர்சகர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பிரேமச் சந்திர அத்துகோரள விடையளிக்கின்றார். இந்த பகுப்பாய்வு அரசு நெறிப்படுத்திய ஏற்றுமதிப் பிரதியீட்டு கைத்தொழில் மயமாக்கும் வெளிநாட்டு தாக்கங்களால் நாடு பாதிப்புக்குள்ளாகும் தன்மையை அதிகரித்தது எனவும், அரிதான வேலை வாய்ப்புகளுக்கு இட்டுச் சென்றதெனவும் அதே வேளை 1977இன் கொள்நெறி சீரமைப்புகள், வியாபார தாராளமயமாக் கல் முதலீடு என்பவற்றிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை பெற்றுக் கொள்வதற்குரிய வழிகளை திறந்து விட்டன எனவும் கருத்து உள்ளது.

திறந்த பொருளாதாரத்திற்கு மாறுவதில் இறை சீரமைப்புகளின் அரசியல் பொருளாதாரப் பக்கத்தை ரவி ரட்னாயக்க முக்கியப்படுத்திக் காட்டுகிறார். பொருளியலளவு மாதிரியுருவை பயன்படுத்தல் தனியார் நல அணுகுமுறை பொதுநல அணுகுமுறை என்பவற்றை சீர்திருத்தத்துடன் ஒப்பிட்டு இலங்கையில் இறை தாராளமயமாக்கல் தொடர்பில் தேசிய நலன்கள் தனியார் நலன்களை விட முக்கியமானது என ரட்னாயக்க கருதுகிறார். எனவே ஆற்றல் மிக்க பணிக்குழு ஆட்சியில் வலுப்படுத்தப்படும் பலமான அரசாங்கம் காணப்படுமிடத்து சீரமைப்புகள் இலகுவாக்கப்படும்.

ஜே. எம். பி. பத்திராகே நேரடி வெளிநாட்டு முதலீடானது சென்மதி நிலுவை மீதான தாக்க விளைவு பற்றிய தனது பகுப்பாய்வில் திறந்த பொருளாதார முறைமையின் கதைகளின் இன்னொரு பக்கத்தை ஆராய்கின்றார். பத்திரகேயின் பிரதான கவனம் சென்மதி நிலுவை மீதானதாக இருந்த போதும் இந்தப் பகுப்பாய்வு இலங்கை ஒரு மூலதனப் பற்றாக்குறையுள்ள விருத்தியடைந்து வரும் நாடென்ற வகையில் அதிகரித்த நேரடி வெளிநாட்டின் முதலீட்டுப் பாய்ச்சல்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேசிய ஆற்றலையும் அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்துள்ளன என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது. இருந்தாலும் நன்கு தெரிந்த அரசியல் பொருளாதார காரணங்களினால் இலங்கை நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பில் அதன் எதிர்பார்க்கையிலும் பார்க்க மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. இலங்கையில் கடந்த 3 தசாப்தங்களாக திரட்டிய மொத்தத் நேரடி வெளிநாட்டு முதலீட்டின் இருப்பு 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே. இது இலங்கையிலும் பார்க்க மிகவும் தாமதித்து கொள்நெறி சீரமைப்புக்களை ஆரம்பித்த வியடனாம் போன்ற நாடொன்றுக்கு ஒரு வருடத்தில் உட்பாயும் வெளிநாட்டு நேரடி முதலீட்டளவேயாகும்.

தாராள மயப்படுத்தலின் வழியே மேலும் சென்று கே. ஜீ. டி. டி தீரசிங்க நிதிசார் உலகமயமாதல் என்னும் அத்தியாயத்தில், இலங்கையின் மெதுவான எச்சரிக்கையான, மூலதன நாணயக் கணக்கு தாராளமயமாக்கலுக்கான அணுகுமுறையின் மீது கவன த்தை ஈர்க்கின்றார். உலக நிதிசார் ஒன்றிணைவுச் செயன் முறையில் நிதிசார் மூலதனப் பாய்ச்சல் செல்வந்த நாடுகளிலிலிருந்து வறிய நாடுகளுக்கு நடைபெறும் தீரசிங்க இச்செயன் முறையானது பயன்படுத்தக் கூடிய சந்தரப்பங்கள், முகம் கொடுக்க வேண்டிய சவால்கள் ஆகிய இரண்டை யும் கொண்டு வரும் என்கிறார். இந்த் முக்கியமான விடயம் இலங்கையின் அண்மைக்கால அனுபவம் தொடர்பான பகுப்பாய்வில் நன்கு நிறுவப்பட்டுள்ளது. ஒரு நாடு நிதிசார் தாராளமயமாக் கலினால் நன்மை அடைகின்றதா அல்லது ஆபத்து நிலைமைகளுள் தன்னைக் கொண்டு செல்கின்றதா என்பது முதலீட்டாளர் நம்பிக்கையிலும், உத்தேச செயற்பாடுகளிலும் தங்கியுள்ளது. இந்த பகுப்பாய்விலிருந்து பெறப்படும் கொள்கை வகுப்பாளர்களை வழிப்படுத்தும் முக்கிய உண்மை இதுவாகும். இதோடு தொடர்பான பிரதான பிரச்சினை இலங்கையின் பொதுப்படுகடன் அதிகரிப்பாகும் தற்போதைய உலக சூழலில் மேலும் மோசமடையக் கூடிய இந்தப் பிரச்சினை நிஹால் கப்ப கொட வினால் எழுதப்பட்ட அதிகாரத்தில் ஆய்வு செய்யப்படுகின்றது. இவர் பொதுப்படு கடன் முகாமைத்துவத்தில் நிறுவன ரீதியான அமைப்பு இன்மை ஒரு பாரிய இடைவெளி என இனம் கண்டு, தோற்றம் பெறுகின்ற சவாலுக்கு முகங்கொடுக்க கடைப்பிடிக்க வேண்டிய கொள்நெறி நடவடிக்கைகளை தொடராக முன்வைக்கின்றார்.

திறந்த பொருளாதார முறைமையில் எல்லாமே நன்றாக இருக்க முடியாது. ஏனெனில் இந்த நாடு இரண்டு முறைமையினதும் கெடுதியை அனுபவித் துள்ளது. நிலைமாறும் கட்டத்தை விமர்சன ரீதியாக பார்க்கும் ஏ.டி.வி.டி.எஸ். இந்திர ரத்னவின் கருத்துப் படி; மூடியபொருளாதாரம், "மிகையாக மூடப்பட்டிருந்தது", திறந்த பொருளாதாரம் "மிகையாகத் திறந்திருந்தது" என்பதாகும். இவரது ஆய்வின் பிரதான கவனம் இரண்டு முறைகளிலும் பொருளாதார மாதிரியுருக்களின் சமூக விளைவின் மீதானதாக உள்ளது. அரசாங்கம் பொருளாதாரம் மூடியதாக இருந்தபோது 'மிக அதிகமாகத் தலையிட்டமை திறந்ததாக இருந்த போது 'மிகக்குறைவாகத்' தலையிட் டமை என்பதே இந்தப் பிரச்சினையின் காரணமாக இருந்தது. இந்த பகுப்பாய்வின் பிரதான செய்தி நாம் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை 2015இல் அடைய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கவேண்டும் என்ப தாகும். இவ் இரண்டு தீவிர நிலையில் எதற்குள்ளும் சிந்திவிடாமல் பழையதையும், புதியதையும் கலப்பது முக்கியமானது என்பதாகும்.

இந்த வெளியீட்டின் சில அத்தியாயங்கள் பொருளாதார கொள்நெறிகளில் வரலாற்று ரீதியான பரிணாம வளர்ச்சியையும் கொள்நெறி சிபார்சுகளை வேண்டி நிற்கும் பிரச்சினைகளையும் ஆராய என ஒதுக்கப்பட்டுள்ளன. இறைக் கொள்கை, நாணயக் கொள்கை பற்றிய இரண்டு அத்தியாயங்கள் இந்த பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளில் மரபுரீதியற்ற பக்கங்களில் கருத்தைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்துகின்றன. மத்திய வங்கியின் சுயாதீனம் பற்றிய பிரச்சினையை ஆய்வு செய்கின்றார். மத்திய வங்கியின் சுயாதீனம் முக்கியமானது. ஏனெனில் பொருளாதார உறுதிநிலை, விலையின் உறுதிநிலை ஆகிய முதன்மை இலக்குகளை அடை வதற்கு மத்திய வங்கியை அனுமதித்தல் அடிப்படைத் தேவையாக உள்ளது. இவர் மத்திய வங்கியிலிருந்து சுயாதீனத்தை பெற்றுக்கொள்வதில் சாதகமான நிறுவன ரீதியான, கொள்கை ரீதியான மாறிகளின் தேவைகளை இவர் ஆராய்கின்றார். இறைக் கொள்கை பற்றிய டி.டி.எம் வைத்திய சேகரவின் அத்தி யாயம், மாறிவரும் இறைக் கொள்கையின் வரலாற்றுக் கோலம் மற்றும் நாட்டின் சமகால அபிவிருத்தி, தேவைக்கேற்ப வரிவிதிப்பு என்பன பற்றியதாகும். இந்த ஆசிரியர் வெவ் வேறு அரசாங்கங்களின் கீழ் அபிவிருத்திக்கான இலக்குகள், உபாயங்கள் என்பவற்றை அழுத்தி காலனித் துவத்திற்குப் பிந்திய காலங்களில் இறைக் கொள்கை, வரிவிதிப்பு என்பவற் றின் பிரதான மூலகங்களைச் சுருக்கமாக விளக்குகின்றார்.

கிறிஸ் றொட்றிக்கோ எழுதிய இலங்கை யின் தயாரிப்பின் கைத்தொழில் பற்றிய அத்தியாயம், தொழிநுட்ப வளர்ச்சி, புத்தாக்க முறைமைகள் என்பவற்றை கைத்தொழில் இயங்கியலின் பிராதான நிர்ணயிப்புக் காரணியாக வலியுறுத்தும் விதத்தில், சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தயாரிப்புக் கைத் தொழி லின் விரிவாக்கம், பரிணாம வளர்ச்சி ஆகியன பற்றி ஆராய்கிறது. இறுதியாக இந்த அத்தியாயத்தின் ஆசிரியர் கைத்தொழில் இயங்கியலை உருவாக்கல் மற்றும் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தல் என்ப வற்றுக்காக அரசாங்கங்களினால், வர்த்தக சம்மேளனங்களால், நிறுவனங் களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விடயங்களின் ப்டியலை இனங்காண்கிறார். ஜெயதிலக பண்டார, சிசிர ஜயசூரிய ஆகியோரின் அத்தியா யம் காலனித்து வத்துக்குப் பிந்திய காலப்பகுதியில் விவசாய அபிவிருத்திக்கும் வழங்கப்பட்ட அரசாங்க ஆதரவுக்கும் ஊக்குவிப்புகளு க்கும் இடையில் இதனை ஆராய பொரு ளியலளவை மாதிரியுரு பயன்படுத்துகிறது. விவசாயத்தில் எட்டக் கூடிய வினைத் திறனைப் பெற்றுக் கொள்ள கொள்கைத் தூண்டல் திரிபுகளை அகற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை இனம் கண்டுள்ளனர். உணவுப் பாதுகாப் பை எட்டுவதில் இலங்கை எந்தளவு வெற்றிப் பெற்றுள்ளது? இந்தப் பிரச்சினை பற்றி பேசுகின்ற உபாலி விக்கிரமசிங்க, உணவுப் பாதுகாப்பு வலை என்பவற்றுக்கான வெற்றிகரமான உபாயத்தில் தவறியிருக்கும் மூலகங்களின் தொடரை இனங்காண்கிறார். சமகால சவால்களை அழுத்திக் கூறுவதனால் இவர் பிரதானமாக சந்தையின் வினைத்திறன் இன்மை அரசாங்கத் தலையீடு என்பன தொடர்பில் தவறியிருக்கும் மூலகங்களை பகுப்பாய்வு செய்கிறார். இந்தப்பிரச்சினை களைத் தீர்ப்பதில் கடந்த சில தசாப்தங களாக இலங்கை அதிக முன்னேற்றம் எதனையும் காணவில்லை என்ற முடிவை இவர் எடுக்கின்றார்.

ராஜா பீ. எம். கோறள எழுதியுள்ள பண வீக்கம் பற்றிய அத்தியாயம் பேரண்ட கொள்நெறி தொடர்பில் விசேடமானதாக உள்ளது. ஏனெனில் அண்மைக் கால பணவீக்கப் போக்கை மட்டுமின்றி பணவீக்க அளவையில் பயன்படும் நுட்ப விபரங்களின் சிறப்புகளையும் ஆய்வு செய்கின்றார். இந்த வகை அணுகுமுறை பணவீக்கப் போக்கு களை அவற்றின் குறிப்பான தோற்று வாய்களுடன் இணைப்பதற்கு வாசகனுக்கு வழி செய்கிறது. பணவீக்கமும், வேலையின் மையும் இரண்டு உலகங்களிலுமே மிகக் கூடாதவைதான். எனவே இப் புத்தகத்தில் இதே போன்று வேலையின்மைப் போக்கு கள் அவற்றின் அளவீட்டுப் பிரச்சினைகள் என்பவற்றைச் சோர்க்க இடம் இருந்திருந் தால் மிகப் பொருத்தமாக இருந் திருக்கும்.

வறுமை பற்றிய இரண்டு அத்தியாயங்கள் நாட்டின் வறுமைப் பிரச்சினைப் பற்றி வெவ்வேறு கோணங்களில் பகுப்பாய்வு செய்கின்றன. உலக ரீதியான கடன் சுருக்கம உள்நாட்டு உயர் வட்டி வீதம் என்ற பின்னணியில் எம். யூ. ஏ தென்னக்கோன் வறுமை ஒழிப்புக்கான நுண்பாக நிதியின் முக்கியத்துவம் பற்றி ஆராய்வதுடன், மத்திய வங்கி உட்பட நாட்டின் தற் போதைய நுண்பாக நிதி முறைமையின் பலவீனங்களையும் இனம்காண்கிறார். இவரது பிரதான முடிவு வறுமையை ஒழிப் பதற்கும் வளர்ச்சியை தூண்டு வதற்கும், நுண்பாக நிதி முறைமையினை நிறுவன மையப்படுத்துவதன் அவசியம் பற்றிய தாகும். இதற்குமாறாக ரஞ்சித் பண்டாரவின் பகுதி நுண்பாக முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மீது நுண்பாக பொருளியல் பகுப்பாய்வுடன் தொடர்பானது கிராம சமுதாயங்களில் முயற் சியாண்மை அபிவிருத்தியை தீர்மானிக்கும் காரணி களை ஆராய்வதால், இந்த ஆசிரியர் ஒரு மாதிரியுருவின் உதவியுடன் வேறு வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்க ளுடன் ஒப்பிடுகையில் நுண்பாக முயற்சி யாண்மை அபிவிருத்தி உபாயம், நிலை பேறானதாக வும் வினைத் திறன்மிக்கதாகவும் உள்ளது என்னும் முடிவுக்கு வருகிறார். நுண்பாக முயற்சியாண்மை அபிவிரு த்தி உபாயம், கிராமிய முயற்சியாண்மைத் திறன்களை பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களை வழங்கு கின்றது. இதனால் வறுமையில் வாடும் கிராமிய சமூதாயங்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

இறுதியாக நீண்ட கால வளர்ச்சி, நாட்டின் அபிவிருத்தி வாய்ப்புக்கள் என்பவற்றுடன் தொடர்பான மிகவும் குறிப்பானதும், சரியான தருணத்தில் வந்ததுமான விவாதத் திற்குரிய விடயங்கள் பற்றி மூன்று அத்தி யாயங்கள் உள்ளன. நிமல் சந்திரத்ன வரலா ற்று ரீதியான குடித்தொகை மாற்றங்கள் மீது முக்கியமாக கவனத்தைச் செலுத்தி அவற்றின் பொருளாதார சமூக விளைவு களை இனங்கண்டுள்ளார். இந்த ஆய்வி லிருந்து தோற்றம் பெறும் விவாதத்துக் குரிய விடயமாக தற்போதைய குடித் தொகை மாற்றத்தின் யதார்த்ததிற்கு ஏற்ப பொருளாதார, சமூக சீராக்கம் செய்தலும், சுகாதாரம், கல்வி முதியோரை பராமரிக் கும் ஏற்பாடு என்பவற்றில் முன்னேற்றத் தின் ஊடாக இந்த யதார்த்ததிற்கு முகங் கொடுக்க நாடு எவ்வாறு தயாராக வேண்டும் என்பதும் உள்ளது. விஷ்வ வர்ணபால ஆராய்ந்தது போல இலங்கை யில் பல்கலைக்கழக கல்வி நீண்ட காலமாக பிரச்சினைக்குரிய விடயமாக இருந்து வந்துள்ளது. நாட்டில் பல்கலைகழக கல்வி முறைமையின் வரலாற்று ரீதியான படிமலர்வை தொகுத்துக் கூறுவதால் ஆசிரியர் தற்போது நடைமுறையில் உள்ள கல்வி முறைமையின் பிரதான குறைப் பாடுகளை இனங்கண்டு தேவையான மாற்றங்களின்பால் கவனத்தை ஈர்க்கின்றார். கே. தர்மசேன அறிவுசார் மட்டத்திலும், கொள்கை வகுப்பாளர் வட்டாரத்திலும் அதிகம் பேசப்படாத தனித்துவமான ஒரு பிரச்சினையின் பால் கவனத்தை ஈர்க்கின் றார். இந்தியாவின் சேதுசமுத்திர கால்வாய் திட்டத்தினால் கொழும்புத் துறைமுகத்தில் அதனது ஒப்பீட்டு நயத்தையும், போட்டி நயத்தையும் இலங்கை எவ்வளவு தூரம் இழக்கப் போகின்றது. இந்த ஆய்வு வரவுள்ள சவால்களை கோடிட்டுக் காட்டி இந்த சவாலுக்கு முகங்கொடுக்க மட்டு மன்றி, நாட்டின் துறைமுகச் செயற்பாடு களை வளர்த்தெடுக்கவும் தேவையான முக்கியமான சிபாரிசுகளை முன்வைக் கின்றது. சுருங்கக்கூறின் ஒரு துறைமுகம் என்ற எண்ணக் கருவிலிருந்து விலகாத் தீர்வைச் சுற்றி நேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் பல துறைமுகங்களை விருத்தியாக்குதல், வெவ்வேறான துறை முகச் செயற்பாடுகளில் வெவ்வேறு துறை முகங்களை சிறப்புத் தேர்ச்சிபெற வைத் தல் என்னும் இரண்டு விசாலித்த உபாயங் களின் கீழ் சிபர்சுகள் முன்வைக் கப்பட்டு நியாயப்படுத்தப்படுகின்றன.

முழுமையான மதிப்பீட்டில் இந்த புத்தகம் இலங்கையின் பொருளாதார முன்னேற் றம் பற்றிய பிரச்சினை எதிர்கால வாய்ப் புக்கள் தொடர்பான பகுப்பாய்வுகளின் அரிய சேகரிப்பாகும். கொள் நெறிகள் என்ற வகையிலும், பகுப்பாய்வு அணுகு முறை என்ற ரீதியிலும் இந்த புத்தகத்தில் பேசப்பட்ட விடயங்கள் புதியதாகவும், புத்தாக்கமானதாகவும் உள்ளன. இந்த புத்தகம் பொருளியல் பிரச்சினைகளை மட்டுமின்றி ஒரு பொருளாதார பிரச்சிகைக் குத் தீர்வு காண்பதற்கு அரசியல்-பொரு ளாதார அணுகுமுறையின் முக்கியத்து வத்தையும் வாசகனுக்கு வெளிச்ச மிட்டுக் காட்டுகின்றது. இவ்வாறான தனித்து வமான சிறப்புகள் காரணமாக இந்த பத்தகம் உண்மையிலேயே அற்புதமான ஒரு பொருளியாலாளருக்கு அற்புதமான கௌரவமாக அமைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்து உரிமைகளும் மூலதன ஆக்கமும்: இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான ஓர் தேவைப்பாடு

பிரியன்வத ஹேரத்
கொழும்புப் பல்கலைகழகம்

## அறிமுகம்

முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அடிப்படைத் தேவையாக சொத்துரிமைகள் உள்ளன. சொத்துரிமை மூலதனத்தை உருவாக்க மக்களுக்கு ஊக்கம் அளிக்கின்றது. இதனால் சொத்துரிமை செல்வத்தை உருவாக்குகிறது. ஐக்கிய அமெரிக்காவும் மேற்கத்தேய ஐரோப்பிய நாடுகளும், தெளிவாக வரையறை செய்யப்பட்ட சொத்துரிமைகளை நிலைநிறுத்துவதில் வெற்றி கண்டதால் உலகின் அபிவிருத்தி அடைந்த நாடுகளாக மாறியுள்ளன (De Soto, 2000). முதலாளித்துவ மாதிரியுருவை அதன் அடிப்படைத் தேவையான சொத்துரிமை இன்றி பின்பற்ற முயன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மேலைத்தேச அபிவிருத்தி நியமங்களை எட்டத் தவறின. சாதாரணமான முன்னேற்றத்தை அடைந்தவற்றில், அபிவிருத்தி பரவலாக காணப்படாது சில குறிப்பிட்ட புவியியல் பிரதேசங்களுக்கும் (பெருநகரங்கள் போன்றவை) சில உற்பத்தி துறைகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தக் கட்டுரையின் நோக்கம் இலங்கையின் அபிவிருத்தியினதும் முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சியினதும் அடிப்படைத் தேவையாக நன்கு வரையறுக்கப்பட்டதும் அமுல்படுத்தப்படுவதுமான சொத்துரிமைகளின் முக்கியத்துவம் பற்றி ஆராய்வதாகும். காலனித்துவ ஆட்சி வழியாக பெறப்பட்ட சாதகமான தொடக்க நிலை இருந்த போதிலும் இலங்கை மெதுவான வளர்ச்சியையே கண்டதுடன் முதலாளித்துவ பொருளாதார அபிவிருத்தியை அடைவதில் தோல்வி கண்டமையை ஆராயவும் பகுப்பாய்வு செய்யவுமான மிகச் சிறந்த விடய ஆய்வுக்குரிய நாடாக இது விளங்குகின்றது.

## சொத்து உரிமைகளும் மூலதன ஆக்கமும்

சொத்து என்பது மூலதனத்தை உருவாக்கவல்ல பௌதீக ரீதியான சொத்துக் கூறாகும். டி சோட்டோவின் (De Soto 2000) கூற்றுப்படி, மூலதனம் என்பது ஊழியத்தின் உற்பத்தித் திறனை உயர்த்துக்கின்ற, தேசங்களின் செல்வத்தை அதிகரிக்கின்ற ஒரு விசையாகும். பொருளாதார வளர்ச்சி மாதிரியுரு விளக்குவது போன்று நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை ஊழிய அலகு ஒன்றுக்கான மூலதனம் அதிகரித்தலாகும். இது ஊழியத்தை கூடுதல் உற்பத்தித் திறன் வாய்ந்தது ஆக்குகின்றது. இருப்பினும் Assetஇன் மூலதனத்தை உருவாக்குவதற்கான ஆற்றல் assets களை சொந்தமாக்குவதற்கான ஆற்றலில் தங்கியுள்ளது.

சொத்துரிமை என்பது சொத்தின் கூறு ஒன்றைச் சொந்தமாக்குவதற்கும், சொந்தக்காரனின் விருப்பத்திற்கு அமைய அச் சொத்தின் கூறைப் பயன்படுத்துவதற்கான சட்டப்படியான உரித்துமாகும். சொத்து ஒன்றின் பயன்பாட்டை தீர்மானிக்கும் அதிகாரம் சொந்தகாரனிடம் இல்லாதபோது சட்டப்படியான உரித்துடமை மட்டும் சொத்து உரிமையை தீர்மானிக்காது. அல்கெய்ன் விளக்குவது போல சொத்துரிமை என்பது சொத்தின் கூறு ஒன்றின் பயன்பாட்டை தீர்மானிப்பதற்கு சொந்தகாரனுக்கு மட்டுமேயுள்ள அதிகாரம் ஆகும். எனவே சொத்துரிமை, சொத்தின் உரித்தை மட்டுமல்லாது சொத்தை பயன்படுத்து வதற்குரிய உரிமைகள், சொத்திலிருந்து நன்மை பெறும் உரிமை, சொத்தை மாற்றிக் கொடுக்க, விற்க, மற்றும் ஏனையோரின் தலையீட்டை தவிர்க்கவுள்ள உரிமையையும் உள்ளடக்கியதாகும்.

ஒரு நாடு சொத்தின் கூறுகளிலிருந்து மூலதனத்தை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதா இல்லையா என்பது, சொத்துரிமைகள் நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளதா, அமுலாக்கப்படுகின்றதா, என்பதில் தங்கியுள்ளது. சொத்தின் உரித்தாண்மை வகைகளுக்கு ஏற்ப தனியாளாலும் கம்பனிகளாலும் சொந்தமாக்கப்பட்ட தனியார் சொத்துக்களும் அரசாங்கத்துக்கு சொந்தமான பொதுச் சொத்துக்களும் உள்ளன. இதற்கு மேலாக எவருக்குமே சொந்தமில்லாத சொத்துக்களும் உண்டு. இந்த ஒவ்வொரு வகையிலும் மக்கள் சொத்தைப் பயன்படுத்தும் விதத்தில் வித்தியாசமான நடத்தையைக் காட்டுகின்றனர். ஏனெனில் அவர்களது நடத்தை நடைமுறையில் காணப்படும் சொத்துரிமையினால் நிபந்தனைப் படுத்தப்படுகின்றது. மக்கள் தமது சொந்த சொத்தை வித்தியாசமாக கையாள்கின்றனர். இது மூலதன ஆக்கத்தில் வித்தியாசங்களைத் தோற்றுவிக்கின்றது. தமது சொந்த சொத்து மீது தனிஅதிகாரம் உள்ள மக்கள் தமது சொத்தை மூலதன உருவாக்கத்திற்கு இதுபோன்ற தனி அதிகாரம் இல்லாதவர்களை விட கூடுதலாகப் பயன்படுத்தும் சக்தியைப் பெற்றிருப்பர்.

மக்கள் பொதுச்சொத்து அல்லது சொந்தகாரர் இல்லாத சொத்துக்கள் மீது செலுத்தும் கவனத்தை விட தமக்கு உரித்தான சொத்துக்களில் கூடுதலான கவனத்தைச் செலுத்துவர். அவர்கள் தமக்குச் சொந்தமில்லாத சொத்துக்களை தனிப்பட்ட நன்மைக்காக பயன்படுத்துவார்கள். இது சட்டத்துக்கு புறம்பான சொந்த இலாபம் பெறுவதை மட்டும் தவிர்த்து வேறுவிதமாக சொத்துரிமைகள் நடைமுறைப் படுத்தப்படாத போது நடைபெறும். ஆனால் இவ்வகைச் சொத்து இவர்களுடையது இல்லையாதலால் இவர்கள் மூலதனத்தை உருவாக்கும் தகுதியில் இருக்கமாட்டார்கள்.

சொத்தின் கூறுகள் மீது சட்ட ரீதியான உரிமையையும் கட்டுப்பாடும் இல்லாத போது மக்கள் மூலதன உருவாக்கத்துக்கு பங்களிப்புச் செய்யமாட்டார்கள். மூன்றாம் உலக நாடுகளினதும் முன்னைய பொதுவுடமை நாடுகளினதும் ஏழைமக்கள் வைத்திருந்த ஆனால் சட்டரீதியாக சொந்தமாக இல்லாத மெய்ச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி குறைந்த பட்சம் 9.3 திரில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இது 1989 இன் பின் 10 வருடங்களில் இந்த எல்லா நாடுகளுக்குள்ளும் வந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் மொத்தத்தின் 20 மடங்கிலும் அதிக மானது ஆகும். 1970 இன் பின் கடந்த மூன்று தசாப்தங்களில் உலக வங்கி வழங்கிய மொத்தக் கடனிலும் பார்க்க இது 46 மடங்காகும். இதே காலப்பகுதியில் எல்லா முன்னேறிய நாடுகலிளிருந்தும் கிடைத்த அபிவிருத்திக்கான உதவியுடன் 93 மடங்காகும். இந்த நாடுகளின் வறிய மக்கள் வைத்திருந்த சொத்தின் கூறுகள் கூடிய உற்பத்தி ஆற்றல் உள்ளவையாக இருந்த போதும் அவற்றில் அநேகமானவை வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அதிகரிக்கத் தவறின. தெளிவாக வரையறுக்கப்படாத சொத்துரிமைகள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழலை தூண்டிவிடுகின்றன. அத்தோடு உயர் பரிவர்த்தனைச் செலவுக்கும் இட்டுச் செல்கின்றன. குறைந்த பொருளாதார சுதந்திரத்துக்கு இட்டுச் செல்லும் ஊழலிலிருந்து விடுபடாமல் அநேகமான முன்னைய பொதுவுடமை நாடுகளும் மூன்றாம் உலக நாடுகளும் இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். (க்வாட்னி, லோசன் 2008) சொத்துரிமை குறைவாகக் காணப்படுவது சொத்துக்களின் சந்தைப் பெறுமதியில் திரிபுகளை ஏற்படுத்தி மூலதனம் உருவாக்கும் ஆற்றலையும் பாதிக்கின்றது. நாட்டின் சொத்துக்களின் ஒரு பகுதி நன்கு வரையறுக் கப்படாத சொத்துரிமைக்குள் வரும் சொத்தின் கூறுகளின் சந்தை விலை இயல்பாகவே அதிகரிக்கின்றது.

## இலங்கையில் நில உரித்தாண்மை

இலங்கையின் விவசாய நிலத்திலிருந்து மூலதனம் உருவானமையின் வரலாறு பெருந்தோட்டத் துறை மிகையின் ஒரு பகுதியை பயன்படுத்திய நெல், மரக்கறி, மற்றும் வேறு உணவுப் பயிர்கள் என்பவை உள்ளடங்கிய உள்ளூர் விவசாயத்துடன் ஒப்பிடும் போது எவ்வாறு பெருந்தோட்ட விவசாயம் மூலதனத்தை உருவாக்கியது என விளக்குகின்றது. காலனித்துவ காலத்தில் பிரித்தானிய தோட்டத் துரைமார் தேயிலை, தென்னை, இறப்பர் நடுவதற் காக விவசாயிகளிட மிருந்து நிலத்தைப் பொறுப்பேற்றனர். இதேசமயம் காலனித்துவ அரசாங்கம் தோட்டதுரைமாருக்குச் சட்ட உரிமையை வழங்கியது. 1951இல் இலங்கைக்கு வந்த உலக வங்கிக் குழுவின் அறிக்கைப்படி 'ஆசியாவின் அதி உயர்வானவற்றுள் ஒன்றானது என அவர்கள் குறிப்பிட்ட அக்கால பொருளாதார செழிப்பு பெருந்தோட்ட விவசாயத்தின் புரட்சி காரணமாக ஏற்பட்டது ஆகும் (IBRD, 1953). தனியார், அரசாங்க துறைகளால் மூலதனம் உருவாக பங்களிப்புச் செய்ததால் 1980 வரை இலங்கையின் பொருளாதாரத்தின் அச்சாணியாக தொடர்ந்தும் பெருந்தோட்டத் துறை இருந்து வந்தது. இதுவே உள்கட்டுமான விருத்திக்கும் தொடர்புடைய சேவைத் துறையையும் அபிவிருத்திச் செய்ய உதவி செய்தது (Shodgrass 1966). இதற்கு மாறாக உண்ணாட்டு விவசாயத் துறை முதலீட்டுக்கான தனியார் மூலதனத்தையோ பொதுச் செலவீட்டுக்கான அரசிறையையோ அது உருவாக்கவில்லை.

இதனால் ஏன் உண்ணாட்டு விவசாயத் துறை பெருந்தோட்டத்துறை போன்று மூலதன ஆக்கத்திற்கு பங்களிப்பு வழங்கவில்லை என்ற கேள்வி எழுகின்றது. மாறி மாறி வந்த அரசாங்கங்கள் நிலச் சீர்திருத்தத்தையும் குடியேற்றத் திட்டங்களையும் மேற்கொண்டன. இதன் கீழ் விவசாயிகள் 1 - 2 ஹெக்டேயர் வரையான சிறு நிலத் துண்டுகளை முறையான காணி உறுதி, நில உரிமை இன்றிப் பெற்றனர். இதனால் இலங்கை உண்ணாட்டு விவசாய "சிற்றுடைமை முறைமையின்" பண்பு சார்ந்ததாக உள்ளது. இது அத்துறைக்கு அளவுதிட்ட சிக்கனங்களை கிடைக்காமற் செய்தது. இரண்டாவதாக விவசாயிகளால் தமது நிலத்துண்டுகளை விற்க, வாங்க, பெரிதாக்க, ஈடுவைக்க முடியவில்லை. மூன்றாவதாக விவசாயிகள் தமது பிள்ளைகளுக்கு பிரித்துக் கொடுப்ப தனால் சிறு துண்டு நிலங்கள் மேலும் சிறியதாகின்றன. உண்ணாட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்திய நிலம் மூலதனத்தை உருவாக்க கூடிய உற்பத்தி திறன் வாய்ந்த சொத்துக்களாக எவ்வகையிலும் மாற்றப்படக் கூடியவை அல்ல. உண்ணாட்டு விவசாயப் போட்டித் தன்மை அற்றதாக இருப்பதால் அரசாங்கம் நீர்பாசன முறைகளைப் பேணும் செலவுகளைப் பொறுத்துக் கொள்ளும் வேளையில் அதனைத் தொடர்ந்து பேணும் மானியங்களையும் வருமான ஆதரவு மாற்றங்களையும் தொடந்து வழங்கியது. இவ்வாறு உண்ணாட்டு விவசாயத் துறைவரி வருமானமாக அரசாங்கம் எடுத்துக் கொண்ட பெருந் தேட்டத் துறை உட்பட வேறு துறைகளால் உருவாக்கப்பட்ட மிகைகளின் ஒரு பகுதியைத் தொடர்ந்தும் அது உறிஞ்சிக் கொண்டது.

## பொதுச் சொத்துக்களிலிருந்து தனியார் இலாபமடைதல்.

தெளிவில்லாத பொதுச் சொத்து உரிமையையும் சட்ட அமுலாக்கல் முறைமையின் பலவீனங்களும் பொதுச் சொத்துக் களிலிருந்து மூலதனம் உருவாவதைத் தடுக்கின்றன. அரசாங்கம் இலங்கையின் மிகப்பெரிய காணி உரிமையாளராக உள்ளது. ஆனால் அது சொத்துக்களின் பயன்பாட்டை மூலதன உருவாக்கத் திற்குப் பயன்படுத்தத்தவறியது. விவசாய தரிசு நிலங்களுக்கு மேலாக பொதுச் சொத்துக்கள் என்ற வகையில் தெருக்கள், புகையிரத வலையமைப்புக்கள். நீர்த்தேக் கங்கள், பொதுப் பூங்காக்கள் மற்றும் காடுகளுக்காக ஒதுக்கப்பட்ட நாட்டின் பெருமளவு நிலங்களுக்கு சொந்தக் காரனாக அரசாங்கம் உள்ளது. பிரச்சினை என்னவென்னின் அரசாங்கத்துக்கு சொந்தமான காணிகள் முறையான அங்கீகாரம் இன்றி சொந்த இலாபத்துக்கான வீடு கட்டுவதற்கும், பதிவுகளின்றி வியாபாரத்தைச் செய்யவும் மக்களினால் அத்து மீறப்படுவதாகும்.

இந்த சொத்துக்கள் பல காரணங்களால் உற்பத்தி திறன் வாய்ந்த சொத்தாக மாற்றப்பட முடியாதவை. முதலாவதாக இவற்றை மூலதன உருவாக்கத்துக்குப் பயன் படுத்தும் ஆற்றல் அரசாங்கத்துக்கு இல்லை. இரண்டாவதாக தனியாரினால் இவை கையாளப்பட்ட பின் இந்த சொத்துக்களைப் பயன்படுத்தி அவசியமான உள்கட்டு மானங்களை வழங்கி வியாபார விரிவாக்கம், பொதுசனங்களின் வாழ்க்கை நிலைமை என்பவற்றை வசதிப் படுத்துவதில் அரசாங்கமானது கஷ்டங்களை எதிர்கொள்கிறது. மூன்றாவதாக நிலங்களை கைப்பற்றி வைத்திருப்பவர்கள் ஆபத்துகளுக்கும் நிச்சயமற்ற தன்மைக்கும் முகங்கொடுக்க வேண்டிய வர்களாக இருப்பதால் மூலதனத்தை உருவாக்கும் நிலையில் இல்லையாயினும், பொதுச் சொத்துக்களை தெளிவாகமிகையை உருவாக்குவதற்குப் பயன்படுத்துகின்றனர்.

## ஊழல், கொடுக்கல் வாங்கல் செலவுகள் மற்றும் சந்தைத் திரிபுபடுத்தல்கள்

தெளிவாக வரையறுக்கப்படாத சொத்துரிமைகள் பெரும் ஊழலுக்கும் மிகையான கொடுக்கல் வாங்கல் செலவுக்கும் வழி வகுக்கின்றது. இலங்கையில் தனிப்பட்ட நன்மைக்காக அரசாங்கத்துக்கு சொந்தமான காணிகளைப் பயன்படுத்துவோர் பொதுப் பயன்பாடுகளான நீர், மின்சாரம், வீட்டு எண் கொண்ட ஒரு விலாசம் என்பவற்றை சட்டப்படி பெறும் தகைமை இல்லாதவர்கள் ஆனால் உண்மைநிலை என்னவெனில் அரச ஊழியர்கள் அரசியல்வாதிகளின் செல்வாக்கின் ஊடாக சட்டத் தடைகளை மீறி இவற்றைப் பெற்று இருக்கின்றனர். அரசியல்வாதிகளுக்கு கூட அரசுக்குச் சொந்தமான விவசாய, தரிசு நிலங்களை வறிய மக்களுக்கு வழங்குதல், வாக்குகளை உச்சப்படுத்தப்பட்ட கவர்ச்சிகரமான வியாபாரமாக உள்ளது. ரான்ஸ் பரன்ஸி இன்ரநஸனல் (2008) அறிக்கைப் படி 'ஊழல் காணல்' (Corruption perception) சுட்டியின் படி இலங்கை 180 இல் 92 என்ற இடத்தில் காணப்படு கின்றது. உலக வங்கி (2008) இன் படி இலங்கைக்கு வியாபாரம் செய்தலில் இலகுத் தன்மை என்பதில் 178இல் 101 ஆக இடம் வகுக்கப்பட்டு உள்ளது.

தெளிவான சொத்துரிமையின்மை, சொத்துக்களின் சந்தைப் பெறுமதியை திரிபுப்படுத்துவதால் மூலதன உருவாக்கத்தை மேலும் கஷ்டமாக்குகின்றது. ஒரு சொத்தின் சந்தைப் பெறுமதி மூலதனம் அதன் ஆற்றலில் தங்கியுள்ளது. சொத்துரிமையால் பாதுகாக்கப்பட்ட தனியார் சொத்து ஒப்பீட்டு ரீதியில் உயர் சந்தைப் பெறுமதி உள்ளது. இதனால் வியாபர போட்டித் தன்மை தீர்மானிக்கப்படுகின்றது. மாறாக தெளிவான உரித்தாண்மையும் பயன்படுத்தும் உரிமையும் இல்லாத தனியார் சொத்துக்களின் மூலதனம் ஆக்கும் ஆற்றல் குறைவாகவும், நிச்சய மற்றதாகவும் இருப்பதால் அவை ஒப்பீட்டளவில் குறைந்த சந்தை பெறுமதி உடையனவாக உள்ளன. சொத்துரிமையால் பாதுகாக்கப்பட்ட சொத்துகளுக்கும்,

*தொடர்ச்சி 47ம் பக்கம்......*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உண்மையான அபிவிருத்தியின் பொருட்டு எண்ணக்கருக்களை மாற்றுவதன் அவசியம்

**பேராசிரியர் சுமணபால கல்மங்கொட**


*பணிப்பாளர்,*
*பௌத்த கற்கைநெறிகளுக்கான பட்டப் பின்படிப்பு நிறுவனம்*
*களனி*

இந்நாட்டில் சமாதானம், ஒற்றுமை என்பன ஏற்படுத்தப்பட்டபின், நாம முகங் கொடுக்கும் பாரிய பிரச்சினை பொருளாதார அபிவிருத்தியாகும். கடந்த தசாப்தங் களில் சமாதான இயக்கத்தில் செய்தது போலவே, இந்த விடயத்திலும் பௌத்தம் பெரும் பங்காற்ற முடியுமென நான் நம்புகின்றேன். பௌத்த சிந்தனையின் படி, எவ்வகையான வெற்றிகரமான செயலுக்கும் முதலாவதும் மிக முக்கிய மானதுமான நிபந்தனை, இந்தச் செயலில் ஈடுபடும் மக்களின் மனதைத் தயார் செய்தலாகும். மக்களின் மனப்பாங்கு அவர்களின் அரசியல் சமய, கலாசார பின்புலங்களுடன் தொடர்புடைய பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. நாட்டில் தேசிய அபிவிருத்தியின் வெற்றிக்காக எடுக்கவேண்டிய முதலாவது நடவடிக்கை, 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் எண்ணக்கருவை உருவாக்குதல் ஆகும். இரண்டாவது நடவடிக்கை அபிவிருத்தி என்பதற்கு ஒரு புதிய எண்ணக்கருவை உருவாக்குவதாகும். ஏனெனில் முன்னர் கூறிய பல காரணங்களால், இந்த எண்ணக்கரு தொடர்பாகக் கூட மக்களிடையே பொதுவான கருத்து ஏதுவும் இல்லை. எனவே இந்தக் கட்டுரை, பௌத்த தர்மத்தின்படி மாறிக் கொண்டிருக்கும் எண்ணக் கருக்களின் உளவியல்ரீதியான செயல் முறையை விளக்கும் அதே வேளையில், ஒற்றுமை, அபிவிருத்தி என்பவற்றுக்கான பொதுவான எண்ணக் கரு ஒன்றைக் கட்டியெழுப்புவது எவ் வாறு என்பதில் கவனஞ்செலுத்து கின்றது.

நாம், அபிவிருத்தி என்பதற்கான எண்ணக் கருவை வரைவிலக்கணம் செய்வதில் பொருளாதாரப் பக்கத்தை வலியுறுத்தினாலும் இது தொடர்பாகக் கருதப்பட வேண்டிய வேறு சில முக்கிய காரணிகளும் உண்டு. நாட்டின் உண்மையான அபிவிருத்தியை எட்டுவதற்கு அபிவிருத்தி என்பதற்கான நன்கு வரைவிலக் கணம் செய்யப்பட்ட எண்ணக்கரு ஒன்று எம்மிடம் இருக்க வேண்டும். வேற்று நாடுகளால் அறிமுகம் செய்யப்பட்ட எண்ணக்கருக்களில் அதிகம் தங்கியிராது, எமது நாட்டின் கலாசார, சூழல் பின்புலத்துக்குப் பொருத்தப்பாடுடைய எமது சுய எண்ணக்கருவை நாம் உருவாக்க வேண்டியுள்ளது. இது தொடர்பான முதலாவது முக்கிய நடவடிக்கை, இவ்வாறான தனித்துவ மான எண்ணக் கரு ஒன்றை விருத்தியாக் குதலாகும். பண்டைய கால எமது நாடு பௌத்த சிந்தனைகளின்பாற்பட்ட தத்துவங்களைப் பின்பற்றியதால் அதிக சுதந்திரத்தையும் பொருளாதார மன நிறைவையும் நன்கு அனுபவித்தது என நான் பெரிதும் நம்புகின்றேன்.

□சகல மனித செயற்பாடுகளும் மனதால் நெறிப்படுத்தப்படுகிறது. உலகம் மனதால் வழிப்படுத்தப்படுகிறது.□ உளச் செயற்பாடுகளின் இறுதி விளைவு பல்வேறு எண்ணக்கருக்களின் தோற்றமாகும். மனிதர்களின் உடல்ரீதியான, சொல்ரீதியான நடத்தைகளை உருவாக்குவதில், எண்ணக்கருக்கள் முக்கிய பாத்திரம் வகிக்கின்றன. மக்கள் தமது புலன்களூடாக புறப்பொருட்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எண்ணக்கருக்களை உருவாக்குகின்றனர். பல்வேறு எண்ணக் கருக்களை உருவாக்கிய பின், மக்கள் சொல்சார், உடல்சார், உளம்சார் ஒவ்வொரு செயல் நோக்கியும் இவற்றால் வழிப்படுத்தப்படுகின்றனர்.

எனவே தற்போதுள்ள அபிவிருத்தி என்பதற்கான எண்ணக்கருக்களை நாம் மாற்றியமைக்க வேண்டும், அத்துடன் நாட்டின் கலாசாரப் பின்புலத்துக்குப் பொருத்தமான உண்மையான அபிவிருத்தியை எய்துவதற்கு எமது சொந்தமான புது எண்ணக்கருவை உருவாக்க வேண்டும் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம் ஆகும். இந்த நோக்கத்தை எய்துவதற்கு எல்லா ஊடகங்களும். அரசாங்கமும், மக்களும், சமயத் தலைவர்களும் மற்றும் அறிஞர்களும் அவர்களின் முழுநேரத்தையும் மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும். இது மக்கள் மனதில் அபிவிருத்தி என்பதற்கான தேசிய எண்ணக்கருவை உருவாக்க வழிவகுக்கும். எந்த வகை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினதும் ஆரம்பத்திலேயே எண்ணக்கருக்களின் இந்தப் பரிணாம வளர்ச்சியை உருவாக்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காது விட்டால் நாட்டை அபிவிருத்தி செய்வது மிகவும் கடினமாகவிருக்கும். எனவே எனது நோக்கம், அபிவிருத்தி என்பதற்கான ஒரு தேசிய எண்ணக் கருவை உருவாக்கப் பயன்படக்கூடு மென நான் எண்ணும் பௌத்தம் சார்ந்த சில தக வலை வழங்குவதாக உள்ளது. இவ் வாறான ஓர் எண்ணக்கரு இன்றி நாம் செயற்பட்டால் சகல நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது திட்டங்களும் தலைவன் இல்லாத வண்டித்தொடர் போலாகும்.

பௌத்த சித்தாந்தத்தின்படி அபிவிருத்தி என்ற எண்ணக்கருவை அல்லது நலமா யிருத்தல் என்ற எண்ணக்கருவை வரை விலக்கணப்படுத்துவதில் பொருளாதாரம் மட்டுமன்றி வேறு பல காரணிகளும் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும். இதன் காரணம் பௌத்தம் ஒரு காரண கோட்பாட்டையும் காரணமில்லாத கோட் பாட்டையும் மறுக்கிறது என்பதுடன், உல கின் சகல பொருட்களும் பல காரணங் கள், பல நிலைமைகள் என்பவற்றால் தோற்றம் பெறுகின்றன என்பதாகும். எனவே அபிவிருத்தி என்பதும் பல முதல்நிலை, இரண்டாம் நிலைக் காரணி களால் ஏற்படுகின்றது. எந்த ஒரு சமூகத் திலும் மனித அபிவிருத்தியின் முழுமை யும் பின்வரும் பாடலில் சுருக்கமாகத் தரப்படுகின்றது.

> உடல் நலன் ஆரோக்கியம் வழியே
> உள நலன் செல்வம் வழியே
> சமூக நலன் மக்களின் நல்லுறவு வழியே
> **ஆன்மீக நலன் உலகின் உண்மை**
> **இயல்பின் விளக்கம் வழி.**

இன்று நாம் காண்பது போலவே கைத் தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக உண்டான சூழல் மாசடைதல் மக்களின் உடல் நலனுக்கு கேடு விளை விப்பதாக உள்ளது. மேலும் மிகையான நுகர்வு உடல்நலக் கேட்டுக்குக் காரண மாகி வருகின்றது. எனவே அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிக்கும் போது ஆரோக்கியம் என்னும் எண்ணக்கருவுக்குப் பிரதான இடம் கொடுக்கப்பட வேண்டும். உடல்நலம் இல்லாதுவிடின் அபிவிருத்தியை அனுப விக்க மக்கள் இருக்கமாட்டார்கள்.

ஊடகங்கள் தரும் தகவலின்படி மன அழுத்தம், உளச்சோர்வு, அதிருப்தி என்பன அனேகமான இலங்கை மக்களின் பிரதான பிரச்சினைகளில் சிலவாகும். மக்களின் உளநலனைப் பெறுவதற்கான சகல மனித நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட வேண்டும். எனவே அபி விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், மக்களின் மனதில் மகிழ்ச்சியை உண்டாக்குமாறு திட்டமிடப்படல் வேண்டும். இதைவிடுத்து கொள்கைவழி அபிவிருத்தியை எட்டும் நோக்குடன் அபிவிருத்தி செய்யலாகாது.

எந்த நாட்டிலும் சமூக ஒற்றுமை என்பது முக்கிய குணாதிசயங்களில் ஒன்றாக உள்ளது. சுமார் முப்பது வருடங்களுக் கும் மேற்பட்ட எமது அனுபவத்திலிருந்து சமூக ஒற்றுமையீனத்தால் நாடு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது என்பதை நாம் யாவரும் அறிவோம். எனவே இனி வரும் காலங்களில் தீவின் சகல வகை யான மக்களிடமும் இவ்வாறான பிரச்சி னைகள் ஏற்படாது தடுக்க ஒவ்வொரு முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

எமது தார்மீக செயல்களினால் பொருளா தார, உள, சமூக நலன்களை எட்டக் கூடுமாயினும், எவராலும் பிறப்பு, மூப்பு, பிணி, சாக்காடு என்பவற்றைத் தவிர்க்க முடியாது. இவை வாழ்வின் நிரந்தர உண்மைகள் ஆகும். ஒவ்வொருவரும் இந்த யதார்த்தத்தை ஒருநாள் சந்தித் தேயாக வேண்டும். இந்த யதார்த்தம் ஒவ்வொருவரையும் நாளாந்தம் பாதிக்கின்றது. அனேகமாக எல்லாச் சமயங்களுமே இந்த உண்மைகளுடன் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கவே உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, சமூகத் தின் சந்தோஷத்தை உறுதிப்படுத்த நாட்டில் சமயச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதனூடாக ஆன்மீக நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த வகையில், பௌத்தம், உள அபிவிருத் தியை அத்திபாரமாகக் கொண்ட ஆன்மீக முன்னேற்றத்தின் விரிவான முறைகளை வழங்குகின்றது. இந்த ஆன்மீக அபிவி ருத்தி உறுதிசெய்யப்படாத போது எந்த நாடோ, சமூகமோ அபிவிருத்தி அடைந்த தாகக் கொள்ளப்பட முடியாது.

ஆன்மீக அபிவிருத்தி என்பது மக்களின் வெளிவாரியான நடத்தையுடன் தொடர் புபட்ட ஒழுக்கநெறி சார்ந்த அபிவிருத் தியை அடிப்படையாகக் கொண்டது. மனித நடத்தை மீது மட்டுப்படுத்தல் அல்லது கட்டுப்பாடு இல்லையெனில், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மக்களுக்குத் திருப்தி அளிக்கமாட்டாது. இதனால் பின்வரும் பௌத்த தத்துவங் களும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங் களில் உள்ளடக்கப்பட வேண்டிய அளவுக்குப் பெறுமதிமிக்கவை.

1. ஆடம்பர வாழ்வுக்கு எல்லைகள் இருக்க வேண்டும். மிகையான நுகர்வுப் பழக்கங்களை கட்டப்படுத்தப்பட வேண்டும்.

2. அபிவிருத்தியின் எல்லைகடந்த விரி வாக்கம் கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

3. அளவுமீறிய அனுபவப்பட்ட தலை வர்களின் தலையீடுகள் கட்டுப்படுத்தப் படல் வேண்டும்.
4. தேவையில்லாத கல்வி கட்டுப் படுத்தப்படல் வேண்டும்.

*குட்டதன்தசுட்ட* எமது நாட்டுக்கு மிகப் பொருத்தமான அபிவிருத்திக்கான மிகச்சிறந்த, எளிமையான திட்டத்தை முன்வைக்கின்றது. இதில் கீழ்க் கண்ட வாறு மூன்று கட்டங்கள் உண்டு:

I. நாட்டில் உள்ள விவசாயிகள் ஊக்கு விக்கப்பட வேண்டும். அத்துடன் இவர் களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளும் வாழ்வதற்கான வழிவகையும் கொடுக்கப் பட வேண்டும். (உற்பத்தி)

II. நாட்டிலிலுள்ள வர்த்தகர்களை ஊக்கு விக்க வேண்டும். இவர்களுக்கு மூல தனம் வழங்கப் படவேண்டும். (விநி யோகம்)

- உற்பத்தி இல்லாவிடின் வர்த்தகம் ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகும்.

III. அரச ஊழியர்களுக்கு ஊழியமும் வாழ்வதற்கான வழிவகைகளும் வழங்கப்பட வேண்டும்.

- அரச ஊழியர்கள் நாட்டை நல்ல முறையில் ஆளத்தவறினால் நாட்டில் உற் பத்தியும் வர்த்தக மும் பயனற்ற தாகிவிடும்.

மேற்படி எளிய நிகழ்ச்சித்திட்டத்தின் பய னாகப் பின்வரும் விளைவுகள் பெறப் படலாம்:

I. வறுமையை ஒழித்தல்.

II. சமூக ஒற்றுமையையும் பாதுகாப் பையும் நிலைநிறுத்தல்.

III. குடும்ப வாழ்வில் சந்தோஷத்தை நிலைநிறுத்தல்.

IV. வேலையின்மைப் பிரச்சினையை இல்லாதொழித்தல்.

மேற்கூறிய அவதானிப்புக்களின் பிரகாரம் எந்தவொரு நாட்டினதும் உண்மையான அபிவிருத்தியை அடைவதற்கு மக்களின் மனப்பாங்கில் எண்ணக்கரு ரீதியான மாற்றம் அவசியமாகும்.

***உசாத்துணை:***

*Dhammapada, tr. Ven. Narada Thera, Taiwan 1993, p. 1*

*Sa>yuttanik@ya, Buddhajayanti Publication, vol. I, p.42*

*Sumanapala Galmangoda , Early Buddhist Philosophy and Social Concepts, Singapore, 2001, p.8*

*Dhammapada, op.cit., p. 177*

*Sumanapala Galmangoda, Buddhist Social Philosophy and Ethics, Kandy , 2006, p.70*

*D$ghanik@ya, Kutadantasutta*

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சிறுவர் வறுமை: சில பார்வைகள்

அஸ்ரா அப்துல் காதர்

*இது, இலங்கையில் வறுமையின் பல்வேறு பரிமாணங்களையும் ஆய்வு செய்துவருகின்ற, வறுமை பற்றிய ஆய்வுக்கான நிறுவனத்தால் (CEPA) எழுதப்படும் கட்டுரைத் தொடர்களின் பதின்மூன்றாவது ஆக்கமாகும்.*

## 1. அறிமுகம்

சிறுவர் வறுமை என்பது சிறுவர்களின் ஆற்றல்கள், நலன்கள் மற்றும் எதிர்கால வல்லமைகள் என்பவற்றின் மீது தாக்கம் செலுத்துகின்ற பரந்த வீச்சில் காணப்படும், பேசப்படும் பிரச்சினைகளை குறிப்பதற்கு விசாலமான பொருளியலில் பயன்படுத்தப்படும் சொற்றொடர் ஆகும். இந்த பல்-பரிமாண பார்வை, பிள்ளைகள் இல்லத்தின் அல்லது குடும்பத்தின் நீட்சி என்பதை விட அவர்கள் தனித்துவமான மனிதர்கள் என்பதையும் அவர்களது வறுமை அனுபவங்களும் நலன்களும் வளர்ந்தோரிலிருந்து வித்தியாசமானவை என்பதையும் அங்கீகரிக்கின்றது. இக் கட்டுரை வறுமைப் பகுப்பாய்வுக்கான மத்திய நிலையத்தினால் நடத்தப்பட்ட சிறுவர் வறுமை பற்றிய மீளாய்விலிருந்து பெறப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் இலங்கையின் சிறுவர் வறுமை மீது கவனத்தை ஈர்க்க முயற்சிக்கின்றது.

## 2. சிறுவர் வறுமை மீதான மறுதலிப்பு, புறக்கணிப்பு மற்றும் நலிவுற்றநிலைக் (DEV) கட்டமைப்பு

தற்போது பல ஆராய்ச்சியாளர்கள் சிறுவர் வறுமை என்பது பல் பரிமாண பிரச்சினை எனவும் இது பல வகையான வித்தியாசமான காரணங்களால் உருவாகின்றது எனவும் இவை வருமானம் தொடர்பிலான மற்றும் வருமானத்துடன் தொடர்பில்லாத காரணிகளை அடிப்படையாகக் கொண்டவை எனவும் இது பல்வேறு பரிமாணங்களில் அனுபவிக்கப்படும் எனவும் அங்கீகரிக்கின்றனர். சிறுவர்கள் எவ்வாறு வறுமையை அனுபவிக்கின்றனர், எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்பதை நன்கு விளங்குவதற்காக சிறுவர் வறுமை DEV கட்டமைப்பைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யபட்டுள்ளது.

DEV கட்டமைப்பு மூன்று பிணைப்புடைய மேல்விரவும் பரிமாணங்களான மறுதலிப்பு, புறக்கணிப்பு, நொய்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது பிள்ளைகள் வறுமையை எவ்வாறு அனுபவிக்கின்றனர் என்பதை கருத்திற் கொள்ள தவறிய எளிதான ஒடுங்கிய வரைவிலக்கணங்களுக்கும் அப்பால் செல்ல இது முயல்கின்றது. பிள்ளைகள் வித்தியாசமான பரிமாணங்களில் வெவ்வேறு அளவுகளில் வறுமைக்கு ஆளாகக் கூடியவர்கள். இவர்கள் ஒரே நேரத்தில் ஒன்றிலும் மேற்பட்ட பரிமாணங்களை அனுபவிப்பர்.

**மறுதலிப்பு**; என்பது அடிப் படைத் தேவைப் பரிமாணம் என விவரிக்கப்படலாம். இது உணவு, பாதுகாப்பான நீர், கல்வி, சுகாதாரம் போன்ற பிள்ளை களின் நலனுக்கு அவசியமான வழங்கல் சேவைகளின் பற்றாக் குறையை கருதுகின்றது.

**புறக்கணிப்பு**; சிறுவர்களின் அடிப்படை தேவைகள் மட்டுமன்றி மனவெழுச்சி சார், சமூகம் சார் ஆதரவுகளை சிறுவர்களுக்கு மறுக்கின்ற முறைமைகள், பிண்ணனிகளைப் புறக்கணிப்பு என்பது கொண்டுள்ளது. புறக்கணிப்பு என்பது சிறுவர்கள் வறுமையை வெளிக்காட்டும் முக்கிய கூறாக காணப்பட்டது. குடும்ப சமூக உறவுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. சமூக அந்தஸ்து, குழு அங்கத்துவம், பொருளாதார அந்தஸ்து, கலாசார முற்சாய்வு என்பன காரணமாக பிள்ளைகள் புறக்கணிக்கப்படுவதாக உணர்கின்றனர்.

**நலிவுற்ற நிலை**; இது வறுமையின் இயங்கியலையும், சிறுவர்கள் தமது வதிவிடம், இனம், சமூக அந்தஸ்து, வயது, பால் என்பனவற்றின் அடிப்படையிலான வெவ்வேறு பயமுறுத்தல்களால் இலகுவில் தாக்கப்படக் கூடியவர்களாக உள்ளனர் என்பதையும் வலியுறுத்துகின்றது. இது வறுமையின் பரிமாணங்களை கையாளும் ஆற்றல் இவர்கள் எவ்வளவு விரைவாக பாதிப்புக்களில் இருந்து மீட்சி பெறுவர், இதனால் மீண்டும் புதிதாக தொடங்கு மாற்றல் என்பன பற்றி குறிப்பிடப்படு கின்றது.

## 3. இலங்கையின் சிறுவர் வறுமை

பின்வரும் பகுதிகள் முன்னைய தொகுதி சார் பண்பு சார் ஆய்வுகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட ஆதாரங்களை பயன்படுத்தி DEV கட்டமைப்பின் வெவ்வேறு பரிமாணங்களில் இலங்கையின் சிறுவர் வறுமையை விளக்குகின்றன.

### 3.1 சுகாதாரம்

ஒரு பிள்ளையின் ஆரோக்கியம் உடல் ரீதியான, புத்தி சார்பான அதன் அபிவிருத்தியின் முக்கியத்துவமானது, ஆரோக்கிய குறைவானது, சிறுவர்களின் ஆற்றல்களைப் பயன்படுத்தும் அவர்களின் வல்லமையை பாதிக்க முடியும். சிறுவர்களின் ஆரோக்கியத்தை பாதிக்கும் அம்சங்களாவன : பெற்றோரின் வருமானம், கல்வி, ஆரோக்கிய மட்டம், வதிவிடம், உள்கட்டுமானம் மற்றும் பிரதான சேவைகளிலிருந்து தள்ளிவைக்கப்படல் (இடம்சார் பாதகநிலையும், நலிவுற்ற நிலையம்) ஆரோக்கிய குறைவால் வருந்தும் ஒரு பிள்ளையால் அதன் உச்சளவு ஆற்றலை விருத்தி செய்ய முடிவதில்லை. தொடர்ச்சியாக இதேப் பாதக நிலை அடுத்த தலைமுறைக்கும் நீடிக்கும் ஆபத்தால் பாதிக்கப்பட வேண்டியதாகவும் இருக்கும்.

இலங்கையின் சாதகமான சுட்டிகள் இருப்பினும் நிறைகுறைவுக்கும் வளர்ச்சி குன்றிப் போதலுக்கும் இட்டுச் செல்லக் கூடிய சிறுவர்களில் காணப்படும் மந்தபோசனை இப்போதும் குறிப்பிடத்தக்க பிரச்சினையாகவே உள்ளது. அத்துடன் பாதுகாப்பான குடிநீரும், போதிய சுகாதாரமும் எல்லா பிள்ளைகளுக்கும் எட்டுவதாக இல்லை.

சிறுவர் மந்த போசணை இலங்கையில் பிரதான் பிரச்சினையாகத் தொடர்கிறது. 5 வயதிலும் குறைந்த சிறுவர்களில் 1/3க் கும், 1/4க்கும் இடைப்பட்ட பங்கினர் நிறை குறைவுள்ளவர்கள். பத்தில் ஒரு பங்கு சிறுவர்கள் மிக மோசமான நாட்பட்ட மந்த போசனைக் குறைப்பாட்டால் பாதிக்கப்பட்டவர்களில் ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் சிசுக்களில் சுமார் 72000 குழந்தைகள் (உயிர்பிறப்புக்களின் 19%) குறிப்பிட வேண்டிய அளவின் அல்லது கடுமையான மந்த பேசணையுடையவை யாக உள்ளன. இலங்கைச் சிறுவர்களின் பிறப்பு நிறையின்

---

சிறுவர் வறுமை பற்றிய
10வது வருடாந்தக் ஆய்வுக் கருத்தரங்கு,
4-5 டிசம்பர் 2009

சிறுவர் வறுமை பற்றிய புரிந்துணர்வை விருத்திசெய்வதையும், ஆய்வாளர்கள் மற்றும் தீர்மானம் மேற்கொள்வோருக்கு இடையிலான தொடர்பை மேம்படுத்துவதையும் இக் கருத்தரங்கு நோக்காகக் கொண்டுள்ளது. மேலும் அது சிறுவர் பங்குபற்றலையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

ஆய்வுப்பொருளாக அமையக்கூடிய விடயங்களும், கலந்துரையாடல் குழுவின் அமர்வுகளும்

- சிறுவர் வறுமை பற்றிய கருத்தார்ந்த விவாதங்கள்
- சிறுவர் வறுமை மீதான அண்மைக்கால சூழமைவு மாற்றங்களும் தாக்கமும்
- சிறுவர் வறுமையை மாற்றமடையச் செய்யும் செயற்பாடுகள்
- ஆய்வுக்கும் கொள்நெறிக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புதல்

(மேலதிக விபரங்களுக்கும் பதிவுசெய்வதற்கும் இவ் இணையத்தளத்தைப் பாருங்கள் www.cepa.lk/symposium)

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையம் 2.8 கிலோக்கிராமாக உள்ளது. இது மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் 1998ல் கூறும் ஒப்பீட்டு இடைப் பெறுமானம் 3.2 கிலோக்கிராமிலும் மிகக் குறைவாகும். குணவர்த்தனவின் ஆய்வு (2003) பாதுகாப்பான குடிநீர், போதிய சுகாதாரம் என்பவற்றின் பற்றாக்குறையான கிடைப்பனவானது குறைந்தளவு போஷணை உள்ள பிள்ளைகளை, ஏனையோரை விட கூடுதலாகப் பாதிக்கின்றது எனக் காட்டுகிறது. நிறைக் குறைவுள்ள பிள்ளைகளில் 40% ஆனோருக்கு குழிமலகூடம் இருந்ததெனவும் கிட்டத்திட்ட 45% ஆனோருக்கு வாளி மல கூடம் அல்லது மலகூடமே இல்லாதிருந்தது எனவும் காட்டுகின்றது.

அபிவிருத்தி அடைந்துவரும் வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை மிகக் குறைவான சிசு மரண, தாய் மரண வீதங்களை கொண்டுள்ளது. சிசு மரண வீதம் 1985 - 1990 காலப்பகுதியில் 22% ஆக இருந்து 1995 - 2000 காலப்பகுதியில் 13.5% ஆக குறைந்தது. நகரப்பகுதியில் 15% கிராமப் பகுதிகளில் 17.5% என்பதோடு ஒப்பிடுமிடத்து பெருந்தோட்டப்பகுதியில் ஆகக் கூடியளவு 47.5% ஆக சிசு மரண வீதம் (500 இலும் குறைந்த நிகழ்வுகளின் அடிப்படையில்) காணப்பட்டது (வடக்க கிழக்கு நீங்கலாக) (குடித்தொகை மதிப்பீடு புள்ளி விபரத் திணைக்களம் 2000)

சிசு மரண வீதத்தின் பிரதான மூன்று காரணங்களாக, சுவாச நோய்கள், வயிற்றோட்டத் தொற்று, விபத்து மரணங்கள் அமைகின்றன (DCS 2000) இந்த இறப்பு வீதங்களுக்கான காரணங்கள் தாயின் ஆரோக்கியம் கர்ப்ப காலத்தில் போஷணை மட்டம் மற்றும் பிறப்புக்கு முந்திய, பிந்திய தரமான கவனிப்பு என்பவற்றுடன் பிணைக்கபட்டுள்ளன. பெற்றோரின் சமூக பொருளாதார பின்னணி குறிப்பாக தாய்மாரின் கல்வி மட்டம் என்பதும் சிசு மரண வீதத்தை பெருமளவில் பாதிப்பதாக காணப்பட்டுள்ளது. இறப்பு மட்டங்கள் மீது செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணிகளாக வாழும் சூழலும் ஆரம்ப சுகாதார கவனிப்பு வசதிகளின் கிடைப்புத் தன்மையும் உள்ளன. தாயின் வயதும் ஒரு பிரதான காரணியாகும். 20 வயதிலும் குறைந்த அல்லது 35 வயதிலும் கூடிய பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள் ஒரு மாதத்திற்குள் இறக்கும் ஆபத்து உயர்வாகவே உள்ளது. (DCS 2000)

வயிற்றோட்ட நோய்கள் சிறுவர்களிடையே அதிகம் காணப்படுகிறது. இது இளம் சிறுவர்களின் குறைந்த வளர்ச்சி குறைந்த அபிவிருத்திக்கான பிரதான காரணங்களில் ஒன்றாக உள்ளது. இது அநேகமாக குறைவான சுகாதார நிலைமைகள் பாதுகாப்பான குடிநீர் கிடையாமை என்பவற்றால் ஏற்படுகின்றது. 2000ம் ஆண்டின் குடித்தொகை சுகாதார ஆய்வின்படி கொழும்பு மாவட்டத்தில் ஐந்து வயதுக்கு குறைந்த சிறுவர்களில் 5.5 சதவீதமானோரும் வேறு நகரப்பகுதிகளில் 5 சதவீதமானோரும் கிராம புறங்களில் 7 சதவீதமானோரும் பெருந்தோட்டப் பகுதியில் 6.5% ஆனோரும் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டனர். (இரண்டு கிழமை கால ஆய்வுக் காலத்தில்) (DCS 2000)

வயிற்றோட்ட நோயுடன் ஒப்பிகையில், நிர்பீடணமாக்கல் தரங்கள் சிறப்பானதாக உள்ளன. நகரப்பகுதிகளில் 87% சிறுவர்களிடம் சுகாதார அட்டைகள் காணப்பட்டன இதில் 82% பிள்ளைகள் முழுமையான நிர்ப்பீடணமாக்கல் திட்டத்தைப் பூரணப்படுத்தியிருந்தனர். கிராமபுறங்களில் 87.5% சிறுவர்களிடம் சுகாதார அட்டைகள் காணப்பட்டது. இதில் 81.5% சதவீதமானோர் முழுமையான நிர்ப்பீடணமாக்கல் திட்டத்தைப் பூரணப்படுத்தி இருந்தனர். பெருந்தோட்ட துறையில் 66.5% சிறுவர்கள் சுகாதார அட்டைகளை வைத்திருந்தனர். இதில் 71.5% பிள்ளைகள் நிர்ப்பீடணமாக்கல் திட்டத்தை பூரணப்படுத்தி இருந்தனர். (DCS 2000)

வலுக்குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கையானது வயதுடன் அதிகரித்துச் செல்கிறது. அநேக மான வலுக் குறைவுகள் வாழ்வின் பிந்திய காலங்களில் உண்டாகின்றன அல்லது காயப்படுத்தல் அல்லது நோய்களால் தோற்றுவிக்கப்படுகின்றன என்பதை இது சுட்டிக் காட்டுகின்றது. மிக அதிகமாகக் காணப்படும் வலுக்குறைவு கால்கள் சம்பந்தப்பட்டதாக இருந்தது. இதைத் தொடர்ந்து கேட்டல், பேச்சுக் குறைபாடுகள் மற்றும் உளநலக் குறைவு என்பன காணப்பட்டன. (DCS 2001)

## 3.2 கல்வி

இலங்கையின் இலவசக் கல்விக் கொள்கை தெற்காசியப் பிராந்தியத்திலேயே அதி உயர்வான எழுத்தறிவு வீதத்துக்கும் பாடசாலை சேரல் வீதத்துக்கும், பாடசாலை விலகல் வீதத்துக்கும் இடையில் ஒப்பிடும் போது பாடசாலை சேர்வு வீதம் உயர் மட்டத்தில் இருந்த போதும் 18% ஆன பிள்ளைகள் 9ஆம் தரத்தை பூர்த்தி செய்யத் தவறினர். இது ஒப்பீட்டளவில் உயர் அளவான இடைவிலகலை காட்டி நிற்கின்றது. (உலகவங்கி 2005)

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF 2001) இலங்கையில் 5 - 14 வயதுக்குட்பட்ட பிள்ளைகளில் 80,000 - 100,000 இடைப்பட்ட தொகையினர் பாடசாலை செல்வது இல்லையென மதிப்பிட்டுள்ளது. பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்யத் தவறியவர்கள் கிராமப் புறங்கள், போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் பெருந்தோட்டத் துறை என்பன அடங்கிய வறிய புவியியல் பிரதேசங்களில் வறிய எல்லை நிலையில் வாழும் குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் ஆவர். இலவசக் கல்வி ஏற்பாடு இருந்த போதும், வறிய குடும்பங்கள் அப்பியாசக் கொப்பிகள், பஸ்க் கட்டணம் போதிய உணவு போன்ற பாடசாலைக்கு மேலதிகமாக தேவைப்படுவனவற்றை பூர்த்தி செய்ய முடியாதனவையாக இருக்கலாம் கூடிய வகையில் குடும்ப வருமானத்தை முகாமைத்துவம் செய்யாத, பிள்ளைகளை கவனிப்பேரிடம் ஒப்படைத்து விட்டு வெளிநாடு சென்ற தாய்மாரின் பிள்ளைகள் வலுக் குறைவால் வருந்தும் பிள்ளைகள் ஆகியோ யாரை நொய்மையான குழுக்கள் கொண்டுள்ளன.

உள்கட்டுமானச் சேதம், திறன்வாய்ந்த ஆசிரியர்கள் பற்றாக் குறை என்பவற்றில் கடுமையான போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கல்வியும் கற்றல் மட்டமும் மிகக் குறைவானதாகக் காணப்படுகின்றது.

பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கல்வியின் பண்பு பற்றிய பிரச்சினைகளும் உள்ளன. 90% பிள்ளைகள் ஆரம்பக் கல்வியை முடிக்கின்ற போதும் 20% இலும் குறைவானவர்களே எண், எழுத்து வாழ்க்கைத் திறன் என்பவற்றில் பாண்டியத்தை எட்டுகின்றனர். (NEC 1995) அரசாங்கம் பயிற்றப்பட்ட ஆசிரியர்களை நியமிப்பதில் கஷ்டத்தை எதிர்வநோக்குதால் பல கிராமிய பிரதேசங்களில் கற்பித்தலின் தரம் குறைவாக உள்ளது. (கல்வி அமைச்சு 2007)

## 3.3 ஆயுத போராட்டத்தால் பாதிகப்பட்ட சிறுவர்கள்

தமது ஆதரவு வலையமைப்பு, அவர்களது பழகிய சூழலுக்கு வரும் பயமுறுத்தல் என்பவற்றால் சிறுவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பயம், கவலைகள் விரக்திகள், மற்றும் பாதுகாப்பின்மை ஆகியவற்றை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் சிறுவர்கள் தமது குழந்தைப் பருவத்தை இழந்து விட்டனர். (அமரகோன் 2002) போர் நிலைமை, குடும்பம், சமுதாயம் போன்றன ஆதரவு அமைப்பை அழிக்கின்றன. இது உறுதித்தன்மையைப் புரிந்துக் கொள்ளும் விதத்தை மாற்றுகின்றது.

பிள்ளைகள் போரை அநுபவிக்கும் விதம் போரின் விளைவான வன்முறை ஆகியவற்றை கையாளும் முயற்சியில் மத்தியூ (2006) ஓரினத் தன்மைதான குழு அல்ல என்பதையும் அவசர நிலைமைகளில் அவர்களின் நலிவுற்ற நிலைமைகள் பல காரணிகளில் அவர்களின் வயது, அவர்களின் வாழ்விடம், கிராமச் சூழலா அல்லது நகரச் சூழல் என்பதுடன் அவர்களின் இனம் அல்லது இனக் குழு பால் நிலை சார்பாக இருக்கும் என்பதையும் வலியுறுத்துகின்றார். இதன்படி அவர்களின் நலிவுற்ற நிலை சமூகத்தில் மரபு ரீதியான வகிபங்கு, இந்த வகிப்பங்கும் அந்தஸ்தும் பேரழிவின் காரணமாக மேலும் நல்லதாக இருக்கிறதா அல்லது கெட்டதாக இருக்கின்றதா என்பவற்றிலும் தங்கியுள்ளது. மேலும் யுத்த அநுபவம், பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவம் மற்றும் முதிர்பருவம் என்பவற்றின் மீது தாக்கம் புரிந்து அவர்களின் வாழ்க்கை வட்டத்தின் சகல கட்டங்களையும் பாதிக்க முடியும்.

இலங்கையில் சிறுவர் போராளிகள் என்ற பிரச்சினையுடன், குறைந்த வயது இணைப்பின் விளைவாக பாதிக்கப்பட்ட அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்ட சிறுவர்களின் எண்ணிக் கையானது கணிசமாக இருப்பதை கருத்தில் கொள்ளும் போது பாரதூர மானது. போர்ப் பிரதேச வறிய மக்களே சிறுவர் படை இணைப்புக்கு நொய்ம்மைத் தன்மையுடைய வர்களாக இருந்துள் ளனர். போருக்குப் பிந்திய நிலைமை களில் ஆயுதக் குழுக் களில் இணைந்த சிறுவர்கள் (குறிப்பாக இளைஞர்கள்) மீது தாக்கம் புரிந்த 'தள்ளு' விசைக் காரணிகளை விளங்கவும் கையாளவும் கூடுதலான எத்தனங்கள் செய்யப்பட வேண்டும் இவர்களுக்கு இவர்களது வாழ்க்கை நிலைமைகளை முன்னேற்றுவ தற்காக வசதியான வேறு தெரிவுகளை முன்வைக்க வேண்டும்.

### 3.4 சிறுவர் உழைப்பு

வறுமை சிறுவர்களை ஊழியப்படையில் சேரும் நொய்ம்மைத் தன்மை உடையவர் களாக ஆக்குகின்றது. சிறுவர்கள் ஈடுபடும் வேலையின் முறையின் இயல்பு, இவர்கள் இலகுவாக சுரண்டப்படுவதற்கு வழிவகுக்கின்றது. மறுபக்கத்தில் சிறுவர்கள் தமது குடும்ப வருமானத் துக்கு பங்களிப்புச் செய்ய ஆர்வமானவர் களாக உள்ளனர். இவர்கள் சில சமயம் இவ்வாறன வேலைகளை செய்ய விருப்பத்தை வெளிக்காட்டுகின்றனர். இந்த வேலைகள் பொருளாதார ரீதியாக பலனளிப்பது மில்லை. உறுதியான வருமானத்தை கொடுப்பதுமில்லை. எனவே இந்த சிறுவர்கள் வறுமை நிலை யிலேயே அநேகமாகத் தொடர்ந்தும் காணப்படக் கூடியவர்கள்.

சிறுவர் உழைப்பாளிகள் பல்வகை மறுத லிப்பினால் துன்பப்படுகின்றனர். அவர்கள் அளவுக்கு மிஞ்சி வேலை செய்கின்றனர். இவர்களுக்கு ஓய்வு மிகக் குறைவு. கல்வி மறுக்கப்படுகின்றது. வேலை நிலைமைகள் மிக மோசம். வேலைக் கொள்வோரின் கொடூர நடத்தைக்கும், பாலியல் துன்புறுத்தலுக்கும் இவர்கள் உட்படுவர். சொற்ப சம்பளமே பெறுவர். அநேகமாக சிறுவர்களுக்கு உடல் உள் விருத்திக்கான ஊக்குவிப்புக்கள் கிடைப் பதில்லை. முழு நேர சிறுவர் உழைப்பு குழந்தையின் ஆரோக்கியத்தையும் தனி யாள் விருத்தியையும் பாதிக்கும் (ராஜேந்திரன் 2004).

சிறுவர் உரிமைகள் மாநாடு, ஆயுத மோதலில் சிறுவர் ஒப்பந்தம், வேலைக்கு அனுமதிப்பில் இழிந்தளவு வயது மற்றும் ஐ. ஏ. எல் மாநாடு ஆகியவை அடங் கலாக சிறுவர் உழைப்புத் தொடர்பான பல சர்வதேச ஒப்பந்தங்களில் இலங்கை கையொப்பமிட்டுள்ளது. இதனால் 14 வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் எந்த வகை உழைப்பிலும் ஈடுபடுவதை நாடாளுமன்றம் தடை செய்கிறது. ஆனால் 14 - 16 வயது வீச்சில் உள்ள சிறுவர்கள் அவர்களின் விருத்தி தேவை கள் உறுதி செய்யப்படும் சில நிபந்தனை களின் கீழ் வேலை செய்வதை அனுமதிக் கின்றது. (கன்னங்கரா டி சில்வா, பாண்டி காமகே - 2003)

உடல் உழைப்பில் ஈடுபட்டுள்ள சிறுவர் கள் பற்றிய மிகச் சரியான புதிய தரவுகள் குறைவாகவே உள்ளன. DCS(1999) இதிலிருந்து பெறப்பட்டத் தரவுகள் 5 - 17 வயது வீச்சில் உள்ள இலங்கைச் சிறுவர்களில் 21 சதவீதமானோர் ஏதோ ஒரு பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என வெளிப்படுத்தி யுள்ளது. இலங்கையில் சிறுவர் உழைப் பாளிகளில் 60 சதவீதமா னோர் விவ சாயத் துறையில் வேலை செய்கின்றனர். வீட்டு வேலையாட்களாக உள்ள சிறுவர் களில் பெரும்பான்மை யானோர் கிராமப் புறங்கள், தோட்டத்துறை, நகர்ப்புற சேரி களிலிருந்து வந்தவர்களாக உள்ளனர். (கன்னங்கர டி சில்வா, பாண்டிகமகே - 2003).

### 3.5 சிறுவர் துஷ்பிரயோகம்

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது பரந்த வீச்சில் காணப்படும் பிள்ளையின் நலத்திற்கு எதிராக வேண்டுமென்று புரியப் படும் செயல்களை குறிப்பதற்கு விசால மான பொருளில் பயன்படுத்தப் படும் சொலாகும். இச் செயற்பாடுகள் பாடசாலையில், வீட்டில் மற்றும் சமுதா யத்தில் இடம்பெறும் சொற் பிரயோகத் திலிருந்து பயமுறுத்தும் வர்த்தக ரீதியான பாலியல் சுரண்டல் மற்றும் பிள்ளை கடத்தல் வரை அமையாலாம் சிலவகை யான துஷ்ப்பிரயோகங்கள் உதாரணமாக வர்த்தக ரீதியான சுரண்டல்கள் வறிய சமுதாயங்களில் அதிகம் காணப்படுகிறது. ஆனால் வித்தியாசமான சமூக, பொருளா தார சூழல்களின் வீச்சி லிருந்து வரும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு நலி வுற்ற நிலைக்கு ஆட்பட்டவர்களாக உள்ளனர். அநேகமான சான்றுகள் சம்பவ விபரிப்புள்ளாக உள்ளபோதும் சிறுவர் துஷ்பிரயோகம் கணிசமானதொரு பிரச்சினை என ஏற்கப்பட்டுள்ளது. கிடைக் கக்கூடிய புள்ளிவிபரங்கள்யாவும் முறைப் பாடு செய்யப்பட்ட சம்பவங்களை அடிப் படையாகக் கொண்டவை. அநேகமான சம்பவங்கள் முறைப்பாடு செய்யப் படாமலே விடப் படுவதால் இந்த தரவுகள் காட்டிகளாக மட்டுமே கொள்ளப்படலாம்

சிறுவர் துஷ்பிரயோகம் வறிய சமூக பொருளாதார பின்னணிகள் மற்றும் கல்வி போதிய கவனம் என்பன தொடர் பான மறுதலிப்புடன் சேர்ந்துள்ளது. நொய்ம்மைத் தன்மை என்பது குறிப்பிட்ட சில புவியியல் பிரதேசங்களில் அல்லது துறைகளிலும் பிரிந்த குடும்பங்களில் பொறுப்பில்லாத குடும்பங்களிலிருந்து வரும் சிறுவர்களிடத்திலும் குறிப்பிட்ட பால் வகைப் பிரிவினிடத்தும் கூடுதலாக காணப்படுகின்றது. இருப்பினும் வெளிப் படையாகத் தெரியும் சமூகப் பொருளா தார காரணிகளுக்கு அப்பால் சிறுவர் களின் நொய்ம்மைத் தன்மையை அதிகரிக் கும். வெளியில் தெரியாத தீங்கான பிரச்சினை ஒன்று இலங்கையில் உள் ளது. பாலியல் துஷ்பிர யோகம், வன் முறைசார்ந்த துஷ்பிரயோகம் ஆகிய இரண்டையும் ஏற்கும் கலாசாரம் மற்றும் சில சமுதாயங்களில், குறிப்பாக கரை யோர பிரதேசங்களில் வெட்கம், அவ மானம் பற்றிய மன உறுத்தல்கள் என்பன குறைந்து விபச்சாரம் நிறுவன மயப் பட்டதாக ஆகிவிட்டது (டயஸ் 1999).

### 3.6 நிறுவனம் சார் பராமரிப்பு

துஷ்பிரயோகம், சிறுவர் உழைப்பு, தீவிர வறுமை, பிரிந்த குடும்பங்கள், மரணம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு சிறு நிறு வனங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பிள்ளைகள் வழமையாகவே மிகக் கூடுத லான நலிவுற்ற நிலையில் உள்ளனர். "சேவ் த சில்றன்" நிறுவனம் சிறுவர் களுக்கான நிறுவன மயப்பட்ட பராமரிப்பு என்னும் ஆய்வை செய்வித்தது. (Bilson & Cox2005), பதிவு செய்யப்பட்ட தொகை யிலும் பார்க்க கூடுதலான எண்ணிக் கையான நிறுவனப்பராமரிப்பில் உள்ள பிள்ளைகளும் கூடுதலான எண்ணிக்கை யான பராமரிப்பு நிறுவனங்களும் இருந் ததாக இந்த ஆய்வு சுட்டிக் காட்டியது.

சிறுவர் நீதி முறைமைக்கு உட்பட்ட சிறுவர்கள், இவர்கள் பாதிக்கப்பட்ட வர்களாக இருப்பினும் விசாரணைக்கு முன்னரே நிறுவனங்களுக்கு அனுப்பப்படு கின்றனர். சில சமயங்களில் இது சிறை யாக அல்லது விளக்க மறியல் இல்லங் களாகவும் இருக்கும். 18 வயதுக்குட்பட்ட துஷ்பிர யோகத்தினால் பாதிக்கப்பட்ட விளக்கத்தை எதிர்பார்த்திருக்கும் சிறுவர் கள் மற்றும் குற்றம் இழைத்தவர்கள் எல்லோருமே சிறுவர் நீதி முறைமைக் குள் செல்கின்றனர். இவர்கள் மாற்று முறை இன்மையால் நிறுவன மயப்படுத் தப்படுகின்றனர். துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் பிள்ளைகளின் விருப்புகள் மற்றும் தேவைக ளை கையாள்வதற்கு தகுதி வாய்ந்த ஆளணி இல்லாத விளக்க மறியல் நிறுவனங் களில் விடப்படுகின்றனர். போதிய இட வசதியில்லாமையானது ஒரே இடத்திலே யே பல்வகைத்தான குற்றமிழைத்தவர் களும் தங்க வைக்கப்படுவதை தவிர்க்க முடியாததாக்குகின்றது (குமாரசாமி சற்குணநாதன் 2006).

### 4.முடிவுரை

இக் கட்டுரை, பல்வகைத்தான கருப் பொருட்களில் இலங்கையின் சிறுவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை தொடர்பான பிரச்சினைகள் பற்றிய ஒட்டுமொத்தப் பார்வையைத் தருகின்றது. சுகாதாரத்தைப் பொறுத் தளவில் இலங்கை சுகாதார சேவைகள், மக்கள் சுகாதாரம் என்பவற்றில் நல்ல நிலையில் உள்ளது. ஆனால் அநேகமான ஆரோக்கிய குறை பாடுகளில் மறுதலித் தல் பிரதான காரணியாக உள்ளது. போதிய வாழ்க்கைத் தரம், கல்வி, பிரதான உள்கட்டுமானங்கள் மற்றும் சந்தைகளைப் பயன்படுத்தும் உரிமைகள் என்பன மறுக்கப்பட்ட குடும்பத்தை சேர்ந்தவர்கள் சுகநலக் குறைவால் கூடுதலாக வருந்தும் சாத்திய முள்ளது. சிறுவர் மந்த போஷணை இலங்கையின் பெரிய பிரச்சினையாகத் தொடர்கிறது.

இலங்கையின் கல்வி மீதான பொறுப் புடைமை வரலாறு நல்ல எழுத்தறிவு மட்டத் துக்கும், நாட்டின் பரந்துபட்ட பிரதேச மெங்கும் சிறுவர்களுக்கு அடிப்படைக் கல்விப் பெறக் கூடியதாக இருத்தலுக்கும் இட்டுச் சென்றுள்ளது. இருப்பினும் கல்வி மீதான முதலீட்டின் பற்றாக் குறையும், கலைத் திட்டத்தை அண்மையக் காலங் களில் நவீனமயப்படுத்த தவறியமையும் தீய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

பாதுகாப்பின்மை, வன்முறை உடலியல், உளவியல் சோர்வு மற்றும் மறுதலிப்பு என்பவற்றால் பாதிக்கப்பட்ட இலங்கையில் சிறுவர்கள் மீது போரின் தாக்கம் பற்றி நிறைய எழுதப்பட்ட புத்தகங்கள், வெளியீடு களின் பெருந்தொகுதி ஒன்று உள்ளது. இருப்பினும் கடக்க முடியாதது போல தெரியும் துன்பங்களின் மத்தியில் சிறுவர் களின் மீட்சி பெற்றவரும் மனவுறுதியைக் காட்டும் சில சுவாரஸ்யமான ஆய்வுகள் காணப்படுகின்றன. சிறுவர் ஊழியர்கள் பல்வகை மறுதலிப்புகளால் வருந்து கின்றனர். இவர்கள் அளவுக்கு மிஞ்சிய வேலை செய்கின்றனர். இவர்களுக்கு ஓய்வு மிகக் குறைவு. கல்வி மறுக்கப்படுகிறது. வேலை நிலைமைகள் மிக மோசம் வேலை கொள்வோரின் கொடூர நடத்தைக்கும் பாலியல் தொல்லைக்கும் உட்படுவர். சொற்ப சம்பளமே பெறுவர். வறிதான சமூக பொருளாதார பின்னணி யுடனும் கல்வி மற்றும் போதிய கவனிப்பு என்பன மறுதலிக் கப்படுவதுடனும் சிறுவர் துஷ்பிரயோகம் சேர்ந்து வரும். வறுமைக் கும் சிறுவர்களை நிறுவனமயப்படுத்தலுக்கும் உள்ள இணைவு பலமானது. சிறுவர் பராமரிப்பு நிறுவனங் களில் சிறுவர்கள் சேர்வதற்கு கூறப்பட்ட பிரதான காரணம் வறுமை என்பதாகும்.

***உசாத்துணை:***


Amarakoon, L.( 2002). *Armed Conflict and Sri Lankan Children*. Colombo: Save the Children.

Bilson, A., Cox, P. (2005). *Home Truths: Children's Rights in Institutional Care in Sri Lanka* (Advocacy Document). Colombo: Save the Children in Sri Lanka.

Coomaraswamy, R. and Satkunanathan, A. (2006). *Anti-Child Trafficking Legislation in Asia: A Six - Country Review. Regional Project on Combating Child Trafficking for Labour and Sexual Exploitation (TICSA - II)*. Bangkok.

Department of Census and Statistics (1999). *Child Activity Survey Sri Lanka 1999*. Colombo: DCS and Ministry of Finance and Planning, Sri Lanka.

Department of Census And statistics (2001). *Census of Population and Housing 2001 - Sri Lanka*. Colombo: DCS.

Department of Census and Statistics (2002a). *Sri Lanka Demographic and Health Survey 2000*. Colombo: DCS.

Department Of Census And Statistics (2002b). *Demographic and Health Survey 2001: Northern and Eastern Provinces*. Colombo:DCS/UNICEF. [UNPUBLISHED, extracts available at: www.statistics.gov.lk]

De Silva, S. (2000). *Nutrition: Status, Causes, and Achievements in Sri Lanka. In: Demography of Sri Lanka: Issues and Challenges*. Colombo: University of Colombo.

Dias, R. (1999). *Children at Risk*. Colombo: Quest.

Gunewardena, D (2003). *Child malnutrition in Sri Lanka: Background paper for project on monitoring Millennium Development Goals in Sri Lanka*. Colombo. Mimeo

Jayaweera, S., Sanmugam, T. and Ratnapala, C. (2002). *Child Labour and Non-schooling Children in Selected Low-income Communities in Sri Lanka*. Colombo: Centre for Women's Research.

Kannangara, N., De Silva, H. and Parndigamage, N. (2003). *Child Domestic Labour: A Rapid Assessment. Investigating the Worst Forms of Child Labour*. Geneva: ILO/IPEC.

Mathieu, A. (2006). *Reaching The Girls In South Asia*. Kathmandu: UNICEF.

Medical Research Institute (MRI) of The Ministry of Health and Indigenous Medicine (1998). *Vitamin A Deficiency Status of children in Sri Lanka*. Colombo, Medical Research Institute.

Ministry of Education, (2007). *School Census 2005*.

Rajendran, S. (2004). *A Study Preventing Child Labour in the Plantation Sector: Badulla District*. Colombo: LJEWU/ILO.

Wordsworth, D., Mcpeak, M. and Feeny, T. ( 2005). *Children & Poverty - DEV Framework*. Richmond: Christian Child Fund.

World Bank, (2005). *Treasures of the Education System in Sri Lanka*. Washington DC: World Bank.



*.....41ம் பக்கத் தொடர்ச்சி*


சொத்துரிமையால் பாதுகாக்கப்படாத சொத்துகளுக்கும் இடையில் வேறுபாடு பாதுகாப்புள்ள சொத்துக்களின் மட்டுப்படுத் தப்பட்டப்பட்ட நிரம்பல் காரணமாக உயர் சந்தை விலைக்கு இட்டுச் செல்கின் றது. இதனால் இலாபத்தின் அளவு குறை கின்றது.

## முடிவுரை

சொத்துகளே மூலதன உருவாக்கத்துக் கான அத்திவாரமாக இருப்பதானால் சொத்து உரிமைகள் முதலாளித்துவ அபிவிருத்தியின் அடிப்படைத் தேவையை வழங்கிகின்றன. இருப்பினும் அநேக மான அபிருவித்தி அடைந்துவரும் நாடுகளில் சொத்து உரிமைகள், சொத்துக்களின் உரித்தாண்மையையும் பயன்படுத்தும் அதிகாரமும் இல்லாத தனியார் சொத்துக் கள் உள்ளன. இங்கு ஆபத்துக்கும் நிச்சய மற்ற தன்மைக்கும் முகம் கொடுத்தவாறு தனியார் நன்மைக்காக பயன்படுத்தப்படும் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் உண்டு. சொத்துரிமையில் உள்ள குழப்பங் கள் மூலதனத்தை உருவாக்குவதற்கான அடிப்படைத் தேவையை வழங்குவ தில்லை. இது முதலாளித்து பொருளாதார வளர்ச்சியையம் அபிவிருத்தியையும் தொடர்ச்சியாகத் தாமதிக்கச் செய்து வருகின்றது. மேலும் இவை ஊழலின் உயர்வுக்கு இட்டுச் செல்கின்றன. உயர் கொடுக்கல் வாங்கல் செலவு மற்றும் சொத்தின் சந்தைப் பெறுமதியின் திரிபு ஆகியவற்றுக்கும் இவை இட்டுச் செல் கின்றன. இந்தப் பிரச்சினைகள் வியாபார நம்பிக்கையைக் கெடுப்பதுடன் மூலதன உருவாக்கத்தை மட்டுப்படுத்தும் வகையில் போட்டித் தன்மையையும் சிதைக்கின்றன.

***உசாத்துணை:***


*Abeyratne, S. and Rodrigo, C. (2006). "Economic Growth in Sri Lanka, 1950-2000" in K.S. Parikh (ed), Explaining Growth in South Asia, New Delhi: Oxford University Press.*

*Alchain, A.A. (undated). "Property Rights", The Concise Encyclopedia of Economics, Web sit: http://www.econlib.org/cgi_bin/printcee.pl.*

*De Soto, H. (2000). The Mystery of Capital: Why Capitalism Triumphs in the West and Fails Everywhere Else, New York: Basic Books.*

*IBRD (1953). The Economic Development of Ceylon, International Bank for Reconstruction and Development (IBRD), Baltimore: John Hopkins Press.*

*Gwartney, J.D. and Lawson, R. (2008). Economic Freedom of the World, 2008 Annual Report, Economic Freedom Network, Vancouver: Fraser Institute*

*Snodgrass, D. (1966). Ceylon: An Export Economy in Transition, Illinois: Richard D. Irwin Inc.*

*Transparency International (2008). Corruption Perceptions Index 2008, Web site: http://www.transparency.org/policy_research/surveys_indices/cpi/2008.*

*World Bank (2008). Doing Business 2008, Web site: http://www.doingbusiness.org/documents/DB-2008-overview.pdf.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

......32ம் பக்கத் தொடர்ச்சி

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட கிளர்ச்சியாளர்களின் மீள் ஒன்றிணைவுக்கு பெரும்பாலும் வழிவகுக்கும். இவ்வெற்றியளிக்கத் தக்கதான மீள் ஒன்றிணைவும் பொருளாதார செயற்பாடுகளை குறித்த வகையில் அவர்களது முன்னேற்றமும் கண்காணிக்கப்படல் வேண்டும் என்பதுடன் விரும்பத்தகாத மாற்றங்கள் எதாவது காணப்படின் அதனைப் பற்றி அரச அதிகார குழுக்களுக்கு அறிக்கை இடும் செயலாற்றலுடன் கூடிய சிவில் நிர்வாகங்களால் அக்கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவது விரும்பத்தக்கதாகும். முன்னாள் கிளர்ச்சியாளர்கள் பூரணமாக அல்லது விரும்பத்தக்க அளவில் மீள ஒன்றிணையும் வரை அவசியப்படும் பட்சத்தில் உதவியை மிகக் குறைவான ஓர் மட்டத்தில் அல்லது நெகிழ்வான உதவி என அழைக்கப்படும் உதவியைத் தொடர முடியும். இத்தருணத் தில் உதவியானது பொருள் உள்ளீடுகளை விட ஆலோசனைகளிலும் வழிகாட்டலிலும் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

### அமுலாக்கல் நிறுவனத்தின் வெளியேற்றம்

ஓர் புனர்வாழ்வு மீள்ஒன்றிணைப்புத் திட்டமானது முன்னாள் கிளர்ச்சியாளர்களைப் பற்றியது மாத்திரமன்றி, இச் செயல்முறை திட்டத்தினை பொறுப்பேற்கும் நிறுவனம் பற்றியதும் ஆகும். உதாரணமாக அமுலாக்கல் நிறுவனத்தின் கலாசாரம், நலன், குறிக்கோள்கள் என்பன இச் செயல்முறை திட்டத்தின் மீது ஓர் தாக்கத்தினை கொண்டிருக்கும் அதனாலேயே முன்மொழியப்பட்டுள்ள கட்டமைப்பு ஆனது அமுலாக்கல் நிறுவனத்தின் கூறு ஒன்றை உட்படுத்துகின்றது. அமுலாக்கல் நிறுவனமானது தெளிவாகத் தெரியத்தக்க வகையில் சம்பந்தப்பட்ட முன்னாள் கிளர்ச்சியாளர்களைப் போல அச் செயன்முறை திட்டத்திலும் கணிசமான பங்கினை அல்லது நிதியை முதலீடு செய்யும் முதலீடு மற்றும் அமுலாக்கல் நிறுவனத்திற்கும் பயனளிக்கும். இடையில் விருத்தியடையும் உறவு என்பன தொடர்ந்தும் நீடித்திருப்பதற்கான பரஸ்பரம் சார்ந்து இருக்கும் ஓர் நிலைக்கு வழிவகுக்க கூடும். அத்தகைய சார்ந்திருக்கும் நிலைப்பாடு ஆனாது புனர்வாழ்வு, மீள் ஒன்றிணைவு முறையொன்றின் குறிக்கோளைப் பூரணமாக வலு இழக்கச் செய்யலாம். எனவே புனர்வாழ்வு மீள் ஒன்றிணைவுத் திட்டத்தின் இலக்கு அடையப்பட்டதும் களத்தில் நின்று வெளியேறுவதற்கு முன்னரே முடிவு செய்யப்பட்ட ஓர் உத்தியை அந்நிறுவனம் கொண்டிருக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். பயனாளிகள் உடனான உறவுகளை எப்படி முடிவுக்கு கொண்டு வருவது? புனர்வாழ்வு மீள ஒன்றிணைவு செயன்முறைகாலத்தில் சேகரிக்கப்பட்ட பொருட்களை என்ன செய்வது? பணியாளர்களை என்ன செய்வது? அல்லது தமது தொழில்களை இழக்கும் பணியாளர்களுக்கு எவ்வாறு இழப்பீடுகளை வழங்குவது போன்றவற்றை இது உள்ளடக்கி இருக்கின்றது. இக் கட்டத்தில் மிகமுக்கியமானது எதுவெனில் முன்னரே புனர்வாழ்வு அளிக்கப்பட்டு மீள் ஒன்றிணைக்கப்பட்ட முன்னாள் கிளர்ச்சியாளர்களுக்கு தீங்கு புரியாது இச் சூழலிலிருந்து வெளியேறுவது ஆகும். அட்டவணை 1 ஆனது இச்செயல் முறையை சுருக்கமாக எடுத்துக் காட்டுகின்றது.

### முடிவுரை

யுத்தம் முடிவடைந்து சிறுவர்கள், பெண்கள் உட்பட பெருந்தொகையான விடுதலைப்புலி உறுபபினர்கள் சரணடைந்து உள்ளமையால் அல்லது அரச பாதுகாப்பு படைகளால் கைது செய்யப்பட்டமையால் முன்னாள் கிளர்ச்சியாளர்களின் புனர்வாழ்வு மீள ஒருங் கிணைப்பு பிரச்சினையானது உடனடியாகக் கையாளப்பட வேண்டிய ஒன்றாக தோற்றம் கண்டுள்ளது. இலங்கையில் நீடித்திருக்கக் கூடிய சமாதானத்திற்கு இம் முன்னாள் கிளர்ச்சியாளர்களுக்கான வெற்றியளிக் கத்தக்கதான புனர்வாழ்வு, மீள் ஒன்றிணைவு செயல்முறைத்திட்டம் ஒன்று அத்தியா வசியமானது எனும் தோற்றப்பாட்டை இக்கட்டுரை முன் வைக்கின்றது. உதவி இல்லா விடில் சமூக அமைதி இன்மைக்கான மற்றும் அரசியல் ரீதியாகவும் வேறு வகையிலும் அமையும் வன்முறை என்பவற்றிற்கான ஓர் மூலமாக முன்னாள் கிளர்ச்சியாளர்கள் மாறக்கூடும். ஆகவே அரச துணையாதரவுடன் திட்டமிட்ட முறைப் படியான புனர்வாழ்வு, மீள் ஒன்றிணைவு செயன்முறை ஒன்று அறிமுகப்படுத்தபடல் வேண்டும். முன் வைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு, மீள் ஒன்றிணைவுச் செயல் முறைத் திட்டமானது புனர்வாழ்வு திட்டம், முன்னாள் கிளர்ச்சியாளர்கள் தமது சமூகத்திற்கு மீளவும் திரும்பிச் செல்லுதல், மீள் ஒன்றிணைப்பு, அமுலாக்கல் நிறுவனத்தின் வெளியேற்றம் ஆகிய நான்கு பிரதான கட்டங்களை உள்ளடக்கியுள்ளது. வளர்ந்த ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியோர் வேறுபட்ட தேவைகளைக் கொண்டிருப்பதுடன் அவர்கள் தமது சமூகத்திற்குத் திரும்பிச் செல்லும் போது மேற்கொள்வ தற்கான வேறுபட்ட செயற்பாடுகளையும் கொண்டிருப்பதால் இத் திட்டமானது மூன்று வேறுபட்ட வழிகாட்டல் தடங்களின் வரிசையில் அமுல் செய்யப்பட வேண்டியுள்ளது. புனர்வாழ்வு செயன்முறை காலத்தில் அவசியமான கல்வி வசதி, பயிற்சி, சமூகமயமாக்கல் என்பன முன்னாள் கிளர்ச்சியாளர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படும் சமூகத்திற்கு திரும்பிச் செல்லும் போது முன்னாள் கிளர்ச்சியாளர்களுக்கு பணமும் தேவைப்படும். பொருட்களையும் வழங்க வேண்டியுள்ளது. சமூகத்திற்கு மீளத் திரும்பிச் செல்லும் இச்செயன்முறையானது பெரும்பாலான முன்னாள் கிளர்ச்சியாளர்களின் சமூகத்துடனான மீள் ஒன்றிணைவுக்கு வழிவகுக்கும் வெற்றியளிக்கத் தக்க இம்மீள் ஒன்றிணைவுடன் முன்னாள் கிளர்ச்சியாளர்களை முழுமையான சுதந்திர நிலையில் செயற்பட விட்டு அமுலாக்கல் நிறுவனத்தால் இச்சூழலிலிருந்து வெளியேறக் கூடியதாக இருக்கும்

### உசாத்துணை:


Boutros Ghali, Boutros (1994). *An Agenda for Development, Report of the Secretary General*, New York: United Nations.

Clark, Kimberly Mahling (1995). "The Demobilization and Reintegration of Soldiers: Perspectives from USAID," *Africa Today*, Vol-42, No-1/2, pp. 49 - 60.

Cohen, I. & Goodwin-Gill, G.S. (1994). *Child Soldiers: The Role of Children in Armed Conflict*, Oxford: Clarendon Press.

Galtung, Johan (1996). *Peace by Peaceful Means: Peace and Conflict, Development and Civilization*, London: Sage.

Keethaponcalan, S.I. (2008). *Sri Lanka: Politics of Power, Crisis and Peace, 2000 - 2005*, Chennai, Colombo: Kumaran Book House.

Kight, Mark and Ozerdem, Alpaslan (2004). "Guns, Camps and Cash: Disarmament, Demobilization and Reinsertion of Former Combatants in Transitions from War to Peace," *Journal of Peace Research*, Vol-41, No-4, pp. 499-516.

Kingma, Kees (1997). "Demobilization of Combatants after Civil War in Africa and their Reintegration into Civilian Life," *Policy Studies*, Vol-30, No-3, pp. 151 - 165.

Ozerdem, Alpaslan (2002). "Disarmament, Demobilization, and Reintegration of Former Combatants in Afghanistan: Lessons Learned from a Cross-Cultural Perspective," *Third World Quarterly*, Vol-23, No-5, pp. 961-975.

Punamaki, R. (1990). *Political Violence and Psychological Responses: A Study of Palestinian Women, Children, and Ex-Prisoners*, Tampera, Finland: Tempera Peace Research Institute.

Schafer, Jessica (1998). "A Baby Who Does Not Cry Will Not Be Suckled: AMODEG and the Reintegration of Demobilized Soldiers," *Journal of Southern African Studies*, Vol-24, No-1, pp. 207 - 222.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

QD/146/News/2009 எனும் இலக்கத்தின்கீழ்
இலங்கை அஞ்சல் திணைக்களத்தில்
பதிவுசெய்யப்பட்டுள்ளது

# பொருளியல் நோக்கு

1975 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்களத்தால் தடங்கலின்றி வெளியிடப்பட்டு வரும் ***பொருளியல் நோக்கு***, சமகால சமூக-பொருளாதார மற்றும் அபிவிருத்தி விடயங்களின் அழமான ஆய்வுக்கும் கலந்துரையாடலுக்குமான பொது மன்றத்தை வழங்குகிறது. இவ்வேட்டின் அண்மைக்கால இதழ்கள் பின்வரும் முக்கிய தலைப்புகளை உள்ளடக்கியுள்ளன:

- *சர்வதேச வர்த்தகமும் இலங்கையின் பிரச்சினைகளும் (ஆங்கிலம், சிங்களம், **தமிழ**)*
- *நீரும் அபிவிருத்தியும் (ஆங்கிலம், சிங்களம், **தமிழ**)*
- *உலகளாவிய நிதி நெருக்கடி (ஆங்கிலம், சிங்களம், **தமிழ**)*
- *வரவு செலவுத் திட்டம் - 2009 (ஆங்கிலம், சிங்களம்)*
- *பணவீக்கம் : காரணிகள் விளைவுகள் மற்றும் கட்டுப்பாடுகள் (ஆங்கிலம், சிங்களம்)*
- *சக்தி நெருக்கடியும் மாற்றீடுகளும் (ஆங்கிலம், சிங்களம்)*
- *உணவு நெருக்கடியும் உணவுப் பாதுகாப்பும் (ஆங்கிலம், சிங்களம்)*

ஆர்வமுள்ள வாசகர்கள், இவ்வேட்டின் பிரதிகளை தலைமைக் காரியாலயத்திலுள்ள எமது வெளியீட்டு விற்பனை நிலையம், முன்னணிப் புத்தக சாலைகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் வங்கிக் கிளைகள் என்பவற்றில் கொள்வனவு செய்ய முடியும். ஏற்கனவே வெளிவந்த சில இதழ்கள் கூட விற்பனைக்குண்டு.

**வருடாந்தச் சந்தா** — **உள்ளூர் -12 இதழ்கள் ரூபா 360/-**
**வெளிநாடு -12 இதழ்கள் அமெரிக்க டொலர் 50**

சந்தாவை, வேண்டுகோள் கடிதமொன்றுடன் காசோலை/காசுக் கட்டளை மூலமாக அனுப்ப முடியும். பணச் செலுத்தல் எமது விற்பனை நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

காசோலைகள்/காசுக் கட்டளைகளில்
**மக்கள் வங்கி - பொருளியல் நோக்கு** எனக் குறிப்பிட்டு,
கீழுள்ள முகவரிக்கு அவை அனுப்பிவைக்கப்பட வேண்டும்

***ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சித் திணைக்களம்,***
***மக்கள் வங்கி, தலைமைக் காரியாலயம், கொழும்பு 02***
***இலங்கை.***

***தொலை பேசி:*** 2481428, 2436940
***தொலை நகல:*** 2434526
*மின்னஞ்சல்:* ecorev@peoplesbank.lk

***பொருளியல் நோக்கு***
***மக்கள் வங்கியின் ஒரு சமூக சேவைச் செயற்திட்டமாகும்***

**பிரதி ஒன்றின் விலை: ரூபா 30/-**

மக்கள் வங்கியின் ஆராய்ச்சித் திணைக்கள வெளியீடு

பொருளியல் நோக்கில் இருந்து பெறப்பட்டதாகக் குறிப்பிட்டு, இவ்வேட்டின் உள்ளடக்கத்தை மேற்கோள்காட்டவோ அல்லது மீள்பிரசுரிக்கவோ முடியும்.

இதழ் இல: 0259/9779

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org